நாட்டுப்புறப் பாடல்கள்

—திறனாய்வு

திரு. ஆறு. அழகப்பன், எம்.ஏ., எம்.லிட்.

நாட்டுப்புறப் பாடல்கள்

— திறனாய்வு

OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY
21 JAN 1975
GOVT. OF MADRAS, MADRAS.

ஆறு. அழகப்பன்

விற்பனை உரிமை :

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிரகாசம் சாலை, சென்னை-1.

1973

© 1973 ஆறுமுகம் அழகப்பன் (1937)

Sole Selling Agents :

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

Branches :

Tirunelveli-6 Madurai-1 Coimbatore-1
Kumbakonam

Ed 1 November 1973

OFFICE OF ... OLOGY
4028
21 JAN 1975
... MADRAS

Y73(P3):351:g
N73

398.2
அழ

NAATTUPPURAP PAADALKAL
-THIRANAAIVU

Appar Achakam, Madras-1. (I/6)

OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY
21 JAN 1975
GOVT. OF MADRAS, MADRAS-

அணிந்துரை

இன்றைய உலகம் மிகச் சுருங்கிய ஒன்ருகி விட்டது. விண்ணிலே மண்ணைக் காணும் அளவுக்கு மனிதனுக்கு ஆற்றலும் சூழலும் பிறவும் அமைந்து விட்டன. எனவே, உலகில் வாழும் பல்வேறு வகைப் பட்ட மக்களினத்தவரும் ஒன்றிக்கலந்து உறவு கொண்டு கலந்து விட்டனர். இன்னுர், அன்னுர் எனப் பிரித்துக் காணமுடியாத வகையில் ஒவ்வொரு நாட்டிலும் பல்வேறு மக்களினத்தவர் கலந்து வாழ் கின்றனர். அதனுல் பல்வேறு வகைப்பட்ட நாக ரிகம், பண்பாடு, கலை, வாழ்க்கைநெறி முதலியன ஒன்றிக்கலந்து ஒரே வகைப்பட்ட நிலையில் அமை வதைக் காண்கிருேம். ஆயினும் இத்தகைய மாறு பாடுகளுக்கும் வேறுபாடுகளுக்கும் இடையிலும் அவ்வந் நாட்டின் அடிப்படைப் பண்புநலன்கள் அழிந்து வற்றி விடாமல் வாழ்வதை நாடுதொறும் காண்கின்ருேம். ஆம்! அவற்றை வாழவைப்பவர் அவ்வந் நாட்டு மூலை முடுக்குகளில் அமைதியாக வாழ்வு நடத்தும் பழங்குடி மக்களே யாவர்.

ஒரு நாட்டின் உண்மையான பண்பாட்டை அறிய வேண்டுமாயின் அந்நாட்டின் அகத்தே ஊடு ருவல் இன்றியமையாதது. எங்கோ ஒரு சில நகரங்களில் பல்வேறு நாகரிக வாழ்க்கைச் சுழல் களுக்கிடையில் இருந்து ஒரு நாட்டு நல்வளத்தை அறுதியிட இயலாது. அவ்வந் நாட்டு உட்புறப் புறப் பகுதிகளில் உலவும் போதுதான் அந்நாட்டு

மக்களின் உண்மையான வாழ்க்கை நெறியும் பண்பாடும் நன்கு புலனாகும். அவற்றைப் புலப்படுத்தும் எண்ணற்ற சூழல்களும், இயற்கை நியதிகளும், அவர் தம் பாட்டும், பழக்க வழக்கங்களும் நமக்கு நன்கு விளங்கும். அம்மக்கள் வாய்மொழியாகவே வாழையடி வாழையாகப் போற்றிப் புரந்து வரும் எண்ணற்ற எழுதா இலக்கியங்கள்-பாடல்கள்-அவர் தம் வாழ்வை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன. ஆயினும் அறிவுடை மக்களாகத் தம்மைக் கருதிக் கொள்ளும் சிலர் இந்த அடிப்படை உண்மையையும் அதன் வழி உருவாகும் மக்கள் உணர்வையும் எண்ணிப் பார்க்க மறுக்கின்றனர்.

உரிமை பெற்ற பாரத நாட்டில் வாழும் எண்ணற்ற பழங்குடி மக்கள் வாழ்விலும், ஊர்ப்புறங்களில் உழலும் பாட்டாளி மக்கள் வாழ்விலும் எத்துணை எத்துணையோ வாழ்வியற் கருத்துகள் பொதிந்து கிடக்கின்றன. அவர் தம் வாழ்வுக்கிடையில் ஊற்றுப் பெருக் கெடுத்தோடும் வாய்மொழிப் பாடல்கள் அவ்வந் நிலப்பகுதியின் சிறப்பியல்புகளையும் வாழ்க்கைநெறிகளையும் நன்கு விளக்குகின்றன. இந்திய அரசாங்கத்தார் இத்தகைய வாழ்விலக்கியங்களைத் துருவி ஆய்ந்து உலகுக்கு உணர்த்தும் வகையில் சில ஆண்டுகளுக்கு முன் மாநிலந்தோறும் பல குழுக்கள் அமைத்தனர் என்றாலும் அவை செம்மையாகச் செயல்படா நிலையினைக் காண்கின்றோம். தமிழ்நாட்டிலும் இதே நிலைதான் என்று சொல்ல வேண்டியதில்லை.

இதற்கிடையில் சில அன்பர்கள்—மக்கள் வாழ்வினை மதித்துப் போற்றும் நல்லவர்கள்—இத்துறையில் கருத்திருத்தி வருவது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். அண்மையில் சில அறிஞர்கள் ஊர் தொறும்-காட்டூர்கள் தோறும் புகுந்து அங்குள்ள மக்கள் வாழ்வையும் அவர் தம் வாய்மொழிப் பாடல்களையும் கண்டும் கேட்டும் மகிழ்கின்றனர். அவர் தம் பாடல்களை ஏட்டில் எழுதாத கவிதைகளை ஏட்டில் ஏற்றி நாட்டில் உலவவிடுகின்றனர். சென்னை வானொலி நிலையத்தாரும் இவ்வகையில் செய்யும் தொண்டு பாராட்டுதற்குரியதாகும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தே இளமை உணர்வோடும், உளத்துடிப்போடும், ஊக்கத்தோடும் தமிழ்த்துறையில் பணியாற்றிவரும் திரு. ஆறு. அழகப்பன், எம்.ஏ.எம்.லிட். அவர்கள் இத்துறையில் பல ஆண்டுகளாகவே தம் கருத்தினைச் செலுத்தி வருகின்றார். பல விடங்களிலிருந்து இவர் சேர்த்துள்ள பாடல்கள் பலவாகும். அவற்றைத் தொகுத்துப் பார்த்த பொழுதில் அவர் உள்ளத்தே எழுந்த கருத்துகளின் குவியலே இன்று இந்த நூல் வடிவில் வெளிவருகின்றது. 'நாட்டுப்புறப் பாடல்கள் திறனாய்வு' என்ற தலைப்பில் வெளிவரும் இந்நூல் உண்மையிலேயே அவற்றின் திறனை விளக்குவதாக அமைகின்றது என்பதை நூல்வழிச் செல்வோர் நன்கு அறிவர். அப்பாடல்களின் விளக்கங்களையும் தோற்ற வளர்ச்சியையும் அமைப்பையும் அவற்றின் பல்வேறு வகைகளையும் ஆசிரியர் நன்கு விளக்குகின்றார். அவற்றைக் குழந்தைப் பாடல்கள், பக்திப்

பாடல்கள், தொழிற்பாடல்கள், கொண்டாட்டப் பாடல்கள், உணர்ச்சிப்பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள், பன்மலர்ப் பாடல்கள் என்று பலவகையில் பாகுபடுத்தி அவையவை பாடப்பெறும் இடங்களை யும், நிலைகளையும், தன்மைகளையும் சுட்டிக்காட்டும் ஆசிரியர் திறன் சிறந்த ஒன்று. பின்னும் அப்பாடல் களின் வடிவ அமைப்பினையும் அவை வரலாற்றுக்குத் துணையாக அமைவதையும், அப் பாடல்களின் நலத் தையும் இவர் சுட்டிக் காட்டத் தவறவில்லை. இவ் வாறு திரு. ஆறு. அழகப்பன் அவர்கள், எங்கோ கேட்பாரற்றுக்கிடந்த கலைச் செல்வங்களாம் நாட்டுப் பாடல்களைத் தொகுத்து அவற்றின் சிறப்பினையும் அவை வாழ்வில் கொண்ட பங்கினையும் பிறவற்றை யும் விளக்கி நமக்கு இந் நூலைத்தந்துள்ளார். இவர் பணி சிறக்க என வாழ்த்துகின்றேன்.

இத்துறையில் பெரிய ஆய்வு தேவைப்படுகிறது. ஆட்சியாளரும் அறிஞர்களும் பிறரும் இத்துறையில் கருத்திருத்தின் தமிழகத்தின் நல்லொளி புலனுகும். அண்மையில் சென்னைப்பல்கலைக்கழகத் தமிழ் முதுகலை வகுப்புப் பாடத் திட்டத்தில் இப் பாடல் களின் ஆய்வும் இடம் பெற்றிருக்கச் செய்த ஒன்று, அத்துறையில் பயிலும் மாணவர்களுக்குப் புத்துணர்ச்சியை அளிக்கின்றது. அவர்களுக்கு இந்நூல் ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளமை கண்டு மகிழ்கின்றேன். அறிஞர்கள் மேலும் மேலும் இத் துறையில் கருத்திருத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அன்பர் ஆறு. அழகப்பனுடைய இவ்வரிய முயற்சியைத் தமிழுலகம் பாராட்டக் கடமைப் பட்டுள்ளது. இவர் தம் உழைப்பும் ஊக்கமும் தமிழகத்துக்கு இத்தகைய நல்ல நூல்களைத் தந்து உதவும் என நம்புகிறேன். வெல்க இவர் தம் ஆக்கப் பணிகள்.

தமிழகம் இந்நூலை ஏற்றுப் பயன் பெறுவதாக!

தமிழ்க்கலை இல்லம்
சென்னை-30.
27-10-'73

அ. மு. பரமசிவானந்தம்

என்னுரை

புலவர்களால் உருவாக்கப்பட்டுக் கற்றவர்களால் காப்பாற்றப்படுபவை இலக்கியங்கள். பாமர மக்களால் உருவாக்கப்பட்டு அவர்களாலேயே காப்பாற்றப்படுபவை நாட்டுப்புறப் பாடல்கள். இலக்கிய வரலாறு என்னும் கடலில் சங்கமம் ஆகும் ஆறுகளில் நாட்டுப்புறப் பாடல் என்னும் ஆறும் ஒன்ருகும். சில நாடுகளுக்கு மட்டும் உரிமையுடைய ஆறுகள் போலல்லாமல் எல்லா நாடுகளிலும் உள்ள ஆறு என்று வருணிக்கத் தகுந்தது நாட்டுப்புறப் பாடல்கள். இலக்கிய வகையில் ஒரு பிரிவாகக் கருதத்தக்க இப்பாடல்கள் இன்று ஆராய்ச்சி அறிஞர்களின் பார்வைக்குரிய சிறப்பினைப் பெற்றுள்ளது; தோன்றிய காலத்தையும், தோற்றுவித்தவரையும் அறுதியிட்டுச் சொல்ல முடியாத ஏட்டில் எழுதாத இப் பாடல்கள் இப்பொழுது தமிழகத்திலும் தொகுக்கப்பட்டும், நூல் வடிவில் வெளியிடப்பட்டும், ஆராயப்பட்டும் வருகின்றன. இவ்வாய்வினை நோக்கும் பொழுது மெல்லத் தமிழ் இனி வளரும் என்ற நம்பிக்கை பிறக்கிறது; காட்டு மலரோடும், ஏட்டில் எழுதாத இலக்கியம் என்று வருணிக்கப்படும் இப் பாடல்களைப் பற்றிச் செய்யப்படும் திறனாய்வில் தமிழகப் பாடல்கள் மட்டுமன்றி இலங்கையில் வழங்கிவரும் பாடல்களும் சேர்த்து ஆராயப்படுகின்றன; இவ்வாராய்ச்சிக்கு உறுதுணையாக, சான்ருகக் காட்டப்பட்ட பாடல்களில் வகைக்கு

ஒருசிலதான் காட்டப்பட்டுள்ளன; விரிவஞ்சி எண்ணற்ற பாடல்கள் விடப்பட்டுள்ளன. இவ்வாய்வு முதலும் முடிவும் அன்று; தவழும் குழந்தை தரையில் காலூன்றி நடப்பது போல இவ்வாய்வு முயற்சியும் ஆகும். எண்ணற்ற அறிஞர் குழுவினர் தம் கருத்தினை இப்பொழுது இத்துறையில் செலுத்தி வருகின்றனர்; தொடர்ந்து அவர்தம் பார்வைகிடைப்பது இத்துறைக்கு வலிவோடு வனப்பினையும் தருவதாக இருக்கும்.

இந்நல்ல பணிக்குத் தமிழக அரசின் சார்பு நிறுவனமான தமிழ் வளர்ச்சி மன்றத்தார் தடங்கலின்றித் தம் ஒத்துழைப்பையும் ஒரு பகுதி பொருளுதவியையும் தந்துதவியதால் இவ்வாய்வு எழுத்து வடிவிலேயே கிடந்து போகாமல், அச்சு வடிவில் வரும் வாய்ப்பினைப் பெற்றது. இந் நல்ல தமிழ்த் திருப்பணிக்கு உதவியதற்குத் தமிழக அரசுக்கும் தமிழ்வளர்ச்சி மன்றத்திற்கும் நன்றியுடையேன்.

இத்துறையில் ஆழ்ந்த காதலும், தமிழ்க் கடமைகள் ஆற்றுவதில் பேரார்வமும் உள்ள பேராசிரியர் அறிஞர் அ. மு. பரமசிவானந்தம் அவர்களின் அழகிய அணிந்துரையால், இந்நூல் மேலும் செறிவினை அடைகிறது. நல்லதோர் அணிந்துரையைத் தந்து இந்நூலிற்கு மெருகினை ஊட்டிய அத் தமிழ் அறிஞருக்குக் கடப்பாடுடையேன்.

பல்கலைக்கழகப் பாடத்திட்டக் குழுவினரும் இப்பொழுது இத்துறைக்குரிய சிறப்பினை அறிந்து பட்டப் படிப்பு மாணவர்கள் இத்துறையை அறிந்து

கொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு இத்துறை ஆய்வாளர்கள் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழைக் காப்பாற்றுவதிலும், வளர்ப்பதிலும் சிந்தை கொண்ட திரு. வ. சுப்பையாபிள்ளை அவர்கள் இந்நூலினை அச்சிட்டுத் தந்து தமிழ் மக்களிடையே பரப்புவதில் அக்கறை கொண்டு உளமுவந்து செயல் படுத்தியுள்ளார்கள். அத் 'தமிழ் காத்தாரு'க்கும் என் அன்பு வணக்கங்கள்.

எம். லிட். பட்டத்திற்கு நான் எடுத்துக் கொண்ட ஆய்வு இவ்வுருக் கொண்டு நூல்வடிவு அடைந்திருக்கிறது.

இவ்வாய்வினைப் படித்துச் சுவைக்கும் தமிழாளர்கள் இத்துறையை மேலும் வளர்க்க ஆர்வம் கொள்வது தமிழ் மொழிக்குச் செய்ய வேண்டிய ஒரு தொண்டாகும்.

ஆறு. அழகப்பன்.

உ ள் ளு றை

பக்கம்

க. நாட்டுப்புறப் பாடல்கள்—விளக்கங்கள் 1-7

உ. வகைகளும் பகுப்புகளும் 8-13

குழந்தைப் பாடல்கள் 13-43

தாலாட்டுப் பாடல்கள் - தாலாட்டுப் பாடற்பொருள் - பரவுதல் - நிலவுதல் - பண் - அடிகளை மாற்றல்-அளவு-கதைத் தாலாட்டு - வள்ளிகதைத் தாலாட்டு - இராமர் கதைத் தாலாட்டு - இறைவன் தொடர்புடைய பாடல்கள் - பாட பேதங்கள் - இலக்கியத்தரம் - புலவர்கள் செய்தவை - குழந்தைகளுக்காகப் பாடுவன - குழந்தைகள் பாடுவன.

பக்திப் பாடல்கள் 43-58

சிறுதெய்வப் பாடல்கள் - பூசாரிப் பாட்டு - பெருந்தெய்வப் பாடல்கள் - முருகர் - காவடி - பிள்ளையார் - ஒளி வணக்கம்.

தொழிற் பாடல்கள் 58 85-78

வேளாண்மைப் பாடல்கள் - வேளாண்மைத் தொழில் வகைகள் - பாடற் பொருள் - பாடல் தன்மை - உழவுப் பாடல் - பண்ணையார் பெருமை - ஏற்றப்பாட்டு-ஏற்றவகை - கணக்குமுறை - பாடும்முறை - பாடற்பொருள்-விராடபருவ ஏற்றப் பாட்டு - கதைப் பாட்டுகளின் நோக்கம் - கப்பல் பாடல்கள்-பயன் - பொருள்-ஏலேலோ சொல் விளக்கம்-சில

கப்பற் பாடல்கள் - வண்டிக்காரர் பாடல் - பொருள்-பாடும் விதம்-பாரம் தூக்குவோர் பாடல்-சாந்து இடிப்பவர் பாட்டு- இசை ஒலிகள் - தொழிற் பாடல்களின் மறைவு.

கொண்டாட்டப் பாடல்கள் 79-105

தெய்வத் தொடர்புடைய நிகழ்ச்சிகள் - கும்மி - ஒயில் கும்மி - ஆடும் விதம் - கும்மி - கோலாட்டம் - கூத்துப் பாடல் - கதைப் பாடல்கள் - சேவல் பாட்டு - வாக்குவாதங் கள் - காமன் பண்டிகை - ஓடப் பாட்டுகள் - தேர்ப் பாட்டு- குடும்பத் தொடர்புடைய நிகழ்ச்சிகள் - திருமணப் பாடல் கள் - கல்லுளிமங்கன் கறுப்பாயி கல்யாணம் - பண்டிகைப் பாடல்கள் - பொங்கல் விழா - ஸ்ரீ ஜெயந்தி - ஊஞ்சற் பாட்டுகள் - வளைகாப்பு - சாதிக்குத் தக்க சடங்கு - செட்டி நாட்டில் திருவாதிரைச் சடங்கு - பழியர் சாதியில் சாவுச் சடங்குப் பாட்டு - விதை முகூர்த்தப் பாட்டு - மழைக் கஞ்சி காய்ச்சுதல் - கொடும்பாவி எரித்தல்.

உணர்ச்சிப் பாடல்கள் 105-128

காதலுணர்ச்சி - இறப்புணர்ச்சி - காதற் பாட்டுகள் - சந்திப்பு - தலைவன் முனைப்பு - கனவு - அலர் - உறுதி சொல்லல் - தாய் இற்செறித்தல் - உடன் போக்கு - கண் டோரை வினவுதல்-கற்புப் பாடல்கள்.

ஒப்பாரிப் பாடல்கள் 128-143

இரங்கற்பா - இலக்கியங்களில் ஒப்பாரி - சில பண்பு கள் - எங்கும் உண்டா - துன்பங்களில் கொடியது - விதவை யின் வாழ்வு - தாயை இழந்த மகள் பாடுவது - குழந்தையை இழந்த தாய் பாடுவது - வயதான மகனை இழந்த தாய் பாடுவது - சுமங்கலி இறந்த போது பாடியது - பாடல் களில் பண்புகள் - இறப்புக்குத் தக அமைதல் - புதிய ஒப்பாரிகள் - ஆடுவைத்த ஒப்பாரி.

பன்மலர்ப் பாடல்கள் **144-150**

பிச்சைக்காரர் பாட்டு - கள்ளைப்பற்றிய பாட்டு - வேதாந்தப் பாடல்கள்-அண்மைக்கால நிகழ்ச்சிகளை வருணித்தல் - பஞ்சப் பாட்டு - வெள்ளைக்காரன் பாட்டு.

௩. **பாடுபவர்கள்** **151-155**

அனைவரும் பாடுபவர்கள் - குடும்பம் முழுவதும் பாடும் பாடல் - இருவகையினர் - முதல் வகையினர் - இரண்டாம் வகையினர் - பெண்கள் பாடிவருவன - ஆண்கள் பாடி வருவன - இரு பாலரும் பாடி வருவன.

௪. **பாடப்படும் நேரமும் இடமும்** **156-160**

௫. **நாட்டுப்புறப் பாடல்களின் வடிவம்** **161-176**

எளிமை - எதுகை - மோனை - அடி இயைபு - சொல்லடுக்கு - தொடரடுக்கு - வந்தவை வரல் - விரித்துச் சொல்லுதல் - அடிவரையறை - பாடவேறுபாடு.

௬. **வரலாற்றுத் துணைக்கருவி** **177-181**

சமுதாய இயல் அறிஞர்களுக்கு **181-190**

பழக்க வழக்கங்கள் - ஒரு திருமணம் நடைபெறும் முறை - வரிசை - சாவுச் சடங்கு - நம்பிக்கை - இராசிப் பொருத்தம் - கண்ணேறு கழிப்பு - உறவுமுறை - அத்தான் மைத்துனி உறவுமுறை - மருமகள் மாமியார் உறவு முறை.

௭. **தமிழ் இலக்கியங்களில் நாட்டுப்புறப் பாடல்கள்** **191-218**

தொல்காப்பியம் - சங்க இலக்கியங்கள்-தெய்வப் பாடல்கள் - தொழிற் பாடல்கள் - சடங்குப் பாடல் - ஒப்பாரிப் பாடல் - கொண்டாட்டப் பாடல்கள் - குறத்திப் பாட்டு - காதற் பாட்டுகள் - சிலப்பதிகாரம் - திருவாசகம் - ஆழ்வார்

பாடல்கள்-கம்பராமாயணமும் கந்த புராணமும் - சிற்றிலக்கியங்கள் -சித்தர் பாடல்கள் - அண்மைப் புலவர் பாடல்கள் பாரதியார் பாடல்களில் நாட்டுப்புறப் பாடல் நடை-கும்மிப் பாடல் - கோணங்கிப் பாடல் - தெய்வப் பாடல்கள் தெம்மாங்கு- வடிவங்கள் - பாரதிதாசன்.

அ: பாநலம்

வருணனை 219-223

மனிதர்களை வருணித்தல் - இயற்கை வருணனை - இடத்தை வருணித்தல் - நிகழ்ச்சி வருணனை.

உவமை 223-229

அதிகமில்லை - பெண்களின் கூந்தல் - தலைவனைப் பிரிந்த தலைவி - வாழாத பெண்.

கற்பனை 229-236

கற்பனை மூன்று விதம்.

நகைச்சுவை 236-244

நையாண்டி - கோமாளி கதை - அறியாமை கூறல் - கோழைத்தனம் கூறல்.

நீதிகள் 245-247

நீதியின் தோற்றங்கள் - பெண்ணின் பெருமை - பெண்ணிற்கு அறிவுரை.

கூ. மூன்று ஐயங்கள் 248-270

பொருத்தமான தமிழ்ப் பெயர் - இனித் தோன்றுமா? இலக்கிய மதிப்புக் கொடுக்கலாமாம்?

முடிவுரை 271–278

ஆய்வுக்குத் துணை செய்த நூல்கள் 279-282

21 JAN 1975

நாட்டுப்புறப் பாடல்கள் - திறனாய்வு

க. நாட்டுப்புறப்பாடல்கள்

விளக்கங்கள்

நாட்டுப்புறப் பாடல்களைப் பற்றித் தனி நூல்கள், கட்டுரைகள் எழுதியவர்கள் நாட்டுப்புறப் பாடல்கள் என்ருல் என்ன என்பதற்கு விளக்கம் கூற முற்படும் பொழுது, ஒவ்வொருவரும் பண்டைய உரையாசிரியர்கள் போல் விளக்கங்கள் தந்திருக்கின்றனர். நாட்டுப்புறப் பாடல் என்று சுருங்கிய சொற்ருெடராக இருந்தாலும் அத்தொடர் பெற்ற விளக்கங்கள் விரிவானவை. நாட்டுப் புறப்பாடல்கள் என்பதற்குத் தெளிவான விளக்கம் கூற வேண்டும் என்ருல் அதற்குமுன் அறிஞர்கள் கூறிய விளக்கங்களைப் பார்ப்பது பொருத்தமுடையது.

J. D. சதாசிவ ஐயர் நாட்டுப்புறப் பாடல் என்பதற்கு விளக்கம் கீழ்க்கண்டவாறு எழுதுகிருர்.

"நாட்டுப் பாடல் என்பது சாதாரண மக்களின் பாடல். படிப்பு இல்லாத கிராமவாசிகள், வயலில் உழுகிறவர்கள், நாற்று நடுகிறவர்கள், அருவி வெட்டு கிறவர்கள், கிணறு வெட்டுகிறவர்கள், தண்ணீர் இறைக் கின்றவர்கள் மீன் பிடிப்பவர்கள், ஓடம் விடுகிறவர்கள், வண்டி ஓட்டுபவர்கள் முதலிய மக்கள் பாடுகின்ற,

பாட்டுத்தான் நாட்டுப் பாடல் என்பது. எழுத்தறி வில்லாத இத்தகைய தொழில் மாந்தரின் இதயத்தில் உணர்ச்சி பொங்கி அதுவே பாட்டாகப் பெருகுவதுண்டு. அத்தகைய பாட்டில் உணர்ச்சி இருக்கும். ஓசை இன்ப மிருக்கும்; தாளக்கட்டு இருக்கும்; சொல், தொடை, அழகு இருக்கும்; எனினும் இலக்கண வரம்பிற்கு உட்படாமலும் இருக்கும். இந்நாட்டுப் பாடலை ஓலையில் எழுத்தாணி கொண்டோ, காகிதத்தில் பேனாவினாலோ எழுதியிருக்கமாட்டார்கள். தலைமுறை தலைமுறையாக நாட்டுமக்கள் இப்பாட்டுக்களைப் பாடியும், ஆடியும் கேட்டுமே வழங்கிவரச் செய்தனர்.[1]

நாட்டுப்புறப் பாடல் என்றால் தேசிய கீதமோ என்ற ஐயப்பாடு எழுந்தவர்களுக்கு, மேற்கண்ட விரிவான விளக்கம் அது ஒருவகைப் பெரிய இலக்கியப் பிரிவு என்ற தெளிவினைத் தரும்.

இசைப் பேராசிரியர், பி. சாம்பமூர்த்தி நாட்டுப் பாடலுக்கு விளக்கம் எழுதும் பொழுது,

"ஒரு நாட்டின் கலாசார பாரம்பரியத்தின் முக்கிய அம்சம் அந்நாட்டில் வழங்கும் நாட்டுப்பாடல்கள் ; இலட்சக்கணக்கான கிராமிய மக்களின் இசையிது. சோர்ந்திருக்கும் விவசாயிக்கு உற்சாகத்தையும் அவர்கள் இல்லக் கிழத்திக்கு மட்டிலா மகிழ்ச்சியையும் தர வல்லன அந்த நாட்டுப் பாடல்கள். கிராமமக்க ளிடையே அன்றாடம் காணும் உள்ளுணர்வுகள் இப் பாடலிலே பிரதிபலிக்கும்"[2]

என்று கூறுகின்றார்.

---

1. மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு- XXXVI—XXXVII
2. நாடோடிப் பாடல்கள்-பக். 6

இவ்விளக்கங்கள் நமக்குப் போதியனபோல் இருந்தாலும் மேலும் இத்துறையில் ஈடுபாடு கொண்ட அறிஞர்களின் விளக்கங்களைத் தொகுத்துக் காணலாம்.

'நாட்டுப் பாடல்கள் என்பவை பெரும்பாலும் எழுத்தறிவில்லாத நாட்டுப்புறத்து மக்களிடையே தொன்று தொட்டு வழங்குபவை. அவற்றை நாட்டுப்புறப் பாடல்கள் என்றும் கூறலாம். இவற்றை இயற்றியவர் யாவர்? இவை தோன்றிய காலம் யாது? என்று அறுதியிட்டுக் கூற முடியாது. செவி வழியாகவே தலைமுறைதோறும் அவை நீடித்து வந்துள்ளன. எழுத்து வடிவத்தில் யாரும் அதனை எழுதிவைத்திருக்கவில்லை.

நாட்டுப்புறப் பாடல்கள் தாமாக மலர்ந்து மணம் வீசும் காட்டு மலருக்கு ஒப்பானவை. செயற்கை அரண் இன்றிப் பெருகித் தழைத்தவை. இயற்கையோடு இயைந்த வாழ்க்கை நடத்தும் மக்களின் உள்ளக்கிளர்ச்சிகளை வெளியிடும் தன்மை வாய்ந்தவை. நாட்டுப்புறத்து மக்களின் ஆசை, நம்பிக்கை, கனவு, காதல் ஆகிய எல்லாவற்றையும் அவை பொன்னொளி வீசிப் போற்றுகின்றன'.[1]

நாட்டுப்பாடல்கள் மக்களின் பாடல்கள். அந்தந்தப் பகுதி மண்ணுடன் வளர்ந்து வளம்பெற்றவை. எழுத்தறிவில்லாத கிராமப்புற மக்களிடையே தொன்று தொட்டு வழங்கிவரும் அப்பாடல்களை இயற்றியவர் யார்? இவை தோன்றின காலம் எது? என்று அறுதியிட்டுக் கூற முடியாது.

---

1. கலைக்களஞ்சியம் தொகுதி—6 • பக்.383

"மனித சமுதாயத்தின் ஆரம்பகாலந் தொட்டு மக்களின் – பாமர மக்களின்-உணர்ச்சிப் பெருக்காகக் கொந்தளித்தோடும் நதிப்பிரவாகமே நாட்டுப் பாடல். நாட்டுப்புற மக்களின் இருள் சூழ்ந்த வாழ்க்கையை ஊடுருவிச் சென்று அதை ஒளிமயமாக்கும் மின்னொளி அது. விவசாயத் தொழிலாளர்களின் சிரமமிகுந்த அன்றாட வேலைகளுக்குப் புதுமெருகிட்டுத் தொழிலில் இன்பச்சுவை ஏற்றும் சஞ்சீவி அது."[1]

இலக்கியத்தைப் புரிந்து கொள்ள நாட்டின் இதய பாவம் தெரிய வேண்டும். கிராமத்துப் பாட்டுக்களே அதற்குச் சான்றுகள்[2]

நாட்டு மக்கள் பாடி மகிழும் பாடல்களே நாட்டுப் பாடல்களாம். நாட்டுப் பாடல்கள் வழங்காத ஊர்களே யில்லை. உலகெங்கும் அவை வழங்குகின்றன. இப்பாடல்கள் ஊருக்கு ஊர் மாற்றமுடையன. ஏனெனில் இவை ஏட்டில் எழுதாதவை. இலக்கணத்தைப் பாராதவை. இதயத்துடிப்பில் எழுந்தவை. ஆகவே, உள்ளத்தைக் கவர்ந்தவை. எனவே, நிலைபேறு பெற்றவை. கால வெள்ளத்திற்கு இரையாகவே இல்லை.[3]

"இயற்கையோடு ஒட்டிவாழும் உள்ளத்தினையும் பண்பினையுமுடைய நாட்டு மக்களின் உணர்ச்சியையும் செயல்களையும் வெளியிடும் பாடல்களே நாட்டுப் பாடல்கள் என்றெல்லாம் பெயரிடப்படும். இப்பாடல்கள் பெரும்பான்மையும் எழுத்தறிவில்லாத நாட்டுப்புற மக்க

1. ஏட்டில் எழுதாக் கவிதைகள் - VII
2. புதுமைப்பித்தன் கட்டுரைகள் - பக். 109
3. ஈழத்து நாடோடிப் பாடல்கள்- பக். 111

ளிடையே வழங்கும் பலவிதப் பாடல்களைக் குறிக்கின்றன. மக்கள் வாழ்க்கையிலுள்ள செய்திகளை, அவர்கள் இன்ப துன்பங்களை விளையாட்டு வேடிக்கைகளை, உள்ளபடியே எடுத்துக் காட்டுவன நாட்டுப் பாடல்கள்.''[1]

''வாழ்க்கையின் ஒவ்வொரு துறை அனுபவத்திலும் ஊடுருவிப் பயின்ற நாட்டுப்புறமக்களின் உள்ளங்களி னின்றும் 'தம்மையறியாது' அருவிபோல் சுரந்து வெளிப்பட்டவையே நாட்டுப் பாடல்கள்.''[2]

"நாட்டுப் பாடல்கள் என்னும் தொடர் நாட்டு மக்களின் பாடல்கள் என்று பொருள்படும். நாட்டின் கண் உள்ள மக்களால் பாடப்பட்ட பாட்டுகளாகும். நாட்டுமக்களை எண்ணும்போது உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் பாகுபாடு இல்லை. எழுத்தறிவில்லாதவர் என்றுதல், அற்ப அறிவுடையார் என்றுதல் கொள்ளலாம்.''[3]

"குழந்தை கருவாக இருக்கும் காலத்திலிருந்து உலகில் தோன்றிப் பிள்ளைப்பருவம், வாலிபப் பருவம், முதுமைப் பருவம் ஆகிய வளர்ச்சிக் கட்டங்களைத் தாண்டிச் சாகும் வரைக்கும் மனித வாழ்க்கையிலுள்ள பல்வேறு நிகழ்ச்சிகளின் படப்பிடிப்பாக நாடோடிப் பாடல்கள் உள்ளன.''[4]

''கள்ளங் கபடமற்ற வெள்ளை உள்ளங்களிலிருந்து இயற்கையாகப் பிறக்கும் உணர்ச்சி அமுதங்கள்.

---

1. மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள் - பக். 5
2. காதல் வாழ்வு - பக். 32
3. கிராமக் கவிக்குயில்களின் ஒப்பாரி - பக். 1
4. தமிழ் நாட்டுப் பாமரர் பாடல் - பக். 1

கிராமங்களில் வாழும் சாதாரண மக்கள் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் உள்ளத்தை ஊஞ்சலாட விடுவார்கள். துன்பமாக இருந்தாலும் அவர்கள் மனம் துடிக்கும். துயருறும்; கண்ணீர் சிந்தும். இன்பமாக இருந்தால் அவர்கள் இதயம் துள்ளிக் குதிக்கும்; களிப்புறும்; கலகல வெனச் சிரிக்கும். இந்த உணர்ச்சிகள் எல்லாம் ஊமை நாடகங்களாக முடிந்து விடுவதில்லை. பாட்டுருவில் வெளியில் பறந்துவிடும்."[1]

"நாட்டுப் பாடல்கள் கிராமப்புற வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புள்ளவை. வாழ்க்கையில் அன்றாடச் சம்பவங்களையே பொருளாகக் கொண்டவை. இதனால் தான் வாழ்க்கையின் சாதாரண சம்பவங்களான பிறப்பு, குழந்தைப் பருவ நிகழ்ச்சிகள், விளையாட்டுக்கள், காதல், பொருந்தாமணம், குடும்ப விவகாரங்கள், கிராமத் தொழில்கள், பஞ்சம், கிராமதேவைகள் முதலியனவே நாட்டுப் பாடல்களின் பொருளாக அமைந்துள்ளன.'[2]

"நாட்டுப்பாடல் என்பது கேட்டார்க்கு இனிமை பயப்பதாய் நெடு நாளாகப் பொதுமக்களிடையே நிலவி எழுத்துருவம் பெறாது வாய்மொழியாக நிலவி வழி வழியாக வந்துகொண்டிருக்கும் கவிதை வடிவமாகும்"[3]

---

1. *'தமிழ் நாடு' - வார இதழ் - பக். 3. 1-4-63*
2. *தமிழர் நாட்டுப் பாடல்கள் - பக். 2*
3. The Folk song is a song i.e., a lyric poem with melody which originated anonymously among unlettered Folk in times past and which remained in currency for a considerable time, as a rule for centuries.

   —The Science of Folk Lore - 153

இவ்வாறெல்லாம் பல்வேறு அறிஞர்களால் சொல் லப்பட்ட விளக்கங்கள், நாட்டுப்புறப் பாடல் என்பதற்குச் சுருக்கமாக விடை கூற முடியாதபடி விரித்துரைக்க வேண்டிய ஒன்று என்பதனைக் காட்டுவனவாகவே அமைகின்றன. விளக்கம் எழுதும் ஆசிரியரின் எண்ணத்திற்குத் தக்கபடி விளக்கங்கள் எழுதப்பட் டுள்ளன. மேற்கண்ட அறிஞர்களின் விரிவான நாட்டுப் பாடல் விளக்கத்திற்கு, அவர்கள் கருத்து முழுதும் வரச், சுருக்கமாகச் சொல்ல நினைத்தால் பின்வரும் விளக்கம் நாட்டுப் பாடல் என்பதற்குப் பொருத்தமான விளக்கமாக இருக்கும்.

“நாட்டுப்புறப் பாடல்கள் இசையைக் கட்டாயம் பெற்றனவாகவும், உள்ளதை உள்ளபடி கூறி யாவரும் புரிந்து கொள்ளும் தெளிவுடையனவாகவும் இருக்கும். வரலாறு பண்பாடு இவற்றினை வெளிப்படுத்துவன வாகவும் வாழ்க்கையின்பல்வேறு சூழல்களில் சூழல்களுக் கேற்பப் பாடப்படுவனவாகும். இயற்றியவர் யார் என்று அறிய முடியாதனவாயும் வாய்மொழியாக வழிமுறை வழிமுறையாகக் குழந்தை முதல் பெரியவர் வரை பாடப்படுவனவாகும்.”

—

உ. வகைகளும் பகுப்புக்களும்

நாட்டுப்புறப்பாடல்களைத்தொகுத்தவர்கள், நூல்கள் வெளியிட்டவர்கள், பாடல்களின் வகைகளை ஒழுங்கு படுத்தி, ஒருவகையான ஒருமைப்பாடான பகுப்பு முறையை வெளியிட்டதாகக் காண முடியவில்லை. சிதறிக் கிடக்கும் நாட்டுப்புறப் பாடல் வகைகளைக் கண்டு, பின் அவைகளைப் பகுப்பது பொருத்தமாக இருக்கும். வருங்கால இத்துறை ஆய்வாளர்களுக்குப் பகுத்துக் கொடுத்தல் பேருதவியாய் இருக்கும்.

இலங்கை, வெள்ளவத்தை மு. இராமலிங்கம் நாட்டுப்பாடலின் பல்வேறு வகைகளை ஒரு கட்டுரையில் கூறுகிறார். அப்பிரிவுகள் வருமாறு: காதல் பாட்டு, கல்யாணப் பாட்டு, கூத்துப் பாட்டு, குறையிரத்தல் பாட்டு, போர்ப் பாட்டு, ஏசல் பாட்டு, கொம்பு முறித்தல் பாட்டு, விறகு சுமப்போர் பாட்டு, தோட்டக்காரர் பாட்டு, பெண்கள் தண்ணீர்க் குடத்தினராய்ப் பாடும் பாட்டு, கோலாட்டப் பாட்டு, வசந்தன் பாட்டு, தாலாட்டு, திரிகைப் பாட்டு, கப்பல் பாட்டு, ஓடப்பாட்டு, ஏற்றப் பாட்டு, பள்ளுப்பாட்டு, அருவிப்பாட்டு, நாற்று நடுகைப்பாட்டு, சூட்டுமிதிப் பாட்டு, கிரியைப்பாட்டு, கள்ளுப்பாட்டு, ஊஞ்சல் பாட்டு, தெம்மாங்கு, பறையன் பாட்டு, அம்பட்டன் பாட்டு, வண்ணான் பாட்டு, மருத்துவச்சி பாட்டு, மழைப் பாட்டு, கொடும்பாவிப் பாட்டு, கிணறுவெட்டிகள் பாட்டு, தவளைப்பாட்டு, எலிப்பாட்டு,

நாய்ப்பாட்டு, சேவற்பாட்டு, ஊர்க்குருவிப்பாட்டு, கரிக்குருவிப்பாட்டு, கிட்டிப்பாட்டு, சிறுவர்பாட்டு என்பனவாம்.

மு. அருணாசலம் எழுதும் வகைகள் வருமாறு: ஏற்றப்பாட்டு, வள்ளைப்பாட்டு, கண்ணன் பாட்டு, நடவுப் பாட்டு, தாலாட்டுப் பாட்டு, ஒப்பாரிப் பாட்டு, பரிகாசப் பாட்டு, கும்மிப்பாட்டு, விடுகதைப் பாட்டு, ஏசற்பாட்டு, வேல்பாட்டு, இசைப்பாட்டு என்பனவாம்.[1]

நாட்டுப்புறப்பாடல்களில் உள்ள இசைபற்றி ஆராய்வதில் ஆர்வமுடையவரான பேராசிரியர் சாம்பமூர்த்தி கீழ்க்காணும் வகைகளைக் குறிப்பிடுகின்றார். அவை நீதி நெறிப்பாடல்கள், தத்துவப் பாடல்கள், பழமொழிப் பாடல்கள், பண்டிகைப் பாடல்கள், தொழில்வகைப் பாடல்கள், வேளாண்மைப் பாடல்கள், பிரார்த்தனைப் பாடல்கள், மலைஜாதியினர் பாடல்கள், புராணத் தொடர்பான பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், கதைப் பாடல்கள், வெற்றி வீரர்களைப் பாராட்டிப் பாடும் பாடல்கள் [பரணி], வண்டிக்காரன் பாடல்கள், விடுகதைப் பாடல்கள், நையாண்டிப் பாடல்கள், விளையாட்டு சம்பந்தப்பட்ட பாடல்கள், நோய் தீர்க்கும் மருந்து வகை சம்பந்தப்பட்ட பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள், நகைச்சுவைப் பாடல்கள்[2] ஆகியவைகளாகும்.

பர்சி மாக்வீன் (Percy Macqueen) என்ற ஆங்கிலேயர் முன்பு சென்னை மாநிலத்தில் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தபொழுது நூற்றுக்கணக்கான நாட்டுப்

---

1. காற்றிலே மிதந்த கவிதை, பக். 3-4
2. நாடோடிப் பாடல்கள், பக். 7-8

பாடல்களைப் பணம் கொடுத்துச் சேகரித்தார். பின்பு அவற்றையெல்லாம் சென்னைப் பல்கலைக் கழக நூல் நிலையத்திற்கு வழங்கினார். பலவாறாக இருந்த அப் பாடல்களை நூல் வடிவில் வெளியிடும்பொழுது கி. வா. சகந்நாதன் வகைப்படுத்தியவை பின்வருமாறு: தெம்மாங்கு, தங்கரத்தினமே ராசாத்தி, ஆண் பெண் தர்க்கம், தொழிலாளர் பாட்டு, கள்ளன் பாட்டு, குடும்பம், தாலாட்டு. சிறுவர் உலகம், புலம்பல், கும்மி, தெய்வம், பல கதம்பம்[1] என்பனவாம்.

மேலும் சில நாட்டுப்புறப் பாடல் ஆய்வாளர்கள், தம் ஆய்வுகளில் சிலவற்றைமட்டும் குறிப்பிட்டு 'இவை போன்ற பல', "முதலியன" என்று குறிப்பிட்டு விடுகின்றார்கள். இவற்றை நாட்டுப்புறப் பாடலின் வகை அளவற்றன என்பதற்குச் சான்றாகக் குறிப்பிடலாம்.

முதல் வகை

பொருளில் அடிப்படையில் ஒன்றிற்கு ஒன்று தொடர்பில்லாமல் வேறுபட்டு நிற்கும் முறையில் இப் பாடல்களைப் பகுக்கவேண்டும்; நாட்டுப்புறப் பாடல்கள் தமிழ்மொழியில் மட்டுமின்றி உலகமொழிகள் அனைத் திலும் உண்டு. மண்ணில் மட்டுமின்றித் தண்ணீரிலும் [படகுப் பாட்டு] பாடப்படும் தன்மையுடையன; குழந்தை முதல் பெரியவர்கள் வரை பாடப்படும் பெற்றியன ; ஒரு மனிதனின் வாழ்வின் பல்வேறு கட்டங்களில் அவை பாடப்படுகின்றன. குழந்தை, வாலிபன், தந்தை போன்ற காலக்கட்டங்களில் அவன் பாடல்களைப் பாடு கிறான். ஆதலால் நாட்டுப்புறப் பாடல்களில்நாம் முதலில்

1. மலையருவி — III-V

குழந்தைப் பாடல்கள் (Children's Songs) என்ற ஒரு பிரிவினைப் பகுத்துக்கொள்ளலாம். குழந்தைப் பாடல் என்ற இப்பகுப்பில் குழந்தைகளை வைத்துக்கொண்டு பெற்றவர்கள் அல்லது மற்றவர்கள் பாடுவதும் [தாலாட்டு,வேடிக்கைப்பாடல்கள் போன்றன] குழந்தைகள் பாடும் விளையாட்டுப் பாடல்களும் அடங்கும்.

இரண்டாம் வகை

வழிபாடு தமிழர் வாழ்வில் அடிப்படைக் கடமைகளில் ஒன்றுகக் கருதப்படுவதாகும். தெய்வத்தை நெஞ்சில் என்றும் நினைந்து வாழும் தமிழர் தெய்வங்களுக்குப் பாமாலையாம் பூமாலை சூட்டியதை இலக்கிய வரலாற்றில் காண்கிறோம். நாட்டுப்பாடல்களிலும் பல்வேறு சிறு தெய்வங்கள், பெருந் தெய்வங்கள் பற்றி வழங்கிவரும் பாடல்கள் நிறைய உண்டு; இத்தகைய பாடல்கள் அனைத்தையும் பக்திப் பாடல்கள் (Devotional Songs) என்ற பகுப்பில் அடக்கலாம்.

மூன்றும் வகை

தொழிலின்றி உலகமா? கிராமங்களில் பாடல்களின்றித் தொழிலா? நாட்டுப்பாடல்களில் தொழிற் பாடல்கள் நிறைய உண்டு.

பல்வேறு தொழில் தொடர்பாகப் பாடப்படும் பாடல்கள் அனைத்தையும் தொழிற் பாடல்கள் (Labours Songs) என்ற ஒரு பகுப்பில் அடக்கலாம்.

இதுவரை பகுக்கப்பட்டவை நாட்டுப்பாடல் ஆராய்ச்சியாளர்களுக்கு உடன்பாடானவையாகும்;

இனி எஞ்சியுள்ள பாடல்கள் பலவாறாகப் பகுக்கப்படினும் பின்வருமாறு பகுப்பது பொருத்தமுடையது எனலாம்.

நான்காம் வகை

கும்மிப் பாடல், கோலாட்டப் பாடல், கல்யாணப் பாடல், கூத்துப்பாடல், கதைப் பாடல், சேவல் பாடல். சடங்குப் பாடல், விழாப் பாடல், கொடும்பாவிப் பாடல், போன்றவை அனைத்தும் கொண்டாட்டத்தின் [Festival] அடிப்படையில் பாடப்படுவனவேயாகும், தெய்வத் தொடர்புடையதாகவும், குடும்பத் தொடர்புடையதாகவும் அமையும் நிகழ்ச்சிகளில் இப்பாடல்கள் அமைவதால் இவற்றையெல்லாம் கொண்டாட்டப் பாடல்கள் [Festival Songs] என்று பகுக்கலாம்.

ஐந்தாம் வகை

காதல் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் இரண்டும் ஒரு பகுப்புக்குள் அடங்குவன. இன்ப துன்ப உணர்வுகளை இவ்விருவகைப் பாடல்களும் காட்டுகின்றன. இவ்விருவகைப் பாடல்களும் உணர்ச்சி என்ற அடித்தளத்திலிருந்து எழும் வடிவங்களாகும். பிற உணர்வுகளுக்கும் இவ்விரு உணர்வுகளுக்கும் வேறுபாடு உண்டாதலால் இவ்விருவகைப் பாடல்களையும் உணர்ச்சிப் பாடல்கள் [Emotional Songs] என்று அழைக்கலாம்.

ஆறாம் வகை

மேலே பகுக்கப்பட்ட வகைக்குள் அடங்காமலும் அல்லது தொகுக்கப்படாமலும் இன்னும் பல நாட்டுப்புறப்பாடல் வகைகள் இருக்கலாம். அப்படிப்பட்ட பாடல்

வகைகள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு மலராகக் கருதிப் பலவகை மணமுடைய அப் பன்மலர்ப் பாடல்வகைகளை 'பன்மலர்ப் பாடல்கள்' [Miscellaneous Songs] என்ற பகுப்பில் கருதலாம்.

ஆதலின், தமிழில் உள்ள நாட்டுப்புறப் பாடல்களின் வகைகளைக் குழப்பமற்ற முறையில் பகுக்கவேண்டும் என்று கருதுவோர் அப்பாடல்களைக்,

குழந்தைப் பாடல்கள்,
பக்திப் பாடல்கள்,
தொழிற் பாடல்கள்,
கொண்டாட்டப் பாடல்கள்,
உணர்ச்சிப் பாடல்கள்,
பன்மலர்ப் பாடல்கள்

என்ற ஆறுவகையில் பகுத்தால் இத்துறை அறிவாளர்களுக்கும் ,ஆய்வாளர்களுக்கும் அதனால் ஒரு தெளிநிலை பிறக்கும்.

குழந்தைப் பாடல்கள்

மற்ற எல்லாப் பருவங்களைக் காட்டிலும் கவலை, துன்பம், தொல்லை, இவைகட்கு உட்படாத பருவம் குழந்தைப் பருவம். (குழந்தைகள்) தம் மகிழ்வினைப் பாடல்களாக வெளிப்படுத்த, அவை நாட்டுப்புறப் பாடல்களில் குழந்தைப் பாடல்களாக விளங்குகின்றன. நாட்டுப்புறப் பாடல்களைத் தொகுத்தவர்கள் குழந்தைப் பாடல்களைப் போதுமான அளவிற்குத் தொகுக்கவில்லை. பெரியவர்களிடமிருந்தே பாடல்கள் பாடக் கேட்டுப் பெறுவது கடினமாக இருக்கும்பொழுது குழந்தைவாய்க் கேட்டு எழுதுவது இயலாதது ஒன்றே.

நாட்டுப் புறப் பாடல்களில் குழந்தைப் பாடல்கள் வகையெனக் கொள்வது பொருத்தமுடையது.

(1) குழந்தைக்குப் புரியும்படியாகக் குழந்தைப் பாடல்களைப் பாடுவது அல்லது அப்பாடல்களைவிடச் சிறிது தரம் உயர்ந்த பாடல்களைப் பெற்றோர்கள் அல்லது மற்றவர்கள் பாடுவது.

(2) குழந்தைப் பாடல்களைக் குழந்தைகள் இயல்பாக இருக்கும்பொழுதும் அல்லது விளையாடும்பொழுதும் குழந்தைகளே பாடுவது.

(3) குழந்தைக்காகத் தாய் தாலாட்டு இசைப்பது.

இவ்வகையில் நமக்குக் கிடைக்கும் பாடல்களில் மூன்றாவது வகையான தாலாட்டுக் கிடைத்த அளவிற்கு முன் இரண்டு வகைகளும் கிடைக்கவில்லை; அல்லது தொகுக்கப்படவில்லை. முதலிரண்டும் பாடவேண்டும் என்ற கட்டாயம் இல்லாததால் குறைவாகக் கிடைக்கின்றன. மூன்றாவது பாடியே தீரவேண்டும் என்பதால் மிகுதியாகக் கிடைக்கின்றது. குழந்தை பிறந்தவுடன் ஒரு தாலாட்டைப் பாடும் தாய் அக்குழந்தை மூன்று வயது அடையும்வரை அந்தத் தாலாட்டைப் பாடி வருகின்றாள். எனவே, தாலாட்டுக்கள் நாட்டுப் புறப்பாடல்களில் மறையாமல் நிலவுகின்றன என்பதற்கு இஃது ஒரு காரணமும் ஆகும்.

அமெரிக்கர்கள் குழந்தைப் பாடல்களை மட்டுமல்லாமல், அவர்களது விளையாட்டையும் இணைத்து ஆய்வு நடத்துவதில் அதிகப் பொறுப்புக் கொண்டுள்ளனர்.

அவை தொன்மையானவைகளாக இருப்பதுடன் சமய, வாழ்க்கை முறைகளைக் காட்டுவனவாகவும் கருதுகின்றார்கள்.[1]

இக்கருத்தை ஒட்டி V. V. W. நீவெல் (Newell) சிறந்த நூலொன்றை[2] வெளியிட்டுள்ளார். அமெரிக்கக் குழந்தைகளின் பொருளற்ற பாடல்களும் (Rhymes), விளையாட்டுக்களும் பழைய இங்கிலாந்தோடுமட்டும் ஒற்றுமையுடையனவாக இல்லாமல் அவை ஜெர்மன் பிரான்ஸ், இத்தாலி, சுவீடன் முதலியவற்றோடும் இணைவுடையனவாகக் காணப்படுவதாகக் கூறுகின்றார்.

நாட்டுப்புறப் பாடல்களில் மற்ற பிரிவுப் பாடல்களுக்கும், குழந்தைகள் பாடும் பாடல்களுக்கும் நிறைய வேற்றுமை உண்டு. குழந்தைப் பாடல்களில் வாழ்க்கை தொடர்பான பொருள் இருக்கும் என்று எதிர்பார்த்தால் அது கிடைக்காதது ஒன்றுகும். மொழியைப் பக்குவமாகப் பேசத் தெரியாத குழந்தைகளின் பாடல்கள் பொருட்செறிவுடையனவாக இருக்க எவ்வழியிலும் நியாயமில்லை. இந்த நியாயம் உலகக் குழந்தைகளுக்கும் பொருந்தும் பொது உண்மையாகும்.

இனி, குழந்தைப் பாடல்களைப் பற்றிச் சில அறிஞர்கள் கூறிய கருத்துக்களைக் கீழே காணலாம்.

---

1. Children's rhymes and formulas of play, which have been found to be handed down from immemorial antiquity and reflect with strange persistency the life and early religion of long past times.

Chambers Encyclopaedia 712— Vol IV - 1908.

2. The Games and Songs of American Children New York-1884.

"குழந்தைகளுக்காகத் தனிப்பட்ட பாடல்கள் எல்லா மொழிகளிலும் உண்டு. சந்தமும் ஓசையும், அவற்றில் முக்கியம். குழந்தைக்குப் புரியும்படியான எளிய சொற்களிலும் மழலைப் பேச்சிலும் அவை இருக்கவேண்டும். சந்திரன் என்பதற்குப் பதிலாகச் 'சந்தமாமா' என்றால் குழந்தைக்கு நன்கு விளங்கும்.

ஆங்கிலத்தில் குழந்தைகளுக்காக உள்ள பாடல்களுக்குப் பொருத்தமற்ற சந்தப்பாடல்கள் என்று பெயர் உண்டு. ஏனெனில் அவற்றிலே பல பாடல்களில் சந்த நயத்தைத் தவிரப் பொருள் இருக்காது.

தமிழிலே உள்ள நாட்டுப்புற வகையைச் சேர்ந்த குழந்தைப் பாடல்களில் பொருள் ஆழமற்ற பாடல்களையும் பொருள் நிறைந்த பாடலையும் காணலாம்.[1]

"குழந்தைகளுக்கு வார்த்தைகளைக் கற்றுக் கொடுக்கும் தாய்மார்கள் அதற்கென்று சில பாடல்களைச் சொல்லித் தருவார்கள். அந்தப் பாட்டிலே பொருள் தொடர்போ அபூர்வமான கருத்தோ இருக்கவேண்டும் என்பது அவசியம் இல்லை. வார்த்தைகள் குழந்தைகளின் நாவிலே புரளவேண்டும் என்பதுதான் அவர்கள் கருத்து".[2]

"பாட்டு அதற்கு முழுவதும் விளங்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனால் முழுவதும் குழந்தை உலகத்துக்கே புரியாதபடியும் இருக்கலாகாது. அங்கும் இங்கும் குழந்தைக்கு விளங்கும் விஷயங்கள் இருந்தால்

1. *காற்றில் வந்த கவிதை-பக். 81*
2. *நாடோடி இலக்கியம் - பக். 26*

போதும். அது சிரிக்கும்படியான விஷயமானால் அதற்கு அதிக ஊக்கம் உண்டாகும்.

குழந்தை உலகப் பாட்டுக்கள் குழந்தை உள்ளத்தை உணர்ந்து அமைந்தவை. அந்தப் பாட்டுக்களுக்குப் பதவுரை, நயவுரை என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. பல பாடல்களில் ஒலி மாத்திரம் இருக்கும். சிலவற்றில் பொருள் அடிக்கு அடி ஒட்டாமல் இருக்கும். ஆங்கிலத்தில் குழந்தைகள் பாடும் அருத்தமில்லாத பாடல்கள் (Nonsense rhymes) எதுகைநயம், தாளம் என்ற இரண்டு அழகோடு விளங்குவதைக் காணலாம்.[1]

இவ்வாறு, அறிஞர்கள் குழந்தைப் பாடல்களுக்குக் கொடுக்கும் விளக்கம் நமக்குத் தெளிவாக இருக்கிறது. தமிழில் உள்ள குழந்தைப் பாடல்களை மூன்று வகைகளாகக் கண்டோம். இம்மூன்று நிலைகளிலும் குழந்தைகளின் மனம் மாறுபட்டதாக இருப்பதால் பாடல்களும் மூன்றுவகைத் தன்மையுடையனவாக இருக்கின்றன. இவைகளில் குழந்தைகளுக்காக மற்றவர்கள் பாடுவதனைக் காண்போம். தரத்தால் உயர்ந்து நிற்கும் 'தாலாட்டுப் பாடல்களை' முதலில் காண்போம்.

தாலாட்டுப் பாடல்கள்

தாய்! ஆழம் காண முடியாத ஓர் அன்புக் கடல். அந்த அன்புக் கடலில் விளைந்த வலம்புரி முத்தே தாலாட்டு; உலகை விழிப்புறச் செய்யத் திருப்பள்ளியெழுச்சி பாடக் கேட்டிருக்கின்றோம். விழிகளை மூடித்

1. குழந்தை உலகம் - பக். 30

தூங்குவதற்குத் தாய் தாலாட்டு இசைக்கக் காண் கிறோம். அழுது அடம் பிடிக்கும் குழந்தைகளை அடக்கும் ஆயுதமாக அன்னையரிடம் தாலாட்டு அமைந் திருக்கின்றது. விழித்துக்கொண்டிருக்கும் குழந்தைக்கு வேடிக்கை காட்டும் தாய், குழந்தை விழிகளை மூடித் துயிலவேண்டும் என்று எண்ணும்போது பாட்டு இசைக்கின்றாள். இப்பாட்டினையே தாலாட்டு என்பர். இப்பெயர், காரணத்தால் அமைந்ததாகும். தால் என்ற சொல், நாக்கு என்று பொருள்படும். தாய், 'ராராரோ' என்று நாவினை ஆட்டிப் பாடுவதால், தால்+ ஆட்டு=தாலாட்டு எனப் பெயர் பெறலாயிற்று. இத் தாலாட்டினைத் தாய்மார்கள், ராராட்டு, ஓராட்டு என்று வழங்குவதுமுண்டு. இவை, ஓசை காரணமாக வழங்கும் பெயர்கள்.

தாலாட்டு ஊற்றெடுத்து ஆறுகிப் பெருகி ஓட அடிப்படைச்சக்தி, குழந்தையின் அழுகையே ஆகும். வயதானவர்களின் அழுகை, பொருளோடு அமைந் திருக்கலாம். கண்ணகி, சீதை, பாஞ்சாலி இவர்களின் அழுகை, மதுரை, இலங்கை, அத்தினபுரம் ஆகிய இவற்றை அழித்தது. புரிந்து கொள்ள முடியாத குழந்தையின் அழுகை, தமிழை வளர்த்தது. தாலாட்டுப் பாடலால் தமிழும் வளர்ந்திருக்கிறது.

தாலாட்டுப் பாடல்களை இரண்டாகப் பிரித்து ஆராய்வது பொருத்தமாகும். தாய்மார், தாங்கள் பரம்பரையாகவும், பிறரிடம் இருந்து அறிந்தும் பாடிவரும் பாடல்கள் ஒருவகை. இவ்வகைப் பாடல்களால்

வளர்ந்த நம் தமிழ்ப் புலவர்கள், அவற்றில் ஈடுபாடு கொண்டு இயற்றிய பாடல்கள் மற்றொரு வகை.

ஓரளவு எழுத்தறிவுள்ள தாய்மார்களும், எழுத்தறிவு இல்லாத தாய்மார்களும், தங்கள் குழந்தைகளைத் தூங்கச் செய்ய ஒரு குறிப்பிட்ட அளவு தாலாட்டுப் பாடல்களைத் தெரிந்து வைத்திருக்கின்றனர். ஐம்பது ஆண்டுகட்கு முந்திய தாய்மார்கள் ஒவ்வொருவரும் நூறு பாடல்கள் வரை தெரிந்து வைத்திருந்தனர். அவர்களுக்குப் பிற்பட்ட தாய்மார்கள் போதும் என்ற அளவிற்குத் தெரிந்து வைத்திருந்தனர். ஒன்றிரண்டு பாடல்கள் கூடத் தெரியாத தாய்மார்களும் உண்டு. இவ்வாறு குழந்தையுள்ள இடம் எல்லாம் குடிகொண்டுள்ள தாலாட்டுப் பாடல்களின் மொத்த எண்ணிக்கை, குறிப்பிட்டுச் சொல்ல முடியாதது ஆகும்.

தாலாட்டுப் பாடற் பொருள்

குழந்தைக்காகத் தாய் பாடும் வண்ண வண்ணப் பாடல்களைக் கேட்கும்போது, அப்பாடல்களில் குழந்தையில்லாதபோது தாய் பட்ட துன்பங்கள், குழந்தைப் பேற்றை வேண்டிச் செய்த அறங்கள், குழந்தையின் அழுகைக்குக் காரணம் வினவல், குழந்தை பிறந்ததன் காரணங்களை அடுக்கிச் சொல்லல், குழந்தையை வருணித்தல், குழந்தையின் அம்மான், தந்தை, பாட்டன், அத்தை முதலியவர்களின் பெருமை பேசுதல், குழந்தை பெருமை மிக்கவர்களின் பேரனோ பேத்தியோ என்று பூரித்தல், குழந்தை படுத்துள்ள தொட்டில் சிறப்பு, காது குத்தும் விழா முதலியவற்றை வருணித்தல், நித்திரை செய்யென வேண்டல் முதலியவைகளும் இறை தொடர்

புடைய சில நீண்ட கதைகளும் பொருளாய் அமைந் திருக்கக் காண்கிறோம்.

பரவுதல்

தாலாட்டு ஓர் இசைப் பறவை. ஆதலால், ஓரிடத் திலிருந்து வாழாமல் பல இடங்களுக்குச் சென்று வளரும் பெற்றியது. உதாரணமாக, ஒரு வீட்டில் தாய் ஒருத்தி குழந்தையைத் தாலாட்டுவதை வயது வந்த மகளொருத்தி கேட்டுக் கொண்டு இருக்கின்றாள். பின், அம்மகளுக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்டவுடன் நீண்ட தொலைவுக்கு அப்பால் உள்ள கணவன் ஊரில் அவளுக்குக் குழந்தை பிறந்தபொழுது அவள், தாயிடம் கற்றுவந்த தாலாட்டை இசைக்கின்றாள். அவ்வூரில் உள்ளோர் அதனைக் கேட்கின்றார்கள். அப்பாடலைப் பாடவும் செய்கின்றார்கள். பின், அத் தாலாட்டு அங்கிருந்து வேறிடத்துக்குச் செல்லும்; இப்படி, நிலம் விட்டு நிலம் நடைபோடும் தாலாட்டு, தமிழ் பேசும் நிலப்பரப்பு முழுவதும் சுற்றிக் கொண்டு வருகின்றது. இவ்வாறின்றிப் பயணம் செய்யுங்கால் பாடப்படுவதாலும், வெளியூர்களிலிருந்து வரும் உறவினர்கள் பாடக் கேட்டு மனனம் செய்வதாலும் இப்பாடல்கள் பரவுவதும் உண்டு.

நிலவுதல்

வாய்மொழி இலக்கியங்களில் அதிக அழிவில்லாமல் நல்ல உருவோடு கிடைக்கும் பிரிவு, தாலாட்டுப் பாடல் களாகும். குழந்தை மூன்று வயது அடையும்வரை ஒரு நாளிற்குப் பன்முறை தாலாட்டுப் பாடல்கள் பாடப் படுவதால், தாலாட்டுக்கள் அழிந்து ஒழியவில்லை. சந்ததி

சமுதாயத்திலே ஒரு தொடர் கதை ஆதலால், தாலாட்டு அதில் தொடர்ந்து வரும் வளர்பாட்டு ஆகின்றது.

பண்

தாலாட்டின் ராகம், நீலாம்புரி என்று கூறுகின்றார்கள். ஆனால், பெண்கள் எல்லோரும் ஒரே பண்ணிலேயே தாலாட்டைப் பாடி வருகின்றார்கள் என்று கூற முடியாது. சிலர் பாடுவது மாறுபடவும் கூடும். வட்டாரத்துக்கு வட்டாரம் பேச்சும் ஒலியும் மாறுபாடு உடையன. எனவே, பாடும் முறையிலும் மாறுபாடு இருக்கலாம். பாடல்களை ஒலிப்பதிவு செய்து ஆய்வது பாடலின் பண்ணை அறிய உதவலாம்.

அடிகளை மாற்றல்

இன்றைய கவிஞர்கள் தாலாட்டுப் பாடல்கள் இயற்றும்போது ஆண் குழந்தைகளுக்குத் தனியாகவும், பெண் குழந்தைகளுக்குத் தனியாகவும் பாடல்களைப் புனைகின்றனர். தாய்மார்கள் பாடிவரும் பாடல்களில் இம்முறை கிடையாது; ஒரே தாலாட்டினைக் குழந்தைக்கு ஏற்றபடி மாற்றிப் பாடுவதே அவர்களின் வழக்கம்.

மானுடி ஓடுது
மறியடி நல்லதங்கை
மானோடும் வீதியெல்லாம்—தங்கை
தானோடி வந்தாளோ!

என்று பெண்குழந்தைக்குப் பாடும் பாடலை, ஆண் குழந்தைக்குப் பாடும்போது,

மானுடா ஓடுது
மறியடா நல்லதம்பி
மானோடும் வீதியெலாம்—தம்பி
தானோடி வந்தானோ!

என்று மாற்றிப் பாடுவர். இது தாலாட்டுப் பாடலின் சிறப்பான குணமாகும். இதனைப்போலவே குழந்தைக்குத் தெய்வத்தின் துணை உண்டென்று பாடுபவர்கள், தாங்கள் வணங்கும் தெய்வத்தை முன்னிறுத்திப் பரவிப் பாடுவார்கள்.

தொட்டிலுக்குங் கீழாக என்கண்ணே
—உனக்குத்
துணையிருப்பாள் மீனாட்சி

×

தொட்டிலுக்குங் கீழாக—என்கண்ணம்மா
துணையிருப்பாள் மாரியம்மாள்

x

கட்டிலுக்குங் கீழாக—என்கண்ணே
காத்திருப்பார் சொக்கலிங்கம்

×

கட்டிலுக்குங் கீழாக—என்கண்ணம்மா
காத்திருப்பாள் காளியம்மாள்.

அடிகளின் இறுதியில் தெய்வங்கள் மாறி இருப்பதனை நோக்கும்பொழுது, பாடுபவர்கள் வணங்கும் தெய்வங்கள் வந்திருக்கின்றன என உணரலாம். இப்படிக் குழந்தைக்கு ஏற்பப் பாடுவதும், விரும்பிய தெய்வங்கள் வரப் பாடுவதுமாக மாற்றிப் பாடுவதைப் போல எவ்வித மாற்றமும் இன்றி எக்குழந்தைக்கும் பாடப்படுவன கீழ்க்காணும் வகைப் பாடல்களாகும்.

பாண்டிப் படிமுத்து—கண்ணே நீ
பஞ்சவர்கள் ஆண்டமுத்து
ஆயிரம் முத்தினிலே

ஆராய்ந்து எடுத்த முத்து
தொண்ணூறு முத்தினிலே—கண்ணே நீ
துளாவி எடுத்த முத்து *

■

வாழை பழுக்குமென்று
வனக்கிளிகள் வந்துகொய்ய
கிலுக்குப் பிரம்பெடுத்துக்
கிளிவிரட்ட வந்தகண்ணே ! *

■

காசி விசிறிகொண்டு
கையிலொரு செம்புகொண்டு
பூசைப் பிரம்பெடுத்து
பூசைசெய்யப் பிறந்தாயோ? *

அளவு

தாலாட்டுப் பாடல்களில் கதைப் பாடல்கள் தவிர மற்றைய பாடல்கள் குறுகிய அளவு உடையன. நினைவில் வைத்துக் கொள்ளத்தக்க நிகழ்ச்சிகளாகவும் பொருள்களாகவும் அப்பாடல்கள் அமைந்துள்ளன. பாடல்கள் சிதைந்து போகாதிருப்பதற்கு இது ஒரு காரணமாகும். பாடல்கள், குறுகிய அளவாக இருப்பதால் குழந்தை கண்ணயரும் நேரம் வரை பாட, தாய், பல தாலாட்டுப் பாடல்களைத் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டியவளாகின்றாள். இவ்வாறு, பல தாலாட்டுப் பாடல்களைத் தெரிந்து வைத்துக்கொள்வதற்குப் பாடல்களின் குறுகிய அளவு, தாய்க்குத் துணை செய்கிறது.

* இக்குறியிடப்பட்ட பாடல்கள் இந்நூலாசிரியரால் தொகுக்கப்பட்டவை.

கதைத் தாலாட்டு

வாய்மொழி இலக்கியங்களில் நீண்ட நேரம் பாட வேண்டிய நேரங்களில் மக்கள் நன்கறிந்த புராணக் கதைகளே இடம் பெற்றிருக்கின்றன. தாலாட்டிலும் மக்கள் வாழ்வில் நன்கு பழக்கத்திலுள்ள வள்ளி கதை, இராமர் கதை, சொக்கர் கதை முதலியவை வழங்கி வருகின்றன. கதைத் தாலாட்டில் குழந்தையின் பெருமை, பிற உறவு முறைகள் வருவது கிடையாது. கதை மெதுவாகச் செல்லாமல் வேகமாகச் செல்வதும், நாடகம்போல பாட்டு வடிவில் உரையாடல்கள் வருவதும் இத்தாலாட்டுகளின் இயல்பாகும்.

வள்ளி கதைத் தாலாட்டு

வள்ளி கதைத் தாலாட்டில் வள்ளி பிறந்து குறவரிடம் வளர்ந்தது, தினைப்புனம் காத்தது, நாரதர் வருவது, முருகனுக்கு நாரதர் வள்ளி பற்றிக் கூறுவது, முருகன் வள்ளியை அடைய வேடம் புனைவது, முருகன் யானையை வரவழைப்பது, இறுதியில் வள்ளியை மணப்பது ஆகிய நிகழ்ச்சிகள் அடுக்கடுக்காக ஏறத்தாழ நூற்றைம்பது அடிகளில் வருகின்றன. இக்கதைத் தாலாட்டு, சில இடங்களில் சிதைந்த வடிவில் பாடப் பட்டும் வழங்கி வருகின்றது. இவ்வள்ளி கதைத் தாலாட்டைச் சில தாய்மார்கள் பெண் குழந்தைக்கு மட்டும் பாடுவதுண்டு.

இராமர் கதைத் தாலாட்டு

வள்ளிகதைத் தாலாட்டைப் போல இராமர் கதைத் தாலாட்டும் தமிழகம் எங்கும் பரவலாக வழங்கி

வருகின்றது. வால்மீகி, கம்பர் ஆகியோர்களால் காப்பியமாகவும், குலசேகர ஆழ்வாரால் பத்துப் பாடல்கள் கொண்ட ஒரு தாலாட்டுப் பதிகமாகவும் பாடப்பட்ட இராமர் வரலாற்றைத் தாய் தன் குழந்தைக்குப் பாடும்பொழுது.

தாயார் சொற்படிக்கு
ராமர் வழிநடந்தார்
பர்ணக சாலைகட்டி—சுவாமி
பகவானும் பள்ளிகொண்டார்
வகையறியாச் சீதையரும்—சுவாமி
மானெனக்கு வேண்டுமென்றாள்—ஈஸ்வரரும்
மான்பிடிக்க வனம்புகுந்தார்
பிச்சையென்றான் இராவணனும்
அள்ளியிட்டாள் சானகியாள்
கூசாமே சீதையரைக்
கொண்டுவந்தான் தென்னிலங்கை
அனுமாரைத் தூதனுப்பிச்
சீராழி கைக்கொடுத்து—இராமர்
சீதை சிறை மீட்டாராம்
கணையாழி கைக்கொடுத்து—இராமர்
காரிகையை மீட்டாராம்!*

சொக்கர் கதைத் தாலாட்டில், சொக்கர் வயல் உழுது நெல் விதைத்த காட்சிகளும் மீனாட்சி, வயலுக்குச் சோறு கொண்டுபோன காட்சிகளும் கற்பனையோடு அமைந்துள்ளன.

இறைவன் தொடர்புடைய பாடல்கள்

நீண்ட பாடல்களாகப் பாடப்படும் இறைவன் தொடர்புடைய பாடல்கள், பாடுபவரின் தெய்வ சிந்தனை நிரம்பப்பெற்ற உள்ளத்தைக் காட்டுகின்றன.

குழந்தையை நீண்டநேரம் தாலாட்ட வேண்டி இருப்ப தால் பாடல்களும் நீண்டனவாக அமைந்திருக்கின்றன. குழந்தைகளின் மனத்தில் ஆரம்பம் முதலே தெய்வ வரலாறுகள் ஆழமாகப் பதிந்து விடவேண்டும் என்று தாய்மார்கள் விரும்பியதனாலேயே இத்தகைய பாடல்கள் எழுந்தன எனலாம். மராட்டிய வீரன் சிவாஜியின் வீர வாழ்வுக்குச் சிவாஜியின் தாய் கூறிய வீரக்கதைகளே காரணம் என்பதை வரலாற்றில் காண்கிறோம் அல்லவா?

பாட பேதங்கள்

புலவர் படைத்த இலக்கியங்களைப் படியெடுக்கும் போது ஏற்படும் பாட பேதங்கள், வாய்மொழி மூலம் பாடப்பட்டு வரும் பாடல்களில் இல்லாமலா போகும்? நிறைய உண்டு. சான்றாக ஒன்று காண்போம்.

ஆரும் அடிக்கவில்லை
அன்னியருந் தீண்டவில்லை
தானே அழுகின்றான்
தாயார் மடிதேடி

என்று ஒரு தாயிடம் இவ்வடிவில் வெளிவரும் பாடல், மற்றொரு தாயிடம்,

ஆரும் அடிக்கவில்லை
ஐவிரலுந் தீண்டவில்லை
அவனா அழுகின்றான்
ஆத்தாள் மடிதேடி

என்ற வடிவத்தில் வெளிவருகின்றது.

இலக்கியத் தரம்

தாலாட்டுப் பாடல்கள் விரிந்த விளக்கங்கள் எழுதக் கூடிய இலக்கியத்தரம் பெற்றவை. நயம் காண விழைந்

OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY
21 JAN 1975
GOVT. OF MADRAS, MADRAS

தால், தாயின் அன்பைப் போலவே விளக்கமுடியாத சிறப்பினைப் பெற்றவை. உதாரணத்துக்கு ஒன்று காண்போம்.

குழந்தை ஒன்றை ஒரு கட்டெறும்பு கடிக்க வருகிறது. கடிக்க வந்த கட்டெறும்பைப் பார்த்துத் தாயிடம் கவிதை பிறக்கிறது.

காரார் குழலாளைக்
கடிக்கவந்த கட்டெறும்பு
காலுக்குப் பீலிகட்டிக்
கைக்குவெள்ளிக் காப்புமிட்டு
நெற்றிக்குச் சிட்டிகட்டி
நிற்குதந்தக் கட்டெறும்பு*

பாட்டைக் கேட்ட கட்டெறும்பு தூங்கிவிடும் போல் இருக்கிறது! கவிஞர்களிடம் தப்பிய கட்டெறும்பு, தாயின் தாலாட்டில் குழந்தைக்கு எதிரியாக (Villain) விளங்குகின்றது.

புலவர்கள் செய்தவை

தங்களின் இல்லங்களிலோ அல்லது பிற இடங்களிலோ தாலாட்டுப் பாட்டைக் கேட்ட நம் அருந்தமிழ்ப் புலவர்கள் தாங்கள் படைத்த இலக்கியங்களில் இவற்றைப்பற்றிக் குறிப்பிட்டும், தாலாட்டுப் பாடல்கள் பாடியும் வந்திருக்கின்றனர்.

முதன்முதல் தாலாட்டுப்பாடல் பாடிய புலவர் பெரியாழ்வார் ஆவர். தம்மை யசோதையாக எண்ணி, கண்ணனைக் குழந்தையாக நினைத்துப் பாடியுள்ளார். அவரைத் தொடர்ந்து, குலசேகர ஆழ்வார், இராமர் வரலாற்றைப் பத்துப்பாடல்களில் தாலாட்டாகப் பாடியுள்ளார்.

புலவர்கள், பிள்ளைத்தமிழில் தாலப் பருவம் என ஒரு பருவம் பாடலாயினர். தாயர் தாலாட்டும் போது "ராராரோ" "ஆராரோ" என்ற ஒலியினைப் பயன்படுத்துவது போன்று, புலவர்கள் "தாலேலோ" என்ற ஒலியினை, தாலப்பருவம் பாடும்போது பயன் படுத்தினர்.

தாலாட்டைப்பற்றிய குறிப்புகள் இறையனார் களவியலுரை, தேவாரம், முத்தொள்ளாயிரம், கம்பராமா யணம், விறலிவிடுதூது முதலிய தமிழ் இலக்கியங் களில் காணப்படுகின்றன.

பதினைந்தாம் நூற்றாண்டு முதல் தாலாட்டு பிரபந்த நிலையை அடைய ஆரம்பித்தது. அப்படி எழுந்தவை பெரும்பாலும் தாய்மார்கள் பாடும் பாடற் பொருளைக் கொள்ளாமல் தனிப்பட்ட ஒருவரின் புகழினை விரித்துரைப்பதாக அமைந்தன. சீர்காழி சிற்றம்பல அடிகள், தத்துவராயர், திருவேங்கடநாதர், வெள்ளியம்பல வாணத் தம்பிரான், உபயகலியப்பர், சிவப்பிரகாச சுவாமிகள், ஈசுர முனியாபிள்ளை, யாழ்ப்பாணம் வ. நா. கணேச பண்டிதர், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, டாக்டர் உ. வே. சாமிநாதையர் போன்றவர்கள் தாலாட்டுப் பாடல்கள் பாடியுள்ளனர். அண்மைக்காலப் புலவர்களான கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, பாரதிதாசன், கண்ணதாசன், வாணிதாசன் முதலானவர்களும் தாலாட்டுப் பாடல்களைப் புனைந்துள்ளனர். சிறுமணவூர் முனுசாமி முதலியாரின் பாடல்கள், தமிழ்நாட்டில் மிகுதியாகப் பரவியுள்ளன. இவருடைய பாடல்கள்

நாட்டுப் பாடல்களின் சாயலில் அமைந்திருப்பது அதற்கு ஒரு காரணமாகலாம்.

இனி அடுத்து, குழந்தைகளுக்காகப் பெற்றோர்கள், அல்லது பிறர்பாடும் சில வகைப் பாடல்களைப் பார்ப்போம். குழந்தைப் பாடல்களின் முதல் வகையைச் சேர்ந்த இப் பாடல்கள் குழந்தைகளின் மனம், அறிவு, விருப்பம் இவற்றிற் கேற்ப அமைந்திருக்கும்.

குழந்தைகளுக்காகப் பாடுவன

"குமுதம்"[1] என்ற தமிழ் வார வெளியீடு ஒன்று குழந்தைகளுக்காக ஒரு பாட்டுப் போட்டி நடத்தியது. தமிழ்நாட்டுக் கவிஞர்களில் பெரும்பாலானவர்கள் அப் போட்டியில் கலந்துகொண்டார்கள். குழந்தைகளுக்குரிய பாடல்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது குழந்தைகள் பலரைச் சுற்றி உட்காரவைத்துப் பரிசுக்குவந்த பாடல் களைப் பாடிக்காட்டக் குழந்தைகள் இரண்டொரு பாட்டுக் களைத் தவிர எதனையும் விரும்பவில்லை. இந்நிகழ்ச்சி நமக்குக் குழந்தைகளுக்குப் பாடப்படும் பாட்டுகளுக்கு இலக்கணம் மட்டும் போதாது, பாடுபவனும் குழந்தையாக மாறிக் குழந்தையோடு குழந்தையாக இணைந்து பாட் டிசைக்கவேண்டும் என்று காட்டுகிறது. நாட்டுப் பாடலில் குழந்தைக்காகப் பாடப்படும் இரண்டாம் வகைப் பாட்டுக் களைக்குழந்தைக்குச்சொல்லிக் கொடுப்பவர்கள் குழந்தைக் கேற்பப் பாடல் பாடிக் காட்டுபவர்களாக விளங்குகின்றார் கள். இவ்வுண்மையைப் பின்வரும் பாடல்கள் காட்டும். தாயொருத்தி குழந்தையின் உடம்பிற்கு முழுவதும் அசைவு கொடுக்க எண்ணிப் பாடுகின்றாள்.

---

1. *'குமுதம்' 10-8-61 இதழ்*

"சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
சாயக்கிளியே சாய்ந்தாடு
சோலைக்கிளியே சாய்ந்தாடு
சுந்தரமயிலே சாய்ந்தாடு
குத்து விளக்கே சாய்ந்தாடு
கோவில்புருவே சாய்ந்தாடு
கண்ணே மணியே சாய்ந்தாடு
திண்ணையின் கீழே தவழ்ந்து விளையாடும்
தேனே மணியே சாய்ந்தாடு."[1]

குழந்தைக்கு வருணனை புரிகின்றதோ இல்லையோ தாயின் பாடலுக்குக் குழந்தை ஆடும். இப்பாடல் தமிழ் நாடு முழுவதும் பரவலாக வழங்கி வருகின்றது.

ஆண் பெண் ஆகிய இரு குழந்தைகட்கும் இப் பாடலைப் பாடுவதுண்டு. பாடல் மூலம் உடலை அசையச் செய்து தேகப்பயிற்சி கற்றுக் கொடுக்கும் தாய், அடுத்துக் குழந்தையின் ஒவ்வோர் உறுப்புக்கும் தேகப்பயிற்சி கொடுக்க விரும்புகின்றாள். அச்செயலுக்கும் பாட்டையே உறுதுணையாகக்கொண்டு, குழந்தையைத் தன் எண்ணத் திற்கு உட்படுத்துகின்றாள். இவ்வகையில் பாடப்பட்டு வரும் பாடல்களே "கை வீசம்மா கைவீசு"[2] என்ற பாட லும் "தோள் வீசம்மா தோள் வீசு"[3] என்ற பாடலும் எனலாம். எளிய சொற்களால் ஆன இப்பாடல்களிலும் தாய்மையின் அன்பு பெருக்கெடுத்தோடக் காண்கின்றோம். பாடல்களைக் கேட்கும் குழந்தைகள் உள்ளங்களும் இன்ப மடையப் பெற்றுச் சாய்ந்தாடிக் கைவீசி, தோள் வீசுகின்றன.

---

1. *குழந்தை உலகம்—பக். 21*
2. *மலையருவி—பக். 259*
3. *அ. நூ [அதே நூல்]—பக். 259*

வளர்கின்ற குழந்தை ஒரு பொருளைக் காணும் காட்சியுணர்வு பெற்றபொழுது தேனையும் தொட்டுப்பார்க்கத் துடிக்கும்; அவ்வுணர்வு பெற்ற குழந்தைகளுக்குப் பறவைகள் நிலா போன்றவற்றைக் காட்டிக் குழந்தைக்கு அவற்றிடம் இருந்து உதவிகேட்டும் பாடிக் காட்டுவர்.

நிலா நிலா வா! வா! நில்லாமல் ஓடிவா
மலை மேலே ஏறிவா, மல்லிகைப்பூ கொண்டுவா
நடுவீட்டில் வையே! நல்லதுதி செய்யே![1]

"காகா கண்ணுக்கு மை கொண்டுவா
குருவி கொண்டைக்குப் பூ கொண்டுவா
கிளியே கிண்ணத்தில் பால் கொண்டுவா
கொக்கே குழந்தைக்குத் தேன் கொண்டுவா."[2]

இவ்விரு பாடல்களும் நிலவினையும், பறவைகளையும் குழந்தைகட்கு வேண்டிய பொருள்களைக் கொண்டு வரச் சொல்லித் தாயன்பினைப் புலப்படுத்துவதாக இருக்கின்றன. இரண்டாம் பாடலில் தாய் பறவைகளின் வகைகளையும், உணவுப்பொருள்களின் வகைகளையும் பாடலில் சொல்லச்சொல்லப் பாடல் வளர்ந்துகொண்டே போகும்; இத்தகைய அமைப்பு நாட்டுப் பாடல்களில் உண்டு.

குழந்தையின் வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் தாய் அல்லது மற்றவர்கள் எச்சரிக்கையாக இருக்கின்றார்கள். இளமையிலேயே அக்குழந்தைக்கு விளையாட்டோடு விளையாட்டாக இறை பக்தியையும், கடவுள்களின் அரும் தோற்றத்தினையும் தடுமாற்றமில்லாமல் முரண்படா வண்ணம் பாடிக் காட்டுகின்றார்கள்.

---

1. குழந்தை உலகம்—பக். 28
2. அமுதாம்பிகை சிறுவர் வாசகம்—பக். 82

" குள்ளக் குள்ளனே
குண்டு வயிறனே
வெள்ளிக் கொம்பனே
விநாயகனைத் தொழு"[1]

என்று பெரியவர்கள் பிள்ளைகளைப் பிள்ளையாரை வணங்கச் செய்வார்கள். பெரியவர்களுக்குப் புலவர் காட்டும் பிள்ளையாரையும் இதனோடு ஒப்பிட்டுப்பார்ப்போம். இதே கருத்தினை மதுரைக் கலம்பகம் காப்புச்செய்யுள் பின் வருமாறு பாடுகின்றது.

" புந்தித்தடத்துப் புலக்களிறோடப் பிளிறு தொந்தித்
தந்திக்குத்தந்தை தமிழ்க்குதவென்."

குழந்தைக்கு அதன் நிலைக்கு ஏற்பக் "குண்டு வயிறன்" என்று கூறுவதுதானே அறிவுடைமையாகும். இச் சிறப்பினை நாட்டுப் பாடல் காட்டுகின்றது.

பிள்ளையாரை வருணித்ததுபோல திருமாலை நாட்டுப் பாடலில் குழந்தைகளின் கண்முன் கொண்டு வருவது போலப் பாடப்பட்டு வருகிறது.

" சங்குச் சக்கரசாமி வந்து
சிங்குச் சிங்கென ஆடுமாம்—அது
சிங்குச் சிங்கென ஆடுமாம்—[சங்குச்]
கொட்டுக் கொட்டச் சொல்லுமாம்—அது
கூத்தும் ஆடப்பண்ணுமாம்.
சங்குச் சக்கர சாமி வந்து
சிங்குச் சிங்கென ஆடுமாம்.
உலகம் முனும் அளக்குமாம்—அது
ஓங்கி வானம் பிளக்குமாம்.
கலகலென்று சிரிக்குமாம்—அது
காணக் காண இனிக்குமாம்.

1. *காற்றில் வந்த கவிதை*—பக். 82

சங்குச் சக்கர சாமி வந்து
சிங்குச் சிங்கென ஆடுமாம்—[1]

திருமாலை 'சங்குச் சக்கரசாமி' என்று எளிமையாகக் குழந்தைகளுக்குச் சொல்லும் இப்பாடலோடு நல்லெழுனியார் பாடிய திருமால் பாட்டினையும் இளங்கோவின் சிலப்பதிகாரத்தில் வரும் திருமால் தோற்றத்தினையும் நினைவுக்குக் கொண்டுவந்து ஒப்பிட்டுப்பார்க்கலாம்.

சங்குச் சக்கரசாமி என்ற திருமால் தோற்றத்தை

" பருவம் வாய்த்தலின் இருவிசும்பு அணிந்த
இரு வேறுமண்டிலத்து இலக்கம் போல
நேமியும் வளையும் ஏந்தியகை"[2]
பகையணங் காழியும், பால்வெண் சங்கமும்
தகைபெறுந் தாமரைக் கையின் னேந்தி.[3]

என்ற இவ்வடிகள் அப்பெரும் புலவர்கள் தரும் திருமால் தோற்றமாகும்.

குழந்தைப்பாடலில் திருமால்கைகளில் வைத்திருக்கும் சங்கு சக்கரம் ஆகியவைகளும் அவர் உலகம் அளந்தமையும் குழந்தைக்கு எளிய முறையில் சொல்லப்பட்டிருக்கின்றன. திருமாலை நாராயணசாமி, கோதண்ட ராமசாமி, ரங்கசாமி, கிருஷ்ணசாமி, மன்னார்சாமி, வேங்கடசாமி, திருமலைசாமி, நரசிம்மசாமி என்றெல்லாம் அழைப்பது போல நாட்டுப்புறப்பாடலில் குழந்தைகளுக்கேற்ப திருமால் 'சங்குச்சக்கரசாமி', என்று அழைக்கப்படுவதும் அழகாக இருக்கின்றது.

---

1. மச்சுவீடு—பக். 16—18
2. பரிபாடல் (12) பக். 7—9
3. சிலப்பதிகாரம் (11) பக். 47—48.

எனவே, இப்பாடல் குழந்தையின் மகிழ்விற்காகவும் ஆட்டத்திற்காகவும் பாடப்படுவதாக இருந்தாலும் பொருளற்றதாக இல்லாமல் இறைவர்களின் அருமையைப் பேசும் பாடல்களாக அமைந்திருக்கின்றன.

குழந்தைகள் பாடுவன

இவ்வகையைச் சேர்ந்த பாடல்கள் விளையாட்டுப் பாடல்களாக இருந்தாலும் அப்பாடல்கள் குழந்தைகளின் மனம், பருவம், விருப்பம். இவற்றிற் கேற்ப அமைந்திருப்பதாக மட்டுமின்றி, குழந்தைகளின் மனவளர்ச்சியையும், உடல் வளர்ச்சியையும் கவனத்தில் கொண்டுள்ளன என்று தெரியவருகிறது.

இனி, குழந்தைகளால் பாடப்படும் பாடல்கள் எவ்விதப்பொருளுமற்று, தாளமும்ஓசையும்உடையனவாக மட்டும் இருக்கும். விளையாட்டுகள், எண்ணிக்கைகள், தெய்வத்திடம் வேண்டுதல், வாழ்க்கை அறிவு, இவற்றை உணர்த்துவனவாக இருக்கும். சில பாடல்கள் வினாவும் விடையுமாகச் சங்கிலித் தொடர் போல அமைந்திருக்கும். சில பாடல்கள் நகைச்சுவைக் கதைப் .பாடல்களாக இருக்கும். சிறுவர்கள் அதிகமாக விரும்பும் பறவைகள், மிருகங்கள் ஆகிய இவைகளின் வாழ்க்கையைக் காட்டுவதாகச் சில பாடல்கள் இருக்கும். இவ்வாறு பல தன்மையுடைய பாடல்களைக் காண்போம்.

பொருளற்ற பாடல்கள் : எவ்விதப் பொருளுமற்று தாளமும் ஓசையும் உடைய பாடல்கள் ஓசை நயத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டிருப்பனவாகும்.

உடுப்பு—தடுப்பு
தத்திலி—புத்திலி
மக்கான்—சுக்கான்
பால்—பரங்கி
லடும்—லுடும்
ஜீ—ஜல்.[1]
பப்பா, பப்பா—வாட்மை டியர்?
மம்மா மம்மா—மீட்மை டியர்.
ஹௌ மை டியர்
திஸ் வே அண்ட் தட்வே
திஸ் வே அண்ட் தட்வே.[2]

இப்பாடல்கள் எதுகை, தாளம், ஓசை, பெற்றவை கள். ஆனால்பொருளில்லாதவைகள். யாவருக்கும்என்றும் விளங்காதவைகள். பிஞ்சு உள்ளங்களில் பிறமொழிச் சொற்கள் "விளையாட்டாக" வந்து சேருவதை மொழி வர லாறு எழுதுவோர் இங்கே காணலாம்.

விளையாட்டுப் பாடல்கள் : விளையாட்டுப் பாடல்களில் விளையாட்டின் தன்மை அடங்கியிருக்கும். உதாரண மாகக் 'கண்ணுமூச்சி' என்ற விளையாட்டில் ஒரு குழந்தை மற்றொரு குழந்தையின் கண்ணைமூடிக்கொள்ளும். மற்ற எல்லாக் குழந்தைகளும் ஓடி ஒளிந்துகொள்ளும். அப் படி அவர்கள் ஒளிந்து கொள்வதற்குக் கொடுக்கப்படும் குறிப்பிட்ட இடைவெளிக்குள் பாடிவிடும் பாடலொன்று கீழே தரப்பட்டுள்ளது.

" கண்ணுமூச்சி டே! டே!
காட்டு மூச்சி டே! டே!
உனக்கொரு பழம் எனக்கொரு பழம்

1. மலையருவி—பக். 273.
2. நாடோடி இலக்கியம் பக். 108.

கொண்டுவா
தேனு பேனு தெத்தினுப் பேனு
அப்புச்சி குப்புச்சி
ஆரு புடிச்சா''[1]

விளையாட்டுப் பாடல்களில் ஓசை இன்பம் கிடையாது. ஆனால் பாடல்களில் ஓசை இசை இல்லாதிருந்தாலும் உரை நடையாக இல்லாமல் செய்யுள் தன்மை உடையன.

குழந்தை மொழி புரியாதது போல பாடலும் அமைந்து விடுவதுண்டு. விளையாட்டுப் பாடல்கள் விளையாட்டிற்குத் தக்கபடி நீண்டும் சுருங்கியும் இருக்கும்.

விளையாட்டுப் பாடல்கள் அளவில் குறும்பாடல் களானாலும் கழற்சிக்காய் விளையாட்டுப் பாடல்கள் பெரிய பாடல்கள் எனலாம். அவைகள் பெரிய பாடல்களாக இருப்பதற்குக் காரணம் விளையாட்டின் அமைப்பாகும். அவ் விளையாட்டில் ஏழு அல்லது பத்துக் காய்கள் வைத்து ஒரு காயை மேலே தூக்கிப்போட்டு அது கீழே வருவதற் குள் கீழுள்ள காய்களில் ஒன்றைக் கையில் எடுத்து, அந்தக் கையாலே கீழே வந்துகொண்டிருக்கும் காயைப் பிடிப்பார்கள். அதனோடு பத்துக் காய்களை எடுக்கும் பொழுது, ஒவ்வொரு காய்க்கும் எண்ணிக்கையோடு பாட் டுப் பாடிக் கொண்டே எடுப்பார்கள். இவ்வரிய விளை யாட்டைச் சிறுவர்கள் அன்றிச் சில நேரங்களில் பெரியவர் களும் மனம்ஈடுபட்டு விளையாடுவது உண்டு. இவ் விளை யாட்டில் உதாரணமாக மூன்றாவது காயை எடுக்கும் பொழுது பாடப்படும் பல வகைகளில் எடுத்துக்காட் டாக மூன்றினைக் காணலாம்.

1. தமிழ்நாட்டுப் பாமரர் பாடல்கள்—பக். 38.

1 முக்குட்டு வாணியன் செக்காட
செக்கும் செக்கும் சேந்தாட
வாணிச்சி வந்து வழக்காட
வாணியன் வந்து சத்தாட.

2 முக்குட்டுப் பிள்ளை கைலாசம்
போராரையா பரதேசம்.

3 முவ்வா, முவ்வா நல்லெண்ணை
மூணு சடக்கு வேப்பெண்ணை.[1]

இவ் ஆடல், விளையாட்டுக்களில் பழமையானது என்பது நமக்குத் தெரிந்ததே.

"முத்தவார் மணல், பொற்கழங்காடும்
பட்டின மருங்கு"[2]

என்ற வரிகளில் சங்ககாலத்தில் செல்வமகளிர் இவ் வாட்டத்தை விளையாடியதைக் காட்டுகின்றது. இக் கழங் காட்டத்தின் சிறப்பு, பின்கண்டவாறு சொல்லப்படுகின்றது.

"குறிதவருமல் காய்களைப் பிடிக்கும் பழக்கம் ஏற்படுகின்றது. முதன்மை ஊக்கம் ஏற்படுகின்றது. கைகளை உயரத் தூக்கிக் கீழே இறக்கி ஆடுவதனுல் தேகப்பயிற்சி ஆகிறது. பாட்டுக்களைப் பாடும்பொழுது ஒவ்வொரு பழக்கத்திற்கும் அவற்றைப் பாடுவதனுல் திருத்தமாகப் பேசும் தன்மை உண்டாகின்றது. உச்சரிப்புத் திருந்துகிறது. சொற்களஞ்சிய அபிவிருத்தி ஏற்படுகின்றது."[3]

---

1. தமிழ்நாட்டுப் பாமரர் பாடல்கள்—பக். 25-27.
2. பெரும்பாணுற்றுப் படை—பக். 335-6.
3. தமிழ் நாட்டுப் பாமரர் பாடல்கள்—பக். 24

குழந்தைகளின் விளையாட்டுப் பாடல்களைத் தொகுத்தவர்கள் விளையாட்டுக்களின் பெயர் தெரியாமையால் அப் பாடல்களில் உள்ள ஒரு வரியையோ, அல்லது ஒரு சொல்லையோ தலைப்பாகக் கொடுத்து வெளியிட்டிருக்கின்றனர். இச்செயல் நமக்குச் சங்ககாலப் பாக்களை இயற்றிய புலவர்களின் பெயர்கள் தெரியாதபொழுது அவர்களால் கையாளப்பட்ட ஓர் உவமையையோ, சிறப்பான வரியையோ பெயராகக் கொடுத்துப் பெயரிட்டு அழைத்த செய்தியினை நினைவு படுத்துவதாக அமைந்திருக்கின்றது.

எண்ணுப் பாடல்கள் : குழந்தைக்குச் சில பாடல்கள் பெரியவர்களால் சொல்லிக் கொடுக்கப்படும். அப் பாடல்களை அவர்கள் வெறுத்து ஒதுக்காமல் தின்பண்டங்களைச் சுவைப்பது போலத் திரும்பத் திரும்பச் சொல்லிப் பாடிக் கொண்டே இருப்பார்கள். அப் பாடல்களில் ஒன்று எண்களைக் கற்றுக் கொடுத்தல் ஆகும். வெறும் எண்களை மட்டும் கற்றுக் கொடுத்தால் குழந்தை கேட்பதற்கு ஆர்வம் அடையாது. ஆதலின் எண்களோடு குழந்தைகட்கு விருப்பமான பொருள்களையும் இணைத்துச் சொல்லிக் கொடுப்பார்கள். குழந்தைகள் அதனை ஆவலுடன் கேட்பர்; படிப்பர். அவ்வகைப் பாடல்களில் ஒன்றினைக் கீழே காணலாம்.

"ஒருகுடம் தண்ணீர் ஊற்றி
ஒரே பூ பூத்ததாம்
இரண்டுகுடம் தண்ணீர் ஊற்றி
இரண்டே பூ பூத்ததாம்,,.[1]

---

1. வட ஆர்க்காடு மாவட்டம்—பக். 104

இப்படியே எண்கள் பிறழாமல் வரிசையாகப் பாடிக் கொண்டே இருப்பர். இப் பாடல்களில் எண்ணிக்கை முறைமாருமையே முக்கியமானதாகும். இவ் எண்ணிக் கைப் பாட்டுக்கள் போல் பிரிட்டன், அமெரிக்கா, முதலிய நாடுகளிலும் உண்டு என்றும், பிரிட்டனில் பாடப்படு பவைகளைக் கம்பர்லாண்ட் என்ற இடத்தில் ஆட்டை எண்ணப் பயன்படுத்துவார்கள் என்றும், அப் பாடல்கள் பழைமையான சில செய்திகளைத் தெரிவிப்பனவாக உள்ளன என்றும் அறிய முடிகின்றது. அவைபோன்ற எண்ணூறு பாடல்கள் சி. எச். ஹாரிங்டன் பெல்டோ (1888) என்பவரால் தொகுக்கப்பட்டிருக்கின்றன[1].

இம்முறையைப் போலவே வேருெரு வகையில் இரு அரிய பாடல்கள் உள்ளன. குழந்தைகளுக்கு எண்ணிக்கைகளைக் கற்றுக்கொடுப்பது போலவே உயிரெழுத்து மெய்யெழுத்துக்களை வரிசைப்படுத்திப் பாட்டாக்கி அப் பாட்டில் இறைமையைப் பொருளாக்கிக் குழந்தைகளுக்குப் பள்ளிகளிலும் வீடுகளிலும் சொல்லிக் கொடுப்பது உண்டு. குழந்தைகளுக்காகத் தமிழ் எழுத்துக்களை வரிசைப்படுத்தி ஆத்திசூடி, கொன்றை வேந்தன் ஆகிய இரு நூல்களும் இயற்றப்பட்டமை நமக்குத் தெரிந்ததே; தோத்திர நூல்களில் உயிர்வருக்க மாலை, மெய்வருக்க மாலை என்ற இருவகைப் பிரபந்தங் களும் இம் முறைப்படி உள்ளனவே ஆகும்.

அறிவுப் பாடல்கள்: குழந்தைப்பாடல்களில் நீதிகள் கூறப்படுகின்றன என்பதைப் பின் வரும் பாடல் உணர்த்தும்.

1. Chambers Encyclopaedia—Vol—IV (1908)

''தென்னை மரத்தில் ஏருதே!
தேங்காயைப் பறிக்காதே
பனைமரத்தில் ஏருதே!
பனங்காயைப் பறிக்காதே
மாமரத்திலே ஏருதே
மாங்காயைப் பறிக்காதே.''[1]

மரத்தில் ஏறி விளையாட ஆசைகொள்ளும் மனம் படைத்த குழந்தைகள் இவ்வண்ணம் பாடுவதை நோக்குகையில் இவைபோன்ற பாடல்கள் உருவாக்கப்பட்டன. "மரங்களில் ஏறுதல் துன்பம் விளைதற்குரியது'' என்று அறிவுறுத்துவது ஒன்றைக் கருதியே என்று நினைக்கவேண்டி இருக்கிறது. இப்படி நீதிகளை விளையாட்டோடு விளையாட்டாகக் குழந்தைகள் தங்கள் பாடல்களில் தங்களுக்குத் தெரியாமலே கற்று வருவார்கள்.

வாழ்க்கை அறிவு: குழந்தைகளுக்கு இறை பக்தியைச் சொல்லிக்கொடுப்பது போலவே வருங்கால வாழ்க்கை அறிவுகளையும் பாட்டில் கற்றுக்கொடுக்கின்ருர்கள். 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்ற எண்ணமுடைய பெற்ருேர்கள், மேலே கண்ட நீதிப்பாட்டைப் போல வாழ்க்கைக்கு வேண்டிய ஒரு செயலைப் பாட்டு வடிவில் கற்றுக்கொடுப்பதும் உண்டு. குழந்தைகள் கூடிப்பாடுவதும் உண்டு.

''அரிசியைக் குத்துமுன்னே அரித்துக்கழுவு பின்னே
உலையில் அரிசிபோடு, உடனே மேலே மூடு
கொதித்து வந்தபின் வடித்துக் கொட்டி ஆற்றி-
எடுத்துக்

1. குழந்தை உலகம்—பக். 42.

கத்திரிக்காயை அரிந்து காரம் புளிப்புத் தெரிந்து
உப்பும் மசாலும் போட்டு ஒத்திருக்கக் கூட்டு
வெந்தபின்னே தாளித்து விரித்து இலையில் அமைத்து
யாவரும் கூடிப் புசிப்போம் இன்பமாக வசிப்போம்''[1]

நினைவு வளர்ச்சிப் பாடல்கள் : குழந்தைகள் என்ன என்று கேட்பதிலும் ஏதாவது ஒன்றினைப் பார்ப்பதிலும் அதிக ஆவலுடையவர்கள். என்ன என்று குழந்தைகள் கேட்கும் கேள்விகளுக்கு விடையளிக்காமல் மழுப்புபவர்களும், குழந்தைகளையே கடிந்துகொள்பவர்களும் நம்மிடையே பலர் இருக்கின்றார்கள். குழந்தைகள் 'என்ன?' என்று வினா எழுப்பிக் கேட்கத் தாயும் 'பார்' என்று ஆவலைத் தூண்டுவதாயும் உள்ள பாடல்கள் பல உண்டு. இவை ஒரு வரியில் இருசொற்களுக்குமேல் பெரும்பாலும் இருப்பதில்லை. 'என்ன?' என்று கேட்டுக்கொண்டு பதில் சொல்லும் ஒரு பாடல் கீழே தரப்பட்டுள்ளது.

''என்ன ஊர்?
மயிலாப்பூர்!
என்ன மயில்?
காட்டு மயில்!
என்ன காடு?
ஆர்க்காடு!
என்ன ஆறு?
பாலாறு!
என்ன பால்?
கள்ளிப் பால்!
என்ன கள்ளி?
இலைக்கள்ளி!

1. குழந்தை உலகம்—பக். 29.

என்ன இலே?
மா இலே!
என்னமா?
அம்மா!"[1]

இப் பாடல் ஒரு குழந்தை கேட்க மற்றொரு குழந்தை பதில் சொல்லுவதாகப் பாடப்படும் பாடலாகும். கேள்விகட்குப் பதில் பிறழாமல் அமைந்திருக்கும் இப் பாடல் வளரும் குழந்தைகளுக்கு நினைவாற்றலை வளர்க்கும் மருந்தாகும்.

இந் நினைவுச் சங்கிலிப் பாடல்கள் நிறைய எல்லா இடங்களிலும் வழங்குகின்றன. (என்ன)என்றபாடல்கள் போலவே "எதற்கு?", "எங்கே?" என்று கேட்டு வரும் பாடல்களும் உண்டு.

அடுத்து இவ் வரிசையில் பல் பொருள்களைப் பார்க்கச் சொல்லி ஆவலைத் தூண்டிவிடும் ஒரு பாடல் வளரும் குழந்தையின் மூளையை மேலும் செயல்படுத்துவதாக இருக்கிறது.

"கடலோரத்தில் கப்பல்பார்
கப்பல்லே ஆயாபார்
ஆயா கையிலே தட்டைப்பார்
தட்டு மேலே பிள்ளையைப்பார்
பிள்ளை கையில் பழத்தைப்பார்
பழத்துக்குள்ளே பூச்சிபார்
பூச்சிக்குள்ளே கூண்டுபார்
கூண்டுக்குள்ளே கிளியைப்பார்
கிளிவாயிலே பழத்தைப்பார்
பழத்துக்குள்ளே பூச்சிபார்
ஆயாவுக்கு இடுப்பைச்சுற்றிப் பேனைப்பார்."[2]

---

1. வடார்க்காடு மாவட்டம்—பக். 104.
2. மலையருவி—பக். 271.

தமிழில் குழந்தைப்பாடல்கள் சில பொருளற்றவை களாக இருந்தாலும் பல பொருளுடையவை. பாடும் குழந்தைகட்குத் தீங்கினை விளைவிக்காத நல்லமுதம்! குழந்தைகளின் வளர்ச்சியைத் தடைப்படுத்தும் வகை யிலோ தீயசெயல்கள் புரியச் செய்வதாகவோ இல்லை, இனிய ஓசை, விளையாட்டு, கல்வி, தெய்வநம்பிக்கை, வினு விடைகள், அஃறிணை, உயிர்களிடத்து அன்பு ஆகிய இவற்றைப் பொருளாகக் கொண்டுவரும் குழந்தைப் பாடல்களை, வளரும் குழந்தைகளை வளர்க்கின்ற "சத்துள்ள உணவுகள்'' என்று சொல்ல லாம். தாய்ப்பால் உடலை வளர்க்கின்றது. இப் பாடல்கள் உடலையும் அறிவையும் வளர்க்கின்றன.

பக்திப் பாடல்கள்

தமிழ் இலக்கிய வரலாற்றில் சமய குரவர்களும் ஆழ்வார்களும் கடவுளர் மீது காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிப் பாட்டிசைத்ததைக் காண்கிறோம். அப் பாடல்களின் பண்கள் தெய்வங்களின் சன்னிதி களில் பாடப்பட்டு வருவதையும் கேட்கிறோம். சமயப் பெரியோர்களின் பக்திப் பாசுரங்களைப் போல நாட்டுப் பாடல்களிலும் பக்திப் பாடல்கள் பல உண்டு. இந்நாட்டு மக்கள் எச்செயல் செய்ய நினைப்பினும் இறைவனை மனத்தில் எண்ணியே செயல்படுவர். தாலாட்டுப் பாடல்களில் குழந்தைகளுக்கு இறைபக்தியைப் பாலூட்டுவது போல ஊட்டுவர். ஏர் பிடித்தாலும் ஏற்றம் இறைத்தாலும், பொழுதுபோக்கிற்காகக் கதை சொன்னாலும், அப் பாடல்களிலெல்லாம் இறைமணம்

கமழக் காணலாம். அப்படிப் பாடப்படும் பாடல்களி லெல்லாம் இறைவர்களின் வரலாறுகளும், இறைவர்களுக் குள்ள ஆற்றல்களும் குண நலன்களும் நிறைந் திருக்கும்.

நாட்டுப்புறத் தெய்வங்களாகக் கன்னியம்மை, அங்காளம்மாள், காட்டேரி, துரோபதையம்மன், வடி வுடையம்மன், எல்லையம்மன், பிடாரி, காளி, மாரி யம்மன், பகவதி, கொட்டிடையம்மன், துர்க்கை, பூவாடைக்காரி, குத்தாலம்மன், நாகம்மை, உலகாயி அம்மன், கருப்பன், ஐயனார், கத்தும் வைரவன், மதுரை வீரன், காத்தவராயன், சாத்தான், பாவாடை ராயன், போர்த்துராசன், நயினாரப்பன், முனி முதலிய தெய்வங்களைக் கூறுவார்கள். சிறு தெய்வங்கள் பெரும்பா லும் துன்புறுத்தும் தெய்வங்களாகவே கருதப்படுகின் றன. இத் தெய்வங்களைச் சிற்றூர் மக்கள் பெரிதும் அஞ்சி வழிபடுவர். இத் தெய்வங்களின்றிப் பிள்ளையார், முருகன், திருமால், சிவன் போன்ற பெருந் தெய்வங் களும் உண்டு. இத் தெய்வங்களைச் சிற்றூர் மக்கள் வழி படும் பொழுது பாடும் பாடல்களே நாட்டுப் பாடல்களில் பக்திப் பாடல்கள் ஆகும்.

இப் பக்திப் பாடல்களில் நமக்குக் கிடைக்கக்கூடிய பாடல்களின் சிறப்புக்களையும், தன்மைகளையும் காண் போம்.

சிறு தெய்வப் பாடல்கள்

மாரியம்மன் பாட்டு: மாரியம்மன், வடிவுடையம்மன், அங்காளம்மன், துரோபதையம்மன், முத்துமாரி,

முத்தாலம்மன், காளி முதலிய தெய்வங்கள் மீது பாடப் பட்டுள்ள பாடல்கள் கிடைத்துள்ளன. இச்சிறு தெய்வ வரிசையில் 'மாரியம்மன் தெய்வம்' அதிகமான வழிபாட் டினைப் பெறும் தெய்வமாகும். பெரும்பாலும் வெப்பம் நிறைந்த மாதமான சித்திரை மாதத்தில் இவ் வழிபாடு நடைபெறும். அம்மை நோயைப் போக்கும் தெய்வமாக மாரியம்மனை மக்கள் கருதுவர். மாரியாத்தாள் என்று அழைக்கப்படும் மாரியம்மனிடம் மக்களுக்குப் பக்தியும், பயமும் அதிகம். அம்மை வார்த்தவர்களுக்கு இன்றும் மாரியம்மன் தாலாட்டுப் பாடி வருவதைக் காணலாம். ஆயிரக்கணக்கான வரிகளைக் கொண்ட அத் தாலாட் டினைச் சிறப்பிக்கும் பொழுது 'எத்தேசத்திலும் இடை விடாது சிந்தித்துவரும் மாரியம்மன் தாலாட்டு' என்று கூறப்படுகின்றது.

உடம்பில் வந்திருக்கும் அம்மையை 'முத்து' என்று அழைப்பர். மாரியம்மன் தாலாட்டில் உடம்பெங்கும் வார்த்திருக்கும் முத்தை இறங்கச் செய்யப் பின் கண்ட வாறு வேண்டிப் பாடப்படுகிறது.

''சிரசினில் முத்தையம்மா தற்காத்து நீயிறக்கும்
முகத்தினில் முத்தையம்மா முன்னதா நீயிறக்கும்
கழுத்தினில் முத்தையம்மா கட்டழகி நீயிறக்கும்
தோளினில் முத்தையம்மா துரந்தரியே நீயிறக்கும்
மார்பினில் முத்தையம்மா மாதாவே நீயிறக்கும்
வயிற்றினில் முத்தையம்மா மகேஸ்வரியே நீயிறக்கும்
துடையினில் முத்தையம்மா தேவியே நீயிறக்கும்
முழங்காலில் முத்தையம்மா மீனாட்சி நீயிறக்கும்
கணுக்காலில் முத்தையம்மா காமாட்சி நீயிறக்கும்
பாதத்தில் முத்தையம்மா பாரிலிறக்கிவிடும்
பூமியில் இறக்கிவிடு பெற்றவளே காருமம்மா
பெற்றவளே எந்தாயே பேரழகி காருமம்மா"

இந் நெடிய பாடலில் மாரியம்மனின் ஆற்றல், பாடுபவரின் இரக்க உணர்வு முதலியன நன்கு அமைந்திருக்கின்றன.

மக்களிடம் அதிகமாக வழங்கி வந்த மாரியம்மன் தாலாட்டினை ஒருவர் இவ்வாறு வெண் செந்துறையில் செப்பனிட்டு எழுதியிருக்கிறார்.

பாடும் மக்கள் இத்தகைய தெய்வங்களுக்கு இப்படிப் பட்ட ஆற்றல் இருப்பதாகக் கருதியிருக்கின்றார்கள். மக்களின் குறைகளை நீங்கச் செய்யும் ஆற்றலுடைய தெய்வங்கள் இவை என்ற ஆழ்ந்த எண்ணம் மக்கள் மனத்தில் ஊறிப் போய் இருக்கின்றது. எனவே, அநீதி, கொடுமை, நோய், முறைக்கேடு இவை நடைபெற்றபொழுது இத்தகைய தெய்வங்களிடம் மக்கள் அடைக்கலம் புகுந்து மன்னனிடம் முறையிடுவது போல இத் தெய்வங்களிடம் முறையிடுகின்றார்கள்.

மாரியம்மனிடம் வேண்டுவதுபோல கன்னித் தெய்வம் முத்தாலம்மாவிடமும் காளியிடமும் வேண்டும் பாடல்களைக் கீழே காணலாம்.

'முத்தாலம்மா பாதம்
முழுத்திட்ட காந்தாரி
பட்டாலம்மா மாரியம்மா
பாதுகாக்க வேணுமம்மா[1]
காளியம்மா மாரியம்மா
கண்ணனூர் துர்க்கையம்மா
துர்க்கைப் பிடாரியம்மா
துணை யிருக்க வேணுமம்மா[2]

1. *ஏட்டில் எழுதாக் கவிதைகள்*—பக். 23
2. *அ. நா.*—பக். 33

கரகப் பாட்டு : மாரியம்மனுக்கு வழிபாடு நிகழ்த்தச் செல்லும் பொழுது 'கரகம்' எடுத்துச் செல்வர். மாரியம்மன் திருவிழாவன்று கரகம் எடுப்பவர்கள் மஞ்சள் வேட்டியணிந்து மாலையணிந்து மாரியம்மன் இருக்குமிடம் நோக்கித் தலையில் தண்ணீர் நிரப்பிய சிறுகுடத்தினை வைத்துப் பின்னணி வாத்தியங்கள் முழங்க ஆடிப் பாடிச் செல்வர். இப்படிக் கரகம் எடுத்துச் செல்லும் பொழுது மாரியம்மனை நினைத்துப் பாடிக் கொண்டே செல்வர்.

"ஒன்றாங் கரகமடி—கன்னி
ஓகோ—என்தாயே
ஓடியாந்து பூசைவாங்கு இப்போ—தாயே
ரண்டாங் கரகமடீ—கன்னீ
ஓகோ—என்தாயே
ரணகரகம் பொன்னாலே இப்போ—தாயே
மூன்றாங் கரகமடி —கன்னி
ஓகோ—என்தாயே
முத்தாலே பொன்கரகம் இப்போ—தாயே
நாலாங் கரகமடி—கன்னீ
ஓகோ—என்தாயே
நாடி வரும் பூங்கரகம் இப்போ—தாயே
அஞ்சாங் கரகமடி கன்னீ
ஓகோ—என்தாயே
அசைந்தாடும் பொன்கரகம் இப்போ—தாயே-[1]

இப்படிப் பாட்டில் வரும் எண்ணிக்கைகள் பத்து வரை நீண்டு கொண்டே போவதுண்டு.

மாரியம்மனிடம் மக்களுக்குப் பயம் இருந்தது என்பதனை,

---

1. *காற்றில் வந்த கவிதை—பக். 70*

'ஆருகடன் நின்றாலும் மாரிகடன் ஆகாது
மாரிகடன் தீர்த்தவர்க்கு மனக்கவலை தீரும் அம்மா'[1]

என்ற வரிகள் காட்டுகின்றன.

பூசாரிப் பாட்டு:—மனிதர்கள் மீது தெய்வம் ஏறி வருவதுண்டு என்பது சங்க காலந்தொட்டே இருந்து வந்த நம்பிக்கையாகும், பெண்களைப் பெற்ற தாய்மார் "வெறியாட்டு'' என்பதில் எவ்வளவு நம்பிக்கை கொண் டிருந்தனர் என்பதனை இலக்கியங்கள் காட்டுகின்றன. தெய்வத்தை அழைத்துக் குறி சொல்லும், பூசாரி மீது மக்கள் மிகுந்த மரியாதை வைத்திருப்பர். அப்பூசாரியிடம் தெய்வமாகவே மதித்துத் தங்கள் குறைகளை வெளியிட அவன் சில சடங்குகளை நிகழ்த்தி அவர்களின் குறைகள் நீங்க வழி சொல்வான். அவ்வழிகளை அவன் சொல்லும் பொழுது பாட்டு வடிவிலும் உரை நடை வடிவிலும் சொல்லுவதுண்டு. தன் மீது தெய்வம் ஏறுவதற்கு முன், தெய்வம் தம் மீதேற அவன்மீது வழக்கமாக ஏறிக் குறி சொல்லும் தெய்வத்தைப் பாட்டின் மூலம் உடுக்கை அடித்து அழைப்பான். பரம்பரையாக வழங்கி வரும் பாடல்களை அத்தெய்வத்தை அழைக்கும் பொழுது பாடுவான்.

கீழே தரப்பட்டிருக்கும் பூசாரிப் பாட்டில் அவன் தெய்வங்களை எல்லாம் அழைப்பதைக் காணலாம்.

'ஓம் இண்ணு உச்சரிப்பேன்
ஆம் இண்ணு நிச்சயிப்பேன்
ஓதுவேன் மதன் கதையை—என்
மாதுரனே துர்க்க வீதி

1. நாடோடிப் பாடல்கள்—பக். 82

ஓரி மயான ருத்ரி
வாரி காட்டேரி சூரி
ஓ காளி சாமுண்டி
ஜக சண்டி நீல்கண்டி
ஒட்டிக் கறுப்பா கால பைரவா
குட்டிச் சாத்தான் தூமாதேவி
ஓடிவா இருசி பகவதி பைரவி
குடியாயி வீராயி மகமாயி
ஓசந்த எல்லக்கா மல்லக்கா
இசைந்த பொம்மக்கா ஜம்மக்கா
உதிரக் காட்டேரி கூளி—எங்கள்
பீதி தேவப் பிடாரி
உத்தண்ட குறளி எச்சம்
பக்த காளி மாரிமுத்து
உதவா மூதேவி இருளியாதே
ஒளிதரும் சங்காதேவி
எங்களைப் பலி கொள்ளும் காத்தவராயா
ஒண்டி முனி சண்டை வீரா
சண்டப் பிரசண்டா துண்டா
அண்ட மெல்லாம்—மடங்குஞ்சண்டா
ஒப்புரவா இருசா கறுப்பா
அப்பா அனுமந்த வேதாள பைரவா
ஓடிவா நீங்களெல்லாம்— நாங்கள்
பாடிய பாடலுக்கு''-[1]

பூசாரி இன்னும் பாடிக்கொண்டே போகின்றான். அவன் மீது அவன் வேண்டும் தெய்வம் வரும்வரை பாடிக் கொண்டே இருப்பான். மேலே கண்ட பாடலில் பல சிற்றூர் தெய்வங்களின் பெயர்களை நாம் தெரிந்து கொள்கின்றோம். இப்பூசாரிப் பாட்டுக்களை இரு பூசாரிகள் தொகுத்து 'பூசாரிப் பாட்டு' என்ற பெயரில்

1. மலையருவி பக். 315—316

எவ்வெம் முறையில் பாட வேண்டும், எப்படிச் சடங்குகள் நிகழ்த்த வேண்டும், எந்தத் தெய்வத்திற்கு எவ் வண்ணம் பாடல் பாடவேண்டும் என்று வெளியிட்டு இருக்கின்றார்கள்.

பூசாரிப் பாட்டிற்குப் பின்பாட்டில்லை என்ற பழ மொழி உண்டு; இருந்தாலும் ஒருவன் பூசாரி பாடும் பொழுது உடன் இருந்து 'ஆமாம்' 'ஆமாம்' என்று ஒத்துப் பாடுவதும் உண்டு.

பெருந் தெய்வப்பாடல்கள்

இப்படிச்சிறு தெய்வங்களின்றி நாட்டுப்புறப் பாடல் களில் பெருந் தெய்வங்கள் மீது பாடப்படும் பாடல் களும் உண்டு. படுக்கையில் படுத்துக் கொண்டு விடி கின்றதா என்று காலத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதுகூட,

பொழுதெப்ப விடியும்?
பூவெப்ப மலரும்?
சிவனெப்ப வருவார் ?
பலனெப்பத் தருவார்?[1]

என்று பாடுபவர்கள் நம் நாட்டு மக்கள்; விழி நிலையில் மட்டும் இறைவனை நினைக்கின்றார்கள் என்பதில்லை. படுக்கை விரித்து உறங்கப் போகும் பொழுதும் இறை வனை நினையாமல் படுப்பதில்லை.

"அரியின்னு பாய்விரிச்சு
அச்சுதான்னு பேர்சொல்லி
கிருஷ்ணன்னு படுத்தவர்க்கு

1. *செட்டிநாடும் தமிழும்—பக்.215.*

ஒருநாளுங் கேடில்லே.
கோவிந்தான்னு படுத்தவர்க்கு
ஒரு நாளும் குறைவில்லே.''[1]

இத்தகைய பாடல்கள் இந்நாட்டு மக்கள் தூங்குகையில் கிடந்த வண்ணத்தையும் எழுந்திருக்கும் பொழுது சிவனேயும் நினைப்பவர்கள் என்று வலியுறுத்துகின்றன ஆயினும் இவர்களின் பாடல்களில் அதிகமாக வணங்கப்பட்டு வருபவர் ''முருகக் கடவுள்'' என்றுதான் கூறவேண்டும்.

முருகர்: முருகக்கடவுள் வள்ளி கதை, கும்மி, கோலாட்டம், தொழிற்பாட்டு, தாலாட்டு முதலிய அனைத்திலும் இடம் பெற்றுள்ளார். மதுரை மாவட்டத்தில் பெரியகுளம் கூற்றத்திலுள்ள சுருளிமலையில் உள்ள முருகரைப் பற்றி வழங்கும் நாட்டுப்புறப்பாடல் பின் வருமாறு :

வெள்ளி விளக்கெரியும்
வெண்கலங்கள் ஓசையிடும்
தங்க விளக்கெரியும்
சண்முகனர் கோயிலிலே
கூந்தப் பனையோரம்
குளிராட்டுங் கானலிலே
ஏந்து பலகையிலே
இருப்பாராம் சண்முகனர்.
சங்கு முழங்கி வரும்—சண்முகா
சரவணப் பொய்கையிலே
வையாபுரி முருகா—இந்நேரம்
வந்து உதவ வேணும்
கட்டைப் பனைமரமாம்—சண்முகா

1. அ. நா. பக். 215.

காவேரி வையை நதி
தீத்தங் குதித்ததின்னு - சண்முகா
கூடக் குதித்தவராம்."[1]

இப் பாடலைப் போன்ற பல பாடல்கள் முருகன் குடி கொண்டுள்ள இடமெல்லாம் வழங்கி வருகின்றன. முருகரைப் பற்றி ஆங்காங்கு வழங்கும் பாடல்களைச் செப்பனிட்டுப் பலர் சிறு சிறு பாடல்களாக வெளியிட்டிருக்கின்றனர்.

காவடி : மாரியம்மனுக்குக் கரகம் எடுத்துச் செல்வது போல முருகருக்குக் காவடி எடுப்பதுண்டு. இக் காவடி எடுத்தல் ஒரு வகை நேர்த்திக் கடன் ஆகும். இந் நேர்த்திக் கடன் செலுத்தும் பொழுது வழி நெடுக முருகனின் அருமை பெருமைகளையும் அவன் இருக்குமிடச் சிறப்பையும் உள்ளமுருக எடுத்தோதி ஆவேசத்துடன் நடந்து செல்வார்கள். அவ் வகையில் அவர் வாழும் மலையின் சிறப்புக்களைச் சொல்லிக் காவடி எடுத்துச் செல்லும் பொழுது பாடப்படும் ஒரு வழிநடைப் பாட்டு வருமாறு :

"ஓதி வைத்த — முருகையா
என்குருவே—அரகர—என்குருவே
ஒருநாளும்—முருகையா
நான் மறவேன்—முருகையா—நான்மறவேன்
பாடிவைத்த முருகையா
என்குருவே—அரகர—என்குருவே
பலநாளும்—முருகையா
நான்மறவேன்—முருகையா—நான்மறவேன்"[2]

---

1. ஏட்டில் எழுதாக் கவிதைகள்—பக். 35.
2. நாடோடிப் பாடல்கள்—பக்.84-86

என்று இப்படிப் பாடல் நீண்டு போய்க் கொண்டே இருக்கும். இப்பாடலுக்கு ஏற்ற காவடி ஆட்டம் பார்ப்ப வரை உணர்ச்சி வசப்படுத்தும். அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்து இம் முறையில் இயற்றப்பட்டுப் பெரு வழக்காக இருந்து வருகிறது.

பிள்ளையார்: முருகன் மக்கள் மனத்தில் இடம் பெற்றுப் பாடல் பெற்றது போலவே பிள்ளையாரும் நாட்டு மக்களின் உள்ளங்களில் பேரிடம் பெற்றிருக் கின்றார். பிள்ளையாரிடம் குழந்தை முதல் பெரியவர் வரை மிகுந்த அன்பு உண்டு. ஏற்றம் இறைப்பவன் பிள்ளையார் காப்புச் சொல்லாமல் ஏற்றம் ஏறுவதில்லை. பெண்கள் மார்கழி மாதத்தில் வீட்டிற்குமுன் நாள் தோறும் சாணத்தால் பிள்ளையார் உருவத்தைப் பிடித்து வைப்பார்கள். பிள்ளையார் சதுர்த்தியன்று குழந்தைகள் பாடி மகிழ்வார்கள். பெண்கள் கும்மியடிக்கும் பொழுது பிள்ளையாரை வருணித்துப் பாட்டுப் பாடிக் கும்மியடிப் பார்கள். குழந்தைகள் பிள்ளையார் பாடலைச் சொல்லி விளையாடி மகிழ்வர். இப்படி அனைவரும் விரும்பும் விநாயகரைப் பற்றிக் கட்டபொம்மன் கதைப் பாடலில் கதைஆரம்பமாவதற்கு முன் விநாயகரை நினைத்துத்தான் எடுத்துக் கொண்ட செயல் தடையின்றி நடைபெறக் காத்தருள வேண்டிக் கதை சொல்பவன் பாடுகிறான்.

'முந்தி முந்தி விநாயகனே முருகா சரஸ்வதி என்குருவே
கந்தனுக்கு முன்பிறந்த நல்ல கணபதியே முன்நடவாய்
ஆலமரத்தடிப் பிள்ளையாரே ! நல்ல அரசமரத்தடி விநாயகரே !
வேல மரத்தடி வெள்ளைப் பிள்ளையாரே ! ஒரு விக்கினம்
வராமல் காத்தருள்வாய்''[1]

---

1. கட்டபொம்மன் கதைப்பாடல்—பக்.33

வேழ முகத்தானுக்கு வினைகள் செவ்வனே நடைபெறச் செய்யும் ஆற்றல் உண்டு என்பது அனைவருக்கும் உள்ள நம்பிக்கைதானே!

சிறு தெய்வங்களிடம் மக்கள் "நீயே கதி, காப்பாற்ற வேண்டும்" என்று முறையிடுவதைப் போலவே இப் பெருந் தெய்வப் பாடல்களும் அமைந்திருக்கின்றன. இப்படிப் பெருந் தெய்வங்களை வணங்குவதோடு பெருந் தெய்வங்களின் அணிகள், ஊர்திகள் குறிகள் முதலிய வற்றைப் புகழ்ந்து பாடப்பட்டு வருவதும் உண்டு. முருகனின் வேலை மட்டும் வருணித்துச் சிறப்பித்துப் பாடும் பாடலும் உண்டு. இதனை வேல் பாட்டு என்று அழைப்பர். நாட்டுப்புற மக்களிடம் இச் சிறு தெய்வ வணக்கங்களும் பெருந்தெய்வ வணக்கங்களும் வேறு சில வணக்கங்களும் உண்டு. இயற்கைப் பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் ஆற்றலும் உயிரும் உடையனவாகக் கருதுவதைஆராய்ச்சியாளர்கள் 'Animism' என்கிறார்கள். இவ் வகையைச் சேர்ந்த கதிரவன், ஒளி, மழை போன்றவற்றை வணங்கிப் பக்தியுடன் பாடும் பாட்டுக் களும் கிடைக்கின்றன.

ஒளி வணக்கம்: நல்ல நாட்களில் இரவில் பெண்கள் வீடுகளில் விளக்கேற்றி வைத்து வணங்குவது எங்குமுண்டு. இருளை அகற்றி ஒளியினை எழுப்பும் விளக்கை ஒளிக் கடவுளாகவே கருதி வணங்குவர். ஒரு செயல் நடந்துகொண்டிருக்கும்பொழுது விளக்கு அணைந்துவிட்டால் இன்றைக்கும் சிலர் வருத்தம் அடைவார்கள். பூசாரி தெய்வத்தை அழைத்துப் பாடிக் கொண்டிருக்கும் போது நின்றெரியும் ஒளி அசைந்தால்

தெய்வம் வந்து விட்டதாகக் கருதுகின்ருன். தளர்ந்த குடும்பம் நன்னிலை பெற்ருலோ, அல்லது ஒரு பெண் திருமணமாகி வந்தபின் அவ் வீடு செல்வத்தால் செழிக்க அப் பெண்ணைப் பற்றிச் சொல்லும் பொழுதோ ''வீட்டில் விளக்கேற்றி வைத்தவர்கள்'' என்கின்ருேம். எனவே இருளை அகற்றும் ஒளி தெய்வத் தன்மை படைத்ததாகக் கருதப்படுகிறது. இப்படிப்பட்ட ஒளிச் சிறப்பினையுடைய விளக்கினை ஏற்றி வைத்தவுடன் பாடப்படும் ஒரு பாடல் பின் வருமாறு :

'அந்தித் திரு விளக்கே
அலங்கார நாயகியே
வந்தித்து நின்றேன் நான்
வாடியம்மா சீதேவி
ஆதித் திருவிளக்கே
அகிலாண்ட ஈஸ்வரியே
சோதித் திருவிளக்கே
சொல்லரிய லட்சுமியே
கோலத் திருவிளக்கே
கும்பிட்டேன் உன்பாதம்
பாரம்மா ஏழைமுகம்
பாராரும் நாயகியே
தீரம்மா என்கவலை
தேவி தயாபரியே
ஏழை என்வீட்டில்
எழுதினமும் மாடத்தில்
பந்துபோல் சாணிவைத்து
படிகம்போல் விளக்கேற்றி
இளநீர்போல் எண்ணெய்விட்டு
எழில்முத்தாய்த் திரிதிரித்து
ஏற்றிவைத்தேன் என்னம்மா
எங்கள் இருள் நீக்கிவிடு

ஊருக்கு முந்தி
உன்னை நான் ஏற்றி வைத்தேன்
நாட்டுக்கு முந்தி
நானுன்னை ஏற்றி வைத்தேன்
நாட்டிலே என்னையும்
நல்லகுடி ஆக்கிவை
ஊரில் என்னையும்
உயர்ந்தகுடி ஆக்கிவை
உனக் கெரிக்க நெய்யும்
எனக்குண்ணச் சோறும்
தொட்டிற் பிள்ளையும்
தொழு நிறைந்த பால்பசுவும்
பட்டறை நெல்லும்
பதிச்ச மரக்காலும்
மாங்கலியப் பிச்சை
மடிப்பிச்சை தாருமம்மா
அள்ளித்தா செல்வத்தை
அழியாத பாக்கியத்தை
வற்ருப் பெருங்கடலாய்
வளர்ந்தேற வேணுமம்மா
எல்லாம் நிறைந்திருக்க
எங்கள் குலம் செழித்தோங்க
அல்லும் பகலும் எந்தன்
அண்டையிலே நில்லுமம்மா ![1]

ஒளியிடம் பெண், தனக்கு இருள் நீக்கி, ஊரில் உயர்ந்த குடியாக்கித் தொட்டிலில் பிள்ளையும், தொழு நிறையப் பசுவும், நிறைந்த நெல்லும், மாங்கலியமும் வேண்டும் என்று வேண்டுகிருள். இந் நெடிய பாடல் தங்கட்கு வேண்டியவைகளைத் தரும் ஆற்றல் தெய் வங்களுக்கு உண்டு என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

1. நாடோடிப் பாடல்கள்—பக்.104-105.

ஏதேனும் ஒரு மரத்தையோ விலங்கையோ தம் இனத்தோடு நெருங்கிய தொடர்புடையதாகக் கொண்டு வணங்கும் 'Tolemism' என்ற வணக்கமும் நாட்டு மக்களிடம் உண்டு. 'அரசமரவணக்கம், வேப்பமர வணக்கம், பாம்புவணக்கம்' முதலியன இன்றும் நடை பெறுவனவாகும். அரச மரத்தினைச் சுற்றினல் பிள்ளைப் பேறு உண்டென்றும் பாம்பினை வணங்கினல் வாய்மைக்குக் கட்டுப்பட்டுத் தீங்கு செய்யாது என்றும் கருதுகின்றனர்கள். மலையாளத்தில் நிறைந்த அளவில் பாம்பு வணக்கம் இன்றும் உண்டு. பாம்புப் புற்றுக்குப் பாலும் சோறும் இடுவது இன்றும் பெண்களிடம் காணப்படுவதாகும். கடவுள் போல் கருதிப் புற்றிலுள்ள பாம்பினை வணங்கும் போது பாடப்படும் பாடல் வருமாறு :

புற்று புற்று நாகரே
பூமியிடம் கொண்டவரே !
மணிப்பிரம்பு போலே
வால் அழகு நாகரே
சிறு சுளகு போலே
படமெடுக்கும் நாகரே
குண்டு முத்துப் போலே
கண்ணழகு நாகரே
பச்சரிசி போலே
பல்லழகு நாகரே
மள்ளர் மகன் பள்ளன்
தேவேந்திரக் குடும்பன்
கொட்டு மண்வெட்டி யெடுத்து
குளத்தருகே போனன்
இருபுறமும் படம் ஒடுக்கி
வழிவிடுவாய் நாகரே ![1]

1. நாடோடிப் பாடல்கள்—பக். 107

பாம்பின் உருவத்திற்குக் கூறப்படும் உவமைகளும் அதனிடம் கெஞ்சி இரங்கும் இரக்கத் தன்மையும் இப் பாடலில் மிக அழகாக அமைந்திருக்கிறது.

மேலும் சமய ஆராய்ச்சியினர் கூறும் Fetishism, Ancestor Worship, Spiritism ஆகியவை அனைத்தும் இன்றும் நாட்டு மக்களிடம் உண்டு. இவை வழக்கில் இன்றைக்கும் இருந்து வருகின்றன. பாடல்கள் கிடைக்கவில்லையே தவிர வணக்கம் உண்டு.

இந்நாடு பழைமை நிறைந்த நாடு. கோள்களை எல்லாம் பகுத்து அவற்றிற்கென்று தனித்தனி வணக்கங்கள் சொல்லும் நாடு. தமிழர்கள் கடவுளுக்கு உருவமும், உள்ளமும், இருக்குமிடம் சொன்னவர்கள். இந்நிலத்தில் கடவுளைத் தோழனாகக் கொண்ட சுந்தரர் வாழ்ந்திருக்கிறார். வழங்கிவரும் மொழிக்குத் தெய்வத் தமிழ் என்ற சிறப்பு உண்டு. பக்தி இந்த நாட்டிற்குரிய சிறப்பான குணங்களுள் ஒன்றாகும். உலகில் சமய வாதிகள் சொல்லும் வழிபாட்டு முறைகள், ஆராய்ச்சிகள் அனைத்தையும் காணவேண்டின், அதன் காட்சி நிலமாக இந்நாடு இருக்கிறது. இவற்றைத் தான் மெய்யுறுத்துகின்றன, மேலே கண்ட பக்திப் பாடல்கள்.

தொழிற் பாடல்கள்

நகர்ப்புறத் தொழிலுக்கும் நாட்டுப்புறத் தொழிலுக்கும் வேறுபாடுகள் உண்டு. ஆலைகளும் பெரும் இயந்திரங்களால் உருவாக்கப்பட்ட தொழிற்சாலைகளும்

வேலைகள், தண்ணீர் இறைத்தல், களையெடுத்தல் போன்ற சிறுசிறு வேலைகள் நடைபெறும். மனிதர்கள் தாங்களாகச் செய்யக்கூடிய வேலைகள் நாட்டுப்புறங் களிலும் இயந்திரங்களால் செய்யக்கூடியவை நகர்ப்புறங்களிலும் பெரும்பாலும் இடம்பெற்றிருக் கின்றன.

நகர்ப்புறங்களில் இயந்திரங்கள் ஒலியோடு செயல் புரிந்துகொண்டிருப்பதைப் போல நாட்டுப் புறங்களில் நடைபெறும் வேலைகள் பாட்டொலியோடு நடை பெற்றுக் கொண்டிருக்கும். ஒலியின்றி நாட்டுப்புறத்தில் எந்த வேலையும் நடைபெருது என்றுகூடச் சொல்லலாம். பாடிக்கொண்டு வேலை செய்யும் தொழிலாளி பாடல் பாடுவதால் தன்னோடு பலர் வேலை செய்யும் உணர்வையும் இனிதாக வேலை முடிவடையும் நினைவை யும் பெறுகிருன். இப் பலன்கள் பாடல்கள் பாடப்படு வதால் கிடைப்பதால், தொழில் நிறைந்த இடங்களில் எல்லாம் பாடல்கள் நிறைந்திருக்கக் காண்கிருேம்.

வேளாண்மைப் பாடல்கள் : வேளாண்மைப் பாடல் களின் நீட்டம் உழவன் ஏரில் காளைகளைப் பூட்டிய திலிருந்து தொடங்கி விதைவிதைத்து அதனை அறுவடை செய்து, கதிரடித்துக் குவித்துக் குதிரில் போடுகின்ற வரை நீடித்துச் செல்லும் எனலாம். இசையால் பயிர் வளர்கிறது என்ற புதிய ஆராய்ச்சி உண்மையைச் சிறிது மாற்றி இசைப் பாட்டின்றி நெற்பயிரை உழவர்கள் பயிராக்குவதில்லை என்று கூறலாம். போட்ட விதைகள் மாடுதின்னும் வைக்கோல்கள் ஆகின்றவரை அவற்றின்

நகர்ப்புறங்களில் உண்டு. நாட்டுப்புறங்களில் வயல் வளர்ச்சி முழுதும் நாட்டுப் பாடலைக் கேட்டதாக அமைகின்றது. ஆதலின் வேளாண்மைப் பாடல்களே தொழில் உலகத்தில் தலைமை இடத்தைப் பெறுகின்றன எனலாம்.

பொதுவாக உழவர் பலர் பள்ளர்களாக இருப்பார்கள். வயல் வேலைகள் முழுதும் அவர்களால் செய்யப்பட்டு வரும் வாரத்திற்கென்றும், குத்தகைக்கென்றும் வயல்களை அவர்களிடம் விட்டு விடுவதுண்டு. அவர்கள் வயலில் வேலை செய்யும்பொழுது பாடிவரும் பாடல்களில் மனத்தைப் பறிகொடுத்து இலக்கியப் புலவர்கள் சிலர் சிற்றிலக்கியங்களில் ஒன்றான ''பள்ளுப் பாடல்களை'' இயற்ற ஆரம்பித்தனர் பள்ளு என்னும் அச் சிற்றிலக்கியத்தில் வயல் வேலை செய்யும் பள்ளன், பள்ளி, பண்ணையார் ஆகிய இவர்களே முதல்தர உறுப்பினர்களாக இருப்பர். இவ் வேளாண்மைப் பாடல்களே இச் சிற்றிலக்கிய வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தன எனலாம். தமிழகத்தில் பயிரிடப்படும் நிலம் அனைத்திலும் பாடப்பட்டுவரும் இவ்வேளாண்மைப் பாடல்கள் நாகரிகத் தேவனால் அறுவடையாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

வேளாண்மைத் தொழில் வகைகள் : வேளாண்மைத் தொழில்களான ஏர் பூட்டுதல், ஏர் உழுதல், விதை விதைத்தல், நாற்று நடுதல், களையெடுத்தல், கதிரறுத்தல், கதிர் சுமத்தல், பொலி குவித்தல், சூடு மிதித்தல், நெல்குற்றல் ஆகிய எல்லாத் தொழில்களும் பாட்டுத் துணையுடன் நடைபெறுவதுண்டு.

பாடற்பொருள் : இவ் வேளாண்மைப் பாடல்களின் பொருள்கள் பெரும்பாலும் கழனியை விட்டு வெகு தூரத்திற்குச் சென்றுவிடாமல், பண்ணையார், அவர் வாழ்க்கை, உழும் மாடு, நெல்வகை, உழவுக்கருவிகள், வேலைசெய்யும் ஆண், பெண், இவர்களின் உரை யாடல்கள் முதலியவற்றைப் பற்றியனவாகவே இருக் கின்றன.

பாடல் தன்மை : ஒருவன் நிலத்தில் உழும் பொழுது பாடும் பாட்டைத் தவிர மற்றவை பலர் சேர்ந்து பாடுவனவாக இருக்கும். இப் பாடல்களில் இசை யொலி எழுப்பச் சில சொற்கள் தனித்து இருக்கும். வயல் தொழில்கள் குறுகிய கால வேலையில்லையாதலால் பெரும்பாலும் பாடல்கள் சிறு சிறு பாடல்களாய் இருப்பதில்லை

உழவுப் பாடல் : மாட்டை உழவன் செல்லமாகச் செல்லன் என்று அழைத்துச் சொந்தப் பிள்ளையிடம் கொஞ்சுவது போலப் பாடிக்கொண்டு, மாட்டிற்கு வரப்பைத் தலையணையாகவும் வாய்க்காலைப் பஞ்சு மெத்தையாகவும் கூறி, நடக்கும் மாடுகளின் நடையை அன்ன நடையென வருணித்து ஏர் ஓட்டுகின்றான். அப் பாடல் பின்வருமாறு:

ஓரம்போ...சால்பார்
ஏ எ எ...ஓ ஓ ஓ கோ
சால் பார்த்த கள்ளனடா...செல்லன்
தாய்வார்த்தை கேளேண்டா
பாரக்கலப்பையடா செல்லனுக்குப்
பாரமெத்தத் தோணு தடா
வரப்போ தலைகாணி—செல்லனுக்கு

வாய்க்காலோ பஞ்சு மெத்தை
செல்லன் நடந்த நடை—இன்று
சொல்ல வொண்ணு அன்ன நடை
இந்த நடை நடந்து—செல்லா நாம்
எப்போ கரை சேருவதோ[1]

இப் பாடலுக்குத் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள,

ஞாயிறு திங்கள் அறிவே நாணே
கடலே கானல் விலங்கே மரனே
புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே
அவையல பிறவு நுதலிய நெறியாற்
சொல்லுந போலவுங் கேட்குந போலவும்
சொல்லியாங் கமையும் என்மனார் புலவர்[2]

என்ற நூற்பாவில் அமைதி உண்டு எனலாம்.

நடவுப் பாடல்: நடவு நடைபெறும் பொழுது பாடப்படும் பாடலொன்று நல்ல சொல்லோட்ட முடையதாகவும் பாடுபடுவதன் பலன் எப்படியிருக்கவேண்டுமென்று கூறுவதாகவும் இருக்கிறது.

நிறுத்தின திரு அலகு
நின்று பயிர் ஏறவேணும்
சாத்தின திரு அலகு
சாய்ந்து பயிர் ஏறவேணும்
நெல்லா விளைய வேணும்
நெடுங்களங்கள் ஏறவேணும்
கதிரா விளைய வேணும்—எங்களையா
களஞ்சியங்கள் ரொம்ப வேணும்.

இப் பாடலில் உழவர்களின் ஆசையையும் வயலில் எதிர் பார்க்கும் பயனையும் அறிகின்றோம்.

---

1. வட இலங்கையர் போற்றும் நாட்டார் பாடல்கள்.
2. தொல், செய்யுளியல்—பக். 191.

பண்ணையார் பெருமை: பொதுவாக நிலக்கிழார்களைப் பொல்லாதவர்கள் என்றும் உழவர்களைத் துன்புறுத்துபவர்கள் என்றும் சிலர் வருணிப்பர். நாட்டுப்புறப் பாடல்களுள் இக் கருத்தைச் சொல்லும் சில பாடல்கள் இருப்பினும் ஒரு நாட்டுப்புறப் பாடல் பண்ணையார் பெருமையினைக் கூறும்பொழுது பின்கண்டவாறு சொல்லுகின்றது.'

காசாப் படியளந்தால்—கனத்த
நேரஞ் செல்லு மிண்ணு
நெல்லாப் படியளந்தால்
நீண்ட நேரம் செல்லுமிண்ணு
அரிசியாப் படியளந்தால்
ஆக்க நேரஞ் செல்லுமிண்ணு
சோறாப் படியளக்கும்—எங்களையா
சுவாமியார் பண்ணையிது

இப் பாடலில் பண்ணையாரின் கொடை உள்ளம் உழவனால் நன்கு காட்டப்படுகிறது.

இவ்வாறு வேலைக்குத் தகுந்த பொருள் கொண்டு பாடல்கள் அமைந்திருக்கும் வேளாண்மைப் பாடல்கள் பலவுண்டு. இவ் வேளாண்மைத் தொடர்பான அறுவடைப் பாடல்கள் இந்தியாவில் அவ்வம் மொழிகளில் வழங்கி வருகின்றன.

ஏற்றப்பாட்டு: தொழிற் பாடல்களில் ஏற்றப் பாட்டு வேளாண்மையோடு தொடர்புடையது. "ஏற்றப் பாட்டிற்கு எதிர் பாட்டில்லை" என்ற பழமொழியால் இதன் பெருமையை உணரலாம். கவியரசர் கம்பர்,

மூங்கில் இலைமேலே
தூங்கும் பனிநீரே
தூங்கும் பனிநீரை
வாங்கும் கதிரோனே

என்ற இவ் ஏற்றப் பாடலைத் தெரிந்துகொள்ளத் தம் வீட்டிலிருந்து காலைப்பொழுதில் இரண்டுநாள் எழுந்து வந்ததாகக் கதை சொல்வதுண்டு.

ஏற்றவகை : ஆறு, கண்மாய்ப் பாசனங்கள் இல்லாத இடங்களில் ஏற்றமுண்டு. ஏற்றங்கள் இருவகையாகும். பாட்டு இல்லாமல் யார் துணையுமின்றி ஒருவர் மட்டும் இறைக்கும் ஏற்றம் 'கைத்திலா' எனப்படும். இவ் ஏற்றத்திற்கு 'ஊமைத்திலா' என்ற பெயரும் வழங்கி வருகிறது. இருவர் அல்லது மூவர் மேலேயுள்ள மிதி மரத்தில் ஏறி மேலும் கீழும் ஓடிவருதலும் ஒருவர் சால்பிடித்துத் தண்ணீர் இறைத்தலும் உள்ள ஏற்றம் "ஆளேறும் திலா" எனப்படும்.

ஏற்றத்தில் தண்ணீர் இறைத்தல், பொழுது புலரும் முன்பு ஆரம்பிக்கப்பட்டு விடிந்து பத்து நாழிகை வரையில் இறைக்கப்படும். இந் நெடிய நேரம் தெரியாமலிருக்கப் பாடல்கள் பாடுகின்றார்கள். பாடும் பாடல்களைப் பெரும்பாலும் நீண்ட பாடல்களாகவே பாடுகின்றார்கள்.

கணக்கு முறை: ஏற்றம் இறைப்பவர்கள் தாங்கள் இறைக்கும் தண்ணீரின் அளவு தெரிவதற்குச் சில வாய்பாடு சொல்வதுண்டு. இவ் வாய்பாடு எல்லாப் பகுதிகளிலும் ஒரேமாதிரியாக இருக்கிறது. ஒவ்வொரு தடவையும் சாலைக் கவிழ்க்கும்பொழுது அப் பக்கங்களில்

சிறப்புப்பெற்ற தெய்வத்தின் பெயரைச் சொல்ல அதனோடு ஒன்று இரண்டு என்ற எண்ணிக்கையைச் சேர்த்துக்கொள்வதுண்டு. இவ் வெண்ணிக்கை பத்துச் சால்களுக்கு ஒரு தடவை மொத்தமாகக் கணக்கிடப் படும். ஒருபத்துச் சால், இருபத்துச் சால், மூன்று பத்துச் சால் என்ற எண்ணிக்கைக் கணக்குகள் ஏற்றப்பாட்டில் வரும்பொழுது கொச்சை வடிவம் பெற்று "ஒருபதியா லொண்ணு", "இருபதியா லொண்ணு", "முப்பதியா லொண்ணு" என்று வரும். நூறுசால் இறைத்தால் 'பரியம்' என்றும் ஆயிரம் சாலைப் 'பத்துப் பரியம்' என்றும் அழைப்பர். ஒவ்வொரு பரியத்திற்கும் வெவ் வேறு பாடல்களைப் பாடுபவர்களும் உண்டு. ஐந்நூறு சால்கள் இறைத்தால் ஒரு குழி அல்லது அறுபது செண்டு நிலம் தண்ணீர் பாயும் என்ற கணக்கு ஒன்று சொல்லப்படுகிறது.

முப்பது பதிகம் இயல்பாகப் (பத்துப்பாட்டு) பத்துச் சால் தண்ணீர் ஊற்றும் நேரம் என்று கணக்கிட்டிருக் கின்றனர்.

பாடும் முறை: ஏற்றப்பாட்டு பாடப்படும் விதம் சுவையானது; கீழே சாலைப் பிடித்திருப்பவன் பாட்டின் ஒரு வரியைச் சொல்லுவான். அவ் வரியை மேலே ஏற்றத்தில் ஓடுபவர் அனைவரும் ஒன்றாகச் சேர்த்துப் பின்னால் பாடுவார்கள். ஒரே வரி இரண்டு மூன்று முறை திரும்பத்திரும்பப் பாடப்படும். மேலே உள்ள வர்கள் பாடிய பிறகே பாட்டின் அடுத்த வரியைக் கீழே உள்ளவன் பாடுவான்.

பாடற் பொருள்: இவ் வேற்றப்பாடலின் பொருள் மழையில்லாமல் பயிர்கள் வாடிப் போவதைப் பற்றியும் முருகன், கண்ணன், இராமன், சிவபெருமான் இவர்களைப்பற்றிய புராணங்களாகவும் விளையாட்டு வகைகளாகவும் இருப்பதுண்டு. சில பாடல்கள் தொடர்பின்றி மனம் போன போக்கில் புராணக்கதைகளையும், தெய்வ ஆற்றல்களையும் வழிபாட்டு முறைகளையும் பாடுவனவாக இருக்கும். சில பாடல்களில் கிணறுவெட்டி, ஏற்றம் போட்ட வரலாறும் திருவிழாச் சிறப்புக்களும் வருவதுண்டு. நாட்டுப் பாடல் நூல்களில் வெளியான இப் பாடல்கள் தவிரப் பெரும் புராணங்களை நூறு சால்களுக்குள் சுருக்கிப்பாடும் மூன்று புராண ஏற்றப் பாடல்கள் முழுவடிவில் கிடைக்கின்றன. விராட பருவ ஏற்றப்பாட்டு, இராமாயண ஏற்றப்பாட்டு, அரிச்சந்திர ஏற்றப்பாட்டு என்ற அம் மூன்று ஏற்றப் பாடல்களின் இறுதியில் "ஸதநாமாவளி ஸ்தோத்திரம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. திருமாலையும் அவர் அவதாரங்களையும் நூற்றுப்பதின்மூன்று வகைகளில் விளித்து அதன் முன்னுரையாகக் குறிப்பொன்றும் எழுதப்பட்டுள்ளது.

"இந்த நாமாவளியை ஏற்றத்தின்மேல் ஏறுவதற்கு முன் ஸ்தோத்திரம் செய்து, பிறகு ஏற்றம் பிடித்தால் ஸ்ரீ கண்ணபிரான் அருளால் ஒரு குறையும் இன்றி. பயிர்முதலானவை செழிப்பாக வளர்ந்து ஆதாயம் கிடைக்கும்" என்று அம் முன்னுரையில் இருக்கிறது. இது பதிகத்திற்கு முன் பாடப்படும் காப்புச் செய்யுள் எனலாம். இதேபோன்று பல்வேறு கடவுளரை வணங்கும் பழக்கம் ஏற்றம் பிடிப்பதற்குமுன் பாடப்படுவ

துண்டு. இறைவணக்கம் சொல்லித்தான் பதிகம் பாடுவர்.

விராடபருவ ஏற்றப் பாட்டு : விராடபருவ ஏற்றப் பாட்டு காரணத்தோடு பாடப்படும் பாடல் எனலாம். பாரதத்தில் பாண்டவர்கள் விராட நாட்டில் மறைவு வாழ்வு புரிந்தது அனைவரும் அறிந்த தொன்றே; விராட நாடு நல்ல பசுமையும், செழிப்பும், நல்லவர்களும் உள்ள நாடு. ஏற்றம் இறைப்பவர் அதனைப் பாடுவதன் மூலம் தண்ணீர் பாயும் நிலத்திலும் அத் தன்மை ஏற்பட விரும்புகின்றனர். விராட நாட்டில் 'ஐவரும் மறைந்து வாழ்ந்த வரலாறு' ஏற்றப் பாட்டில் பாடப்படுகிறது. ஐவரும் மாறுவேடமிட்டுச் சென்றதை ஏற்றப் பாட்டுக் குறிக்கும் பொழுது,

இவரைவர் தாமும்
முறைமுறையா வேஷம்
மறையவர் மடையன்
மனமில்லாப் பேடி
வாசித் துரையாளன்
காலிதனை மேய்ப்பான்
காரிழை பணிப்பெண்
நேரிழை யாளர்கள்
விராடபுரஞ் சேர்ந்தார்.

என்று சில அடிகளில் பெரும் பாரதக் கதையைப் பாடிவிடுகிறான். இத்தகைய நடையும் சொல்லோட்டமும் அமைந்த பாடல்களாக இருப்பவை இராமாயண ஏற்றப் பாட்டும், அரிச்சந்திர ஏற்றப் பாட்டும் ஆகும். சாலில் இருந்து கொட்டும் தண்ணீரைப்போலச் சரளமான சொல்லோட்டம் கொண்டவையாக இப் பாடல்கள்

விளங்குகின்றன. கம்பனின் சொற்றொடரான "இன்று போய் நாளை வா" என்பதன் கருத்து இராமாயண ஏற்றப்பாட்டிலும் காணப்படுகிறது.

அந்த ராவணனுக்கு
அழகுத் தேரும்போச்சு
அந்த ராவணனும்
ஐயனெதிர் நின்றான்
"இன்றுபோய் நீ நாளை',
இனிவருவாய் நீயே
என்றார் ரகுராமர்!

என்று வருகிறது. ஏற்றக்காரன் இராமாயண உறுப்பினர்களைக் கூறும்பொழுது "இன்பமொழிச் சீதை" "பாடும்மொழிச் சீதை" "நற்குகன்" "தோகை சூர்ப்பனகை" "இராவணத்துரும்பு" என்று கூறுகின்றான்.

அரிச்சந்திர புராண ஏற்றப்பாட்டில், அரிச்சந்திரன் பொய்சொல்ல மறுத்துப் பட்ட துன்பம், இறுதியில் அவன் மீண்டும் நன்னிலைக்கு வந்தது முதலியன வருணிக்கப்படுகிறது. சந்திரமதி தன் மகன் உலோகி தாசன் காட்டில் பாம்பு கடித்து இறந்து கிடந்த காட்சியைக் கண்டபொழுது பாடும் ஒரு சிறு பகுதியினைக் கீழே காணலாம்;

அப்பனே மகனே!
ஆருயிர்ப் புதல்வா!
என்மகனே வாடா!
எழுந்திருடா என்று
ஏந்து கொங்கைமேலே!
தாங்கி அணைத்தாளே!

தகப்பனைப் பிரிந்தாய்
வனத்திலே இறந்தாய்.

(அறுபதியாலொண்ணு)

கதைப் பாட்டுக்களின் நோக்கம்: நம்நாட்டு மக்களுக்கு இராமாயணக் கதை, அரிச்சந்திரன்கதை, பாரதக் கதை முதலியன புதியனவல்ல. அவை அடிக்கடி கேட்டுக்கொண்டிருக்கும் பழைமை இலக்கியங்களாகும். நன்னெறி காட்டும் இக் கதைகளில் மக்களுக்கு உள்ள ஈடுபாடும், நெடுநேரம் பாடுதற்கு உரிய பெரிய கதைகளாக இவை அமைந்திருப்பதும் ஏற்றப்பாட்டுகளில் இக் கதைகள் இடம் பெற்றதற்கான காரணமாகக் கூறலாம். பெரும் நிலப் பரப்பிற்கு நூற்றிற்கு மேற்பட்ட 'சால்' இறைக்கும் அவர்களுக்கு இவ்வகையான கதைப் பாடல்களே உழைப்பின் களைப்பைப் போக்கும் மாமருந்தாக இருக்கும் பெற்றியன எனலாம்.

கப்பல் பாடல்கள்: தொழில்களில் கடினமானதும் உயிருக்கு ஆபத்தானதுமாகிய தொழில் கடலில் கப்பலும் ஓடமும் செலுத்துதலாகும். பயணிகளை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடம் கொண்டு செல்லும் பொழுதும் அல்லது மீன்பிடிக்கச் செல்லும் பொழுதும், பொருள்கள் ஏற்றிச் செல்லும் பொழுதும் படகோட்டிகள் பாட்டுப் பாடுவதுண்டு.

தண்ணீரில் போட்ட துடுப்பினை எடுத்து மீண்டும் தண்ணீரில் துடுப்புப்போடும் கால அளவு குறுகியதாகையால் அக் குறுகியகாலத்திற்குத் தகுந்த அளவாகவே பாடல்களின் சீர் அளவு குறைந்ததாக இருக்கும்.

பயன் : சென்ற செயலை முடிக்கவும், கரைக்குத் திரும்பவும், படகு செலுத்துபவர்களுக்கு இப் பாடல்கள் மின்விசை போலப் பயன்படுகின்றன. படகில் செல்லுபவர்கட்கும் தாங்கள் தண்ணீரில் செல்லுகின்றோம் என்ற அச்சத்தையும் தனிமையையும் போக்கும் துணையாக இப் பாடல்கள் துணைபுரிவதுண்டு.

கப்பற்பாட்டுகள் கப்பல் ஓடிக்கொண்டிருக்கும் பொழுது மட்டும் பாடப்படாமல் கப்பலை இழுக்கும் பொழுதும் பாய் விரிக்கும்பொழுதும், இவை போன்ற வேறு கப்பல் தொழில்கள் நிகழுங்காலத்திலும் பாடப் படுவதுண்டு.

பொருள் : இக் கப்பற் பாட்டுகளின் பொருள்கள் பெரும்பாலும் கப்பல் தொடர்புடையனவாக உள்ளன. கப்பல் கட்டுதல், சுக்கான் போடுதல், கப்பலில் வரும் சரக்குகள் இவற்றை வருணித்தல், கண்காணியின் கொடுமைகளைக் கூறுதல் போன்ற பொருள் கொண்டதாக அமைந்திருக்கின்றன; சில காதற் பாட்டுகளும் உண்டு.

இக் கப்பற்பாட்டுகளில் கிடைத்துள்ள சில பாட்டுகள் நமக்குப் பெரும் வியப்பைத் தருவனவாக அமைந்திருக்கின்றன. ஒரு பாடல் சைவ சித்தாந்த உண்மைகள் சிலவற்றைத் தெரிவிப்பதாக இருக்கிறது. இலங்கையில் வழங்கிவரும் அப்பாடல் :

அஞ்செழுத் தைக்கட்டிச் சரக்காக ஏற்றி
ஐம்புலன் தன்னிலே சுக்கான் நிறுத்திக்
காலையும் கோலையுந் தள்ளடா கப்பல்
கருணைக் கடலிலே தள்ளடா கப்பல்

முக்கலே மூன்றுலுந் தள்ளடா கப்பல்
முக்காலுக் கப்பாலும் தள்ளடா கப்பல்
ஏல ஏலோ தத்தெய்தாம் ஏல ஏலோ.[1]

இவ்வரிய பாடலைப் போல உள்ள மற்றொரு கப்பல் பாட்டு பல இராகங்களை அடுக்கிச் சொல்வதாக அமைந்திருக்கிறது.

"பார்த்தசாரதிப் பெருமாள் பேரில் பலசரக்கு ஏலப் பாட்டு" என்ற நீண்ட பாட்டொன்று திருவல்லிக்கேணியில் உள்ள வேதவல்லித் தாயாருக்கு எண்ணற்ற பொருள்கள் கொண்டுவருவதாகப் பாடப்பட்டு வருகிறது.

ஏலேலோ சொல்விளக்கம்: கப்பற்பாடல்களில் "ஏலேலோ" என்ற ஒரு சொல் வருவதுண்டு. தாலாட்டில் தாய் இசைக்கும் 'ஆரிரரோ' என்ற சொல்லுக்குப் பொருள் விளக்கம் சொன்னதுபோல இப் பொருள் விளக்கம் இல்லாமல் இச் சொல் ஒரு வரலாற்றினை உள்ளடக்கியதாக இருக்கிறது.

"மயிலாப்பூரில் ஏலேலோ சிங்கர் என்ற ஒரு செல்வர் இருந்தார். அவர் திருவள்ளுவருடைய மாணுக்கர்; மிகுந்த இரக்க உள்ளம் உடையவர். பெரிய கப்பல் வணிகர். அவரால் ஆதரிக்கப்பட்டவர்கள் எண்ணற்றோர். துறைமுகத்தில் வேலே செய்யும் தொழிலாளிகள், படகு ஓட்டுபவர்கள், ஏலேலோ சிங்கர் புகழ் பாடியே எப்பொழுதும் வேலே செய்வர் 'ஏலேலர்' என்று அவர் பெயரைச் சொல்லிப் புகழ்பாடிக் கப்பல்

1. வட இலங்கையர்; போற்றும் நாட்டார் பாடல்கள்.

செலுத்துவது காலப்போக்கில் மருவி "ஏலேலோ' என்று வந்துவிட்டது.' இவ்வாறு "ஏலேலோ" என்ற சொல்லுக்கு விளக்கம் கூறுகிறார்கள். இந்த ஏலேலோ என்ற இசையொலி கப்பல் பாட்டுக்கு மட்டுமின்றிச் சுண்ணும்பு இடிக்கும் பாட்டு, கல்தூக்குவோர் பாடும் பாட்டு ஆகிய பாடல்களிலும் வருகிறது. மேலே கண்ட கதை புனைந்துரையாகவும் இருக்கக்கூடும்.

சில கப்பற் பாடல்கள் : கப்பல் பாட்டு மக்கள் மனத்தை நாளடைவில் அதிகமாக ஈர்த்ததால் இவ் இசை அமைப்பில் தொடர்ச்சியாகச் சில கருத்துகள் வரும்படி இராமாயண ஓடம், பாரத ஓடம், நவராத் திரி ஓடம் போன்ற ஓடப் பாட்டுகள் வெளிவந்திருக் கின்றன.

வண்டிக்காரர் பாடல் : மாட்டுவண்டிக்காரர்கள் பார மேற்றிச் செல்லும் பொழுதும் நெடுந்தூரப் பயணத் தின்பொழுதும் பயணத்திற்குத் துணைபோல இனிய பாட்டை இசைத்துக் கொண்டு செல்வார்கள். இப் பாட லுக்குத் "தெம்மாங்கு" என்ற பெயர் வழங்குகிறது. டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் போன்றவர்கள் இச் சொல்லுக்குத் தேன் + பாங்கு = தெம்மாங்கு என்று பொருள் கூறினார்கள். ரா. பி. சேதுப்பிள்ளை தென் பாங்கு> தெம்மாங்கு என்று கருதி ஏற்றப்பாட்டினைத் தெம்மாங்கில் சேர்க்கின்றார். தேன் இனிப்பது போல இப் பாட்டும் அத்தகைய சுவையுள்ளது என்று பொருள் பண்ணுகிறார்கள். இம் மெட்டினை இசைவாணர்கள் எடுத்துத் தங்களுடைய இசையரங்குகளில் கையாண் டிருக்கிறார்கள்.

பொருள்: இப் பாடல்களில் மாட்டின் நடையழகு, வண்டி செல்லும் ஊர், வண்டியின் பெருமை, வண்டி ஓட்டுபவனின் காதல் உள்ளம் போன்றவை பொருளாக வருவதுண்டு. ஆணும் பெண்ணும் பாடும் காதல் பாட்டுகள் தெம்மாங்கில் நிறைய இடம் பெற்றுள்ளன. இத் தெம்மாங்குப் பாட்டில் பாடற் பொருளைக் காட்டிலும் பாடலுக்குப் பாடப்படும் இசை அமைப்புச் சிறப்பானதாகும். இத் தெம்மாங்கு இசை இன்றைக்குத் திரைப்படங்களிலும் இசையரங்குகளிலும் இடம்பெற்று வருகிறது.

பாடும் விதம்: சில நேரங்களில் பல வண்டிகள் போகும்பொழுது முதல் வண்டிக்காரன் ஒரு கண்ணி பாடிமுடிக்க, அவ் வண்டியினைத் தொடர்ந்து வரும் மற்றொரு வண்டிக்காரன் அடுத்த கண்ணியைப் பாடுவதும் உண்டு.

பாட்டு எடுப்பதற்குமுன் தெம்மாங்கின் இனிய முன்னொலியை அழகாகப் பாடுவான். தெம்மாங்கின் இனிய இன்னிசை,

அடடடடா தன்னனன்னே னனே னன்னே.
னனே என்னே னனே னன்னே ஏ..........[1]

தெம்மாங்குப் பாட்டிற்கு வண்டிக்காரன் மாட்டை இடையிடையே அதட்டி ஓட்டும் 'ஏகேய்' என்ற ஒலியும் மாட்டின் கழுத்து மணிகளும் ஆரக்கால் ஒலியும் இரவின் அமைதியும், காட்டிடையே இரவு வண்டுகள் எழுப்பும் இன்னிசை ஓசையும் பாடலுக்குப் பின்னணி இசைகளாக அமையத் தெம்மாங்குப்பாடல் தேன்

1 ஏட்டில் எழுதாக் கவிதைகள்—பக். 26.

சுவையைப் பெறுகிறது. சுவைக்காக இரண்டு தெம்மாங்குப் பாடல்கள் தரப்பட்டுள்ளன:

குங்குமப் பொட்டு வச்சுக் — குட்டி
கோட்டை வழி போறவளே
குங்கும வாடைபட்டு — எனக்குன்
கூட வரக் கூடலையே
உச்சிமலைமேலே — குட்டி
ஊர்க்குருவி கூடுகட்டி
ஆளைக் கண்டு கத்துதடி — குட்டி
அழகுள்ள அந்தக்குருவி

பாடலில் வரும் 'மகடூஉ முன்னிலை' நாட்டுப் பாடல்களில் அதிகமாக வருவதாகும்.

பாரம் தூக்குவோர் பாடல் : பெருங்கட்டடங்களுக்குப் பாரங்களைத் தூக்கி மேலே செல்லுதல், அல்லது சிறிது தொலைவு தள்ளிக்கொண்டு வருதல், துறைமுகங்களில் கப்பலில் இருந்து வந்த பாரங்களை இறக்குதல் முதலிய இவ் வேலைகளைச் செய்யும்பொழுது பாடல்களைப் பாடிக் கொண்டு வேலைகளைச் செய்வதுண்டு.

கப்பற் பாடலில் வரும் "ஏலேலோ" என்ற சொல்லினைப் போல, பாரந்தூக்கும் பாடலில் பாரத்தை நகர்த்தும்பொழுது "ஐஏல்" என்று இசைக்கப்படுகிறது. சில பாடல்களில "ஐலசா" என்றும் வருகிறது.

அனந்த சயனு—ஐஏல்
ஆதிநாராயணு—ஐஏல்
கரந்த வெண்ணெயுண்ட—ஐஏல்
காகுத்த ராமா—ஐஏல்
சீதா ராமா—ஐஏல்

OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY
21 JAN 1975
MADRAS

தேனுண்ட வாயா—ஐஏல்
திரைகடல் முன் கடைந்தாய்—ஐஏல்[1]

தொழிற் பாடல்களின் வேலைகளுக்குத் தகுந்த படி பாடல்களில் சொற்கள் அமைந்திருக்கின்றன என்பதனை மேலும் நமக்கு இப் பாடல் காட்டுவதாக இருக்கிறது.

சாந்து இடிப்பவர் பாட்டு: வீடுகளுக்குத் தளம் போடும்பொழுது சாந்து இடிப்போர் பலர் சேர்ந்து பாடுவதுண்டு. இத் தொழில் நீண்டநேரம் நடைபெறும் தொழிலாகும். ஆதலின், பாடல்களில் வருணனைகளும், பலபொருள் அடுக்கி வருவதும் நீடித்துக் கொண்டே செல்லும் தன்மையுடையனவாக இருக்கின்றன. ஒருவர் பாட மற்றவர் 'ஏலங்கிடிலேலோ என்ற ஒலியைச் சேர்ந்து எழுப்புவர். அவர்கள் பாடும் பாடலுக்குச் சாந்து குத்துவது இனிய தாளமாக அமையும். சாந்துப்பாடலொன்றில் துரைமகன் ஒருவன் வரும் வண்டி மட, மட, தட, தட, திடு, திடு, கட, கட, பட, பட என்ற ஒலிகளோடு வருவதாகப் பல வரிகள் வருகின்றன. இதே போன்று குதிரை, ஒன்றை விவரித்து மட்டக் குதிரை, குட்டைக் குதிரை, பொட்டைக் குதிரை, தட்டக் குதிரை, ரெட்டைக் குதிரை என்று பல குதிரைகளாக்கிப் பல வரிகள் வருகின்றன. அப் பாடல்:

கட கடண்ணு வருதடி—ஏலங்கிடி லேலோ
கல கலண்ணு வருதடி—ஏலங்கிடி லேலோ
பட படண்ணு வருதடி—ஏலங்கிடி லேலோ

---

1 ஏட்டில் எழுதாக் கவிதைகள்—பக். 130.

பலே பலேன்னு வருதடி—ஏலங்கிடி லேலோ
மட்டக்குதிரை மாட்டிக்கிட்டு—ஏலங்கிடி லேலோ
மாஞ்சு மாஞ்சு வருதடி—ஏலங்கிடி லேலோ
குட்டைக்குதிரை குதிச்சுக்கிட்டு—ஏலங்கிடிலேலோ
கூடிக்கூடி வருதடி—ஏலங்கிடி லேலோ.[1]

தொழிலாளர் பாடல்களில் சாலை அமைப்போர், புகைவண்டியில் பாதை அமைப்போர், மின்சாரம் செல்லப் பாதை அமைப்போர், துறையில் துணி துவைப்போர், சமைப்போர் ஆகியோர் பாடும் பாடல்கள் உண்டெனினும் அவை குறைவாகவே கிடைத்திருக்கின்றன.

இசை ஒலிகள் : இத் தொழிற் பாடல்களில் இறுதியாகக் குறிப்பிடத்தகுந்தது ஒன்றுகும். பாடல்கள் இசையோடு பாடப்படுவதற்கு அல்லது ஓர் அடி முடிந்து விட்டது என்பதற்குச் சில இசை நலச் சொற்கள் வருவதுண்டு. அவை நமக்கு உச்சரிப்பதற்குக் கடினமாக இருந்தாலும் பாடுபடுபவர்கள் அதனைத் தங்குதடையின்றிப் பாடுவார்கள். நாம் இசையைப் பிரிப்பதுபோல அவ் வொலிச் சொற்களை எழுதி அவை அவ் இசைகளுக்கு உரிய பெயராக எழுதி விடுவதும் உண்டு. தொழிற்பாடல்களுக்கு மட்டுமின்றி மற்ற நாட்டுப் பாடல்கள் சிலவற்றிலும் (சாமி ஆட்டம், திருமண ஆட்டம், களியாட்டங்கள், கதைப் பாட்டுகள்) இவ் வொலிகள் வருவது உண்டு.

வேளாண்மைப் பாடலில் ஏலேலோக் குயிலல்லோ ஏலங்குடி லேலோ, குல குல குல குலோ, ஏலேலோ

---

1. மலையருவி—பக். 126.

அன்னக்கிளி ஏலேலோ, குயிலோ, பொலி பொலி பொலியே முதலிய ஒலிகள் வரப் பாடுவர். கப்பற் பாட்டுகளில் ஏலேலா ஐலசா, ஏலே ஏலோ; சலசலா என்றும் பாரம் தூக்குவோர்கள் ஐஏல் ஐலசா, ஏலே லம்பிடி ஏலம் என்றும் சாந்திடிப்போர் ஏலங்கிடி லேலோ, தன்னானே என்றும், வண்டியில் செல்பவர் கள் ஏலங்கிடி லேலோ என்றும் சாலை போடுபவர்கள் ஏலேலே ஐலசா என்றும், காட்டில் விறகு சுமக்கும் பெண் ஏதில்லலோலேலோ என்றும் இசைத்துப் பாடிக் கொண்டிருக்கின்றனர். இங்குக் குறிப்பிட்ட வைதாம் முடிவான வரையறை ஒலிகள் என்று கூறிவிட முடியாது. கிடைத்த பாடல்களில் இவை காணப்படு கின்றன. கப்பல் பாடல்களில் உள்ள "ஏலேலோ" என்ற ஒலி ஓர் ஏலேலோசிங்கனைக் குறிப்பதுபோல இசை ஒலிகள் பொருள் உள்ளவற்றையாவது குறிக்கின்றனவா என்பதனை அறிஞர்கள் ஆராய்தல் வேண்டும்.

தொழிற் பாடல்களின் மறைவு: இன்றைக்கு இத் தொழிற் பாடல்களைப் பாடுதல் அருகிக்கொண்டு வரு கின்றது. தொழில் உற்பத்தியே நாடு என்ற கொள்கை வலுப்பெற்றுவிட்டது. இன்றைய அறிஞர்கள் பொது வாக நகரத்துத் தொழில்களை யெல்லாம் இயந்திர நண்பனால் விரைவாக முடித்துக் காலத்தை வீணாக் காது தொழில் உலகைச் சீர்திருத்தியிருக்கின்றனர். மனிதர்கள் இருந்து வேலை செய்த ஒவ்வொரு தொழி லிலும் பொறிகள் இன்றைக்கு வேலை செய்துகொண் டிருக்கின்றன. மாடுகள் உழும் வேலையைப் பொறிக் கலப்பை (Tractor) மூலம் செய்கின்றார்கள். ஏற்

றத்திற்குப் பதில் பொறிக்குழாய் (Pump) வைத்துத் தண்ணீர் இறைக்கிறார்கள். பாரங்களைக் கட்டை வண்டியில் போட்டு எடுத்துச் செல்வதைவிடப் புகை வண்டி, உந்துவண்டி, லாரி இவை மூலம் விரைவாக எடுத்துச் செல்ல விரும்புகின்றனர். பெரும் பாரங்களைக் கைவண்டிகளில் வைத்து நகர்த்தி விடுகின்றனர். உயரமாக எடுத்துச்செல்ல நினைப்பதைத் தூக்கி (Lift) மூலம் எடுத்துச் செல்கின்றனர். சாந்திடிக்கும் வேலையைப் பொறிகள் செய்கின்றன. துணி துவைப்பதற்கும் பொறிகள் கண்டுபிடிக்கப்பட்ட காலமாகிவிட்டது.

மனிதன் தொழிலில் பெற்றிருந்த இடம் முழுவதும் பொறிகள் பங்குபெற அதனைப் பார்வையிடும் மனிதனைப் பாடியவன் விளங்குகின்றான். நாற்று நடவு, களம் கட்டுதல், இவற்றில் தான் பாடல்கள் இருந்து வருகின்றன. மற்ற இடங்களில் தொழிற்பாடல்கள் மறைந்து கொண்டிருக்கின்றன. பாடியவர்களும் மறைந்துவிட்டார்கள். வாழுபவர்கள் மறந்துவிட்டார்கள். பொறி அரக்கனால் பாடல்கள் இன்றைக்கு விழுங்கப்பட்டு விட்டன. பாடல் மறைந்து கொண்டிருக்கும் காலம் இக்காலம் தான். பாடலின் மேல் உள்ள ஈடுபாட்டால் பொறியின்மேல் வெறுப்புக் கொண்டு பொறி மின் விசையை நிறுத்தி நாட்டை இருளாக்கிவிடக்கூடாது. நாடு இருளடைந்துவிடக் கூடாது என்பதற்காக ஒளியின் சூட்டைப் பொறுக்க மாட்டாது கருகிக்கொண்டு இருக்கும் கவிதைகளைக் காப்பாற்றாமலும் இருந்துவிடக்கூடாது.

கொண்டாட்டப் பாடல்கள்

சிறப்பான நிகழ்ச்சிகளில் மனிதன் தன் மகிழ்வினை ஆடியும் பாடியும் பலரோடு கலந்து கொண்டாடுகின்றான். அந்நிகழ்ச்சிகளில் அவன் தன் ஆற்றலை இசை கலந்த கூத்தோடு இணைத்தும் கூத்தின்றி இசையாகவும் வெளிப்படுத்துவது உண்டு. அவ் வெளிப்பாட்டு முறையில் அந்நிகழ்ச்சிகளின் தொன்மையான கலைச் சிறப்பையும் நிகழ்த்துபவர்களின் பண்புச் சிறப்பினையும் அறிய முடியும். இக் காலங்களில் பாடல்கள் பாடி மக்கள் கொண்டாடும் நிகழ்ச்சிகளை இருவகையாகக் கொள்ளலாம். தெய்வத்தொடர்புடைய நிகழ்ச்சிகளில் பாடப் பெறும் பாடல்கள் முதல்வகை என்றும், குடும்பத் தொடர்புடைய நிகழ்ச்சிகளில் பாடப்பெறும் பாடல்கள் இரண்டாம்வகை என்றும் கொள்ளலாம்.

தெய்வத்தொடர்புடைய நிகழ்ச்சிகள்: சிற்றூர்களில் இறைவனுக்கு விழா எடுத்துக் கொண்டாடும் நாளில் சுற்றுப்புறங்களில் உள்ள மக்கள் அதனைப் பெரிதாக மதித்துத் தங்கள் கவலைகளையும் துன்பங்களையும் மறந்து ஓரிடத்தில் கூடி இறைவனைக் கண்டு வணங்கி இன்பம் அடைவர். அந்நாள்களில் விழாவிற்கு வந்த மக்கள் மகிழும் வண்ணம் கலை, தெய்வ உணர்வு இவற்றோடு கூடிய பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் நடைபெறும். பெண்கள் கும்மி, கோலாட்டம் ஆகியவற்றையும் ஆண்கள் ஒயில் கும்மி, கதைப் பாட்டு, கூத்துப். பாட்டு, தர்க்கப்பாட்டு, போன்றவற்றையும் நிகழ்த்துவர்.

கும்மி : ஒழுங்குபட வளைந்து நின்று கையொலி எழுப்பிப் பாட்டொலியோடு நடைபெறும் ஆட்டத்தைக் கும்மி என்று அழைக்கின்றார்கள். இவ் ஆட்டத்தில் ஆண்களும் பெண்களும் பங்கு கொள்வர். ஆண்கள் மட்டும் தனித்து ஆடும் ஆட்டத்தினை ஒயில் கும்மி என்றும், பெண்கள் தனித்து ஆடுவதைக் கும்மி என்றும் கூறுகின்றனர். இவ் விருவகைக் கும்மிப் பாடல்களில் நிறையக் கிடைத்துள்ளவை பெண்களின் கும்மிப் பாடல்களே ஆகும். ஆண்களும் பெண்களும் தனித்தனியாக ஆடிப்பாடும் கும்மிப் பாடல்களில் வரும் பொருள்களைக் கொண்டு பாடல்களுக்குப் பெயர்கள் வழங்கிவருகின்றன. எடுத்துக்காட்டாக நளநாடகக் கும்மி, வாணாசுரக் கும்மி, சின்னமலைக்கும்மி, முத்து வீராயிக் கும்மி[1] என்று சில கும்மிப் பாட்டுகளுக்குப் பெயர் கூறுகின்றார்கள்.

ஒயில் கும்மி : அழகு என்ற பொருளுடைய ஒயில் கும்மியை ஆடுபவர்கள் பல சந்தங்களோடு ஓர் அழகுடன் ஆடிக்கொண்டு கும்மி அடிப்பதால் ஒயில் கும்மி என்று பெயர் ஏற்பட்டதாகக் கூறுவர்.[2] ஒயில் கும்மிக்கும் பெண்கள் கும்மிக்கும் உள்ள வேறுபாடு என்னவெனில் ஆடிப்பாடி நடிக்கும் ஒருவகை ஆட்டம் ஒயில்கும்மி ஆகும். கும்மி என்பது பெண்கள் குனிந்து குனிந்து கையொலி எழுப்பி வளைந்து ஆடும் ஆட்டமாகும். ஒயில்கும்மி கொங்கு நாட்டிற்குச் சிறப்புள்ளதாக விளங்குகின்றது.[3] திருச்சிராப் பள்ளியி

1. கோயமுத்தூர் மாவட்டம்—பக். 66.
2. காற்றில்வந்த கவிதை - பக். 121.
3. நாடோடிப் பாடல்கள் - பக். 66.

லுள்ள மீனவெளி வட்டத்திலும் ஒயில்கும்மி ஆட்டம் உண்டு.[1] இராமநாதபுரம் மாவட்டத்தில் இக் கும்மி, ஒயிலாட்டம் என்று அழைக்கப்படுகின்றது.

ஆடும் விதம் : இடுப்பினில் சாய வேட்டியும், கழுத்தில் பூமாலையும், காலில் சலங்கையும் அணிந்து ஆடுபவர்கள் வட்டமாக நிற்க, இவர்களை இயக்கும் ஆசிரியர் பாட்டிற்கு அடி எடுத்துக்கொடுக்க ஆடுவர். இவ் ஆட்டத்திற்குப் பின்னணி இசைக்கருவிகள் உண்டு. ஆட்டம் ஒரே வகையாக இல்லாமல் பத்து மணித்துளிகட்கு ஒருமுறை வேறு இசையில் பாடப் பட்டு ஆட்டமும் மாறுபடும்.[2]

இக் கும்மியில் தாலாட்டில் இடப்பெற்ற வள்ளி கதை, வள்ளியம்மன் ஒயில் கும்மியாகக் கொங்கு நாட்டுப் பக்கம் மிகச் சிறப்புடையதாக விளங்குகின் றது. சிறுத்தொண்டன் ஒயில்கும்மி என்பதும் இப் பகுதியில் உண்டு.[3] ஆடுபவர் தகதத்தம், தகதத் தம் என ஒலி எழுப்பிக் கொண்டு ஆடுவர். பாட்டின் விரைவு அதிகரிக்க ஆட்டமும் விரைவாக நடை பெறும்[4]. எடுத்துக்காட்டாக வேட்டைக்கும்மி, பனை மரக்கும்மி, இராமாயணக்கும்மி என்ற இக் கும்மி வகை களில் ஆட்டமும், பாட்டும், ஒருவகையாக அமைந்திருக் காது. பாட்டில் வரும் செய்திகட்குத் தக்கபடி அமைந் திருக்கும். இவ் வழகால் இதனைச் சுற்றியிருந்து பார்ப்

---

1. தமிழ்க் கலைக்களஞ்சியம்—பக். 383.
2. காற்றில் வந்த கவிதை—பக். 120-121.
3. அ. நூல்—பக். 121.
4. அ. நூல்—பக். 123.

பவர் அலுப்படையாமல் இன்பமுடன் இறுதி வரை யிருந்து பார்க்கின்றனர்.

இக் கும்மி முழுவதும் பாட்டாகவே இல்லாமல் இடையிடையே உரையாடலும் பெற்றதாக இருக்கும். இராமாயணம் போன்ற பெருங்கதைக் கும்மிகளில் அவற்றில் வரும் பாத்திரங்களுக்குத்தக்க உடை புனைந்து ஆடுவார்கள். இடையிடையே ஆட்டத்தை நிறுத்தி வசனமாகப் பேசுவர்.[1] இக்கும்மி, கடவுள் வாழ்த்தோடு தொடங்குவது உண்டு.[2] இராமாயணக் கும்மியில் குகனும் இராமனும் ஆற்றங்கரையில் கண்டு உரை யாடும் பகுதியைக் கீழே காணலாம்.

குகன் : "எந்த ஊரு எந்த தேசம் சொல்லுமய்யா
எங்கிருந்து இங்குவந்தீர் ?

இராமன் : கானகத்திலே வசிக்கும் குகனே கேளாய்
கௌசல்யா தேவி பெற்ற ராமனும் நானே !

குகன் : தசரத ராச புத்திரர் நீங்கள்தானா ?
உங்கள் தம்பி இளையோனும் இவர்தானா"[3]

இப் பாடலைக் குகனாகவும் இராமனாகவும் வேடம் புனைந்த இருவர் பாடுகின்றனர். ஒயில்கும்மி மேடையின்றித் திரையின்றி வெறும் தரையினில் நடைபெறும் ஓர் இசை நாடகம் எனலாம். இயல் இசை கூத்து நிறைந்த இக் கும்மி குறுகிய நேரம் நடைபெறும் ஒன்றன்று என்பதனை இக் கும்மிப் பாடல்களின் கருப்பொருளாக விளங்கு கின்ற புராண, இதிகாசக் கதைகளும் நீண்ட பாடல் களும் காட்டுகின்றன.

---

1. ஏட்டில் எழுதாக் கவிதைகள்—பக்.156.
2. காற்றில் வந்த கவிதை—பக். 121
3. ஏட்டில் எழுதாக் கவிதைகள் - பக். 156.

கும்மி : பெண்கள் கொட்டும் கும்மியினைக் கண்டு, மகிழ்ந்த பாரதியார் 'நெஞ்சைப் பறிகொடுத்தேன்' என்று பாடியிருக்கிறார். அத்தகைய இக்கும்மி ஆட்டம் கொண்டாட்ட நாள்களில் மட்டுமின்றி நல்ல நிலவுக் காலங்களிலும் நடைபெறுவது உண்டு.[1] கும்மி கொட்டும் பெண்களின் வட்டத்திற்கு நடுவே கண்ணன் சிலை, குத்துவிளக்கு, பூக்கூடை போன்றவை வைத்துக் கும்மி கொட்டுவர்.[2] ஆண்களின் ஒயில் கும்மியிலுள்ள ஆசிரியரும் ஒப்பனைகளும் இக்கும்மியில் கிடையாது. ஒயில்கும்மியில் வந்த வள்ளி கதை இக் கும்மியிலும் உண்டு.[3] மேலும் பெண்கள் கொட்டும் கும்மிப் பாடல்களில் வருணனைகள், எள்ளல், கேலி, தொடர்பற்ற நிகழ்ச்சிகள், சில வரலாற்றுச் செய்திகள் போன்றவை வருவதுண்டு.

இப் பெண்கள் கும்மி ஆண்களின் ஒயில் கும்மி போன்ற ஆட்ட அமைப்பு இன்மையால் நாடக அமைப்பிற்கு வேண்டிய கருவின்றிப் பாடல்கள் அமைந்து இருக்கும்.

இப் பெண்களின் கும்மியில் ராட்டைக்கும்மி என்று ஒரு பாட்டு வழங்கி வருகின்றது.[4] அப் பாட்டில் இராட்டையில் நூல் நூற்றுச் சந்தைகளில் வணிகம் செய்த வரலாறு கூறப்படுகின்றது. இக் கும்மிப் பாட்டு மிகப் பிற்காலத்ததாய் இருக்கலாம். மாரியம்மனுக்கு வேண்டுதல் காரணமாகத் தாலாட்டு இருப்பது

1. ஏட்டில் எழுதாக் கவிதைகள் - பக். 154.
2. நாடோடிப் பாடல்கள் - பக். 72.
3. மலையருவி - பக். 294.
4. ஏட்டில் எழுதாக் கவிதைகள் - பக். 101.

போலக் கும்மி வகையிலும் மாரியம்மனைத் தொழுது இரங்கிப் பாடப்பட்டு வரும் மாரியம்மன் கும்மிப்பாட்டு ஒன்று உள்ளது.[1]

இவை தவிர, பார்வதி சோபனம், உருக்குமணி திருமணம், இயற்கை வருணனை, வேதாந்தக் கருத்துகள், ஆயர்குல வாழ்க்கை, மலர் பறித்தல் ஆகியவற்றைப் பொருளாகக்கொண்டு பாடிக் கும்மி அடித்தலும் உண்டு.

தாலாட்டு பலரின் ஈடுபாட்டைப் பெற்றது போல இக் கும்மியும் புலவர் பலரின் மனத்தைக் கவர்ந்திருக்கின்றது. பலர் கும்மிப் பாடல்களை வெளியிட்டு இருக்கின்றனர். பெண்களுக்கு விடுதலை வேண்டிக் குரல் எழுப்பிய பாரதியார் பெண்கள் விடுதலை வேண்டித் தங்கள் விடுதலை முழக்கங்களையெல்லாம் பாடிக் கும்மி அடிப்பதாகப் 'பெண்கள் விடுதலைக்கும்மி' என்ற பாடலை இயற்றியுள்ளார்.[2]

நாலுமந்திரிக் கும்மி, மானிடக் கும்மி முதலிய பாடல்கள் கும்மிப் பாடலின் அமைப்பை ஒட்டி எழுந்த கும்மிப் பாடல்கள் எனலாம்.

கோலாட்டம் : இதனை வசந்தகால விளையாட்டு என்பர். கைகளில் சிறு கோல்களை வைத்துக்கொண்டு ஆடும் ஒருவகை ஆட்டமாகும். கோலாட்டம் நடை

1. மலையருவி - பக். 307 - 308.
2. "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டுமறி வினில் ஆணுக்கிங்கே பெண்கள்
இளைப்பில்லை காணென்று கும்மியடி!"

பெறும்பொழுது கோலாட்டம் அடிப்பவர்களும் பாடுவர். அல்லது வேறு ஒருவர் பின்னிருந்தும் பாடுவார். கோலாட்டத்தில் பாடப்படும் பாடல்களில் தெய்வங்கள், கதைகள் முதலியவை பாடற்பொருளாக வருவதுண்டு. கோபிகாகீதம்', 'இராசக்கிரீடை', 'பாரதக்கதை', 'கட்டபொம்மன் கதை' ஆகியவையும் கோலாட்டப் பாட்டுகளாக விளங்கி வருகின்றன. கதைக்குத் தக்கபடி கோலாட்ட ஆட்டம் அமையும். உதாரணமாகப் பாரதக் கதையைக் கோலாட்டத்தில் பாடும்பொழுது அதில் வரும் போர்க் காட்சிகளைப் பாடி அடிக்கும்பொழுது கோலாட்டம் மிக விறுவிறுப்பு அடையும். நாம் நேரிடையாகப் பாரத காலத்திற்கே சென்று பாரதப்போரைப் பார்த்த பெருஞ்சோற்று உதியன் சேரலாதனைப்போல ஆகிவிடுகின்றோம்.

கோலாட்டப் பாட்டொன்றில் பாரதப்போர் பின் வருமாறு பாடப்படுகின்றது.

"வீமனும் பலராமனுமே முட்டினர்—அதில்
வெகு நேரமாக மல்லுக் கட்டினர்—அந்த
விசயனும், சாஸ்திரியும் திசையெங்கும் பாணங்களைச்
சொரிந்தார்—பாதம் பணிந்தார்
காமனும் நகுலனுமே எதிர்த்தார்
கடிந்து அபயமிட்டுக் குலைத்தார்
காவலருடன் சகாதேவரும் படையெடுத்துக்
களைத்தார்—முற்றும் துளைத்தார்"[1]

திருச்சி மாவட்டத்தில் ஆண்கள் கோலாட்டமாடுகிறார்கள். இதனை 'வைந்தானை' என்று அழைக்கின்றார்கள்.

1 ஏட்டில் எழுதாக் கவிதைகள் - பக். 158.

மலையாளத்தில் பிராமணப்பாட்டு, கைகொட்டிக் களி ஆட்டம் என்னும் பாமரக் கோலாட்ட நடனங்கள் இன்றைக்கும் உண்டு.

மறைந்து வரும் இக் கலைகளையெல்லாம் சென்னை 'தமிழ் இசைச் சங்கம்' பெரும்பொருள் செலவில் காப்பாற்றி வருகின்றது என்பது இங்கே நினைக்கத் தக்கது.

கூத்துப் பாடல்: கூத்துகளில் தோற்றத்திலும் பேச்சிலும் நகைச்சுவையாளராகத் தோன்றுபவன் கோமாளி என்று அழைக்கப்படுவான். இவன் பாடும் பாடல்கள் அனைத்தும் நகைச்சுவையாகவே இருக்கும். இவன் பாடும் பாட்டுகள் முழுதும் பாட்டாக இல்லாமல் இடை இடையே உரைநடையும் கலந்து வரும். அவன் அடி வாங்கியது அல்லது பிறர் அடி வாங்கியது, சாப்பாட்டு வருணனை, பெண்ணைப்பற்றி இகழ்ந்து பாடுதல் ஆகிய பொருள்கள் வரும் சில பாடல்கள் கிடைத்திருக்கின்றன.[1]

கூத்தில் திருடன்வேடம் புனைந்த ஒருவன் தன்னுடைய வீர தீரங்களைச் சொல்லிப் பாடும் பாடல் ஒன்றினைக் கீழே காணலாம்.

"பப்ளிக்கு ரோட்டு மேலே
பட்டப்பகல் வேளையிலே
பந்தோபஸ்து பீட்டுக்களைப்
பரக்கடிக்க வைத்துவிட்டு
வாரார் சொக்கத் தங்கம்—நம்ம
நாடார் ஜம்புலிங்கம் !

1. ஏட்டில் எழுதாக் கவிதைகள் - பக். 163-165.

சப்இன்ஸ்பெக்டர் சட்டையை
சந்தடி ஒன்றும் இல்லாமலே
சல்லாப மாத்தான் கழற்றி
உல்லாசமாய்ப் போட்டுக் கொண்டு
வாரார் சொக்கத் தங்கம்—நம்ம
நாடார் ஜம்புலிங்கம்!

ராத்திரி வேளையிலே
காத்திருந்த போலீஸை
சாதுரியமாகத் தானும்
சந்து சந்தாகச் சந்திச் சிட்டு
வாரார் சொக்கத் தங்கம்—நம்ம
நாடார் ஜம்புலிங்கம்''[1]

கதைப் பாடல்கள் ; மக்கள் கூடுமிடங்களில் பரம்பரை பரம்பரையாகப் பாடல்கள் பாடி அதன் மூலம் வாழ்வு நடத்தும் சிலர் தாங்கள் பாடும் பாடல்களில் கற்பனை கலந்த சில பாடல்களைப் பாடுவது உண்டு. புதிய படைப்புப்போல் காணப்படும் இவ்வகைப் பாடல்கள் நிறைந்த அளவில் காணப்படாவிட்டாலும் குறைந்த அளவில் உள்ளன. புதியன படைக்கும் எண்ணம் நாட்டுப்புற மக்களிடமும் இருந்திருக்கின்றது என்பதனை நாம் இதனால் அறிகின்றோம். இத்தகைய பாடல்களில் வீரம், புராணம், கலந்துவரும். இவ்வகையில் அமைந்த பாடல்கள் சேவல் பாட்டு, 'வாக்குவாதங்கள்', 'காமன் பண்டிகைப் பாட்டு' 'நவராத்திரி ஓடம்' முதலியவையாகும். இப் பாடல்கள் சிறுசிறு துணுக்குகளாக இல்லாமல் நீண்ட பாடல்களாக அமைந்திருக்கின்றன.

1. மலையருவி - பக். 182-183.

சேவல் பாட்டு : இப்பாடலில் துரைசாமி என்பவர் அன்புடன் வளர்த்த ஒரு சேவல் காணுமல் போய் விடுகின்றது. சேவலேத் தேடுபவர் காணுமல்போன சேவலே வளர்த்த பெருமையினையும் அச் சேவல் கடவுளுக்கு விடப்பட்டது என்பதனையும் சொல்லி அதனைப் பிரிந்ததற்காக வருத்தப்படுகின்ருர். இலக்கியங்களில் மகளைப் பிரிந்த தாய் கண்டோரைப்பார்த்துப் புலம்புவதைப்போல, சேவலேப்பிரிந்த அவர் புலம்பல் அமைந்திருக்கின்றது.

''நல்லசிறு தொட்டில்கட்டி நான்வளர்த்த சாவல்
நான்வளர்த்த சாவல்தன்னை நஷ்டமிட்டவ ளாரோ
தங்கத்தினுல் சலங்கைகட்டித் தரையில் விட்டசாவல்
முத்துமணி கட்டிஎந்தன் முன்னேவிட்ட சாவல்
முன்னேவிட்ட சாவல்தன்னை மூடிக்கொண்டவ ளாரோ
பவளமணி கட்டியிப்போ பார்த்துவிட்ட சாவல்
பார்த்துவிட்ட சாவல்தன்னை மூடிக்கொண்டவ ளாரோ
காதுகுத்திக் கடுக்கனிட்டுக் கடையில் விட்ட சாவல்
கடையில் விட்ட சாவல்தன்னைக் கண்டழைத்தவ ளாரோ''

இவ்வாறு புலம்புகின்ருர். இப் பாடலில் வீதிகள், நகரங்கள், தெய்வங்கள் முதலியன வருணிக்கப்பட்டுள்ளன.

வாக்கு வாதங்கள் : நாட்டுப்புறப் பாடல்களில் தருக்கப்பாடல்கள் நிறைய உண்டு. மாமியார், மருமகள் வாக்குவாதங்கள், நெடிய பாடலாகவே கிடைத்திருக்கின்றது. கூத்துகளில் வள்ளிக்கும் முருகனுக்கும் நீண்ட வாக்குவாதங்கள் நடக்கும். காமன் பண்டிகையில் மன்மதன் 'எரிந்த கட்சி', 'எரியாத கட்சி' என்ற இரு பிரிவினராக இருந்து பாடுவார்கள். நகர்ப்புறங்களில்

நடக்கும் பட்டிமன்றத்திற்குள்ள மதிப்புப் போலக் கிராமங்களில் இத் தருக்கப் பாடல்களுக்கும் மதிப்பு அதிகம்.

இத் தருக்கப் பாடல்களில் மகாலட்சுமிக்கும் பார்வதிக்கும் வாக்குவாதம் என்ற ஒரு பாடல் மிகச் சுவை அமைந்ததாக இருக்கின்றது. இப் பாடலில் விஷ்ணு, பரமசிவன் ஆகிய இரு கடவுள்களின் மனைவியர்களும் வாக்குவாதம் செய்கின்றனர். விஷ்ணுவைப் பார்வதியும் பரமசிவனை மகாலட்சுமியும் கேலிசெய்து பாடுகின்றனர். இப் பாடலில் இரண்டு கடவுளர்களின் வரலாறுகளும் வேடிக்கையாக நயமுடன் நன்கு சொல்லப்படுகின்றன. அப் பாடலின் ஒருபகுதி ;

மகாலட்சுமி : "மண்ணெடுத் தடிபட்டு, வாணிச்சி பிட்டு
வாங்கி, வாங்கித் தின்றாரே யுங்கள்
சிவனார்.

பார்வதி : குன்றெடுத்துப் பால் தயிர் வெண்ணெய்
திருடி, குந்திக்குந்தித் தின்றாரடி யுங்கள்
பெருமாள்.

மகாலட்சுமி : பசும்பொன் சரப்பளி பதமிருக்க, பாம்
பணிகளே தரித்தாருங்கள் சிவனார்.

பார்வதி : தோஷமில்லா முத்து நவரத்னமிருக்க
துளசித் தழையே யணிந்தாருங்கள்
பெருமாள்.

மகாலட்சுமி : கொள்ளும் வைக்கற் புல்லுதின்னு
மெருதை, வாகனமா யேறினாரே யுங்கள்
சிவனார்.

பார்வதி : நத்தைக்குத்துங் கெருடனை வாகனமாக
நாணயமாயேறினாரே யுங்கள்பெருமாள்.

மகாலட்சுமி: ஆனைத்தோலும் புலித்தோலும் யாமை
யோடு ஆமையாக அணிந்தாரோடி
யுங்கள் சிவனார்.

பார்வதி: மானமுடன் கானகத்திற் சீதையுடனே
மரவுரி தரித்தாரோடி யுங்கள்பெருமாள்.

மகாலட்சுமி: வீடு வாசல் கிடைக்காமல் சுடுகாட்டிலே
வீற்றிருந்தா ரல்லவோடி யுங்கள்சிவனார்.

பார்வதி: நாடு தேசம் வீடுவாசல் காடுகள்விட்டு
நடுக்கடலில் பள்ளி கொண்டா ருங்கள் பெருமாள்

மகாலட்சுமி: சந்தனக் கதம்பப் பொடிப் புனுகுமிருக்கச்
சாம்பல் குழைத்துப் பூசினாரே யுங்கள் சிவனார்

பார்வதி: வந்திரத் திருவந்திரப்புறத்து வெண்
மணல் குழைத்துப்பூசினாரேயுங்கள் பெருமாள்.

என்று இப்படிப் பாடல் நீண்டுகொண்டே செல்கின்றது. இரு பெண்கள் எதிர் எதிர் இருந்துகொண்டு ஒருத்தி மகாலட்சுமியாகவும், இன்னொருத்தி பார்வதியாகவும் வாதிடுவர். இத்தகைய பாடலைப் பாமரருக்காகப் புராண அறிவுள்ள ஒருவர் இயற்றிக் கொடுத்திருக்கக்கூடும் என்ற கருத்து பொருத்தமுடையதாகும். இப் பாடலின் அமைப்பைப் போல 'வள்ளி தெய்வானை ஏசல்' என்ற பாடலும் உண்டு. வள்ளி, தெய்வானை இருவரும் சக்களத்திச் சண்டைபோல வாதம் செய்வதும் முருகன் வந்து சமாதானப்படுத்துவதும் மிக அழகாக அமைந்திருக்கின்றது.

காமன் பண்டிகை: இப் பாட்டினை 'இலாவணிப் பாட்டு' என்று அழைக்கின்றனர். இலாவணி என்ற சொல் மகாராஷ்டிரச் சொல்லாகும். இப் பாட்டு மராட்டியர்கள் தஞ்சைக்கு வந்தபோது அவர்களால் இங்கு

பெரும் பழக்கத்திற்கு வந்ததாகக் கருதப்படுகின்றது. மகாராட்டிய தேசத்தில் கோலிப்பண்டிகையின் பொழுதும், குழந்தை பிறந்த எட்டு நாள்கள் வரை பேய், பிசாசு தொல்லைகள் இல்லாது இருக்க மக்கள் இப் பாட்டுகளைப் பாடுவதாகச் சொல்லுகின்றார்கள்.[1]

தமிழ்நாட்டில் இம்முறையை ஒட்டி இப் பண்டிகை நிகழுவதாகத் தெரியவில்லை. சித்திரை மாதத்தில் இப் பண்டிகை நடைபெறுகின்றது. பக்க இன்னியங் களோடு மன்மதன், இரதி, சிவன் ஆகியவர்களைப் போல் வேடம் கொண்டு இரவில் இன்பமாகப் பாடிப் பொழுதினைக் கழிக்கின்றனர். இப் பாடலில் சிவபிரா னின் தவத்தைக் கலைத்த மன்மதனை எரித்த வரலாறும், கணவனை இழந்த இரதியின் ஒப்பாரியும் அவனை உயிருடன் எழுப்பிய வரலாறும் வரும். இப் பண்டிகைப்பாடல் பட்டிமன்றம் போன்று அமைந் திருக்கின்றது. ஒரு சாரார் எரிந்த கட்சியாகவும், மற்றொரு சாரார் எரியாத கட்சியாகவும் இருந்து கொண்டு மன்மதன் சிவனால் எரிந்து போனான் என்றும், எரிக்கப்படவில்லை என்றும், மனம்போன போக்கில் பாடலைக் கூட்டிக்கொண்டு விடிய விடியப் பாடுவர். எரியாத கட்சியினர் வென்று விட்டால் கடைசி யில் 'தீ' மூட்டமாட்டார்கள். பாடுவது புராணகால வரலாறாக இருந்தாலும் அவர்கள் காலச் செய்திகளே பெரும் பங்கு வரும். எதிர்த்துப் பாடுபவர்களில் ஒரு சாரார் உத்தார் என்று கூறப்படுகின்றனர். இலா வணிப் பாட்டின் போக்கிற்குக் கீழே உள்ள பாடல்கள் எடுத்துக்காட்டாகும்; தருக்க இன்பம் இதில் தலையான

1. ஏட்டில் எழுதாக் கவிதைகள் - பக். 112.

தாகையால் காமன் எரியவில்லை என்று தருக்கம் செய்யும் ஒரு பகுதி கீழே எடுத்துக் காட்டப்படுகின்றது.

"பங்கி உடானடித்துப் பந்து போல் பாய்ந்து வந்த
பயில்வானே பதில் விடை கூறு கூறு ஐயா!
கட்சி எரியாத காரணம் கேட்டு இன்று
கில்லாடி சபையில் உட்காரு கூறு."

"ஆன்சர் பாரே கேட்ட கேள்விக்குத்
தடையின்றிப் பதில் கூறே;
மன்மதன் மாய்ந்திடில் விண்முதற் பஞ்சபூதம்
வந்த விபரமேது? ஈதென்ன சூது?
இப்புவி மீது ஜீவ ராசிகள்
மண்ணி லுற்பத்தி யேது?"

இப்படி நீண்டு செல்லும் பாடல்களில் ஆங்கிலச் சொற்களும், கொச்சைச் சொற்களும், பேச்சு நடைகளும், நிறைய வரும்.

நாட்டுப்புறப் பாடல்கள் பழைமையானவைகளாக இருப்பினும் காலப்போக்கில் அவ்வக்காலச் செய்திகளும் வழங்கும் சொற்களும் பாடல்களில் இடையிடையே கலந்து வருகின்றன என்பதற்கு இவை சான்றாகும்.

மராட்டியர் காலத்திலிருந்து வந்ததாகக் கருதப்படும் இலாவணிப் பாட்டை இன்று தஞ்சையிலிருக்கும் மராட்டியர் குடும்பம் அதிகமாகப் பாடுவதாகச் சொல்லுகின்றார்கள்.

மன்மதன் சிவனால் எரிக்கப்பட்ட வரலாற்றையும் இரதியின் புலம்பலையும் கச்சியப்பர் 'கந்தபுராணத்தில்' பாடி இருப்பது இங்கு ஒப்பிட்டு நினைத்துப் பார்க்கத் தக்கது.

ஓடப் பாட்டுகள்: ஓடப்பாட்டுகளைப் போல அவ் இசையமைப்பில் சில நிகழ்ச்சிகளைக் கதை போலச் சொல்லும் பழக்கத்தைச் சில நாட்டுப்புறப் பாடல்களில் காணலாம். நவராத்திரி ஓடம், காலேஜ் ஓடம் என்பன இவ்வகையில் அமைந்தவையாகும். இவை மிக அண்மைக் காலத்தில் தோன்றிய பாடல்கள்.

கும்பகோணத்தில் நடக்கும் நவராத்திரியை வருணித்து நவராத்திரி ஓடத்தின் பாடற்பொருள் அமைந்துள்ளது. அப் பாடலில் கும்பகோண நகரத்தின் வீதிகள், கடைகள், விழாவிற்கு வந்த மக்கள், அங்கு நடைபெற்ற திருவிழாவில் திருட்டுப்போன பொருள்கள் முதலியன வருகின்றன. எண்ணிறந்த ஆங்கிலச் சொற்கள் வரப் பாடல் பாடப்பட்டிருக்கின்றது.

'காலேஜ் ஓடம்' என்பது 'இங்கிலீஷ் ஓடம்' என்றும் அழைக்கப்படுகின்றது. கல்லூரி வாழ்க்கையைக் கேலி செய்து அமைந்துள்ள இவ் ஓடப்பாட்டில் நான்கு வரிகளே உள்ளன. மற்றப்பகுதிகள் உரை நடையில் இருக்கின்றன. இவ் ஓடப் பாட்டிலும் ஆங்கிலச் சொற்கள் அதிகம்.

இப் பாடல்கள் அண்மைக் காலத்தில் ஆங்கிலம் கற்ற ஒருவரால் பாமரருக்கு ஏற்ப இயற்றப்பட்டு வழக்கிற்கு வந்திருக்கலாம்; பிற நாட்டுப்புறப் பாடல்களைப்போல இப் பாடல்கள் பெரும் செல்வாக்கினைப் பெறவில்லை.

தேர்ப்பாட்டு: தேரினை இழுக்கும்பொழுது சில இடங்களில் பாட்டுப் பாடுவது உண்டு: சில இடங்களில்

வெறும் ஒலிகளை மட்டும் எழுப்புவர்; மதுரை மாவட்டத்தில் தேர்த் திருவிழாவின் போது பாடப்படும் ஒரு பாடலில் தேர் செய்யப்பட்ட மரங்களும், தேர் இழுப்பதின் பயனும் சொல்லப் பட்டிருக்கின்றன. அப் பாடல்:

"கடுக்கா நல்லா ஏலேலோ மரம் பிளந்து! ஐலசா
கண்டியம்மன் ஏலேலோ தேரு செய்து! ஐலசா
தேரசைய ஏலேலோ ரதங்குலுங்க! ஐலசா
தேசத்தாரே ஏலேலோ கையெடுக்க! ஐலசா
கையெடுத்த ஏலேலோ பேர்களுக்கு! ஐலசா
கையிலங்கிரி ஏலேலோ போனபலன்! ஐலசா
பாக்கு நல்லா ஏலேலோ மரம்பிளந்து! ஐலசா
தேரசைய ஏலேலோ ரதங்குலுங்க! ஐலசா
தேசத்தாரே ஏலேலோ கையெடுக்க! ஐலசா[1]

குடும்பத் தொடர்புடைய நிகழ்ச்சிகள்: இதுவரை நாம் மேலே கண்டவை இல்லத்திற்கு வெளியிடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பாடப்படும் பாடல்களாகும், இனி, மக்கள் தங்கள் இல்லங்களில் நிகழ்த்தும் திருமணங்கள், விழாக்கள், சடங்குகள் முதலியவற்றில் பலருடன் கலந்து மகிழ்ந்து பாடல்களைப் பாடி அந் நிகழ்ச்சிகளைக் கொண்டாடுவர். அந் நிகழ்ச்சிகளில் இடம் பெறும் பாடல்களைக் காணலாம்.

திருமணப் பாடல்கள்: திருமணத்தில் மண மக்களை வாழ்த்துதல் என்ற ஒரு சடங்கு சிறப்புடையதாகும். இன்றைக்குப் பெரும் பாலும் பேச்சாக அமைந்துவிட்ட அந் நிகழ்ச்சி குறிப்பிட்ட சில காலங்களுக்குமுன் பாட்டுப்பாடிவாழ்த்துவதாக இருந்திருக்கின்றது.பாட்டுப்

1. ஏட்டில் எழுதாக் கவிதைகள்—பக். 190-191

பாடி வாழ்த்துதல் கோயமுத்தூர், திருநெல்வேலிப் பகுதிகளில் பெரும் வழக்கினை உடையதாக இருந்து வருகின்றது. இவ் வழக்கம் பல பகுதிகளிலும் பெரும் பழக்கமுடையதாக இருந்திருக்கின்றது என்பதனைத் திருமண வீட்டில் பாடுவதற்காகப் பல பாடல்கள் சிறு சிறு புத்தக வடிவில் வந்திருப்பதனைக்கொண்டு அறிய முடிகின்றது.

திருமண வீட்டில் பாடப்படும் இப் பாடல்கள் மாப்பிள்ளையை ஏசி வாழ்த்துதல், மணமகளை ஏசி வாழ்த்துதல் என இரு பகுதிகளாக அமையும்; ஏசல் என்று இருப்பினும் இதனை அன்பு ஏசல் என்று சொல்வது பொருத்தமுடையதாகும். இவ்வகை ஏசல் சடங்குகளை நிகழ்த்துபவர்கள் ஆணுக்கும் பெண்ணுக்கும் நெருங்கிய உறவுடையவர்களாகவே இருப்பர். இப் பாடல்கள் திருமணத்திற்கு வந்தவர்களிடையே மகிழ்வினை உண்டாக்கக்கூடியனவாகவே இருக்கும். சில நேரங்களில் பாடல்கள் சூடுபிடித்து விடுவதும் உண்டு. மாப்பிள்ளையின் சார்பாகப் பாடுபவரும், மணமகளின் சார்பாகப் பாடுபவரும், போட்டி மனப்பான்மைக்கு ஆளாகி ஒருவரை ஒருவர் அதிகம் ஏச ஆரம்பிப்பதும் உண்டு. சிற்றூர்களில் நடைபெறும் கூத்துகளில் வள்ளி முருகன் இருவரும் உரையாடல்கள் நடத்திக் கொண்டிருக்கும்போது இருவரும் ஒருவருக்கொருவர் வெறுப்புக்கொண்டு புராணகாலத்தையெல்லாம் மறந்து சொந்த வாழ்க்கையை வெளிக்குக் கொண்டுவந்து பாடுவதுபோல, இத் திருமண ஏசல்களும் சில நேரங்களில் அந்நிலைக்கு வந்துவிடுவதுண்டு. ஆதலின் இப் பாடல்களைப் பல இடங்களில் பெரும்பாலும் திருமணத்

துக்குப் பிறகே பாடுகின்றனர். சில இடங்களில் இப் பாடல்களால் இரு வீட்டாருக்கும் மனத்தாங்கல் ஏற்பட்டுவிடுகின்றது என்று பல பகுதிகளில் நிறுத்தி விட்டனர்.[1]

காலத்தால் அநாகரீகம் என்று கருதப்பட்டுவரும் இப் பாடல்கள் நல்ல இனிமையும் அழகும் கருத்தும் வருணனையும், உவமையும் கொண்டனவாக இருக்கின்றன.

மாப்பிள்ளையை எதிரே வைத்துக்கொண்டு மணப் பெண்ணின் பெருமையினை வந்திருக்கின்ற மாப்பிள்ளை வீட்டாருக்குக் கூற நினைக்கையில் கீழ்க்கண்டவாறு பாடுகின்றார்கள்.

"பொன்னுக்குக் குறையுமுண்டு பூவிற்கிதமுமுண்டு
ஓடுகிற தண்ணீருக்கு உள்ளே சுழலுமுண்டு
ஆலகால முண்டவருக்குக் கண்டங் கறுப்பு
மையே கருப்பொழிய மற்றும் கருப்புமில்லை
சாந்தே கருப்பொழியச் சற்றும் கருப்புமில்லை
பொட்டே கருப்பொழிய பின் கருப்புமில்லை காண்
சுந்தரியாள் மேனிக்குச் சொற்குற்ற மில்லைகாண்
பிறந்த குடிக்கும் பிழையில்லாப் பெண் பெருமாள்
வளர்ந்த குடிக்கும் மறுவில்லா மாணிக்கம்"

மணப்பெண் மாசற்றவள் என்பதனை இப் பாடல் தெரிவிக்கின்றது.

இவ் அரிய பெண்ணை அடைவதற்கு மாப்பிள்ளை படாத பாடு பட்டதைப் பாடல் மேலும் நயமுடன்

1. கன்னியாகுமரி மாவட்டம்.

தெரிவிக்கின்றது. மாப்பிள்ளை காற்று, வண்டு முதலிய பல பொருள்களைத் தூதுவிட்டார் என்பதனைப் பாடல் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கின்றது.

''கரும்பிலனை யானைக் காணவே நாள்தோறும்
காற்றையுமிங்கு விட்டீர் கருவண்டைத் தூதுவிட்டீர்
அண்டையில் நிற்கும் அன்னத்தைத் தூதுவிட்டீர்
கூடவே நிற்கும் குயில்களைத் தூதுவிட்டீர்
பெண்களைத் தூதுவிட்டுப் பேச்சுக்களைத் தானறிவீர்
கூடல் விளைப்பீர் குறத்திவாய் சொற்கேட்பீர்!
கூடுமோ கூடாதோ கோடி குறி கேட்டீர்
கூடுமெனச் சொன்னவருக்குக் கோடிதானம் கொடுப்பீர்''

மாப்பிள்ளையையும், பெண்ணையும் மட்டும்தான் ஏசுவார்கள் என்பதில்லை. சம்பந்திமார் ஒருவரை ஒருவர் ஏசிக்கொள்வதும் உண்டு. இத் திருமணப் பாடல்களில் பெரும்பகுதி ஏசலாக இருந்தாலும் பாட்டின் முடிவு வாழ்த்தாகவே இருக்கும்.

இத் திருமணப் பாடல்களைத் தொகுத்தால் அப் பகுதி மக்களின் பழக்க வழக்கங்களும், அவ் வட்டாரப் பண்பாடும் நன்கு அறிய முடியும். அந் நோக்கோடு பம்பாய் மாநிலத்தில் தாஞ மாவட்டத்தில் வாழும் 'வாரியல்' என்ற பழங்குடி மக்களைப்பற்றி ஆராய்ந் திருக்கிறார்கள்.

கல்லுளி மங்கன் கறுப்பாயி கல்யாணம் : கல்லுளி மங்கன், கறுப்பாயி என்பவர்களின் திருமணத்தை வருணித்துப் பாடும் இப் பாடல் சில திருமண வீடுகளில் வேடிக்கைக்காகப் பாடப்படுவதும் உண்டு. அல்லது

வேறு சூழ் நிலைகளில் இப் பாட்டைப் பாடவேண்டும் என்று நினைக்கின்றவர்கள் பாடுவதும் உண்டு. இப் பாடல் நாட்டுப்புறப் பாடல்களில் மிகக் கீழான பொருளைக் கொண்டதாக இருக்கிறது. மறைபொருளை மறைவின்றி வருணிக்கிறது; நூல் வடிவிலும் இப் பாடல் வெளிவந்திருக்கிறது. உதாரணத்திற்குக் கறுப்பாயி திருமண வருணனையில் ஒரு பகுதி :

"மணவறைப் பந்தலாம் வாசற்படி
வறட்டுத் தோலாம்கூரைச் சீலை
ஊமைச்சி கூடாரம் பெண்தாலி
ஓட்டைப் பானையும் அரசானி
புளியங் கொட்டையாம் களிப்பாக்கு
பூவரசிலை யாம் தாம்பூலம்
உளுத்த மரப்பொடி சந்தனமாம்
உப்புத் தண்ணீராம் பன்னீரும்."

பண்டிகைப் பாடல்கள் : குடும்பத்தில் நடை பெறும் சில விழாக்களைப் பாட்டுகளோடு கொண்டாடுவ துண்டு. அப்படிக் கொண்டாடப்படும் விழாக்களாகப் பொங்கல், வருடப்பிறப்பு, ஸ்ரீ ஜெயந்தி, கலைமகள் விழா போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

பொங்கல் விழா : வேளாண்மைப் பாடலில் நாம் முன்பு பார்த்த ஏர் பூட்டும் பாடல் முதல் அதிகாரம் என்ருல் பொங்கல் பாட்டு வேளாண்மைப் பாடலின் இறுதி அதிகாரம் என்று கூறலாம். தைத்திங்களில் மூன்ருவது நாளான பூநோன்பு நாளைப் பெண்கள் மார்கழி மாதத்திலிருந்து கடைப்பிடித்துவந்த நோன்பு ஒன்றின் நிறைவு விழாவாகக் கருதுவதால் இந் நாளில்

பூப்பறிக்கும்பொழுதும்[1] மார்கழி மாதத்தில் வீட்டிற்கு முன் வைத்திருந்த சாணப் பிள்ளையாரையும் பரங்கிப் பூவையும் ஆற்றில் கொண்டு போடப்போகும் பொழுதும், போட்டுவிட்டுத் திரும்பி வரும்பொழுதும்[2] வீட்டிற்கு வீடு நோன்புப் பொருள்கள் வாங்கும்பொழுதும் பாடுவர்.

ஸ்ரீ ஜெயந்தி: ஆவணிமாதம் ஸ்ரீ ஜெயந்தியன்று குழந்தைகளும் பெரியவர்களும் பாட்டுப்பாடிக் கோகுலாஷ்டமி விழாவைக் கொண்டாடி வருவதுண்டு.[3]

ஊஞ்சற் பாட்டுகள்: இலங்கையில் வருடப் பிறப்புத்தோறும் ஆண்களும் பெண்களும் பெரியவர்களும் சிறியவர்களும் ஊஞ்சலாடும்பொழுது பாட்டுப் பாடிக்கொண்டு ஊஞ்சல் ஆடுவர். ஊஞ்சல் உறுதியான மரத்தில் செய்து இரும்புச் சங்கிலியால் தொங்கவிடப்பட்டிருந்தாலும், பாடலில் பகடிக்காக ஊஞ்சல் பின் வருமாறு வருணிக்கப்படுகின்றது:

"கள்ளி மரத்தாலே ஊஞ்சலுங்கட்டி
கத்தாளை மரத்தாலே விட்டமும் பூட்டி
பள்ளி பறைச்சி இருந்தாட
பண்டாரச் சுப்பன் உதைந்தாட"[4]

தமிழிலக்கியத்தில் பிள்ளைத்தமிழில் இப் பாடல் வகையுண்டு என்பது இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

---

1. காட்டு மல்லிகை - பக். 41.
2. நாடோடிப் பாடல்கள் - பக். 95.
3. குழந்தை உலகம் - பக். 69.
4. ஈழத்து நாடோடிப் பாடல்கள் - பக். 87.

வளைகாப்பு : பெண் கருவுற்றிருக்கும் பொழுது 'வளைகாப்பு' என்னும் விழாவினை ஐந்தாவது மாதத்திலும் சீமந்தம் என்ற ஒரு சடங்கினை ஆருவது மாதத்திலும் நிகழ்த்துவர். இவ்விரு சடங்குகளிலும் பாடல்கள் பாடப்படுவதுண்டு. வளைகாப்பின்பொழுது பாடப்படும் பாடலில் ஒரு பகுதி :

"சங்கரியும் லட்சுமியும் சரஸ்வதி யாளும்
மங்களமாய் பூஜைசெய்தார் மன மகிழ்ந்து
மாசம் ஒன்று இரண்டுமூன்று மசக்கையும் செய்து
வளர்பிறையில் ஐந்தாம்மாதம் வளைகாப்பு செய்து
ஆரும் மாதம் தசரதனர் சீமந்தம் செய்தார்
முறுக்குசோமாசி வேணும் தேன்குழல் வேணும்
எள்ளுச்சீடை பொரிவிளங்காய் அவல்தேங்காய் வேணும்
அடிநாக்கு மணக்கநல்ல அதிரசமும் வேணும்
அழகாய்மரு தாணியிட நல்ல அத்தையும் வேணும்
"சீயக்காய் மஞ்சளரைக்கச் சிறுதங்கையும் வேணும்
உகப்புக்கப்பாய் செய்யஒரு உடன்பிறந்தான் வேணும்
ராமன் பிறந்தவுடன் ராஜர் மகிழ்ந்து
நதியிலே ஸ்நானம் செய்து நேமங்கழித்தார்
விதையுடன் தான் கலந்து வெற்றியும் பொன்னும்
விரைவுடன் தான்வந்து விரைதானம் செய்தார்.

பிறக்கப்போகும் குழந்தையை இராமரோடு ஒப்பிட்டுப் பிறந்த கவிதையிது.

சாதிக்குத் தக்க சடங்கு : சடங்குகள் சாதிக்குத் தகுந்தபடி உண்டு. சில குறிப்பிட்ட பழக்க வழக்கங்கள் சடங்கு முறைகள் ஒரு குறிப்பிட்ட சாதியினருக்கு உரிமையுடையவாக இருக்கும்.

செட்டிநாட்டில் திருவாதிரைச் சடங்கு: செட்டி நாட்டில் பருவமடையப்போவதற்கு முன் திருவாதிரை என்ற ஒரு சடங்கினைச் செய்வர். அப்பெண்ணுக்கு இச் சடங்கினைச் செய்தால் பாதித் திருமணம் நடந்து விட்டதாகக் கருதுவார்கள். பெண்ணை ஒப்பனை செய்து தாலி கட்டி வீட்டிற்கு வீடு போகச் செய்வர். அந்தப் பெண் ஒவ்வொரு வீட்டிற்குப் போகும் பொழுதும் பாட்டுப்பாடிக்கொண்டே செல்லுவாள். செல்லும் வீடுகளில் காய்கறிகள் கேட்டுக்கொண்டு பாடுவாள். அப் பாடலில் அவர்கள் கேட்கும் காய்கறி களும் வரும்.

''ஆடி ஆடி வர்ரேன் அவரக்காய் போடுங்கோ
பாடிப்பாடி வர்ரேன் பயித்தங்காய் போடுங்கோ
சொல்லிச் சொல்லி வர்ரேன் சொரக்காய் போடுங்கோ''

பழியர் சாதியில் சாவுச் சடங்குப் பாட்டு: பழனி அருகில் வாழும் பழியர் என்ற ஒரு வகை மலைச்சாதி யினர் இறந்தவர்களைப் புதைத்த எட்டாம் நாள் கருமாதி செய்வர். இறந்தவர்களை நினைத்து அதுபொழுது கும்பிட்டுக் கீழ்க்கண்ட பாடலைப் பாடுகின்றனர்:

''செத்தவங்களோட செத்தவங்களா
மாண்டவங்களோட மாண்டவங்களா
நீங்க போய்ச் சேர்ந்து
எங்க கைகாலுக்குச் சுகத்தைக் கொடுங்க'' [1]

மேலே கண்ட சடங்குப் பாடல்களில் முதல் வகை நாகரிக வளர்ச்சியிலுள்ளவர்கள் பாடுவதாகும். இரண்

1. மேல் மலைமக்கள் - பக். 31.

டாம் வகை நாகரிக வளர்ச்சியில் கீழ்நிலையில் உள்ளவர்கள் பாடுவதாகும். இவ் விருவகையினரும் பாடுவதைக் கொண்டு சடங்கின் பொழுது பாடல்கள் பாடுவது பொதுவானதாக இருக்கிறது என்று மட்டும் உணரலாம்.

விதை முகூர்த்தப் பாட்டு: உழவர்கள் விதை விதைக்குமுன் விதை முகூர்த்தம் என்ற சடங்கினை நிகழ்த்துவர். இதனை விரை முகூர்த்தம் என்று அவர்கள் அழைப்பர். திருமணத்திற்கு முகூர்த்தக் கால் ஊன்றுவதைப்போல இச் சடங்கினை நிகழ்த்துவர். இச் சடங்கினைச் செய்யும்பொழுது பாடல்கள் பாடுவதுண்டு. இதனைப்போன்று விதை விதைக்கும்பொழுது மேலை நாட்டிலும் பாடுவதாகத் தெரிகின்றது.[1]

இனி, சடங்குகள் போலன்றி ஆண்டிற்கு ஒரு முறையல்லாமல் பல ஆண்டுகள் இடைவெளிவிட்டு நடைபெறும் சில நிகழ்ச்சிகள் உண்டு. அந் நிகழ்ச்சிகள் வரும்பொழுது பாடல்கள் பாடப்படுவதும் உண்டு. மழை பெய்யாவிட்டால் மக்கள் நடத்தும் மழைக்கஞ்சி காய்ச்சுதல், கொடும்பாவி கட்டி எரித்தல் போன்றவை அப்படி நிகழ்வனவாகும்.

மழைக்கஞ்சி காய்ச்சுதல்: மழைக்கஞ்சி காய்ச்சுதல் நாடகம்போல சுவை உள்ளதாக இருக்கும். அக் கஞ்சி காய்ச்சும் சடங்கினை ஊரில்

---

1. Ritual songs were customary during the scattering of the seed. Again the idea of Fertility was uppermost to man's mind, and the songs were meant to stimulate the growth of the new vegetation.

The science of Folk lore—167

உள்ள பெண்கள் எல்லாம் வீட்டுக்கு வீடு சென்று அவ் வீடுகளில் கொடுக்கும் பலவகைத் தானியங்களை எல்லாம் கொண்டுவந்து ஊர்ப் பொது இடத்தில் ஒரு பெரிய பாத்திரத்தில் போட்டு உப்பில்லாமல் கஞ்சி காய்ச்சுவார்கள். பிறகு அனைவரும் அதனைக் குடித்த வுடன் பெண்கள் தங்கள் குழந்தைகளுடன் பரதேசம் போவதாகக் கிளம்புவர். அவ்வேளையில் தாம் படும் துன்பங்களைப் பாட்டாக வெளிப்படுத்துவார்கள். மழைத் தெய்வம் வருணதேவனை வேண்டுவதாக வணங்கு கின்ற அப் பாடல் இரும்பையும் இளக வைக்கும்; கல்லினையும் கனிய வைக்கும்.

"மானத்தை நம்பியல்லோ
ஐயோ வருண தேவா!
மக்களையும் பெத்துவிட்டோம்
ஐயோ வருண தேவா!
மானஞ் செழிக்க வில்லை
ஐயோ வருண தேவா!
மக்கள் வயிறு வாடுறதே
ஐயோ வருண தேவா!"[1]

"கலியாண வாசலிலே கையலம்பத் தண்ணியில்லை
பிள்ளை பெத்த வாசலிலே பிள்ளையலம்பத் தண்ணியில்லை"

என்று பாடுவார்கள். தண்ணீரில்லாக் கொடுமையைப் பாடல் வருணிப்பதுபோலத் தமிழிலக்கியங்களில் பாலை நிலத்தில் தண்ணீரில்லாக் கொடுமையைக் கலிங்கத்துப் பரணியில் காடு பாடியது பகுதியில் பரக்கக் காணலாம்.

---

1. *காற்றில் வந்த கவிதை - பக். 21.*

கொடும்பாவி எரித்தல்: கொடும்பாவிகள் நாட்டில் இருத்தலால் மழை பெய்யவில்லை என்று கருதுகின்ற மக்கள் அப் பாவிகளை அழித்துவிட்டால் மழை பெய்யுமென்று அச் செய்கையில் ஈடுபடுகின்றனர்.

கொடும்பாவியின் உருவினை வைக்கோலால் மனிதனைப்போலப் பெரிய உருவில் செய்வர். அப்படிச் செய்த உருவினைத் தரையில் இழுத்துச் செல்லுவர். இக் கொடும்பாவியின் உருவினை இழுத்துச் செல்லும் பொழுது பாடல் பாடுவர் ; ஒரு பாடல் :

"கோடை மழை பெய்யவேணும் குடிமக்கள் வாழவேணும்
மாசிமழை பெய்யவேணும் மரங்கள் தழையவேணும்
கொடும்பாவி சாகவேணும் கொள்ளைமழை பெய்யவேணும்
மாபாவி சாகவேணும் மாயமழை பெய்யவேணும்"[1]

பாடலில் வறுமை, துன்பம் முதலியன நன்கு காட்டப்பட்டிருக்கின்றன. இச் செய்கையால் மழை பெய்யுமென்றும் நம்புவார்கள்.

இதுவரை நாம் மேலே கண்ட கோயில் தொடர்புடைய பாடல்களும் குடும்பத் தொடர்புடைய பாடல்களும் நமக்கு எண்ணிறந்த அளவில் கிடைக்கவில்லை. கிடைத்த அளவைக் கொண்டு ஆராய்கின்றபொழுது நாட்டுப்புற மக்கள் எல்லா நிகழ்ச்சிகளிலும் பாட்டுகளைப் பாடி மகிழ்ந்திருக்கின்றார்கள் என உணர முடிகின்றது. அப் பாட்டுகளைப் பாடுகின்றபோது பாடுகின்றவர்கள் இசைக்கலையோடு நாடகக்கலையிலும், ஒப்பனைக்கலையிலும் வன்மை பெற்றவர்

1. *காற்றில் வந்த கவிதை. - பக். 27.*

களாகவும் இருந்திருக்கிறார்கள் என்றும் அறிய முடிகின்றது. அம் மக்கள் இந் நாட்டில் பழம்பெரும் காப்பியங்களான இராமாயணம், பாரதம் போன்றவற்றை அறிந்தவர்களாகவும், தெய்வ உணர்ச்சி நிரம்பிய வர்களாகவும் இருந்திருக்கின்றார்கள் என்பதனைப் பாடல்கள் காட்டுகின்றன. இவ்வகைப் பாடல்கள், பாடல்களைப் பாடும் சமுதாயத்தின் பழக்கவழக்கங்களைக் காட்டும் கண்ணாடிகளாக விளங்குகின்றன.

உணர்ச்சிப் பாடல்கள்

எல்லா நாட்டிலும் எல்லாக் காலங்களிலும் சில உணர்ச்சிகள் எல்லா மாந்தருக்கும் மாறாமல் இருந்து வரும். இவ் வுணர்ச்சிகள் விலங்கிடமிருந்து மனிதர்களைப் பிரித்துக் காட்டும் தன்மையன. மனிதமனம் இத்தகைய உணர்ச்சிகளைத் தன்னகத்தே இயற்கையிலேயே பெற்றிருக்கின்றது. அப்படி மனிதன் பெற்றிருக்கும் உணர்ச்சிகள் அனைத்தும் ஒரே குணமுடையன அல்ல. வீரம், காதல், இரக்கம், கொலை, கொள்ளை முதலியவற்றில் பல விதமான உணர்ச்சிகள் தோன்றி மறையும். இவ் வகையில் தோன்றும் உணர்ச்சிகளால் ஆக்கமும் உண்டு. அழிவும் உண்டு. இங்கே காணப்படும் பல்வகை உணர்ச்சிகளில் கொலை, கொள்ளை இவை வெறுக்கத்தக்க உணர்ச்சிகளாம். கூட்டுறவு உணர்ச்சியாம் காதலும் அக் கூட்டுறவிலிருந்து அறவே பிரிந்து இறந்துபோக ஏற்படும் துன்ப உணர்ச்சியும் உணர்ச்சிகளில் உயர்ந்தவையாகக் கருதப்படுகின்றன.

வாழ்க்கை இன்பமும் துன்பமும் கலந்தது என்றால் காதலினும் இறப்பினும் இவ்விரண்டு உணர்ச்சிகளையும் காணலாம். இவ்விரண்டுணர்ச்சிகளுமே எல்லாக் காலத்திலும் எல்லா மாந்தருக்கும் பொதுவாக அமைந்திருப்பதாகக் கூறுகின்றார்கள்.[1]

இவ்விரண்டு உணர்ச்சிகளையும் ஆதாரமாக வைத்து இவ்வுணர்ச்சிப் பாடல்கள் இக் கட்டுரையில் ஆராயப்படுகின்றன. 'இன்பம்' என்ற உணர்ச்சிக்கு காதல் பாட்டுகளையும் துன்பம் என்ற உணர்ச்சிக்கு ஒப்பாரிப் பாட்டுகளையும் எடுத்துக்காட்டுகளாகக் காட்டி இவ்விரு பாடல்களிலும் இவ்விரு உணர்ச்சிகளும் நிறைந்திருப்பதைப் பார்க்கலாம். காதலிக்காத நேரமில்லை, இடமில்லை, நாடில்லை, உலகில்லை. இறப்பில்லாத நிமிடமில்லை. எனவே, ஒவ்வொரு விநாடியிலும் இவ்விரு உணர்ச்சிகளும் உலகில் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

காதலுணர்ச்சி : சமுதாயக் கூட்டுறவு இவ்வுண்மையாலேயே பெருகி வருகின்றது. குறிப்பிட்ட பருவம் முடிந்தவுடன் அரும்பும் இவ் வுணர்ச்சிக்குக் கட்டுப்படாதவர்களே இல்லை. பக்குவம் அடைந்த இரு உள்ளங்கள் சேரவேண்டும் என்ற வேட்கையால் மலர்ந்து மணம் வீசும் இவ்வுணர்ச்சி எல்லா மனங்களுக்கும் பொதுவானது. இந்த உணர்ச்சி அனைவர் மனத்திலும் பிறந்த பொழுது, உடன் விதைக்கப்பட்டுப் பருவம் அடைந்த பொழுது மலர்ந்து மணம் வீசுகின்றது. இவ் வுணர்ச்சிக்குச் சில தனித் தன்மைகள் உண்டு. தனக்கு வேண்டிய ஒளியைக் கண்டபொழுது மலரும்.

1. இலக்கியத்திறன்—பக். 68.

கிடைக்காத போழ்து வருந்தும். ஒளி இயற்கையாகப் பிரிந்தபொழுது வாடும். இம் மலருணர்ச்சி அனைவருக்கும் அமைந்திருந்தாலும் இயற்கையாக மலர்ந்து மணம் வீசுவதில்லை. சமூகம் பெற்றோர், உற்றோர் 'இவர்களுக்காகப் பயந்து எழும்பாமலே போய்விடும். எழும்ப நினைத்த சில நேரங்களில் அடங்கியும் போகும். சிலருக்கே இவ் வுணர்ச்சி வெளித்தோன்றும். அப்பொழுது அதனைப் பல வகைகளில் வெளிப்படுத்துவர். அப்படிப் பல வகைகளில் வெளிப்படுத்துவதில் பாட்டும் ஒரு முறை.

இறப்புணர்ச்சி: மனத்திற்கு வன்மையினையும், மகிழ்வினையும், இன்பத்தினையும் தந்த ஒன்று மறைந்த பொழுது வெளிப்படும் இந்தத் துன்ப உணர்ச்சி மனித சமுதாயத்தின் உயர்ந்த பண்பினைக் காட்டுவதாகும். •இவ் வுணர்ச்சி ஒரு சாவின் பொழுது வெளிப்படுத்தப் படுகின்றது. இன்ப உணர்வு அரும்பாமல் போனாலும் போகலாம். ஆனால், ஓர் இறப்பால் யாருக்கும் உணர்ச்சி எழாமல் போகாது. ஓர் இறப்பின் பொழுது இரக்கத்தையும் இளகிய நெஞ்சத்தையும் தன்னகத்தே பெற்ற அங்கே குழுமியுள்ள பெண்கள் தங்களுக்கு அவ்விறப்பால் ஏற்பட்ட துன்பத்தினை வெளிப்படுத்தும்பொழுது 'பாட்டு வடிவில்' வெளிப்படுத்துவர்.

காதற் பாட்டுகள்: ஒத்த மனம், ஒத்த வயது அற்ற பருவத்தில் காதல் உணர்ச்சி தோன்றின் அதனைக் 'கைக்கிளை' என்றும், முதிய வயதில் ஏற்படும் காதல் உணர்ச்சியினைப் பெருந்திணை என்றும், ஒத்த வயதில் ஏற்படும் உணர்ச்சியினை 'அன்பினைந்திணை' என்றும் நம் இலக்கிய ஆசிரியர்கள் வகுத்துள்ளனர். இவ் வைந்திணையில் ஏற்

படும் போராட்ட உணர்வுகளை நம்முடைய இலக்கியங்கள் நன்கு காட்டுகின்றன. நிலத்தை ஐவகையாகப் பிரித்து ஐவகை ஒழுக்கங்களை ஏற்படுத்திப் பாட்டினை நம பண்டைப் புலவர்கள் இயற்றியிருக்கின்றனர். ஐவகை நிலத்தையும்அடிப்படையாக வைத்துஎழுப்பியகவிதைகள் கற்றுத் துறைபோகிய பாவாணர்களால் எழுப்பப் படுவதால் அதில் இலக்கியச் செறிவு நிறைந்துள்ளது. ஐவகை நிலத்தில் குறிஞ்சி நிலக் கவிதைகளைத் தவிர மற்றைய வெல்லாம் பெரும்பாலும் ஏக்கவுணர்வினையும் இரக்க உணர்வினையும் அடிப்படையாகக் கொண்டவை யாகவே அமைந்து கிடக்கின்றன: ஐந் நிலத்திலும் வாழ்ந்த பெண்களுக்காக ஆண்பாற் புலவர்கள் பாடிய பாடல்களே, நம் பண்டைத் தமிழ்க் கவிதைக் களஞ்சியங் களில் அதிகமாகும். கவிஞர்கள் ஒரு நிலத் தலைவியைக் கற்பனை செய்து, அந் நிலத்திற்குத் தகுந்த ஒழுக்கத் தினைப் பாடலில் வழுவாமல் நிலை நிறுத்திக் கவிதைகளை இயற்றுவதைக் கலையாகக் கொண்டிருக்கின்றனர்.

நாட்டுப்புறப் பாடல்களில் காதற் பாட்டுகள் இலக்கி யக் காதற் பாட்டுகளோடு எவ்வகையில் ஒத்து இருக் கின்றன என்பதனை அறிவது சுவையான இலக்கிய ஒப்பீடாகும்.

தமிழ் மக்களுடைய காதலுக்கு மட்டுமன்றி உலகில் எந்த மூலையில் யாரிடத்தில் காதல் நடைபெறினும் அக் காதல் வளர்ச்சியில் சில நிலைகள் உண்டு. அவை ஆண் பெண் சந்திப்பு, நலம் பாராட்டல்,, ஊரார் காணல், தாய் தந்தையர் எதிர்ப்பு, அச்சந்திப்பிற்குத் தடை, தடைகளைக், கண்டு காதலர்கள் காதலை உறுதிப்படுத்திக் கொள்ளல்.

பிறர் அறியாவாறு சந்தித்தல், உடன் போக்கு ஆகிய இவை அனைத்தும் நாட்டு மக்களின் காதல் நிகழ்ச்சிகளில் காணப்படுகின்றன. இந்த நிகழ்ச்சிகள் உலகம் தோன்றியதிலிருந்து இன்று வரையிலும் மட்டு மன்றி என்றும் இருக்கும். இந் நிகழ்ச்சிகளை யெல்லாம் வைத்தே உலகக் காதற் காவியங்களும், கவிதைத் துணுக்குகளும், எழுந்திருக்கின்றன. இந் நிகழ்ச்சிகளை அடிப்படையாக வைத்தே நம் தமிழ் இலக்கண ஆசிரியர்கள் நூல் வகுத்துள்ளனர். நாட்டுப் புறப் பாடலில் கீழே காட்டப்படும் பாடல்களோடு நம் இலக்கியப் பாடல் களையும் அடுத்தடுத்து நினைவுக்குக் கொண்டு வருவோமே யானால் நாட்டுப் புறப் பாடல்கள் வெட்டி எடுக்கப்பட்ட வைரமாகவும், இலக்கியங்கள் பட்டை தீட்டப்பட்ட வைர மாகவும் விளங்குவதனை உணரலாம்.

•

காதல் உயிர் இனங்களுக்கு ஒரு பொதுமை உணர் வானதால் அவ்வுணர்வில் பெரும் மாறுதல் இருக்க நியாயமில்லை. அக் காதலைத் தம் கற்பனைக் கண்களால் கண்டு இலக்கியங்கள் ஆக்கும் பெரும்புலவர்களைப் போல நாட்டுப்புறப் பாடல்கள், துறைகளையும், திணைகளையும் பெற்று இருக்க வழியுமில்லை. அகத்துறைகளில் சில வற்றில்வேறுபட்டுப் பலவற்றில் ஒற்றுமையுடையவாகவும் இலக்கியங்களில் காணப்படும் தோழி கூற்று, பாங்கன் கூற்று, சந்துசெய்விக்கும்வாயில்கள் முதலியன நாட்டுப் புறப் பாடலில் பெரும்பாலும் காண முடியாதனவாகவும் உள்ளன. தலைவனும் தலைவியும் நேராகவே பேசிக் கொண்டு தங்கள் காதலை வளர்த்துக் கொள்கின்றனர். நல்லதையும் கெட்டதையும் நேருக்கு நேர் எடுத்துச் சொல்லித் தங்கள் விருப்பு வெறுப்புகளை ஒருவர்க்

கொருவர் வெளியிட்டுக் கொள்கின்றனர். இலக்கியங்களில் பேரிடம் பெற்ற தோழியை நாட்டுப்புறப் பாடல்களில் காண முடியாது.

அகப் பொருள்களில் பெரும்பாலும் தலைவி கூற்று அதிகம் வருதல் உண்டு. ஆனால், நாட்டுப்புறப் பாடலில் தலைவன் கூற்றுப் பாடல்களே காணப்படுகின்றன; இலக்கியங்களில் வரும் தலைவர்கள் சோலைகளிலும் தினைப் புனத்திலும் சந்திப்பது போல நாட்டுப் புறக் காதலர்கள், ஆற்றோரம், மாடு மேய்க்கும் இடம், வயல் வரப்புகள், சாலையோரம் முதலிய இடங்களில் சந்திக்கிறார்கள்.

நாட்டுப் புறப் பாடல்களில் களவுக் காலத்தில் காதலுணர்வு பெற்றவரிடை நிகழும் நிகழ்ச்சிகளான, காதலன் காதலி சந்திப்பு, ஒருவரை ஒருவர் வருணித்தல், காலம் வெளிப்படுத்தல், கேலி செய்தல், பிரிவுத் துன்பம், காதலனை வீட்டிற்கு அழைத்தல், காதலன் காவலுக்கு அஞ்சுதல், தலைவி தலைவனுக்கு வழி சொல்லிக் கொடுத்தல், தலைவி உடன் போக்குக்கு முற்படுதல், தாயின் கட்டுப்பாடு, அலர் ஆகிய பல்வேறு கட்டங்களுக்குரிய பாடல்கள் கிடைக்கின்றன.

சந்திப்பு: காதலி எங்கு எந்நேரம் வருவாள் என்பதனைக் காதலன் சந்திக்க நன்கு அறிந்து வைத்திருப்பான். காதலி தண்ணீர் எடுக்க வருகின்றாள். புதுக்குடம் எடுத்து வந்து, தண்ணீர் மேல் கிடக்கும் பூக்களை ஒதுக்கித் தண்ணீர் எடுக்கிறாள். தண்ணீரை எடுத்துக் கொண்டு வீடு திரும்பும், அவளைக் காதலன் கரையோரம் இருந்து அவள் எடுத்துச் செல்லும்

தண்ணீர்க் குடத்தினுள்ளே தன் மனம் ததும்புகிறது என்று பாடுகின்றான். குளத்திற்கு அருகில் இருந்தாலும் அவளிடம் தண்ணீர் கேட்கின்றான்.

''பூவலேக் கிண்டிப்
புதுக் குடத்தைக் கிட்டவைச்சி
ஆரம் விழுந்த கிளி
அள்ளுது தா நல்ல தண்ணி!
தண்ணிக் குடமெடுத்து
தனி வழியே போற பெண்ணே!
தண்ணிக் குடத்தினுள்ளே
தளும்பு தடி என் மனசு!
சட்டை போட்டு மார்பிறுக்கி
தண்ணீர் சுமக்கும் மச்சி—உன்
சட்டை போட்ட கையாலே கொஞ்சம்
தண்ணி தந்தா லாகாதோ'' [1]

காதல் இவ்வாறு தான் அவர்களிடம் பரிகாசத் துடன் வளரும்.

வருணனை: காதலன் காதலியை வருணிக்கும் சில பாடல்கள்,

''நடையழகி நளினச்
சித்திர வாயழகி
இடையழகி கதிஜா—ஒரு
இன்ப முத்தந்தா கிளியே!

வாழைப்பழமே என்ற
வலது கையில் சக்கரையே!
ஏலங் கிராம்பே உன்னை
என்ன சொல்லிக் கூப்பிடட்டும்?

தங்கத் தகடே—என்ற
தகதகத்த பொன் தகடே
வெள்ளித் தகடே—உன்னை
விலைமதிக்கக் கூடுதில்லை.

---

1. மட்டக் களப்பு நாட்டுப் பாடல் - பக். 19.

நாவல் பழமே அடி—குட்டி
நான் பூசும் சந்தனமே
ஏலம் கிராம்பே குட்டி—உன்னை
என்ன சொல்லிக் கூப்பிடட்டும்.[1]

ஒட்ட ஒட்டப் பூவே நீ
ஒசக்க இருக்கும் தாழம் பூவே
கண்ணு வலிப் பூவே உனைக்
கண்டு வெகு நாளு மாச்சே.[2]

காதலியை வருணிக்கும் இப் பாடல்களில் காதலன் கண்ட அன்றாடம் பழகும் பொருள்கள் அவளுக்கு ஒப்பாகச் சொல்லப் பட்டு வந்திருக்கின்றன.

சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகியை வருணிக்கும் பொழுது "மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!" என்றெல்லாம் வருணிக்கின்றான்; இக் காதலன் தன் காதலியை பாலைப்பழம், வாழைப்பழம், நாவல்பழம், மாம்பழம், கொக்கு, சந்தனம், ஈச்சங் குருத்து இவற்றோடு வைத்து அழகு பார்க்கின்றான் தலைவியின் வருணனை தலைவன் மீது எவ்வகையில் அமைந்திருக்கும்! சில பாடல்கள்,

"மச்சானே மாம்பழமே!
மாமி பெற்ற பாலகனே!
ஏலங் கிராம்பே—உன்னை
என்ன சொல்லிக் கூப்பிடட்டும்?
பேரீச்சம் பழமே என்ற
பெரிய இடத்துப் பெட்டகமே!
சீறடுக்குச் செப்பே—உன்ற
சொல்லையுமே நம்பியிருந்தேன்.[3]

---

1. மலையருவி - பக். 16.
2. ஏட்டில் எழுதாக் கவிதைகள் - பக். 102-3.
3. மட்டக் களப்பு நாட்டுப் பாடல்கள் - பக். 60-61

இருவரின் வருணனைகளில் எளிமை உண்டு. அவர்கள் கண்ணில் பட்ட பொருள்கள் அல்லது செவி வழிக் கேட்ட பொருள்கள் அவர்களுக்கு உயர் பொருளாகத் தோன்ற அவற்றைச் சொல்லி மகிழ் கின்றனர்.

தலைவன் முனைப்பு: தலைவன் காதலில் துடிப்பும் முனைப்பும் உடையவன் என்பதனைச் சில பாடல்கள் காட்டுகின்றன. காதலி நடந்து போன தடம் பார்த்துப் பாடுகின்றான். அவள் நடந்து போன அறிகுறிகளாகப் புற்கள் மிதிபட்டிருக்கின்றன. அவள் காலில் அணிந் திருந்த தண்டை அவள் கால் வைத்த இடத்தில் பதிந் திருக்கின்றது; இவற்றைக் கண்டு கொண்ட தலைவன் பாடுகின்றான்:

"புல்லுச் சவண்டிருக்கு
போன தடம் தானிருக்கு
தண்டை பதிந்திருக்கு
தங்க வண்டார் போன தெங்கோ?[1]

மலையடி யோரத்திலே
மான் வேட்டை யாடையிலே
கண்டனடி உன் தடத்தை
கள்ளியம் பூச் சாரலிலே.

அள்ளட்டா முள்ளட்டா
அடிமடியில் கட்டட்டா
குச்சிக் கட்டிக் காக்கட்டா
குணமயிலே உன் தடத்தை"[2]

மண்ணில் குதிகாலின் தடத்தோடு தண்டையின் தடமும் பதிந்திருக்கின்றது. அவளின் காலடிச் சுவட்

1. மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள் - பக். 19.
2. தமிழ்நாட்டுப் பாமரர் பாடல் - பக். 19.

டிலே இவ்வாறு ஈடுபாடு கொள்ளும் அவன் அவளிடத்தில் இவ்வாறு மயக்க முடையவனாக இருப்பான் என்பதனைச் சொல்லாமல் உணரலாம்.

கனவு : கனவில் கண்ட காதலியைக் காதலன் எண்ணிக் கவிதை வடிவில் வெளியிடுகிறான்.

"வட்டமுகமும் வடிவில்
உயர் மூக்கும்
கட்டு உடலும் என்னைக்
கனவிலும் வாட்டு துகா. [1]

குறுக்கால் பிளந்த
கோவப் பழமொன்றை
நறுக்கென்று கடித்து உண்ண
நான் கனவு கண்டேனே.

இத்துடன் மட்டும் தலைவன் நின்றிடாமல் தலைவிக்காகத் தான் ஏங்கியதை எல்லாம் எடுத்துக் கூறுகின்றான். அவளுக்காக நெடுநேரம் காத்திருந்ததாகவும், அவள் வீட்டுக் கதவு அதற்குச் சாட்சி சொல்லும் என்றும் கூறுகின்றான்.

"விடியா விடியளவும்
விடிஞ்ச நேரமட்டும்
காத்திருந்து போனேனென்று-அந்தக்
கதவு நிலை சாட்சி சொல்லும் [2]

தலைவனின் மீது அன்பு ஆழமாக வேரோட அவளும் காதலனை வீட்டிற்கு வரச் சொல்லிப் பலவழி

1. ஈழத்து நாடோடிப் பாடல்கள் - பக். 79.
2. மட்டக் களப்பு நாட்டுப் பாடல்கள் - பக். 33.

களைச் சொல்லிக் கொடுக்கிறாள். அவள் சொல்லிக் கொடுக்கும் வழிகள் அவளிடம் இதுவரை மறைந்து கிடந்த காதலைப் புலப்படுத்துவதாக இருக்கின்றது.

"சாம மறிஞ்சு
தலை வாசலிலே வந்து நின்று
கோழி போல் கூவு ராசா—உன்ர
குரல் மதித்து வந்திடுவேன்
கடப் பாலில் வந்து நின்று
காளை கனைக்கு மென்றால்
எங்கிருந்த போதும் நாகு
எழுந்துவர மாட்டாதோ?
வேலியிலே வந்து நின்று
வேற்றுக் குரலெழுப்பி
வீதியிலே போற மாட்டை
விறசிடுகா நான் வருவேன்"[1]

தலைவி கூறும் குறிகள் நமக்கு இலக்கியங்களில் தலைவி, தோழி சொல்லும் பகற்குறிகளை நினைவூட்டு கின்றன.

இவ்வாறு வீட்டுக்கு வெளியில் அவன் வந்ததை அறிவிப்பதற்கு உரிய சில வழிகளைத் தலைவனிடத்தில் சொல்லுகின்றாள். மேலும் இதனினும் ஒருபடி மேலாகத் தலைவன் தன் வீட்டினுள் வருவதற்கும் தலைவி வழி சொல்லுவதாக அமைந்த ஓர் அழகிய பாடலும் உண்டு.

"பாக்கைத் தாள் அடக்கி
வெற்றிலை கைபிடித்து
சுண்ணும்பு இல்லைன்னு
சூதாடி வாடா!"[2]

1. மட்டக்களப்பு நாட்டுப் பாடல் - பக். 22.
2. வட ஆர்க்காடு மாவட்டம் - பக். 109.

இவ்வாறு தலைவன் வந்து சுண்ணும்பு கேட்டால் அவனுக்குச் சுண்ணும்பு கொடுப்பவள் போலத் தலைவி அவனிடத்தில் செல்ல எண்ணினுள் என்று கருதலாம். இப் பாடலோடு கலித்தொகைப் பாடலை ஒப்பிட்டுப் பார்த்து மகிழலாம்.

நாட்டுப்புறப் பாடலில் தலைவி தலைவனுக்கு வீட்டிற்கு வர வழி சொல்லிக் கொடுக்கின்ருள். குறிஞ்சிக் கலியில் வரும் தலைவன் தலைவியின் வீட்டிற்குத் தண்ணீர் கேட்டு அவனுகவே தலைவியைக் காண வழி வகுத்து நிற்கின்ருன்.

"..
அன்னையும் யானும் இருந்தேமா இல்லிரே
உண்ணுநீர் வேட்டேன் எனவந்தாற் கன்னை
அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணு நீ ருட்டிவா என்ருளனயானுந்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
டன்ன யிவனெருவன் செய்ததுகா ணென்றேன"[1]

இப் பாடலில் தலைவன் வந்து தண்ணீர் கேட்கத், தலைவி தண்ணீர் கொண்டு போய்க் கொடுக்கத் தலைவன் அவள் கைகளைப் பற்றுகிருன். அவ்வுணர்வால் தலைவி திடுக்கிட்டு அலறத் தாய் ஓடி வருகிருள். பிறகு தலைவி நிலைமையை ஒருவாறு கண்டு தலைவனுக்கு விக்கல் ஏற் பட்டது என்று கூறுகிருள். இரு பாடல்களிலும் காதலன் காதலியைத் தேடி வரப் பாக்கும், தண்ணீரும் உதவுகின்றன.

---

1. குறிஞ்சிக்கலி - 15.

காதலி இப்படி வழி சொல்லிக் கொடுத்தாலும் அவள் வீட்டில் யாராவது இருப்பார்கள் என்ற அச்சம் காதலனுக்கு இருந்துகொண்டே இருக்கும். காதலியிடம் அதனைக் கேட்டு விடுகின்றான்.

''தெருவாலே போக வொண்ணு
தேன் போல மணக்கிறது.
உறவாட நான் வருவேன்—உன்ர
அண்ணன் மார் காவலாமே!

வேப்ப மரத்தில்
வெற்றிலையாற் கூடுகட்டி
தங்க வருவேன்—உன்ர
தம்பி மாரும் காவலாமே!'' [1]

இப் பாடல்கள் தலைவி இற்செறிக்கப்பட்டாள் என்பதனைக் காட்டுகின்றன. காதலியின் அண்ணன் தம்பிமார் காவலைக் கண்டு காதலன் பயப்படுகின்றான். ஆனால், காதலி அவனைத் தேற்றித் தைரியப்படுத்துகின்றாள்.

''காவல் அரணோ?
கள்ளனுக்கு முள் அரணோ?
வேலி அரணோ?
வேணு மென்ற கள்ளனுக்கு?'' [2]

திருடனுக்கு முள் காவலாக அமைய முடியுமா? முள்ளை அரணாகக் கொண்டால் திருடன் திருடவும் முடியுமோ? உடைமைப் பொருள் வேணும் என்ற கள்ளனுக்கு வேலி (அண்ணன் தம்பி) ஒரு காவலா?

---

1. மட்டக் களப்பு நாட்டுப் பாடல்கள் - பக். 38.
2. காதல் வாழ்வு - பக். 22.

உடன் பிறந்தவர்களை முள்ளாகவும் வேலியாகவும் கூறி அவற்றைப் பொருட் படுத்த வேண்டாம் என்கின்றாள் தலைவி.

அகப்பொருள் இலக்கணத்தில் இத்தகைய நிகழ்ச்சிகளைக் "களவொழுக்கம்" என்று சொல்வதற்கேற்ப இங்கே தலைவனைக் கள்ளன் என்று குறிப்பிட்டிருப்பது நினைக்கத்தக்கது. தலைவன் வந்து போகும் பொழுது இரவுக் குறியீடாகச் சிலவற்றைப் பார்த்துப் பாடுகின்றாள் தலைவி.

"கத்தாதே காகம்
கரையாதே புன்காகம்
எத்தாதே காகம்நான்
எறிஞ்சிடுவேன் கல்லாலே."

கடலே இரையாதே
கற்கிணறே பொங்காதே
நிலவே எறியாதே—என்ர
நீலவண்டார் வருமளவும்."[1]

காகம், கடல், கிணறு இவை இயற்கையாக எழுப்பும் ஒலிகள் தன் காதலனைக் காட்டிக் கொடுத்து விடுமோ என்று அஞ்சி அவையெல்லாம் ஒலிகள் எழுப்பக் கூடாது என்று வேண்டுகின்றாள். தன் காதலனின் உருவத்தைப் பிறர் கண்டு விடுவார்களே என்று 'நிலவே ஒளி வீச வேண்டாம்' என்று இறைஞ்சுகின்றாள்.

அலர் : இலக்கியங்களில் அலர்கண்டு வருந்தும் தலைவி நொந்து சொல்லும் பாடல்கள் போல் நாட்டுப் புறப் பாடல்களிலும் உண்டு. தலைவன் மேல் கொண்ட

1. மட்டக் களப்பு நாட்டுப் பாடல் பக். - 56.

தொடர்பால் ஊரில் எழுந்த அலருக்கு மிகவும் பயப் படுபவள் தலைவியே யாவாள். ஊரில் அவள் அவனுடன் கொண்ட தொடர்பால் ஏற்பட்ட அலரினைச் சங்கத் தலைவி யைப் போலவே அவனுக்கு எடுத்துச் சொல்கின்றாள் :

"ஆல மரம்உறங்க
அடிமரத்துக் கிளி உறங்க
உன்மடிமேல் நான்உறங்க
உலகம் பொறுக்கலையே [1]

வாழைப் பழத்தை
வாங்கிவந்தேன் தின்பமென்று
ஊரிலொரு தூறமும்ப—மச்சான்
உட்டெறிஞ்சேன் குப்பையிலே" [2]

திருமண மாகாத அவள் அவன் மடியில் உறங்குவதைக் கண்டு ஊரில் பலவாறாகப் பேசுகின்றார்கள் என்றும் அவள் கடையில் விலை கொடுத்து வாங்கி வந்து தின்ற வாழைப் பழத்தை அவள் காதலன் வாங்கிக் கொடுத்த தாக ஊரில் பேசிக் கொள்வதால் அதனால் அந்த வாழைப் பழத்தைத் தின்னாமல் கூட, குப்பையில் விட் டெறிந்து விட்டதாகவும் கோபமில்லாமல் சாந்தமாகவும் நாகரிகமாகவும் அலரினை எடுத்துச் சொல்லுகின்றாள்.

உறுதி சொல்லல் : அலரைக் கண்டு வருந்தும் தலைவிக்குத் தலைவன் அவளை விட்டுப் பிரிந்து விட மாட்டேன் என்ற உறுதியினைத் தருவதுண்டு. துன் பத்தில் வருந்தும் தலைவிக்குத் தலைவன் தரும் உறுதி மொழி கவலை நோயைப் போக்கும் இனிய மருந்தாகும். காதலன் காதலியை உண்மையாகத் திருமணம் செய்து

1. மலையருவி - பக். 21.
2. மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள் - பக். 55.

கொள்வேன் என்றும், பரிசப் பணம் கொண்டு வருகின் றேன் என்றும் உறுதி மொழி கொடுப்பதுண்டு. இலக்கி யங்களில் காணப்படும் தலைதொட்டுச் சொல்லல், வரை விடை வைத்துப் பிரிதல் போன்றதாகும் நாட்டுப் புறப் பாடலில் கீழ்க் காணும் பாடல்கள் :

"கான மயிலே உன்னைக்—குட்டி
கைவிடுவ தில்லை யென்று
மீனாட்சி கோயிலிலே—குட்டி
வேட்டி போட்டுத் தாண்டித் தாரேன் [1]

கொள்ளை ஆசை உனக்குண்டு
கொண்டு வாரேன் பரிசப் பணம்.
உன் தந்தை தட்டினாலும்
ஒருசொல்லில் முடித்துவிடு,

காதலாலே வேகுறேனே
கண்ணான பெண்மயிலே
காலங் கடத்துவேனோ
காத்திருந்தும் பார்ப்பேனோ" [2]

ஆண்டவன் முன்னிலையில் வேட்டி போட்டுத் தாண்டுதல் இன்றும் காணப்படும் ஒரு பழக்கமாகும். தங்கள் உறுதிப்பாட்டை வெளிப்படுத்த இதனைச் செய்வர். காதலில் உள்ள உறுதிப்பாட்டை மீனாட்சி கோயிலில் வேட்டி போட்டுத் தாண்டுவதன் மூலம் அவன் வெளிப் படுத்துகின்றான். பரிசப்பணம் கொண்டு வருவதாக அவன் சொல்லுவதும் இப்போது இருந்து வரும் ஒரு பழக்கமாகும். காலம் கடத்தவில்லை என்று அவன் சொல்லுவது காதலிக்கு அவன் சொல்லும் தேறுதல் ஆகும். காதலி இத்தகைய உறுதிமொழிகளைத் தானே அதிகம் அவனிடம் எதிர் பார்க்கின்றாள்?

1. மலையருவி - பக். 12.
2. தமிழ் நாட்டுப் பாமரர் பாடல் - பக். 106.

தாய் இற் செறித்தல்: ஊரில் எழும்பிய அலரும்' மகளின் தோற்ற மாறுபாடும் அறிந்த தாய் அவள்மீது கடுமையாக இருக்க ஆரம்பிப்பாள். தாயும் மகள் பருவத்தில் இருந்தவள் தானே? எனவே மகளிடம் காணப்படும் மாறுதல்களைக் கண்டு அவளை இற் செறித்து வீட்டிலே அடைத்து வைக்க உட்படுகின்ருள். அந்நிகழ்ச்சியைப் பாடல்கள் காட்டுகின்றன:

"கடப்பைக் கடந்து காலெடுத்து
வைத்தி யென்ருல்
இடுப்பை ஒடித்து வேலி இலுப்பையின் கீழ்ப்
போட்டி டுவேன்.

வாசல் கடந்து வழிகண்டு
போனி யென்ருல்
வேசை மகளே உன்னை
வெட்டி டுவேனி ரண்டு துண்டாய்.

வார்த்து முடிந்த கொண்டை
மகிழம் பூக் கமழும் கொண்டை
சீர்குலைந்து வேர்வை சிந்த
செய்த கடும் வேலையென்ன.

பொட்டுக் கரைய பிற நெற்றி நீர்துளிக்க
கட்டுந்துகில் கலைய கழுத்து வடம் புரிபுரள

மார்பு பதைப்ப தென்ன
மலர்க் கண்கள் சிவப் பதென்ன.

சோர்வு கதிப்பதென்ன.
சொல்லிடு காண் என் மகளே''[1]

வேலியை விட்டுத் தாண்டிப் போகக் கூடாது என்ற ஆணை தாயிடம் இருந்து புறப்பட்டு விட்டது. காரணம் மகளின் என்று மில்லாப் புதிய தோற்றம் அவளுக்குச்

1. ஈழத்து நாடோடிப் பாடல்கள். - பக். 39-40.

சந்தேகத்தை எழுப்பியதே யாகும் ; கூந்தல் கலைந்ததும், பொட்டுக் கரைந்திருப்பதும், நெற்றியில் வியர்வை துளிர்த்திருப்பதும், ஆடைகள் கலைந்திருப்பதும், கழுத்து அணிகள் கலைந்திருப்பதும் மார்பு படபடென அடிப்பதும், கண்கள் சிவந்திருப்பதும், உடல் சோர்வாக இருப்பதும் எந்தத் தாய்க்குத்தான் சந்தேகத்தை எழுப்பாது? மகளின் இப் புதிய தோற்றம் அவளுக்கு வீட்டைவிட்டுப் போக முடியாதபடி தடையினை எழுப்பி விடுகின்றது.

உடன் போக்கு: தன் களவு ஒழுக்கம் தாய்க்குத் தெரிந்து விட்டதை அறிந்த தலைவி ஊரின் அலரிலும் தாயின் பார்வையிலுமிருந்து தப்பக் காதலி தலைவனுடன் வீட்டைவிட்டு உடன் போக முற்படுகின்றாள். இருந்த உறவுகளையெல்லாம் உதறிப் புதிய உறவாக ஏற்பட்டதைப் பெரிதாகக் கருதி அவ்வுறவுடன் உடன் போக்கிற்குத் தயாராவாள். பின்கண்ட பாடலில் கருத்தொருமித்த காதலரிருவரும் ஊரைவிட்டு ஓடப் பேசிக் கொள்கின்றார்கள் :

"சந்தைக்குப் போவமடி
சட்டி பானை வாங்குவோமடி
சந்தை கலையுமுன்னே
தப்பிடுவோம் ரெண்டு பேரும்.

நீ கறுப்பு நான் சிவப்பு
ஊருலேயோ ஓமலிப்பு
ஓமலிப்புத் தீரு முன்னே
ஓடிப் போவோம் ரெண்டுபேரும். [1]

1. தமிழ் நாட்டுப் பாமரர் பாடல் - பக். 75.

இவ்வாறு பேசிக் கொண்டு உடன் போக்கிற்கு ஒப்பிப் புறப்பட்ட காதலர்கள் இருவரும் ஒரு காட்டு வழியில் போய்க்கொண்டிருக்கும் பொழுது பின்கண்ட வாறு பாடுகின்றார்கள் :

OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY
21 JAN 1975
GOVT. OF MADRAS, MADRAS-

ஆண் : இருட்டை இருட்டடிக்க
இந்திரனைப் பேயடிக்க
சாம வழிநடக்கச்
சம்மதமோ உன்றனுக்கு [1]

பெண் : இருட்டை இருட்டடிக்க
இந்திரனைப் பேயடிக்க,
சாம வழி நடக்கச்
சம்மதமே எந்தனுக்கு

ஆண் : கையோடு கைகோத்துக்
கானல் வழி நடக்கையிலே
மெய் சோர்ந்து விழுந்த தென்ன ?
மென்குயிலே கண்ணுட்டி

பெண் : கையோடு கைகோத்துக்
கானல் வழி நடக்கையிலே
கண்டேன் உனதழகை
கட்டழகா ! சோர்ந்துவிட்டேன் [2]

சந்தைக்குப் போவதனைச் சாக்காக வைத்து ஊரை விட்டு ஓடிவிட்ட காதலர்கள் காட்டு வழியில் இருட்டையும் கண்டு பயப்படாமல் ஒருவரோடொருவர் கைகோத்துப் பாடிக்கொண்டு போவதனை மேற்கண்ட பாடல்கள் உணர்த்துகின்றன.

இவ்வாறு காதல் உணர்ச்சியைப் பெற்ற இரு உள்ளங்கள் அவர்கட்கு இன்பமான நீண்ட உலகில்

---

1. காதல் வாழ்வு - பக். 60
2. ஏட்டில் எழுதாக் கவிதைகள் - பக். 108.

பெரும் நடைப் பயணத்தைத் துவக்கி விட்டார்கள். அவர்களின் காதல் தூய்மையானது. காதலைப் பெரிதாகக் கருதி ஈன்ற தாயைக் கதற அடித்துப் புது வாழ்க்கைப் பாதையில் மெல்ல நடைபோட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கண்டோரை வினவுதல்: மகளைப் பிரிந்த தாய் பெற்ற பாசத்தினால் அழுகின்றாள். பிரிந்த இருவரில் ஒருத்திக்குக் காதல் உணர்ச்சி; மற்றொருத்திக்குப் பாச உணர்ச்சி. பாச உணர்ச்சி காதலுணர்ச்சியைத் தேடி அலைகின்றது. இலக்கியத்தில் வரும் தாய் கண்டோரைப் பார்த்துப் புலம்புவதைப் போல் இருக்கின்றது இப் பாடல்:

"சிட்டுப் போல் நடையழகி
சிறு குருவித்தலை யழகி
பட்டுப் போல் மேனியாளைப்
பாதையிலே பார்த்தீங்களோ?

கோரை மயிரழகி
குருவிந்தப் பொட்டழகி
பவளம் போல்வாயழகி
பாதையிலே பார்த்தீங்களோ?

பட்டம் போல் நெற்றி
பவளம் போல் வாயழகி
முத்துப் போல் பல்லழகி
முன் போகக் கண்டீரோ?

வாகை மர மேறி
வடக்கே தெற்கே பார்க்கும் போது
தோகை மயில் போல
தோகையளைக் கண்டீரோ."[1]

---

1. ஏட்டில் எழுதாக் கவிதைகள் - பக். 58.

பாச உணர்ச்சி மகளின் அங்க அடையாளங்களைச் சொல்லி அழுகின்றது. காதலுணர்ச்சி சிரித்துக் கொண்டே காதலனுடன் போய்க்கொண்டிருக்கின்றது. இப் பாடலுடன் பாலைக்கலியில் தலைவனுடன் உடன் போகிவிட்ட தன் மகளை நினைத்துப் புலம்பி அழும் தாயின் பாடலையும் ஒப்பிட்டுப் பார்த்து மகிழலாம்.

"......அந்தணீர் !
வெவ்விடைச் செலன் மாலை யொழுக்கத் தீரிவ் விடை
என்மக ளொருத்தியும் பிறண் மக னொருவனுந்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சிய
ரன்னா ரிருவரைக் காணிரோ பெரும" [1]

....

என்று உடன் போய தலைவியின் பின் சென்ற செவிலி இடைச் சுரத்து.

முக்கோற் பகவரைக்கண்டு இவ்வகைப் பட்டாரை ஆண்டுக் கண்டீரோ வென வினவுகின்றாள். நாட்டுப் புறப் பாடலில் மகளைப் பிரிந்த தாய்க்கு ஏற்பட்ட உணர்ச் சிக்கும் பாலைக் கலியில் வரும் தாயின் உணர்ச்சிக்கும் வேறுபாடு மொழியில் இருக்கலாமே தவிர உள்ளத் திலும் உணர்ச்சியிலும் வேறுபாடு இல்லை எனலாம்.

கற்புப் பாடல்கள்

இதுவரை நாம் மேலே கண்ட களவுத்துறையின் பாற்பட்ட பாடல்களைப் போலக் கற்பு நெறியில் அடக்கத்

1 பாலைக்கலி - 9.

தரும் பாடல்களும் உண்டு. தலைவனை விட்டுப் பிரிந் திருக்கும் தலைவி குறித்த காலத்தில் அவன் வரவில்லை யென்றால் பருவம் கண்டு நொந்து பாடுதலும், தூது விட்டுத் தன் நிலை சொல்லச் சொல்லுதலும் உண்டு. அவ்வாறு கற்பு வாழ்க்கையில் ஈடுபட்ட தலைவி ஒருத்தி தன் தலைவன் வராமையால் காக்கையினையும், சேவலையும் தூதுவிட்டுப் பாடும் பாடல்களைக் காண முடிகின்றது :

"ஆதங்காக்கா ஆதங் காக்கா
அவரக் கண்டாற் சொல்லிடுங்கோ
பூவரசங் கன்னி யொன்று
பூ மலர்ந்து வாடு தென்று

கூரையிலே நின்று
கூவுகின்ற சேவலரே
நான் தனியே யிருக்கே னென்று
நாவெடுத்துச் சொல்லிடுங்கோ"[1]

இத் தலைவி நமக்குச் சங்ககாலத்தில் தூது விட்டுத் தலைவன் வருகைக்காகக் காத்திருந்த தலைவியை நினைப் பூட்டுகின்றாள்.

தலைவன் சோளம் விதைக்கையில் அது பயிராகின்ற பொழுது வந்து விடுகின்றேன் என்று கூறிவிட்டுச் செல்லச் சோளம் பயிராகியும் தலைவன் அவ்வாறு வராதது கண்டு தலைவி மனம் வருந்திப் பாடுகின்றாள்.

அப் பாடல் :

"சோளன் விதைக்கக் குள்ளே
சொல்லிற்றுப் போனது போல்
சோளன் பயிராச்சே மச்சான்—நீ
சொன்ன கதை பொய்யாச்சே"[1]

1. ஈழத்து நாட்டுப் பாடல் - பக். 35.

ஒரு புளியமரத்தடியில் திரும்பி வருவேன் என்று அவளிடம் உறுதிமொழி கொடுத்துவிட்டுச் சென்றதை நினைத்துப் பாடுகின்றாள்.

"வாயிருந்தால் இந்தப் புளியமரம்
சொல்லாதோ எந்தன்
துரை சொன்ன உறுதி மொழி"[2]

இவ்வாறு தலைவி வருந்திப் பாடும் பாடல்கள் நம் இலக்கியங்களிலும் உண்டு என்பது நாம் அறிந்ததேயாகும்.

இவ்வாறு நாம் மேலே கண்ட நாட்டுப்புறப் பாடலில் உள்ள காதற் பாட்டுகள் இலங்கியங்களில் நாம் காணும் காதல் துறைப் பாட்டுகளைப் போலவே அத் துறைகளைப் பெற்றுள்ளதாகவும் இருக்கின்றதை உணரலாம். பாவாணர்கள் இலக்கண இலக்கியச் செறிவோடு இலக்கியப் பாடல்களைப் புனைந்திருப்பதால் அக் கவிதைகள் இலக்கிய மதிப்பீட்டைப் பெறுகின்றன. நாட்டுப்புறப் பாடல்கள் அவ்வாறில்லாமல் எளிமையாக இருப்பதால் இரண்டாவது இடத்தைப் பெறுகின்றன. ஆனால், இரு கவிதைகளிலும் அமைந்து கிடக்கும் உணர்ச்சிகள் ஒரே தன்மை வாய்ந்தனவேயாகும். அதனை வெளிப்படுத்தும் முறையிலே வேறுபாடு காணப்படுகிறதே தவிர அடிப்படை உணர்ச்சியில் அஃது இல்லை.

இக் காதற் பாட்டுகளைப் பொறுத்த ஒரு சிறு உண்மையினையும் கூறல் வேண்டும். இப் பாட்டுகளைக்

1. மட்டக்களப்பு நாட்டுப்பாடல் - பக். 95.
2. மலையருவி - பக். 21.

காதலர்கள் மட்டும் பாடுகின்றார்கள் என்பது ஒருபுறமிருப் பினும், இப் பாடல்களை மாடு மேய்க்கும் சிறுவர்கள்' வண்டிக்காரர்கள், தெம்மாங்காகவும் சில நேரங்களில் வய தானவர்கள் வேடிக்கைக் காகவும் பாடுவதுண்டு.

இப்படி இவர்கள் பாடினாலும் இயக்கியங்களில் காணப்படும் அகத்துறையும், உணர்ச்சியும் பாடல்களில் இருப்பதை நாம் மறந்து விடுதற்கில்லை.

ஒப்பாரிப் பாடல்கள்

உயிர்போன வெற்றுல் எரிப்பதற்காகக் கிடக் கின்றது. அவ் வெற்றுடலை நம்சி வாழ்ந்தார்கள், அதனால் வாழ்வு பெற்றவர்கள், உரிமையுடையவர்கள், உயிர்போன அவ்வெற்றுடலைச்சுற்றி நின்று கொண்டிருக் கின்றார்கள். எல்லார் உள்ளங்களிலும் துக்கம் குடி கொண்டிருக்கின்றது. சிலர் கண்ணீரை மட்டும் சிந்த சிலர் மனத்திற்குள் வருத்தப்பட, சிலர் மனம் கலக்க முற்று மயங்க, இப்படித் தங்கள் துன்பங்களை வெளிப் படுத்திக் கொண்டிருக்டன்றார்கள். அவ் வெற்றுடலைக் கண்டு சிலர் பாட்டுப் பாடி அழுகின்றார்கள். அப் பாட்டுகளில் "உயிர்" இருக்கின்றது. இறந்துபோனவர் அப் பாடல் மூலம் எழுந்து நடமாடுவது போன்று இருக் கின்றது. இறந்து கிடக்கும் வெற்றுடலின் வரலாறு தெரியாதவர்களுக்கு அப் பாடல் அதன் வரலாற்றினைக் காட்டுகின்றது

எனவே இறந்தவர் எழுந்து "பாட்டு வடிவில் நடமாடுகின்றார்." இறந்தவரைப் பாட்டின் மூலம்

மற்றவர்களுக்குக் காட்டக் காரணமாக இருப்பவர்கள் பெண்களாவர். பெண்களால் பாடப்படும் அப் பாடல் களையே ஒப்பாரி என்று அழைக்கிறோம்.

இரங்கற்பா : இலக்கியங்களில் ஒருவர் மறைவிற் காக மற்றவர் பாடும் பாட்டினை 'இரங்கற்பா' என்றும் 'கையறுநிலை' என்றும் சொல்லுகின்றார்கள். ஆங்கிலத் தில் இதனை Elegy என்றழைக்கின்றனர்.

மேற்கண்ட பாடல்கள் ஒருவர் இறந்தவுடன் உடனே பாடப்படுவதும் உண்டு. இறந்த செய்தி அப்பொழுது தெரியாமல் பிறகு தெரியப்பெற்று அப் போது பாடப்படுவதும் உண்டு. ஆங்கிலக் கவிஞர் 'டென்னிசன்' தம் நண்பர் 'ஆர்தர்' இறந்து பதின் மூன்று ஆண்டுகள் கழிந்த பின் இரங்கற்பாப் பாடி இருக் கின்றார்.[1] தமிழ்ப் புலவர்கள் புரவலர்கள் இறந்தபின் அவன் வாழ்ந்த அரண்மனையைப் பார்த்தும், இயமனைப் பார்த்தும் கையறுநிலைப் பாடல்கள் பாடியுள்ளனர். புரவலரின் மனைவிமார் கணவன் இறந்தபின் இவ்வுலகில் விதவையாக வாழ அஞ்சிக் கையறுநிலைப் பாடல்கள் பாடியுள்ளனர். இப் பாடல்களில் துன்ப உணர்ச்சி யினைத்தவிர வேறு எவ்வகை உணர்ச்சிகளையும் காணவே முடியாது.

இலக்கியங்களில் ஒப்பாரி : நம் நெடுந்தமிழ் இலக்கியங்களில் இத்தகைய துன்பப்பாடல்கள் சில இடங் களில் பூத்து இருக்கின்றன. கோவலன் இறந்தபின் கண்ணகியின் அழுகைப் பாடல்களைச் சிலப்பதிகாரத்தில்

1. இலக்கியத்திறன் - பக். 100 - 101

துன்ப மாலையும், ஊர்சூழ் வரியும் காட்டுகின்றன. கம்பராமாயணத்தில் இராவணன் இறப்புக்குப் பின் மண்டோதரி புலம்புகின்றாள். கந்தபுராணம் காம தகனப் படலத்தில் மன்மதன் இறந்தபோது இரதிதேவி அழுகின்றாள்.

திருவிளையாடற் புராணத்தில் 'வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்த படலத்திலும் பெரிய புராணத்தில் திருஞானசம்பந்தர் புராணத்திலும் 'புலம்பல்' வரக் காண்கின்றோம். தேசிக விநாயகம் பிள்ளையின் 'ஆசிய சோதியில்' மகனை இழந்த தாயொருத்தி அழும் பாடலை இயற்றியுள்ளார்.

சில பண்புகள் : ஒப்பாரிப் பாடல், அப்பாட்டில் ஈடுபட்டவர் உள்ளத்தில் பதிந்து இறந்தவரையே மறக்கச் செய்துவிடும் பெற்றியது. துன்பச்சுவை எளிய நடையில் அமைதலால் இறப்பிற்குத் தொடர்பற்ற வரையும் தொடர்புடையவராக்கும் ஆற்றல் வாய்ந்தது. இறந்தவரின் சிறப்பைத் திறனாய்வு செய்யும் பொருள் கொண்டது. 'இவ்வளவு அழகாகப் பாடினாளே' என்று அப் பாடலைக் கேட்டவர் பலகாலம் நினைத்து நினைத்து இன்பப்படும் கவிதைச் சுவை நிரம்பியது. இலக்கியத் தரத்தில் சேர்க்கத் தகுந்தது.

எங்கும் உண்டா ? : இத்தகைய துன்ப உணர்ச்சிப் பாடல்கள் எங்கும் உள்ளன என்று கூற முடியாது ; உலக மனைத்தும் ஒரேவித சடங்குகள் நிகழ்த்தப் பெறுவ தில்லை. ஒரே நிகழ்ச்சிக்குரிய சடங்குகளாக இருந் தாலும் அதனை இடத்திற்கும், இனத்திற்கும், நாட்டிற் கும் தகுந்த சடங்குகளாக மாற்றுகின்றனர். சாவினைச்

சடங்காக்கும் பொழுது முஸ்லீம், கிறித்துவர்கள், செத்த பிணத்தைச் சுற்றி இருந்துகொண்டு, இந்துக்களைப் போல மாரடித்துக் கொண்டு அழுவதில்லை. 'ஒப்பாரி' வைப்பதில்லை. இந்துக்களிடம் 'துக்கம்' கலைவடிவம் பெற்று விடுகின்றது.

துன்பங்களில் கொடியது: அவ்வாறு வெளிவந்த துன்பக் கவிதைகள் சில காண்போம்: இறப்பிலே மிகக் கொடுமையானது திருமணமானவுடனேயே கணவன் இறந்துபோவது ஆகும். இளம் மனைவியை ஏங்க விட்டு அவளை விதவையாக்கி இறந்து போகும் கொடிய துன்பத்தைவிட வேறெந்தத் துன்பமும் உலகில் இல்லை. கணவன் இறந்தவுடன் விதவை என்ற பெயரில் சமுதாயக் கட்டுப்பாட்டிற் கெல்லாம் அவள் உட்பட்டு அணு அணுவாகச் செத்துப் போகின்றாள். வாழ்க்கை இன்பங்களைக் கணவனோடு பகிர்ந்து பெற்று வாழாத பெண்கள் தங்கள் கணவன் இறந்தவுடன் வைக்கும் ஒப்பாரி ஏனைய அழுகை ஒலிகளை விட அவலச் சுவை மிகுந்ததாகும். அச்சுவையில் சில பாடல்கள்:

"சில்லென்று பூத்த
சிறு நெருஞ்சிக் காட்டுடே
நில் லென்று சொல்லி
நிறுத்தி வழிபோனீரே
கட்டிய சேலை இன்னும் கசங்கி மடியவில்லே
வச்ச பூ இன்னும் வாசங் குறையவில்லே.
மஞ்சள் குறைய வில்லே மடிப்புக் குலையவில்லே !
பிஞ்சு வயதென்றேன்
பேராசைக் காரி யென்றேன்
பெருமாள் பரி கொடுத்துப்

பிரிந்திருக்க மாட்டெனென்றேன்.
பிரிந்திருக்க மாட்டெனென்றேன்
பிடிக்க வந்தான் கேட்கலையே

மட்ட வய தென்றேன்
மன சாசைக் காரி யென்றேன்
மன்னர்தனைப் பிரிந்து
வாழ்ந்திருக்க மாட்டெனென்றேன்
வாழ்ந்திருக்க மாட்டெனென்றேன்
மாய்க்க வந்தான் கேட்கலையே ![1]"

இவ் ஒப்பாரிப் பாடலில் அழும்பெண் இயமனிடம், தான் இளைய வயது என்று வாதிட்டதாக அழுகின்றாள். அவள் புதுமணப் பெண் கோலத்திலிருந்து தான் மாற வில்லை யென்றும் எடுத்துக் காட்டுகிறாள். பணம், செல்வாக்கு, உறவினர் இவை எல்லாம் நிறைந்திருந்தாலும் அவற்றையெல்லாம் நெருஞ்சிப் பூக்களாகக் கருதி நெருஞ்சிக்காட்டில் நிற்க வைத்து விட்டுப்போய் விட்டதாக அழுகின்றாள். மேலும் அவள்,

"சாகும் வயதுமல்ல—நீ
சாய்ந்துவிடும் காலமல்ல
மாளும் வயதுமல்ல—நீர்
மாண்டிருக்க நாளுமல்ல.[2]"—என்று

வயதினைக் குறிப்பிட்டு அழுகின்றாள்.

விதவையின் வாழ்வு

அப்படி அழும் அவள் தனது விதவையான வாழ்வு, பிற்கால வாழ்வு எப்படியெல்லாம் இருக்கப் போகின்றது என்பதனைக் கூறித் தன் பாடலில் குறிப்பிடுவதும் உண்டு.

---

1. *செட்டிநாடும் தமிழும் - பக். 213-17*
2. *கிராமக் கவிக்குயில்களின் ஒப்பாரிகள் - பக், 39.*

"வீதிவழி வந்தால் விலகிவர வேண்டு மென்பார்.
வீதிவந்தால் வெட்கமலோ வீட்டிலிருந்தால் துக்கமலோ
வாசல்வழி வந்தால் மறைந்துவர வேண்டும் மென்பார்.
வாசல்வந்தால் வெட்கமலோ மறைந்திருந்தால் துக்கமலோ
ஒரு கோடி தங்க நகை
உருவி வைக்கச் சொன்னீரே
கால் கோடி தங்க நகை
கழற்றி வைக்கச் சொன்னீரே"

வருங்காலத்தில் உலகம் அவளைக் கைவீசி நடக்க உடன் படாது. அவள் எங்குச் சென்றாலும் மறைந்து மறைந்து செல்ல வேண்டும். இதனையெல்லாம் அவள் எடுத்துச் சொல்லி அழுகின்றாள்.

பணக்காரப் பெண்ணானவள் அணிந்திருந்த ஆடையினையும், இனி அணியப் போகும் ஆடையினையும் பற்றிப் பாட்டில் சொல்லுகின்றாள். இரு வேறுபட்ட நிலைகளை அப் பாடல்கள் காட்டுகின்றன.

"தங்க முளையடித்துத்
தாறு நூல் பாவோடித்
தரிகாரன் நெய்ததெல்லாம்
தையல் நல்லாள் பூவாடை
கந்தையிது கந்தையிது
கால் பணத்துக் கந்தையிது.
ஆக்குகிற பெண்களுக்கு
அடைபிடி கந்தையிது.
பொங்குகிற பெண்களுக்குப்
பிடித்திருக்கும் கந்தையிது
காசிப் பரதேசி
கைதுடைக்கும் கந்தையிது
மடத்துப் பரதேசி
வாய் துடைக்கும் கந்தையிது."[1]

1. *செட்டிநாடும் தமிழும் – பக். 169.*

இப் பாடல்கள் இனி அவள் கணவனின்றி வாழப் போகும் வாழ்வினைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. தங்கள் உணர்ச்சிகளை அள்ளித் தெளிப்பனவாக இப் பாடல்கள் அமைந்திருக்கின்றன.

கைம்மை நோன்பு நோற்று வாழ அஞ்சிய பண்டைய மகளிரைப் புறப்பாடல்கள் காட்டுகின்றன. கண்ணகியும் தன் ஒப்பாரியில் அவ்வகை மகளிரைக் குறிப்பிடுகின்றாள்.

"இன்புறு தங்கணவர் இடரெரி யகமூழ்கத்
துன்புறு வனநோற்றுத் துயருறு மகளிரைப்போல்
மன்பதை அலர்தூற்ற மன்னவன் தவறிழைப்ப
வன்பனை இழந்தேன்யான் அவலங்கொண் டழிவலோ
தம்முறு பெருங்கணவன் தழலெரி யகமூழ்கக்
கைம்மைகூர் துறைமூழ்குங் கவலைய மகளிரைப்போல்
செம்மையின் இகந்தகோல் தென்னவன் தவறிழைப்ப
இம்மையும் இசையொரீஇ இனைந்தேங்கி அழிவலோ."[1]

தாயை இழந்த மகள் பாடுவது

இந்தத் துயரிற்கு அடுத்த பெரும் துயரம், தாயார் இறந்தவுடன் மகள் பாடுவதாகும். தாய்ப்பாசம் உலகில் ஈடு இணையற்று உணர்ச்சியின் வடிவமானது. அவளுக்காக அழுபவர்களை வளர்த்த தெய்வம் தாய். அந்தத் தாய் அனைவரையும் தவிக்க விட்டு இறந்தவுடன், இறந்த தாய்க்காக அழுபவர்களின் பாடல்களில் தாய்மையின் வரலாறு தவழ்ந்து வரும். அழுபவர்களை எல்லாம் ஆளாக்க அவள் பட்ட பாடு குழந்தையாக இருக்கும் பொழுது பத்து மாதத்தோடு மட்டுமின்றிக்

1. சிலப்பதிகாரம் – துன்பமாலை.

காலமுழுவதும் பிள்ளையை அவள் வளர்த்த வரலாறு, துன்பங்கள், அவள் பெருமை இவற்றை யெல்லாம் சொல்லிச் சொல்லி அழுவர். தாய்க்காக அழும் பாடல் களில் அவளுடைய அருமை பெருமைகளே அணிகளாக வரும். அவ்வாறு அமைந்த ஒப்பாரி ஒன்று :

"பூமியிலே விட்டாலே—என்
பொற்பாதம் நோகுமென்பாய்
தரையிலே விட்டாலே—என்
தங்கக்கால் நோகுமென்பாய்.

அள்ளி எடுத்திடுவாய்— ஆச்சி நீ
அடி மடியில் கட்டிடுவாய்
கிள்ளி எடுத்திடு வாய்—ஆச்சி நீ
கீழ் மடியில் கட்டிடுவாய்.

மார்மேலே தொட்டி கட்டி—எனக்கு
மடிமேல் நடை பழக்கி
தோள் மேலே தொட்டி கட்டி—எனக்கு
துடைமேல் நடைபழக்கி.

வளர்த்த அருமை யென்ன —என்னை
வைத்திருந்த நேர்த்தி யென்ன!
பெற்ற அருமை யென்ன—என்னைப்
பேணி வந்த நேர்த்தி யென்ன!

நெய் ஊட்டி வளர்த்த உன்
நேசத்தை நான் மறவேன்
பால் ஊட்டி வளர்த்தஉன்
பாசத்தை நான் மறவேன்.

கானல் அடிக்கு தென்றே—ஆச்சி நீ
கையால் நிழல் பிடிப்பாய்
வெய்யில் அடிக்கு தென்றே—ஆச்சி நீ
விரலால் குடை பிடிப்பாய்.

கள்ளி நிழலாச்சே—இனி எனக்குக்
கண்டவர்கள் தாயாச்சே
வேலி நிழலாச்சே—இனி எனக்கு
வேண்டியவர்கள் தாயாச்சே.

குடத்தோடே—தண்ணீர்—எனக்குக்
குளிரத்தான் வார்த்தாலும்
தாய் வளர்த்த தண்ணீர் போல்
தாகந் தணியா தெனெ."[1]

பாச உணர்ச்சியினை நாம் பன்னெடுங்காலம் இருந்து சிந்தித்தாலும் 'தாய்மை'க்கு நாம் தரும் உருவத்தை விட நாட்டு மகள் ஒருத்தி 'தாய்மை'யின் ஓவியத்தை அழகுறத் தீட்டி அழியாத "சித்தன்னவாசல்" ஓவிய மாக்கி விடுகின்றாள். பாடலைக் கேட்கத் தாய்க்கு 'சக்தி' உண்டென்றால் அவள் ஈன்ற பொழுதினும் பெரிதுவப் பாள்.

குழந்தையை இழந்த தாய் பாடுவது

இவ்விரு உணர்ச்சிகளுக்கு அடுத்து, குழந்தை இறந்துவிடின் தாய் அடையும் துன்பம் பொறுக்க முடியாததாக அமையும்; கருவில் இருக்கும் பொழுதும், பிறந்த பிறகும் குழந்தையைப் பற்றிப் பலவித மாகக் கற்பனை செய்பவள் தாய். வருங்காலத்தில் தன்னைக் காப்பாற்றும் என்றெல்லாம் கவலையற்று வாழ்ந்த தாயை ஏமாற்றி விட்டுக் குழந்தை போய்விட்ட தென்றால், தாயின் துன்பத்திற்குக் கரையில்லை. பத்து மாத அவ்வுரு பன்னெடுங் காலம் தாயின் எண்ணத்தில், (இறந்த பிறகும்) விளையாடிக் கொண்டே இருக்கும். உலோகிதாசனை இழந்த சந்திரமதி எவ்வாறெல்லாம்

1. கிராமக் கவிக் குயில்களின் ஒப்பாரிகள். - பக். 56.

புலம்பினுள் என்பதனை அரிச்சந்திர புராணம் காட்டும். கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளை தமது ஆசிய சோதியில், 'புத்தனுக்கு முன், மகனை இழந்த தாய்' அழுவதினை ஒப்பாரியினைப் போன்றே எழுதியுள்ளார் :

''வாய் முத்தம் தாராமல்
மழலையுரை யாடாமல்
சேய்கிடத்தல் கண்டெ னக்குச்
சிந்தை தடு மாறுதையா !

முகம் பார்த்துப் பேசாமல்
முலைப் பாலும் உண்ணுமல்
மகன் கிடக்கும் கிடைகண்டு
மனம் பொறுக்கு தில்லை ஐயா !

பின்னி முடிச்சிட ம்மா
பிச்சிப் பூ சூட்டிடம்மா
என்னும் மொழிகள் இனி
எக்காலம் கேட்பேன் ஐயா !''

என்ற பாடல் எளிமையாக, நாட்டுப்புறப் பாடல் போன்றிருக்கக் காணலாம். இதே போன்று நாட்டுப்புறத் தாயொருத்தி தன் மகனைப் பறி கொடுத்து விட்டு அழுகின்ருள் :

''பாடித்திரிந்த படலைத் தெருக்களெல்லாம்
பாசி படர்ந்து பாழடைந்தோ தோற்றுதென
ஓடித் திரிந்த ஒழுங்கை தெருக்க ளெல்லாம்
பாசித் தெருவும் பாழ் ஒழுங்கை ஆக்குதென.

திங்கள் ஒரு திவசம்—எனக்கு
திதி முறைகள் செய்கிறதார்
வருஷம் ஒரு திவசம்—எனக்கு
வகைமுறைகள் செய்கிறதார்''[1]

1. கிராமக் கவிக் குயில்களின் ஒப்பாரிகள் - பக். 58.

"அழகை எழுதியவன் ஆயுள் எழுதலையே
வடிவை எழுதியவன் வயதெழுத மாட்டலையே
அழகை எழுதியவன் ஆயுசை எழுதலையா
ஆயுசை எழுத அசத்திட்டு இருந்தானா?

பச்சைக்கிளி வளர்த்தோம்
பறக்கையிலே தப்ப விட்டோம்.
குஞ்சுக்கிளி வளர்த்தோம்
கூவையிலே தப்ப விட்டோம்.

பொட்டுள்ள நெத்தி புழுதி அரிச்சிரிச்சு
மையிட்ட நெத்தியை மண்கரையான் தின்னுரிச்சு
நீலமணி கண்கள் ரெண்டும் நீலக்கரையான்
தின்னுரிச்சு"[1]

குழந்தை பிரிவுக்கு இரங்கிப்பாடும் பாடல்கள் உணர்ச்சி மயமானவையாக இருக்கும்.

வயதான மகனை இழந்த தாய் பாடுவது

சிலர் குழந்தையிலே இறக்காமல் நல்ல பருவம் வந்த திருமணப் பருவத்தில் மடிந்து விடுவதுண்டு; இது கொடுமையிலும் கொடுமையுள்ள சாவு; மற்றச் சாவுகளில் வரும் சொற்கள், துக்க வெளிப்பாடுகள் இதில் வெளியாக இயலாத அளவுக்கு மனிதனை நிலை குலையச் செய்து விடும். கையொடிந்தது போன்ற உணர்வு பெற்றவர்களுக்கு ஏற்படும். குழந்தைப் பருவத்தில் இறந்த பொழுதே பொறுக்காத தாய்மை உள்ளம் வளர்ந்த பின் பறி கொடுத்தால் கேட்குமா?

"கன்னியரைக் கைப்பிடிச்சா கனபாவம் சுத்துமினு
மங்கையரை மாலையிட்ட மாபாவம் சுத்துமினு
தன்பாவம் கொண்டு தன்வழியே போனானே
மார்பிலே தொட்டிகட்டி மடிமேல் நடைபழகி

1. செட்டி நாடும் தமிழும் – பக். 278.

வாதா வளர்ந்த மகன் வகை மோசம் செய்து
வனம் பாக்கப் போற மின்னுன்-
தோளிலே தொட்டி கட்டி தொடைமேல் நடைபழகி
சோக்கா வளர்ந்தமகன் துயரம் வச்சுக் கண்ணசந்தான்''[1]

''தாலிக்கோ நாட்பார்க்க—உனக்குச்
சாவுக்கோ நாளாச்சே
கூறைக்கோ நாட் பார்க்க—உனக்குக்
கொள்ளிக்கோ நாளாச்சே

மஞ்சளால் கோலமிட்டு—உன்னே
மணவறைக்கு விடும் வேளையிலே
கரியாலே கோலமிட்டு—உன்னைக்
கட்டைக்கோ அனுப்புகிறேன்.

மணவறைப் பந்தலிலே—உன்
மணக்கோலம் பாராமல்
பிணவறைப் பந்தலிலே—நானும்
பேரிழவே கொள்ளுகின்றேன்.''[2]

இப் பாடல் திருமணத்திற்கு நாள் குறிப்பிட்ட பின் மகன் இறந்த நிலையில் தாய் பாடியது என்று நினைக்கத் தக்கதாக உள்ளது.

மகனின் மணக் கோலத்தையும், பிணக்கோலத்தையும் தாய் ஒப்பிட்டுப் பார்த்துக் கண்ணீர் விடுவதை இங்குக் காண்கின்றோம்.

'சுமங்கலி' இறந்த போது பாடியது

கணவன் இருக்கும் பொழுது இறந்தவளைச் சுமங்கலியாய்ச் சென்றாள் என்பார்கள். இச் சாவினையே திருமணமான பெண்கள் அனைவரும் விரும்புவார்கள்.

1. 'செட்டி நாட்டுத் தாலாட்டு – பக். 45.
2. 'நாட்டார் பாடல்கள் – பக். 32-33.

கணவனுடன் வாழ்ந்த காலத்தில் மனைவி எத்தகைய தோற்ற மளித்தாளோ அத்தகைய மங்கலத் தோற்றத் துடனேயே அவள் இறந்த பின்பும் இடுகாட்டுக்கு எடுத்துச் சென்று எரிக்கப்படுவாள். இச் சாவினைப் பெற்ற பெண்ணைப் பெண்கள் வாழ்வரசி என்று பாராட்டுவர். பாடல்களில் அதனையும் கூறுவர்.

"மஞ்சக் கழுத்தோடே
மடிநிறைஞ்ச பூவோடே
மன்னவர்க்கு முன்னாலே
வைகுந்தம் போவையம்மா

தாலிக் கழுத்தோடே
தலை நிறைஞ்ச பூவோடே
தனஞ்சயற்கு முன்னாலே
தனிப்பட்டுப் போனியம்மா.!"[1]

இப் பாடலில் அவள் சென்ற கோலத்தை வருணிப்ப தனைக் காணலாம்.

பாடல்களில் பண்புகள் தெரியும்

ஒப்பாரிப் பாடல்களின் இனங்களில் ஒன்று இறந்தவர்களின் அருமை பெருமைகளைக் கூறும் ஒரு வரலாற்றுத் தன்மை கொண்டதாகும். இறந்தவரின் வாழ்ந்த காலத்தை அச் சிறு நேரத்தில் அழுபவர்கள் நன்கு படம் பிடித்துக் காட்டுவர். இறந்து போன வனின் மனைவி பாடி அழும்போது தன் கணவனின் பண்புகளில் ஒன்றினை மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டுகின்றாள்.

---

1. கோயமுத்தூர் மாவட்டம் – பக். 68.

"தள்ளி இருன்னு சொல்லாத தங்கராசன் போயிட்டாரே
போயிருன்னு சொல்லாத பொன்னரசன் போயிட்டாரே
ஒதுங்கியிருன்னு சொல்லாத உத்தமரும் போயிட்டாரே."[1]

இதே போன்று தாய் இறந்தவுடன் அவளின் பெருமையை மகள் பாடலில் சொல்லுகின்றாள். அப் பாடலில் தாய் இறந்தவுடன் அவளின் அன்பான உதவியை மகள் பாடும் பாடலில் பாராட்டிச் சொல்லுகின்றாள்.

"ஆத்தாள் வரிசையுண்டு—எனக்கு
அடிப்பானை சோறுண்டு.
பொங்கல் வரிசையுண்டு—எனக்குப்
புதுப்பானை சோறுண்டு.
பொட்டியிலே அரிசி வரும்
பிளந்த விறகும் வரும்
வையத்தார் பார்த்து என்
வரிசை கவிழ்ந்ததம்மா!"[2]

ஒருவர் செத்தால்தான் அவரின் பெருமையும், சிறுமையும் தெரியும் என்பார்கள். அதனை ஒப்பாரிப் பாடல்களில் நன்கு காணலாம்.

இறப்புக்குத்தக அமையும்

ஒப்பாரி ஒரு வளர்கதையைப் போன்றது. இதற்கு முடிவு கிடையாது. இறந்தவர்களை நினைக்கையில் ஏற்படும் துன்பம் என்ற மணற்கேணியில் கவிதையென்ற ஊற்று வந்து கொண்டே இருக்கும். இது வற்றுவது கிடையாது. துன்பப் படாதவர் உலகில் யாருமே இல்லை. சமுதாயமே வெறுக்கும் ஒரு கொடியவன் இறந்தாலும் அவனுக்காகச் சிறிது நேரம் துன்பப்

1. செட்டி நாடும் தமிழும் – பக். 219.
2. வட ஆர்க்காடு மாவட்டம் – பக். 12.

படுவோரும் உண்டு. ஒப்பாரி, பிறந்த குழந்தை முதல் வயதானவர் வரை யார் இறந்தாலும் பாடப்படும். இறப்புக்குத் தக்கபடி அஃது அமைவதுண்டு ; தூரத்தில் இருந்து ஒப்பாரிப் பாட்டைக் கேட்பின் இறந்தவர் யார் என்று அறிந்து விடலாம்.

உயிருண்டு

இறந்தவனைப் பற்றி அறியாதவர்கள் 'வரலாறு' ஒன்று கேட்ட உணர்வில் வெளிச் செல்லுகின்றார்கள். நாட்டுப்புறப் பாடலில் இவ் இறப்புப் பாடலுக்கு இருக்கின்ற 'உயிர்' எப் பாடலுக்கு மில்லை எனலாம்!

புதிய ஒப்பாரிகள்

தாலாட்டினைப் போன்று இப் பாடல்களை வளர்க்கச் சில புலவர்கள் முற்பட்டுப் பல ஒப்பாரிப் பாடல்களை வெளியிட்டிருக்கின்றார்கள். அவை ஆறு பேருக்குப் பாடிய அம்பிகாபதி ஒப்பாரி, பஞ்சரத்ன ஒப்பாரி, பாவையர் ஒப்பாரி, மரகத ஒப்பாரி, மோட்டார் ஒப்பாரி, அதி நூதன எமலோக ஒப்பாரி, பஞ்ச கல்யாண ஒப்பாரி, தெய்வ லோக ஒப்பாரி, கற்புடைய மாதர்கள் பாடிய கனகரத்ன ஒப்பாரி, ரயில்வே பரிதாபமரண சூரிய காந்தி ஒப்பாரி என்று ஒப்பாரிப் பாடல்களை இயற்றி வெளியிட்டிருக்கின்றனர். இறந்தவருக்கு ஏற்ற எவ் வகையில் பாட வேண்டும் என்று பாடல்களை எழுதியுள் ளனர். இதே போன்று நாட்டுப்புறக் கதைப் பாடல்களில் கோவலனைப் பிரிந்த கண்ணகி, மாதவி இவர்கள் இரு வரும் வைத்த ஒப்பாரி, மன்மதனுக்காக இரதி வைத்த ஒப்பாரி என்று ஒப்பாரிப் பாடல்களும் இயற்றப்பட்டிருக் கின்றன. இவ் வொப்பாரிகளை இயற்றியது ஆண்க

ளாதலால் இயற்கையாகப் பெண்களிடம் காணப்படும் இரக்க உணர்வும், அழுகையும் இதில் இல்லை; பாடல் களில் ஆண்மை நிறைந்துள்ளன. பெண்களின் ஒப்பாரிப் பாடல்களில் இருந்த 'உயிர்' இதில் இல்லை. இறந்த உடம்பு போன்று காணப்படுகின்றது.

ஆடு வைத்த ஒப்பாரி

இப்படி மனிதர் இறந்ததற்காக அடுத்தவர் வைக்கும் ஒப்பாரியினைப் பின்பற்றி ஈழத்துக் கவிஞர் நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர் என்பார் ஆடு ஒன்று தன் குட்டியைக் கோயிலில் பலிக்காக வெட்டியதால், தன் குட்டியை நினைத்து ஒப்பாரி வைப்பதாக எழுதி யுள்ளார். மிகுந்த கருத்துச் செறிவுள்ளதாகவும், படிப் பவர் மனத்தைக் கனியச் செய்யும் தன்மை பெற்ற பாடலாகவும் அஃது உள்ளது.[1]

''ஆசை மகனேயென் அன்பான கண்மணியே
நேசத் துரையே நெடும்பயணம் போனுயோ
ஓராறு மாதம் உடம்பு நொந்து பெற்றெடுத்த
சீராளா! தெற்குத் திசைப்பயணம் போனுயோ
நேராத கோயிலெல்லாம் நேர்ந்து தவமிருந்தே
ஆராத காதலுடன் ஐயோ நான் பெற்றெடுத்தேன்
கல்லு வைத்த கோயிலெல்லாம் கைகுவித்து நோன்பிருந்து
செல்வக்குமரா சிறப்புடனே பெற்றெடுத்தேன்
ஆரக் கழுத்தழகா அஞ்சனப்பூங் கண்ணழகா
வார நடையழகா மாராப்பு மேனியனே !

பாஅய் பாஅய் (46)

---

1. *சிறுவர் செந்தமிழ்- பக். 34-35.*

பன்மலர்ப் பாடல்கள்

இது வரை நாம் முன்கண்ட பகுதிகள் ஒரு செடியில் பூத்த ஒருவகை மலரில் இருந்து வரும் மணம் போல அமைந்திருக்கும் தன்மையுடைய பாடல்களாகும். முன்பு பார்த்த பாமலர்களோடு ஒன்ருக வைத்துக் காண முடியாத வகை வகையான பன்மலர்ப் பாடல்களை இப் பகுதியில் கதம்ப மலர்களாகக் காணலாம். முன் கண்ட பகுதியில் அடங்காத, அடக்க முடியாத, எஞ்சியுள்ள பகுதிகள் எல்லாம் இப் பகுதிக்குள் அடக்கத் தக்கன ஆகும். அப்படி அடக்கப்பட்டு, தொகுக்கப்பட்ட மாலையில் இருந்து சில மலர்களை மட்டும் இங்கு எடுத்துக் காட்டாகக் காணலாம்.

வீதியில் வயிற்றை நிரப்புதற்குப் பிச்சை எடுத்துப் பாடும் பிச்சைக்காரர், குடுகுடுப்பைக்காரர் பாடல்கள், குடிகாரன் குடித்து விட்டுக் கள்ளின் பெருமையைப் பற்றிப் பாடிக் கொண்டு வரும் பாடல்கள், சித்தர் பாடல்களைப் போலப் பாடப்படும் வேதாந்தப் பாடல்கள், அண்மையில் தோன்றிய புகைவண்டி, விண்ணூர்தி, வெள்ளைக்காரர் ஆட்சி, பஞ்சங்கள், முதலியவற்றை வருணித்துப் பாடப்பட்ட பாடல்கள் முதலியவை எல்லாம் பன்மலர்ப் பாடல்களாகக் கருதத் தக்கன ஆகும்.

பிச்சைக்காரர் பாட்டு : வீட்டுக்குள்ளிருப்பவர்களை வெளியில் நிற்கும் பிச்சைக்காரன் வாழ்த்திப் பாடிப் பிச்சை கேட்பது நாம் அனைவரும் அறிந்ததே. மனம் போன போக்கில் இவன் பாடுவது ஒருபுறம் இருந்

தாலும், சில நேரங்களில் குடுகுடுப்பைக்காரனைப் போலக் குறி சொல்லிப் பிச்சை கேட்பதுண்டு. உழவர்கள் நிறைந்த சிற்றூர் ஒன்றில் மழைபெய்யுமா என்று வானத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் உழவர்களின் இல்லங்களில் மழை பெய்யும் என்று பிச்சைக்காரன் ஒருவன் பின்கண்டவாறு பாடிப் பிச்சை கேட்கின்றான் :

"பெய்யு மாலம்மா பெய்யு மாலோ
பேயா மழை பெய்யு மாலோ
நல்ல மழை பெய்யு மாலம்மா
ஊசி போல மின்னி மின்னி
ஊர் செழிக்கப் பெய்யு மாலோ
காசு போலே மின்னி மின்னிக்
காடு செழிக்கப் பெய்யு மாலோ
பணத்தைப் போல மின்னி மின்னிப்
பட்டண மெல்லாம் பெய்யு மாலோ"[1]

இப்படி இவன் பாடிக் கொண்டே போக, உழவர்கள் மழை பெய்யும் என்ற நற்சொல்லைக் கேட்டு அவனுக்குப் பிச்சை நிறைய இடுவர்.

குடுகுடுப்பைக்காரன் பாடல்கள் குறிசொல்லுவதாக அமைந்திருக்கும். பாரதியார், குடுகுடுப்பைக்காரன் பாட்டின் அமைப்பிலும், மெட்டிலும் இயற்றியுள்ள 'புதிய கோணங்கி'ப் பாட்டு இங்கு ஒப்பிட்டு நினைக்கத் தக்கது.

கள்ளைப்பற்றிய பாடல் : மது விலக்கு அண்மையில் ஏற்பட்டதாகும். சங்க காலந்தொட்டு இந்தியா விடுதலை அடையும் வரை மது ஒரு பொது உணவு

1. காற்றில் வந்த கவிதை - பக். 17-18.

போலவே இருந்து வந்திருக்கின்றது. இலங்கையிலும் தமிழகத்திலும் மதுவினைக் குடித்துவிட்டுப் பாடும் பாடல்கள மதுவின் அருமை, பெருமை முதலியவற்றை விளக்கிச் சொல்லும் பாடல்கள் பரந்து வழங்கி வருகின்றன. தமிழ் இலக்கியத்தில் 'தேட்கடுப்பன்ன நாட்படு தேறல்'[1] என்று சிறப்பிக்கப்பட்ட கள்ளை, நாட்டுப்புற மகன் பாடும் விதத்தைக் காணலாம்.

"பட்டாக்கத்தி பளபளென்ன
பாளையன் கோட்டை நறுநறென்ன
பனையுங் கறுத்திருக்கும்
பனைவட்டுஞ் சிவந்திருக்கும்—அதிலே
இறக்கிய நீரைப்பருகினல்
தலை கிறு கிறுக்கும்.
செம்பு போல் வடிவத்துள்ளே
சோறு போல் கொதிக்கும்—கள்ளே
எங்களை வளர்த்த கள்ளே
எங்கே போய் ஒளிந்தாய் கள்ளே! கள்ளே !!"[2]

என்று பாடி மகிழ் வெய்துகின்றான்.

வேதாந்தப் பாடல்கள்: கற்றறிந்த புலவர்கள் பேசும் வேதாந்தக் கருத்துகளைப் பாமரர்கள் தங்கள் மென்மையான பாடல்களில் சாதாரணமாகத் தருவதுண்டு. இவ்வுண்மையினை திரு. கி. வா. சகந்நாதன் அவர்களின் 'மசசு வீடு' என்ற நூலில் எடுத்துக் காட்டியிருக்கும் பாடல்களில் இருந்தும் திரு. அன்ன காமு அவர்கள் 'ஏட்டில் எழுதாக் கவிதைகள்' என்ற நூலில் எடுத்துக்காட்டியிருக்கும் பாடல்களிலிருந்தும் நாம் உணரலாம்.

1. புறநானூறு - 392
2. ஈழத்து நாட்டுப் பாடல்கள் - பக். 113.

எடுத்துக்காட்டாக ஓர் இறையன்பு நிறைந்த பெண்மணி திருவண்ணுமலை ஈசன் பெருமையினைப் பாடும் பொழுது

"நில்லாது செல்வம்
நிலையாது வாழ்க்கை நிலை
நிச்சயமோ—இந்தப்
பொல்லாத புத்தியை ஏன் படைத்தாய் ?
வல்லான் கருத்துக்கும்
வாவென்ற சொல்லுக்கும்
நான் வாயிழந்தேன் !"[1]

என்று பாடுகின்ருள்.

செல்வமும் வாழ்க்கையும் நிலையாதவை என்று இவள் கூறுவது, இவ்வாறு இலககியப் புலவர்கள் கூறுவதுடன் ஒத்து நினைத்தற்குரியது. பாட்டுகளில் இல்லாத வேதாந்தக் கருத்துகள் தமிழக நாட்டுப்புறப் பாடல்களில் இருக்கும் சிறப்பினைக் குறிப்பிடும் பொழுது திரு. கி வா. சகந்நாதன் அவர்கள் பின்கண்டவாறு குறிப்பிடுகின்ருர்.

"உலக முழுவதும் பலவகையான நாடோடிப் பாடல்கள் வழங்குகின்றன. அந்தந்த நாடுகட்கு ஏற்ப அவற்றிலே தனித் தகுதி இயல்புகளைக் காணலாம் இயற்கையோடு ஒட்டி வாழ்வதைப் புலப்படுத்துவது, உண்மையை மறைக்காமல் சொல்வது முதலிய வற்றில் அப்பாடல்கள் அனைத்திலும் ஒரு பொது நெறியைக் காணலாம். ஆனுலும் இலக்கியங்களின் முடிவென்று சொல்லும் பாரமார்த்திக உண்மைகளை, நாடோடிப் பாடல்களும் எடுத்துரைக்கும் அதிசயத்தைப் பாரத நாட்டிலேதான் பார்க்க முடியும்" என்கின்ருர்.

---

1. ஏட்டில் எழுதாக் கவிதைகள் - பக். 183.

அண்மைக்கால நிகழ்ச்சிகளை வருணித்தல் :

நாட்டுப்புறப் பாடல்களுக்குக் காலங்கள் வரையறுத்துச் சொல்வது கடினம் என்றாலும், சில பாடல்களுக்குக் காலம் வகுத்துச் சொல்வது முடியும் என்பதனை நாட்டுப்புறப் பாடல்களில் சில, இரயில, விமானம், பஞ்சங்கள், வெள்ளையர் ஆட்சியின் சிறப்பு போன்றவற்றை வருணிப்பதிலிருந்து அறியலாம். புதிய நிகழ்ச்சி ஒன்றைப் புதிய கவிதைகளால் பாடுவதிலிருந்து நாட்டுப்புறப் பாடல்கள் தோன்றுவதுண்டு என்ற உண்மையையும் நாம் அறியலாம். கீழ்க்காணும் பாடலில் விமானம், கப்பல், சைக்கிள் முதலியன வர, அவற்றைப் பற்றிக் கிழவன், கிழவி, பேத்தி, மூவரும் பாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

கிழவன் கிழவியிடம் கூறுவது :

“பாரடி ஏரோப்பிளேன்
பறக்குதடி அந்தரத்தில்
காலுமில்லை தலையுமில்லை
காற்றாய்ப் பறக்குதடி!”

பேத்தி பாட்டியிடம் கூறுவது :

“ஏவிளா பேத்தியா
ஏரோப்பிளேன் பாத்தியா
பாட்டன் பூட்டன் நாளையிலே
பறவைக் கப்பல் பார்த்தியா
காகம் போற நாளையிலே
பறவைக் கப்பல் பார்த்தியா
காகம் போற நாளையிலே
சைக்கிளேறிப் பார்த்தியா?”[1]

1. தமிழ் நாட்டுப் பாமரர் பாடல் - பக். 154-55.

இரயிலைப் பற்றிப் பாடும் பாடல் பின் வருமாறு :

"ஆறு சட்டம் நூறு பண்ணி
அம்பத்தாறு ரயில் வண்டி
கங்கை கொண்டான் மண்ணெடுத்து
கிண்ணுது பார் ரயில் வண்டி."[1]

பஞ்சப் பாட்டு : 1876 ஆம் ஆண்டு தாது வருடத்தில் ஒரு பஞ்சம் ஏற்பட்டது. அப் பஞ்சக் கொடுமையை வேதநாயகம் பிள்ளை அவர்களும் கூடப் பாடி இருக்கின்றார்கள். அப்பஞ்சத்தை வருணித்துப் பாடும் பாடலை 'மலையருவி'[2] என்ற நூலில் திரு. கி. வா. சகந்நாதன் அவர்கள் வெளியிட்டு உள்ளார்கள்.

வெள்ளைக்காரன் பாட்டு : நமது நாட்டை வெள்ளையர்கள் ஆண்டாலும் பல நன்மைகளை அவர்கள் செய்ததும் உண்டு. அவர்கள் செய்த நன்மைகளை வரலாற்று நூலில் "ஆங்கிலேயர் செய்த நன்மை, அல்லது சீர்திருத்தம்" என்ற தலைப்பில் வரலாற்றுப் பேரறிஞர்கள் எழுதியிருப்பதை நாம் பள்ளிப் பாடப் புத்தகம் முதல் பல்கலைக் கழகப் பாடப்புத்தகம் வரை படித்து வருகின்றோம். அங்கு நாம் பாடத்தில் படித்ததைப் பட்டிக்காட்டான் ஒருவன் தன் பாடலில் பாடிக் காட்டுகின்றான். சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்ற மறைவுகளை அறிய நாட்டுப்புறப் பாடல் ஒரு சிறந்த கருவி என்பதனை இப் பன்மலர்ப் பாடலில் உள்ள வெள்ளைக்காரன் பெருமையைப் பற்றிப் பாடும் பாடல் நன்கு காட்டும்.

---

1. தமிழ்நாட்டுப் பாமரர் பாடல் – பக். 56.
2. மலையருவி – பக். 63.

"விளக் கெண்ணெய் விளக்குக்குப் பதிலா
இந்த வெள்ளைக்காரன்
எலெக்ட்ரிக் விளக்கு மென்ன
இந்த வெள்ளைக்காரன்
தண்ணி சொட்டும் நிற்காமலே
இந்த வெள்ளைக்காரன்
தார் ரோட்டுப் போட்ட தென்ன
இந்த வெள்ளைக்காரன்
அகஸ்த் மாத்தா ஆள் சாகாமே!
இந்த வெள்ளைக்காரன்
ஆஸ்பத்திரி கட்டினனும்
இந்த வெள்ளைக்காரன்
தற்குறி கீறலெல்லாம்
இந்த வெள்ளைக்காரன்
தானே மாற்றி விட்டானையா!
இந்த வெள்ளைக்காரன்"[1]

வெள்ளைக்காரர்கள் காலத்தில் உண்டான எலெக்ட்ரிக், தார்ரோடு, மருத்துவமனை, கல்வி வளர்ச்சி முதலியன பாடல்களில் வருவதை நாம் அறிகின்றோம் இன்னும் அவர்கள் காலத்தில் ஏற்பட்ட பல நன்மைகளைச் சொல்லிக் கொண்டே பாடல் நீண்ட பாடலாக அமைந்து இருக்கின்றது.

நீண்டு, பரந்து விரிந்த உலகில் தினம், தினம் பூக்கும் மலர்கட்குக் கணக்கேது? கண்டன சில மலர்களே! காணுதவையே பன்மலர்!!

---

1. மலையருவி – பக். 343–44.

௯. பாடுபவர்கள்

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர், சிலப்பதிகாரத்தை இயற்றியவர் இளங்கோவடிகள், கம்பராமாயணத்தை இயற்றியவர் கம்பர் என்று அந் நூல்களை இயற்றியவர் பெயரைச் சொல்லிப் பின்பு அவர்களின் பிறப்பு வாழ்வியல் சிறப்பு முதலியவற்றைப் பற்றி ஆராய்ச்சி செய்வதே இலக்கிய உலகில் செய்யப்படும் ஆராய்ச்சியாகும். அதை விடுத்துச் சிலப்பதிகாரத்தைப் பாடுபவர்கள், திருக்குறளைப் பாடுபவர்கள், கம்பராமாயணத்தைப் பாடுபவர்கள் என்று அவ் விலக்கியங்களைப் பாடுபவர்களைப் பற்றி ஆராய்ச்சியில் இறங்குவதில்லை. ஆனால், நாட்டுப்புறப் பாடலில் இயற்றியவர்களை விட்டுப் பாடுபவர்களைப் பற்றித்தான் ஆராய்ச்சி செய்கின்றோம். காரணம் கடல்போல் விரிந்து கிடக்கும் நாட்டுப்புறப் பாடலை இயற்றியவர்கள் கண்ணுக்குப் புலப்படாத இறைவனைப் போல அறிய முடியாமல் இருப்பதால் இங்கே பாடலை இயற்றிய ஆசிரியரின் வரலாற்றாராய்ச்சிக்கு இடமில்லாமல் போய்விட நாட்டுப்புறப் பாடலைப் பாடிக்கொண்டிருப்பவர்கள் யார் என்று புதிய ஆராய்ச்சி ஏற்படுகின்றது. நாட்டுப்புறப் பாடலை முதலில் பாடியவர்கள் யார் என்று தெரியாவிட்டாலும் அப் பாடல்களைத் தங்கள் உள்ளப் பேழைகளில் ஒளித்துவைத்து வாய்ப்பு வரும்பொழுது உலகிற்கு வாரி வழங்கியவர்களைப் பற்றி நன்கு தெரிகிறது. அப்படிப் பாடுபவர்களைப் பற்றி இனிக் காண்போம்.

எல்லாரும் பாடுபவர்கள் : இலக்கியங்களை ஒருவன் படித்துத் திறனாய்வு செய்துகொண்டிருக்கின்றான்

என்றால் அவன் ஒரு திறனாய்வாளன். இலக்கணத்தைப் பற்றி ஒருவன் பேசிக்கொண்டிருக்கின்றான் என்றால் அவன் ஒரு நல்ல இலக்கணப் புலவன், சமயகுரவர் இயற்றிய பக்திப் பாடல்களைப் பாடிக் கொண்டிருக்கின்றான் எனில், அவன் ஒரு சமயவாதி. இவை எல்லாவற்றையும் ஒருவன் அறிந்திருந்தால் அவன் நன்கு கற்றுத் துறைபோகிய பேரறிஞன். இம் முறையே ஒட்டிப் பார்க்கும் போது நாட்டுப்புறப் பாடலைப் பாடுபவன் யார் என்று பார்க்கும் பொழுது அவ் வினாவிற்குச் சுருக்கமான விடை கூறிவிட முடியும். பேசத் தெரியாத குழந்தையைத் தவிர அனைவரும் நாட்டுப்புறப் பாடலைப் பாடுபவர்கள் ஆவார்கள்.

குடும்பம் முழுவதும் பாடும் பாடல்: ஒரு குடும்பத்தை எடுத்துக் கொண்டால் தாய், தந்தை, வயது வந்த மகன், மகள், விளையாடும் குழந்தைகள், அவர்கள் பண்ணையில் வேலை செய்யும் பண்ணையாள் என்று இப படிப் டலர் இருப்பர். இக் குடும்பத்தில் உள்ளவர்கள் எல்லாரும் நாட்டுப்புறப் பாடலைப் பாடுபவர்கள் அல்லது தெரிந்தவர்கள் ஆவார்கள். எனவே, இக் குடும்பம் முழுவதும் பாடல் மணம் வீசுகிறது எனலாம். மேலே கண்ட குடும்பத்தில் உள்ளவர்கள் ஒரே வகையான நாட்டுப்புறப் பாடலையே பாடுபவர்கள் என்று சொல்லி விட முடியாது. இவர்கள் தம் பருவத்திற்குத் தகுந்த பாடல்களைப் பாடுவார்கள்.

குழந்தை சில நேரங்களில் பொருள் புரிந்து கொள்ள முடியாத விளையாட்டுப் பாடல்களையும், பெற்றோர்கள் சொல்லித் தந்த பாடல்களையும் பாடும். தக்க பருவம் உடைய மக்கள் உணர்ச்சியுள்ள பாடலைப் பாடு

கின்றனர். தெய்வப் பாடல்கள் சில நிகழ்ச்சிப் பாடல்கள் இவற்றை இசைத்து வயது முதிர்ந்தவர்கள் தம் வாழ்நாளைக் கழிக்கின்றனர். வேலையாள் தொழில் பாடலைப் பாடிக் களைப்பைப் போக்கிக் கொள்கிறான். குழந்தை முதல் பெரியவனாகும்வரை ஒருவன் நாட்டுப் புறப் பாடல்களின் பல்வேறு வகைகளைத் தன் வாழ்நாளில் பாடுகின்றான். உதாரணமாகக் குழந்தையாக இருக்கும் பொழுது குழந்தைப் பாடல்களையும், வளர்ந்து அவன் காதலனாக வாழ்வு நடத்தினால் காதல் பாட்டுகளையும், தொழிலாளியாக இருந்தால் தொழிற்பாடல்களையும், முதியவனாக இருந்தால் சில நிகழ்ச்சிப் பாடல்களையும் பாடுகிறான். இதனால், முதியவனாக இருக்கும் ஒருவன் தன் வாழ்க்கைப் பாதையில் பலமுறை பலவகை நாட்டுப் புறப் பாடல்களைப் பருவத்திற்குத் தக்கபடி வளர்த்திருக் கின்றான் எனலாம்.

இருவகையினர் : நாட்டுப்புறப் பாடலைப் பாடு பவர்களை இரு வகையினராகப் பிரித்துக் கொள்ளலாம். அவற்றில் முதல் வகையினர் நினைவுக்கு வந்த பொழுது மட்டும் பாடி மகிழ்பவர்கள் என்றும், இரண்டாம் வகை யினர் பாடுவதையே தொழிலாகக் கொண்டவர்கள் என்றும் கொள்ளலாம். முதல் வகையில் நாட்டுப்புறப் பாடலின் பல பிரிவுகள் அடங்கும். இரண்டாம் வகை யில் சில பாடல்கள் மட்டும் அடங்குவனவாகும்.

முதல் வகையினர் : முதல் வகையில் காதல் புரியும் நாட்டுப்புற மக்கள் பாடாமலும் காதல் செய்ய முடியும். விருப்பினால் பாடியும் மகிழ்வர். அது போன்ற தாலாட்டு, ஒப்பாரி முதலியவற்றை விரும்பிப் பாடுவர். பாடாமலும் இருக்கலாம். தொழிலாளர்கள்

களைப்பைப் போக்கிக் கொள்ள உளமகிழ்ந்து தொழில் பாடல்களைப் பாடுகின்றார்கள். தொழிற் பாடல் தெரியா விட்டால் கடினப்பட்டாவது தொழிலை முடிப்பார்களே தவிர, பாட்டுத் தெரியவில்லை என்று வேலையை முடிக்காமல் விட்டுவிட மாட்டார்கள்.

இரண்டாம் வகையினர் : இரண்டாம் வகையினர் பாடுவதையே தொழிலாகக் கொண்டு அதன் மூலம் வாழ்க்கை நடத்துபவர்களேயாவர். அவர்களுக்குப் பாடுவதுதான் தொழிலாகும். பொழுது போக்கிற்காக மக்களைக் கூட்டிக் கதைப் பாடல்களைச் சொல்லுகிறவர்கள், பிச்சை எடுப்பதற்காகவே பாடுபவர்கள், நாடகங்களில் நடிகர்களாய் வந்து பாடுபவர்கள், வில்லுப் பாட்டுப் பாடு பவர்கள் முதலியோர் இவ்வகையைச் சேர்ந்தவர்கள். முதல் வகையினரைக் காட்டிலும் இரண்டாம் வகை யினரே நாட்டுப்புறப் பாடலைக் காப்பாற்றிக் கொண் டிருப்பவர்கள். இவ்விருவகைப் பாடல்களையும் பாடும் வகையினரை நோக்கும்பொழுது சில பாடல்களைப் பெண் களும் ஆண்களும் தனித்தனியாகப் பாடிவருகிறார்கள். சில பாடல்களை இருபாலாரும் பாடிவருகின்றார்கள்.

பெண்கள் பாடிவருவன : தாலாட்டு, ஒப்பாரி, கும்மிப்பாட்டு, கோலாட்டப் பாட்டு, திருமணப் பாட்டு வள்ளிப் பாட்டு, ஏசல் பாட்டு, ஊஞ்சல் பாட்டு, சீமந்தம், வளைகாப்பு, பூப்பெய்தல் போன்ற சடங்குப் பாடல்கள் பெண்களால் பாடப்பட்டு வரும் பாடல்வகைகளாகும். இப் பாடல்களை ஆண்பாலார் கலந்து பாடுவதில்லை எனலாம். வாழையடி வாழையாக இப் பாடல்களைக் காப்பாற்றி வந்த பெருமை தாய்ச் சமுதாயத்திற்கு என்றும் உண்டு.

ஆண்கள் பாடிவருவன : இனி ஆண்பாலார் பாடுவன ஏற்றப்பாட்டு, கரகப்பாட்டு, வில்லுப்பாட்டு, காவடிப் பாட்டு, போன்றவை. இங்கே பெண்கள் இடம் பெறுமல் போவதற்குக் காரணம் இப் பாடல்கள் பாடும் பொழுது செய்யும் செயல் ஆண்மக்கள் மட்டும் செய்யக் கூடியதாக அமைந்திருப்பதேயாகும். இத்தகைய நாட்டுப் புறப் பாடல்களைப் பாடிப்பாடி வளர்த்த புகழினை ஆண் மக்கள் அடைகின்றனர்.

இருபாலரும் பாடிவருவன : இவ்விரு பாலர்களும் சேர்ந்து பலவகைப் பாடல்களைப் பாடுவார்கள். அவை காதல்பாட்டு, நாற்று நடுகைப் பாட்டு, சூட்டிமிதிப் பாட்டு பண்டிகைப் பாடல்கள், தெம்மாங்கு, தருக்கப் பாட்டு, பொழுது போக்கும் கதைப் பாட்டு முதலியவையாகும். இப் பாடல்களை இரு பாலர்களும் பாடுடவர்களாகவும், வளர்ப்பவர்களாகவும் இருந்து வருகிருர்கள்.

இப்படி மனப்பக்குவம் பெற்றவர்கள் வளர்த்த பாட்டுகளோடு சிறு குழந்தைகள் குழந்தைப் பாடல்களைப் பாடுகின்றவர்களாகின்றனர். இவற்றைக் காப்பாற்றிய பெருமையை அப் பாடல்களைப் பாடுகின்ற சின்னஞ்சிறு குழந்தைகளும் பெறுகின்ருர்கள்.

நாட்டுப்புறப் பாடல்களைப் பாடுபவர்கள் குழந்தை முதல் பெரியவர்கள் வரை இருக்கின்ருர்கள். இவர்களின் நினைவாற்றலுக்கேற்ப நாட்டுப்புறப் பாடல்கள் இவர்களால் சீராட்டவும் பாராட்டவும் படுகின்றன.

———

௬. பாடப்படும் நேரமும் இடமும்

நேரம் :

நாட்டுப்புறப் பாடலை இந்த நேரத்தில்தான் பாட வேண்டும் என்ற விதியுண்டோ என்று பலர் கேட்க நினைக்கலாம். நாட்டுப்புறப் பாடலைப் பொறுத்த வரையில் இந்த நேரத்தில்தான் பாடவேண்டும், மற்ற நேரங்களில் கூடாதென்று ஒருசட்டம் போட்டால் அச்சட்டத்தினை நாட்டுப்புறப் பாடல்கள் மாற்றிவிடும் தன்மை வாய்ந்தன. ஒரு நாளில் எந்நேரத்திலும் பாடப்படும் பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்களாகும். பகலென்றும் இரவென்றும் பாராமல் இருகாலங்களிலும் நாட்டியமாடும் நங்கைபோன்றது நாட்டுப்புறப் பாடல்கள்.

நாட்டுப்புறப் பாடல்களின் எல்லாப் பிரிவுகளும் எல்லா நேரங்களிலும் பாடப்பட்டுக் கொண்டு இருக்கின்றன வென்பது இதனால் பொருளில்லை. இதனைப் பின்வரும் கருத்துகளால் மேலும் உணரலாம்.

குழந்தைகள் தாங்கள் விளையாட நினைத்த எந்த நேரத்திலும் பாடுவார்கள். காலையிலும், மாலையிலும் தான் ஓடி விளையாடுதல் என்ற கட்டுப்பாடு அவர்களுக்குப் பொருந்தாது. ஆகையால், குழந்தைகள் பாட்டைப் பாடும் நேரம் அவர்கள் அயர்ந்து தூங்கும் நேரத்தைத் தவிர எந்நேரமும் ஆகலாம். சிறு குழந்தையை உறங்கச் செய்யும் தாய் தன் குழந்தையைத் தூங்கச் செய்ய

வேண்டுமென்று நினைக்கும் பொழுது இரவானாலும் பகலானாலும் எந்த நேரத்திலும் தாலாட்டைச் சொல்லி உறங்க வைப்பாள். தாலாட்டு இந்நேரத்தில்தான் பாடப்படக் கூடியது என்று கூறிவிட முடியாது. தாலாட்டுப் பாடும் நேரத்தைக் குழந்தைதான் அறுதியிடுகிறது.

வழிபாட்டுப் பாடல்கள் இறைவனை வழிபாடு செய்யும்பொழுது பாடப்படுகின்றன. பகல் இரவு என்ற இரு வேளைகளிலும் பாடப்படுவன எனலாம்.

தொழிற் பாட்டுகள் அவ்வத் தொழில் நிகழும் பொழுது பாடப்படுவன. நடவுப் பாட்டு, அறுவடைப் பாட்டு, ஏற்றப்பாட்டு போன்றவை எக்காலமும் பாடப்படுவன அல்ல. முன் இரண்டும் நாற்று நடும் காலத்திலும் அறுவடைக் காலத்திலும் பாடப்படுவனவாகும். தோட்டத்திற்கும் வயலிற்கும் தண்ணீர் பாய்ச்ச நினைக்கையில ஏற்றப்பாட்டு எழும்பும். ஆற்றுப்பாய்ச்சலாக இருந்தால் ஏற்றப் பாட்டு இராது. வேண்டிய மழை பெய்துவிட்டால் ஏற்றப்பாட்டிற்கு வழியில்லை. ஏற்றப்பாட்டு அதிகாலையில் பாடப்படுவது எனலாம். ஓடப்பாட்டிற்கு நேரம் குறிப்பிட முடியாது எனலாம். பகலில் பெரும்பாலும் பாடப்படுவதானாலும் சிறுபான்மை இரவிலும் ஓடம் செல்லும் பொழுது பாடப்படுவதாகும். இரவிலே 'ஏலே-- லோ ஐலசா' என்ற சொற்கள் படகோட்டிகளை ஊக்குவிக்கும் மந்திரங்களாகின்றன.

சுண்ணாம்பு இடிப்போர் பாட்டு நீண்ட இடைவெளிகள் பெற்றுச் சந்தர்ப்பம் வருகின்ற பொழுது பாடப்படுவதாகும்.

மாரிக் காலத்தில் மழைப் பாட்டும் கொடும்பாவிப் பாட்டும் இல்லை. ஏசல் பாட்டு, கரகப்பாட்டு, காவடிப் பாட்டு இவை திருமண நிகழ்ச்சிகளிலும், ஆண்டவனிடம் வேண்டிக் கொள்ளும் போதும், நேர்த்திக்கடன் செய்கையிலும் பாடப்படுவனவாகும். திருமண நாளன்று பாடப் பட்டு அடுத்த திருமணம் வரும் வரை ஏசல் பாட்டு வகைகள் இடைவெளியைப் பெறுகின்றன.

காவடி, கரகப் பாடல்கள் இரண்டும் குறைவான மக்களால் ஆண்டுக் கொருமுறை பாடப்படுவனவாகும். விழாப்பாடல்கள் பல அவ்வக் காலங்களில் நினைவுக்குத் தக்கபடி இரவிலோ பகலிலோ பாடப்படுகின்றன. திரு விழாவை யொட்டிக் கும்மி, கோலாட்டப் பாட்டுகள் பாடப்படும். இவை இருவேளைகளிலும் பாடப்படும். கதைப் பாடல்கள், வில்லுப் பாட்டுகள், விளையாட்டுப் பாடல்கள் போன்றவை வேலை செய்யாத நேரத்தில் பலர் ஒருங்கு கூடியிருந்த இடத்தில் பாடப்படுவ னவாகும். இவை பெரும்பாலும் இரவிலேயேயிருக் கும். நிகழ்ச்சியைப் பொறுத்துப் பாடப்படும் நேரம் நீண்டு கொண்டே போகலாம். இவற்றில் சில இரவு முழுவதும் நடைபெற அவற்றைக் கேட்டுக்கொண்டு மக்கள் மெய் மறந்த நிலையில் அமர்ந்திருப்பதை இன்றும் காணலாம்.

காதல் பாட்டுகளும் ஒப்பாரிகளும் பாடப்படும் நேரத்தைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. மனித னுக்குக் காதல் தோன்றும் நேரத்தையும் இறப்பு வரும் நேரத்தையும் யாரால் உறுதியுடன் கூறமுடியும்? காதல் பாட்டு ஒலிக்கும் நேரம் காதலர்க்கே தெரியும். ஒப்பாரிப்

பாட்டு இறந்த நேரத்திலிருந்து பின்னும் தொடர்ந்து வருத்தம் தோன்றும் பொழுதும் பாடிக்கொண்டே யிருக்கக் கூடியதாகும். அம்மை நோய் வந்த பொழுது பாடப்படும் மாரியம்மன் தாலாட்டு மாசி அல்லது பங்குனி மாதத் தொடக்க முதலாகும் எனலாம்.

இடம் :

இப்படிப் பாடப்பட்டு வரும் நாட்டுப்புறப் பாடல்கள் பாடப்பட்டு வரும் இடத்தையும் சிறிது காணலாம். நிலத்தில் மட்டுமன்றி நீரிலும் பாடப்படும் சிறப்பினைப் பெற்றிருக்கின்றன நாட்டுப்புறப் பாடல்கள். பல பாடல்கள் வீட்டிற்குள்ளும் பல பாடல்கள் திறந்த வெளி களிலும் சில பாடல்கள் நீரின் மேலும் பாடப்படுவன வாகும். கொண்டாட்டப் பாடல்கள், தொழிற் பாடல்கள் போன்றவை திறந்த வெளியில் பாடப்படுவன. சில தொழிற்பாடல்கள் வீட்டில் பாடப்படுவதும் உண்டு. சில குறிப்பிட்ட இடங்களில் நிற்கும் பொழுது பாடாமல் இயங்கும் நிலையில் பாடப்படுவதும் உண்டு. இவற்றிற்கு எடுத்துக் காட்டாகக் கரகப் பாட்டு, காவடிப் பாட்டு, வண்டிக்காரன் பாட்டு, கொடும்பாவிப் பாட்டு முதலிய வற்றைக் குறிப்பிடலாம்.

நீரின் மேல் பாடப்படுவது ஓடப்பாட்டாகும். ஒப்பாரி, தாலாட்டுப் போன்றவை இல்லங்களுக்குள் பாடப்படுவன. சில நேரங்களில் வயற் புறங்களில் குழந்தையைத் தொட்டில் கட்டிப் படுக்க வைத்துத் தாலாட்டுவதும் உண்டு. ஓடித் திரிந்து விளையாடும் குழந்தைகளுக்குப் பாடும் இடம் சொல்ல முடியாது. காதல் பாட்டுக்கும் இடம் வரையறை இல்லை.

இவ்வாறாக இவற்றிற்கு நேரத்தையும் இடத்தையும் நாம் ஒருவாறு கூறினும் இதனைப் பாடுபவர்கள் மனத்தைப் பொறுத்துத்தான் அனைத்தும் இருக்கின்றன. இரண்டு நாட்கள் கடலிலேயே தொழில் செய்யும். தொழிலாளி ஒரே பாட்டைப் பாடி அலுத்துப் போய் அவனுக்குத் தெரிந்த ஏற்றப்பாட்டையோ, வயல் பாட்டையோ அல்லது தெம்மாங்கையோ பாடித் துடுப்புப் போட்டால் அவனைத் தவறு செய்து விட்டான் என்று எந்த இலக்கண, இலக்கியப் புலவனும் தண்டிக்கப் போவதில்லை. சில நேரங்களில் மற்றியும் பாடுவர்.

மொத்தத்தில் உலகில் எந்தப் பகுதியிலாவது எந்நேரத்திலும் ஏதாவது ஒரு நாட்டுப்புறப்பாடல் பாடப்பட்டுக் கொண்டிருக்கலாம்.

ரு. நாட்டுப்புறப் பாடல்களின் வடிவம்

மனிதன் என்று சொன்னவுடன் கால் முதல் தலைவரையுள்ள ஒரு தோற்றம் மனக்கண்முன் வருகின்றது. விலங்குகளில் ஒன்றை நினைத்தவுடன் அவ்விலங்கின் வடிவம் நினைவிற்கு வருகின்றது. ஏதாவது ஒரு பொருளின் பெயரைக் கூறியவுடன் அப் பொருளின் உருவம் உள்ளத்தில் தோன்றுகிறது. ஆதலின் வடிவம் என்பது மக்கள், மாக்கள், பொருள்கள் ஆகியவற்றிற்கெல்லாம் அமைந்திருக்கின்றது. இவ் வடிவ அமைப்பு இலக்கியங்கட்கும் உண்டு. குறள், குறுந்தொகை, நெடுந்தொகை, நற்றிணை, பெருங்கதை என இப்படி ஏதாவது ஓர் இலக்கியத்தின் பெயரைக் கூறும்பொழுது, அதன் வடிவம் தோன்றுவதுபோல நாட்டுப்புறப் பாடல் என்றவுடன் நமக்கு ஒரு வடிவம் தோன்றவேண்டும். இலக்கணம், இலக்கியத்திற்கு வேண்டிய வடிவினை வரையறை செய்கிறது. நாட்டுப் புறப் பாடல்கள் இப்படித்தான் பாடப்படவேண்டும் என்று இலக்கணம் எழுதப்படவில்லை. இலக்கியத்திற் குப் பிறகு இலக்கணம் பிறக்கும் என்ற முழு உண்மை யின் அடிப்படையில் நாட்டுப்புறப் பாடல்களை ஆராய்ந் தால் ஒரு வடிவினை அறியமுடியும்.

நாட்டுப்புறப் பாடல்கள் போதும் என்ற அள விற்கோ அல்லது மலைப்பும் திகைப்பும் ஏற்படும் அளவிற்கோ இன்னும் திரட்டப்படவில்லை. கைவசம்

உள்ள நாட்டுப்புறப் பாடல்களை "அசை" போடுவதி லேயே பெரும்பாலோரின் பொன்னான நேரம் வீணாகிக் கொண்டிருக்கிறது. குறைவாகச் சில பாடல்கள் கிடைத்திருக்கின்றன. அம் முறையில் நாட்டுப்புறப் பாடல்களின் வடிவத்தினைக் கீழ்க்காணும் வகையில் நோக்கலாம் :

எளிமை :— நாட்டுப்புறப் பாடல்களின் புறத் தோற்றம் அணி அலங்காரம் இல்லாத எளிமையே ஆகும். ஒப்பனைகளற்ற ஏழையைப்போன்று அவற்றி னுடைய எளிமைத் தோற்றம் அமைந்திருக்கிறது. குன்றன்ன பொருள் இழந்த கோவலன் மதுரைக்குக் கண்ணகியை அழைத்து வந்தபொழுது ஆய்ச்சியர் இல்லத்தில் ஒப்பனைகளற்ற கண்ணகியின் பிறவி யழகையும், எளிமையையும் "செய்யாக் கோலமொடு வந்தீர்" என்று கூறுவது போல நாட்டுப்புறப் பாடல்கள் "பிறவி எளிமை அழகு" உடையன ஆகும். இவ் வெளிமையே பாடல்களைப் படிக்கும் பொழுது படிப் பவர்களுக்கு அச்சமற்ற தன்மையைக் கொடுக்கிறது. பிறருக்குப் புரியாமல் எழுதுவதுதான் புலமை என்ற போலி எண்ணம் படைத்தவர்களிடம் இவ் வெளிமை யான பாடல்கள் மதிப்பின்மையை அடைந்தாலும் எண்ணற்றவர்களை வயப்படுத்துவது இவ் வெளிமையே ஆகும்.

நாட்டுப்புறப் பாடல்களில் சில வட்டாரங்களுக்குரிய வழக்குச் சொற்களைத் தவிர கூடியவரை, பொருள்கள் அறிந்துகொள்ள முடியாமல் இருப்பதில்லை. எந்த உணர்வினையும் அல்லது எந்த நிகழ்ச்சிகளையும் எடுத் துச் சொல்ல நினைக்கும் பொழுது தங்கட்குப் புரிந்ததைக்

கேட்பவர்களுக்கும் புரியும்படிப் பாடுகின்றனர். எளிதாகப் புரிந்து கொள்ளக்கூடிய இந் நிலைக்குக் காரணம் பேச்சு மொழியினைப் பாடல்களில் சேர்த்துவிடுவதால் எனலாம். புலவர்களைப் போன்று பழைமையான சொற்களையோ அல்லது இலக்கண வழுவற்ற அருஞ்சொற்களையோ நாட்டுப்புறப் பாடல்களைப் பாடுவோர் தேடுவதில்லை. ஆகவே, நாட்டுப்புறப் பாடல்கள் எளிமைத் தோற்றத்தினை உடையனவாக இருக்கின்றன.

எதுகை :— செய்யுள் இயற்றுவோர் விரும்பிச் செய்யும் இவ் வமைப்பை இலக்கண நூலார் எட்டுவகையாகப் பகுத்துள்ளார்கள். தமிழ்ப் புலவர்களால் அதிகமாகப் போற்றப்படும் எதுகை, ஐரோப்பியர் ஆங்கிலேயர் இவர்களால் மிகுதியாகப் போற்றப்படவில்லை.[1] எஸ். பி. ப்ரௌன் போன்றவர்கள் எதுகை தேவையற்ற அணி என்கின்றனர்.[2] செய்யுள் இயற்றுவோர் இவ்வணிக்காக நேரத்தை வீணாக்குவதால் மேற்கண்டவர்கள் இத்தகைய கருத்தினைக் கொண்டிருந்திருக்கலாம். நினைத்த நேரத்தில் வேண்டிய எதுகைகளைச் செய்யுளில் சேர்க்க முடியும் என்றால் எதுகையைத் தேவையில்லை என்று கூறமாட்டார்கள். ஆனால், தமிழ் மக்கள் செய்யுளில் மட்டுமன்றிப் பேச்சு வழக்கில்கூட எதுகைகளைச் சரளமாகப் பயன்படுத்துகின்றனர்.[3] நாட்டுப்புறப் பாடல்களில் தடுமாற்றமின்றி எதுகைகள் அமைந்து இருப்பது நாட்டுப்புறப் பாடல்களின் பண்பு

1. இலக்கியத்திறன் - பக். 209.
2. The Relam of poetry - page. 39.
3. அடி தடி, அக்கம் பக்கம், அக்கரைக்கு இக்கரை பச்சை.

களில் ஒன்றாகும். புலவர்களின் சிந்தனையில் உரு வெடுக்கும் எதுகையினை நாட்டுப்புறப் பாடல்களைப் பாடுபவர் எதுகை என்று அறியாமல் பாடுகின்றனர். எடுத்துக்காட்டாக எதுகை அமைந்திருப்பதற்குக் கீழ்க் கண்ட பாடல்களைக் கூறலாம் :

"ராசா வருவாரென்று
ரோசாப்பூ வாங்கிவந்தேன்—[1]
வாக்கப்பட்ட மூணாம்நாள்
பாக்கு தின்னப் பல்லுமில்லை—[2]
கத்திரித் தோட்டத்திலே—களை
கொத்துகிறார் பிள்ளையார்
அங்கேயும் போய்ப் பார்த்தேன்
எங்கேயோ பிள்ளையார்."[3]

மோனை :— எதுகையை விடத் தமிழில் மோனை மிகுந்த செல்வாக்கினைப் பெற்றிருக்கிறது. பாடல்களில் மோனை நிறைய இடம் பெறும். எதுகையைப் போன்று பேச்சிலும் பழமொழியிலும் மோனையையும் தமிழ் மக்கள் பயன்படுத்துகின்றனர்.[4] புகழ்பூத்த புலவர்கள் மோனைகள் வரப் பாடிப் புகழடைந்துள்ளனர்.[5] எதுகைகளைக் காட்டிலும் மோனைகள் மிகுதியாகப் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் பயன்படுத்தப்

1. காட்டு மல்லிகை - பக் 74.
2. காட்டு மல்லிகை - பக். 114.
3. பிறந்தது எப்படியோ - பக். 6.
4. கொள்வினை கொடுப்பினை, சிங்கத்தின் காட்டை சிறுநரி வளைத்தாற்போல.
5. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை. — திருவள்ளுவர்.

படுவதால் பாடல்களிலும் எதுகைகளை விட மோனைகள் நிரம்பி உள்ளன. நாட்டுப்புறப் பாடல்களில் மோனைகள் முதலிடம் பெற்றிருக்கின்றன எனலாம்.

> "கருப்புப் புடவை திருப்பிக்கட்டி
> கடைத்தெருவே போற பெண்ணே—உன்
> காலடிச் சத்தம் கேட்டுக்
> கலங்குதடி என் மனசு
>
> x x x
>
> தடத்திலே தான் பூவிருக்கத்
> தங்கச் சரம் தானிருக்கத்
> தட்டுக் கெட்ட அத்தை மகன்
> தங்கச்சியை மாலையிட்டார்"[1]
>
> x x x

நாட்டுப்புறப் பாடல்களில் சீர்கள் தோறும் மோனைகள் வருவதும் உண்டு. இத்தகைய மோனையும் எதுகையும் தான் நாட்டுப்புறப் பாடல்களுக்கு இசை உலகில் ஒரு சிறப்பான இடத்தைத் தந்திருக்கின்றன.

அடி இயைபு :- இலக்கணத்தில் பாட்டின் அடி தோறும் இறுதிச் சீர் இயைந்து வருவதனை அடி இயைபு என்பர். இவ்வடி இயைபு பாட்டின் ஓசையினை இயைபு படுத்தி நீரோட்டம் போன்ற பாவோட்டத்தினைச் செலுத்தும் பெற்றியது. இவ்வகை அடி இயைபு நாட்டுப்புறப் பாடலிலும் உண்டு.

> "எட்டிப்பறி பூவை! விட்டு விடு அரும்பை
> தாவிப்பறி பூவை! தள்ளிவிடு அரும்பை
> ஓடிப்பறி பூவை! ஒதுக்கிவிடு அரும்பை
>
> x x x

1. காட்டு மல்லிகை - பக். 98.

"ஆனைகொண்டேன் ! குதிரை கொண்டேன்
ஆட்டுக்கடா தானுங் கொண்டேன்."

x x x

"நெல்லு குத்துற பெண்ணே
ஏம்மா பார்க்கிறே என்னே
உன் புருஷன் வரான் பின்னே
புடைச்சுப் போடு முன்னே
ஆ ஹிங்—ஊ ஹிங்."[1]

ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியை வருணிக்கும் பாடலில் அடிதோறும் இறுதியில் ஒரே சொல் தனிச்சொல் போலத் தொடர்ந்து வரும்.

"காசாங் காட்டுச் சந்தைக்குப்
போனேன்—சந்தமாமா
காசுக்கு ரெண்டு குருவி
வாங்கினேன்—சந்தமாமா
கண்ணுமில்லை
காதுமில்லை—சந்தமாமா
காலு மூணு வாய்
இரண்டு—சந்தமாமா
அரிந்து கிரிந்து அடுப்பில்
போட்டேன்—சந்தமாமா
திறந்து பார்த்தேன்
பறந்து போச்சு—சந்தமாமா"[2]

x x x

"சட்டை மேலே சட்டைபோட்டு—உங்கப்பன்
சரிகை சட்டை மேலே போட்டுத்
தலைச்சவரம் பண்ணிக்கிட்டு—உங்கப்பன்
தலைப்பாவும் வச்சிட்டு

1. காட்டு மல்லிகை - பக். 38, 12, 77.
2. காட்டு மல்லிகை - பக். 35, 36.

நெல்லிக்குப்பம் போறதுக்கு—உங்கப்பன்
நெற்றியிலே பொட்டுவச்சு
புதுக்கோட்டை போறதுக்கு—உங்கப்பன்
புருவமெல்லாம் மையெழுதி.''[1]

சொல்லடுக்கு :— குறிப்பிட்ட ஒரே சொல் இரு முறை அடுத்தடுத்து வருவதுமுண்டு.

எட்டி எட்டிப் பார்க்கும்
வட்ட வட்ட நிலவோ
துள்ளித் துள்ளிச் சிரிக்கும்
தும்பைப் பூவு நிலவோ

x x x

நிலா நிலா வா வா !
கொத்துக் கொத்து ஈச்சங்காய்

x x x

ஈச்சங்காய் ஈச்சங்காய்
வாங்க வாங்க அத்தானே !—[2]

x x x

சின்னச் சின்னச் செடிகுலுங்க
தக்காளி ! தக்காளி! தையல்முத்தே—[3]

x x x

ஆத்திலே தான் பொன்னம்மா
அடுக்கரளி அடுக்கரளி
அடுக்கடுக்கா பொன்னம்மா
பூத்திருக்கப் பூத்திருக்க

1. *மலையருவி - பக். 227.*
2. *மலையருவி - பக். 268, 262, 197.*
3. *காட்டு மல்லிகை - பக். 51, 57.*

கொத்துக் கொத்தா பொன்னம்மா
கொத்தரளி கொத்தரளி
கொண்டையிலே பொன்னம்மா
பூத்திருக்கப் பூத்திருக்க.''[1]

தொடரடுக்கு :— ஒரே சொற்றொடர் அடுத்து மற்றொரு சொற்றொடர் வந்த பிறகு மீண்டும் திரும்ப வருதலும் உண்டு.

''தண்ணீர்க் குடத்தைத் தலையில் வைத்து
தாளம் போட்டவளே—ராசாத்தி!
தாளம் போட்டவளே
கோயிலுக்குப் போற வழியின்மேலே
குளத்தைப் பார்த்தவளே—ராசாத்தி
குளத்தைப் பார்த்தவளே
கூடவந்த தாதிப் பெண்ணுக்குக்
கூலி கொடுத்தவளே—ராசாத்தி
கூலி கொடுத்தவளே
தண்ணிக்கு வராத தாதி பெண்ணுக்குத்
தண்டனை கொடுத்தவளே—ராசாத்தி
தண்டனை கொடுத்தவளே.''[2]

சிலப்பதிகாரத்தில் உள்ள வரிப் பாடல்களுடன் ஒத்து நோக்குதற்குரிய இத்தகைய அமைப்பு நாட்டுப்புறப் பாடல்கள் மறந்து போகாமல் இருக்கவும் உதவியது எனலாம்.

வந்தவை வரல் :— கேட்ட கேள்வியே பாடலில் திரும்பத் திரும்ப வரும். ஆனால், அக் கேள்விக்கு விடை மட்டும் வேறு வேறாக அமைந்திருக்கும்.

---

1. நாடோடிப் பாடல்கள் - 17.
2. மலையருவி - பக். 47.

"ஏண்டி குட்டி என்னடி குட்டி
என்னடி செய்தாய்?
அம்மியடியில் கும்மியடித்தேன்
சும்மாவா இருந்தேன்?
ஏண்டி குட்டி என்னடி குட்டி
என்னடி செய்தாய்?
ஆட்டுக்குட்டிக்கு ஆறுதல் பண்ணினேன்
சும்மாவா இருந்தேன்?
ஏண்டி குட்டி என்னடி குட்டி
என்னடி செய்தாய்?
பாம்புக் குட்டிக்குப் பல் விளக்கினேன்.
சும்மாவா இருந்தேன்."[1]

நாட்டுப்புறப் பாடலின் வடிவம் நீண்டு அமைந்திருப்பதற்கு இத்தகைய அமைப்புகள் காரணம் எனலாம்.

விரித்துச் சொல்லுதல் :— மேற்கண்ட அமைப்புப் போலல்லாமல் நாட்டுப்புறப் பாடலில் ஒரு நிகழ்ச்சியைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்காமல் விரிவாகப் பாடிக் கொண்டிருப்பதும் உண்டு. நாட்டுப்புறப் பாடல்களின் குறிப்பிடத்தக்க குணங்களில் ஒன்றான இவ்வகையில் நடக்க முடியாதவையும் இல்லாதவையும் பாடலில் வந்து கொண்டே இருக்கும். இப்படி விரித்துப் பாடுவதால் சில நேரங்களில் அத்தகைய பாடல் சிறிது கதைத் தன்மையினைக்கூடப் பெற்று விடுகின்றது. உதாரணமாகக் கீழ்க்கண்ட ஒரு பாடலில் காதலனும் காதலியும் சந்தைக்குச் சென்று சில பொருள்கள் வாங்கவேண்டும் என்று பேசிக்கொள்கின்றனர். அவர்கள் ஒரே ஒரு சந்தைக்குச் சென்று

1. ஈழத்து நாடோடிப் பாடல் - பக். 7.

சில பொருள்கள் வாங்க நினைத்தாலும் அவர்கள் எண்ணத்தின் விரிவு பாடலைக் "காப்பியம்" போல் விரித்துச் செல்கின்றது.

"மானா மதுரைச் சந்தையிலே—ஏலங்கடிலேலோ
மருக் கொழுந்து வாங்கணும்—ஏலங்கடிலேலோ
என்ன செய்யலாம் மாமா—நாம்
ஏது செய்யலாம் மாமா."

என்று காதலனைப் பார்த்துக் காதலி பாடலை ஆரம்பிக்க, அதற்குக் காதலன்,

"மானா மதுரைச் சந்தையிலே—ஏலங்கடிலேலோ
மருக் கொழுந்து வாங்கித் தரேன்—ஏலங்கடிலேலோ
இன்னும் என்ன வேணும் பெண்ணே—உனக்கு
ஏது வேணும் கண்ணே"[1]

என்று விடை சொல்லத் தொடங்குவான். இப் பாடலில் தாடிப்பத்தி, மண்டபம், குத்தாலம், செட்டிகுளம், பூலத்தூர், செவ்வாய்ப் பேட்டை, மஞ்சக்குப்பம், வேலூர், ஆரப்பாளையம், வாணியம்பாடி, வட மதுரை, மூக்குப்பேர், காரைக்கால், பில்லானூர், காரைக்குடி, பாபநாசம், ஒலவக்கோடு, வைகையாறு, மயிலாடி வந்தவாசி, நந்திரபாடி, பட்டுக்கோட்டை, நாட்டுக் கோட்டை, காசுக்கடை, பம்பாய், ஆடலூர், கோயம் புத்தூர், நெய்யூர், நல்லகறுப்பன் பட்டி, காயங்குளம், தண்டி, கொழும்பு, நாகலாபுரம் முதலிய ஊர்ப் பெயர்கள் வருகின்றன. அந்தப் பாடலில் வரும் ஊர்ப் பெயர்களின் முதலெழுத்திற்கு மோனையாக வரும் முதலெழுத்தைக் கொண்ட பொருள்கள் அந்தந்த ஊர்ச் சந்தைகளில் வாங்கத் தக்கனவாகக் கூறப்படும். (பம்பாய்—பாவாடை, ஆடலூர்—ஆடு, நெய்யூர்—நெய்)

1. *மலையருவி - பக். 108.*

வாய்மொழியாக உள்ள நாட்டுப்புறப் பாடல்கள் மறைந்து போகாமல் இருந்தமைக்கு இத்தகைய அமைப்பும் ஒரு காரணம் என்று கூறலாம்.

அடிவரையறை : நாட்டுப்புறப் பாடலில் அடிவரையறை காண்பது ஓர் இன்பமாகும். இலக்கணத்திற்குக் கட்டுப்பட்ட இலக்கியப் பாக்கள் அடிவரையறைக்கு உட்பட்டவை. நால்வகைப் பாக்களானாலும் அல்லது அவற்றின் இனமானாலும் அடிவரையறை இவ்வளவு என்று கூறிவிட முடியும். நாட்டுப்புறப் பாடல்கள் இத்தனை அடிகள் உடையதாக இருத்தல் வேண்டும் என்று வரையறைத்துக்கூற இலக்கணம் இல்லை. பிறந்த குழந்தை வளர்வதைப் போன்ற வளர்ச்சியும் வளர்ந்த மனிதன் சில நோய்களால் தேய்வதுபோன்ற குறைகளையும் காலப்போக்கில் நாட்டுப்புறப் பாடல்கள் அடையும். எந்தப் பாடலும் பிறந்த பொழுது இருந்த சொற்களுடன் இன்றைக்கும் இருக்கின்றது என்று உறுதியாகக் கூறிவிட முடியாது. இன்றைக்குப் பாடல்களுக்கு இருக்கும் அடிவரையறை நாளைக்கு இராது. நினைத்தவர்கள் எல்லாம் தங்கள் ஆற்றலுக்குத் தக்கபடி அவ்வளர்ப்பு மகளை ஒப்பனை செய்து பார்ப்பதால் அதன் உயரமும், அகலமும் ஒரு நிலையில் இல்லாமல் மாறிக் கொண்டே இருக்கின்றது.

இவ்வளவுதான் அடிவரையறை என்று சொல்ல முடியாவிட்டாலும் பாடல்களின் பொருளுக்கேற்ப அடிகளின் அளவு ஒரு குறிப்பிட்ட எல்லையில் அமையலாம். சடுகுடுப்பாட்டு குழந்தைகளுக்குப் பாடும் பாட்டு முதலிய பாடல்களில் அடிகள் மிகுதியாக நீண்டுவிட

முடியாது. கதைப் பாட்டுகள் முதலியவற்றின் அடிகள் பாடுவோர் மனத்திற்கும் செயல் முறைக்கும் ஏற்ப நீண்டுகொண்டே போகலாம்.

உதாரணமாக எண்கள் அமையப் பாடப்படும் பாடல்கள் செயல் முடியும் வரை நீண்டுகொண்டு போவதற்கு இரண்டு எடுத்துக்காட்டுகளைக் காண்போம்.

"ஒரு கல்லு வீசவே! ஒரு கல்லு சோரவே!
ரெண்டு கல்லு வீசவே! ரெண்டுகல்லும் சோரவே!
மூன்று கல்லு வீசவே! மூன்று கல்லும் சோரவே"[1]

இது கும்மிப்பாடல் ஆகும். எவ்வளவு நேரம் ஆட நினைக்கிறார்களோ அந்நேர அளவிற்கு எண்களைச் சேர்த்துக் கொண்டே போவார்கள்.

"ஒரு கப்பல் ஓடிவர—ஐலலோ
ஓடிவர—ஐலலோ
ஓடிவர—சொல்லம்மா சொல்லு
ரெண்டு கப்பல் ஓடிவர—ஐலலோ
ஓடிவர ஓடிவர—ஐலலோ
ஓடிவர ஓடிவர—சொல்லம்மா சொல்லு."[2]

இப் பாடல் கடலில் செல்லும் படகோட்டி கரைக்குத் திரும்பும்வரை துடுப்புப் போடும்பொழுது நீண்ட துணையாக இருக்கப் பாடிக்கொண்டிருக்கும் பாடலாகும். இப்படி ஓரளவு அடிவரையறை கூறினும் பாடல்களில் தேய்வும் வளர்ச்சியும் தவிர்க்க முடியாதன.

---

1. *காற்றில் வந்த கவிதை - பக். 111, 112.*
2. *காற்றில் வந்த கவிதை - பக். 114.*

பாடவேறுபாடு : இலக்கிய இலக்கணங்களில் சில சொற்கள் அல்லது சில எழுத்துகள் ஏட்டிற்கு ஏடு மாறி இருப்பதனைப் பாடவேறுபாடு என்று கூறுவார்கள். அப் பாட வேறுபாடுகளினால் பொருள்கள் மாறுவதுண்டு. "கொன்றச் சிலம்பு கொணர்க" என்ற பாடத்திற்கும், "கொல்லச் சிலம்பு கொணர்க" என்ற பாடத்திற்கும் எவ்வளவு மாறுபாடு இருக்கின்றது? நம் இலக்கியங் களில் பாடவேறுபாடுகள் வரக்காரணம் ஓர் ஏட்டிலிருந்து அம் மூலத்தை மற்றோர் ஏட்டிற்கு எடுத்து எழுதும் பொழுது மாறிவிடுவதே ஆகும்; அல்லது 'இறையனார் களவியல் உரை' போன்று பல மாணவப் பரம்பரையினர் சொல்லிவர வேறுபாடு வருவதும் உண்டு. பெருங் காப்பியமான கம்பராமாயணம் நிறைந்த பாடவேறுபாடு களைப் பெற்றிருக்கிறது. பன்னெடுங்காலமாக ஏட்டிலும் அச்சிலும் ஏறாமல் மனதிலேயே நின்று நினைத்தபொழுது மட்டும் நடமாடும் நாட்டுப்புறப் பாடல்களில் பாட பேதங்கள் நிறைய உண்டு. பயிற்சியில் அதிகமாக உள்ள பாடல்களும் உண்டு. ஆண்டுக்கொருமுறை வழங்கிவரும் பாடல்களிலும் நினைவு தப்பப் பாடபேதம் ஏற்படுவதும் உண்டு. எடுத்துக்காட்டாக,

"வாட வெத்தலை வதங்க வெத்தலை
வாடி மீனாட்சி
உன் புருஷன் கோவக்காரன்
போடி மீனாட்சி
நேற்றுவச்ச சந்தனப் பொட்டு
நெற்றிக்கு நல்லால்லே
குருவி கொத்தின ரோசாப்பூவு
கொண்டைக்கு நல்லால்லை."[1]

---

1. *காதல் வாழ்வு - பக். 69.*

என்று வழங்கிவரும் ஒரு பாடல்,

"வாட வெற்றிலை வதங்க வெற்றிலை
வாய்க்கு நல்லால்லை
குருவி குடைந்த கொய்யாப்பழம்
கொண்டைக்கு நல்லால்லை."[1]

என்ற வடிவத்திலும் வழங்கி வருகின்றது. இக் கருத்திற்கு மற்றொரு பெருவழக்கமான பாடலையும் உதாரணமாகக் காணலாம்.

"ஊரான் ஊரான் தோட்டத்திலே—யாரோ
ஒருத்தன் போட்டானும் வெள்ளரிக்காய்—அதைக்
காசுக்கு ரெண்டு விற்கச் சொல்லி
காயிதம் போட்டாண்டி வெள்ளைக்காரன்"

என்று குழந்தை முதல் பெரியவர் வரை எல்லோராலும் தமிழகத்தில் மட்டுமின்றி இலங்கையிலும் பாடப்பட்டு வரும் இப் பாடல் 'கும்மிப்' பாட்டொன்றில் வேறொரு வடிவத்தில் வழங்கி வருகின்றது.

"ஊரான் ஊரான் தோட்டத்திலே—அங்கே
ஒருத்தன் போட்டது வெள்ளரிக்காய்
காசுக்கு ஒண்ணெண்ணு விற்கச் சொல்லி—அவன்
காகிதம் போட்டானும் வேட்டைக்காரன்."[2]

என்று வெள்ளைக்காரன் வேட்டைக்காரனாக மாறப் பாடப்பட்டு வருகின்றது. சொற்களும் சொற்றொடர்களும் பாடல்களில் மாறி இருந்தாலும், பாடல்களின் முக்கியப் பொருள் பெரும்பாலும் புதிய உருவத்தில் வளர்ந்து விடாமலிருக்கின்றது.

1. மலையருவி—பக். 272.
2. மலையருவி - பக். 290.

பாடல்களைப் பாடி வந்தவர்கள் இவ்வாறு பாட வேறு பாடுகளோடு பாடல்களைச் சொல்லி வருவதோடு மட்டு மின்றி நாட்டுப்புறப் பாடல்களைப் புத்தக வடிவில் வெளி யிட்டவர்கள் பாடல்களின் சில வேறுபாட்டினைச் செய்து வெளியிட்டிருப்பதாகவும் தெரிகின்றது. பாடல்களை எடுத்துச் சொல்லுகின்றவர்கள் பாடல்களில் அமைந் திருக்கும் கொச்சைச் சொற்களை இலக்கிய வடிவச் சொற் களாக்கிப் புதுத் தோற்றத்தினைக் கொடுத்தும் பேசுகின் றார்கள். உருவத் தோற்றத்தில் நேற்றைய தோற்றம் இன்றில்லை என்பதுபோல நாட்டுப்புறப் பாடல்களும் விளங்குகின்றன.

நாட்டுப்புறப் பாடலை நன்றாக வேரோடிய ஒரு காட்டுமரத்திற்கு ஒப்பிட்டு அம் மரம் புதிய கிளைகளையும் பழங்களையும் பெற்றுக்கொண்டிருக்கும் தன்மை உடையது என்று இரால்ப் வான்கன் வில்லியம் கூறுகின்றார்.[1]

மூலவடிவத்தை யாரும் கண்டதில்லை; ஆதலால் உலகப் பொதுச் சொத்தாகிவிட்ட நாட்டுப்புறப் பாடலின் வேறுபாட்டைக் கண்டு உண்மையான பாடல் எது என்று உறுதியாகக் கூற முடியாது.

---

1. Indeed a folk song is either new or old. It is like a forest tree with its roots deeply buried in the past new leaves; new fruit which continually puts forth new branches new leaves new fruit-Ency-Britanica Vol. 9, 14th edition.

எனவே, பல்வேறுபட்ட நாட்டுப்புறப் பாடல்களின் வகைகளைக் காணும் பொழுது, நாட்டுப்புறப் பாடல்களின் வடிவம் என்ன என்று தெரியாத நிலைமை மறைந்து எளிமை, எதுகை, மோனை, அடி இயைபு, சொல்லடுக்கு, தொடரடுக்கு, வந்ததை வரல், விரித்துச் சொல்லுதல், அடிவரையறை, பாடவேறுபாடு போன்ற உறுப்புகள் நாட்டுப்புறப் பாடல்களுக்கு ஒரு வடிவினை உண்டாக்கித் தோற்றத் தெளிவினைத் தருவதை உணரலாம்.

————

௧௦. வரலாற்றுத் துணைக்கருவி

"வரலாறு என்பது ஆரவாரமற்ற நிலைத்த வளர்ச்சி யுள்ள மக்கள் சமுதாயத்தின் சமூக சமய வளர்ச்சியைப் பற்றியும், தாம் வாழும் நில அமைப்புக்கும், தட்ப வெப்ப நிலைக்கும் ஏற்ப மக்கள் அமைத்துக் கொள்ளும் வாழ்க்கை முறை பற்றியும், வளர்ச்சியுற்ற பல்வேறு நாகரிகங்களும் பண்பாடும் கொண்ட மக்களினத்தவர் ஒருவரோடொருவர் கலந்து பழகும் முறைகள் பற்றியும், அன்றாட வாழ்வில் அவர்கள் மேற்கொள்ளும் உணவு உறையுள் பற்றியும், அவற்றை ஆக்கி அளிக்கும் முறைகள் பற்றியும் அவற்றை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும் பண்பாடு பற்றியும் ஓய்வு வேளையில் அவர்கள் மகிழ்வோடு விளையாடிய விளையாட்டுகள் பற்றியும், அவர்தம் உள்நாட்டு வெளி நாட்டு வாணிபவளன் பற்றியும் பொருளாதார ஏற்றத் தாழ்வு பற்றியும், அவர்தம் கல்வி வளர்ச்சி பற்றியும் கூறுவதேயாகும்"[1] என்ற கருத்து வளர ஆரம்பித்திருக் கிறது. ஏற்றுக்கொள்ளக்கூடிய இக்கருத்திற்கேற்ப வரலாறு அமைய வேண்டும் என்றால் நாட்டுப்புறப் பாடல்களையும் வரலாற்றினை அறியப் பயன்படும் ஏனைய மூலங்களோடு (Sources) சேர்த்துக் கொண்டாலன்றி எழுத நினைக்கும் ஒரு நாட்டினுடைய வரலாறு முழுமை யாக அமையாது.

ஒரு நாட்டின் வரலாற்றினை அறிய வரலாற்று அறிஞர்கள் கீழ்க்கண்டவற்றை மூலங்களாகக் கொள் கின்றனர்.

---

1. *தமிழக வரலாறு – பக். 111.*

1. கல்வெட்டுகள், பட்டயங்கள்
2. புதைபொருள்கள், நாணயங்கள்
3. வெளிநாட்டார் எழுதி வைத்த குறிப்புகள்
4. இலக்கியங்கள்
5. எழுத்தின் அமைப்பும், மொழியின் வளர்ச்சியும்
6. கர்ண பரம்பரைக் கதைகள்
7. கட்டடங்களும் கலைகளும்
8. நில அமைப்பு

மேற்கண்ட வரலாற்று மூலங்கள் ஒரு நாட்டினுடைய வரலாறு எழுதத் துணைபுரிவதனைப்போல நாட்டுப்புறப்பாடல்களும் மனம் நிறைவடைகின்ற அளவிற்கு ஒரு நாட்டினுடைய வரலாற்றினை எழுதப் பேருதவி புரிகின்றன. வரலாற்றறிஞர்கள் இப் பாடல்களையும் சேர்த்து ஆராய்வார்களேயானால் அவர்கள் கண்ட வரலாறு முழுமை அடைந்திருப்பதையும் உணர்வர்.

உலகில் உள்ள எல்லா நாடுகளின் வரலாறுகளும் எழுத மேற்கண்ட மூலங்கள் கைகொடுத்து உதவுகின்றன என்று கூறிவிட முடியாது. வரலாற்றை எழுத நினைக்கையில் மூலங்கள் அற்ற நாடுகள் உலகில் பல உண்டு. வரலாற்று மூலங்கள் அந் நாடுகளில் இல்லாவிட்டாலும் அந்நாட்டு மக்களிடையே பரம்பரை பரம்பரையாக வழங்கி வரும் பாடல்கள், கதைகள் முதலியன அவர்களிடம் கட்டாயம் உண்டு. வரலாற்று மூலங்கள் கிடைக்காத நாட்டில், அந் நாட்டு வரலாற்றினை எழுதப் பரம்பரையாகப் பாடப்பட்டுவரும் பாடல்களும் கதைகளும் உதவுகின்றன. இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டையும் கூறலாம். அமெரிக்காவிற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் இடையிலுள்ள தென்பசிபிக்கடல் தீவில் போலினீசியன்

(Polynesian) என்ற இனத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர். போலினீசியன் இனத்தவர்களுக்கு வரிவடிவம் பெற்ற மொழியோ, அல்லது புதைபொருள் போன்ற ஏனைய வரலாற்றுமூலங்களோ, அவர்களது பெருமையை அல்லது சிறுமையை எடுத்துக் கூறவில்லை. அம் மக்கள் தமது அடிநாள் வரலாற்றையும் அவர்களின் ஏனைய வரலாறுகளையும் மனப்பாடம் செய்யப்பட்ட வாய்மொழிப் பாடல்கள் மூலமாகவும் புராணக் கதை வடிவிலும் கூறி வருகின்றனர்.[1] அம் மக்கள் அப்பாடல்களையும் கதைகளையும் மனப்பாடமாக ஒப்பித்து வருவதற்குப் பள்ளி ஒன்றில் பயிற்சி பெறுவதுண்டு. தவருக ஒப்பித்து விட்டால் கடவுளின் ஒறுத்தலுக்கு ஆளாகி விடுவோம் என்ற நம்பிக்கையும் உடையவர்கள். தாங்கள் நடத்தும் பெரிய விருந்து ஒன்றில் இத்தகைய பாடல்களைப் பாடும் வழக்கத்தை அவர்கள் கையாண்டு வந்திருக்கின்றனர். இப்படி இவர்கள் பாடிவரும் பாடல்கள் மூலம் இவர்களின் வரலாற்றினை அறிய முடிகிறது.

பல்வேறுபட்ட இனத்தார்கள் அடங்கிய ஒரு தீவு போலினீசியத் தீவாகும். அத் தீவில் நியூசிலாந்துப் (Newzealand) பகுதியில் மோவிக் குடியினர் என்ற இனத்தார்கள் வாழ்கின்றார்கள். இவர்கள் ஹாவாய் (Hawai) என்றஇடத்திலிருந்து நியூசிலாந்துப் பகுதிக்குக் குடியேறியவர்கள் ஆவார்கள். மோவிக் குடியினர் தாம் பாடிவரும் பாடல்களில் இவ் வரலாற்றினைக் கீழ்க் கண்டவாறு பாடி வருகின்றனர்.

---

1. Polynesians Explore of the Pacific—3.

"We came from Hawaiki—the great
From Hawaiki—the long from Hawaiki
—the Distant."[1]

மோவிக் குடியினர் தம் வரலாற்றினை வாய்மொழிப் பாடல்கள் கதைகள் மூலம் சொல்லி வருவதனால் அவ்வினத்தாரின் தோற்றம், பழக்க வழக்கம், மதம், வாழ்க்கை முறைகள், அவர்களின் தலைவர் முதலியவற்றைப் பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது.

நாட்டுப்புறப் பாடல்கள் இலக்கியங்களின் உதயத்திற்குமுன் எழுந்த பழைமைச் சிறப்புடையனவாகும். மனித வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை அமைந்த பல்வேறு கட்டங்களிலும் அப் பாடல்கள் பாடப்படுகின்றன ; ஒப்பனைகளற்ற ஒரு கிராமத்துப் பெண்ணைப் போன்று மெருகும், புனைந்துரையும் ஒப்பனைகளும் பெறாதவை. அதனால் நாட்டுப்புறப் பாடல்கள் ஒரு நாட்டினுடைய உண்மைத் தன்மையையும், அந் நாட்டுக் குடிமக்களின் பண்பாடுகளையும் தெள்ளத் தெளியக் காட்டும் சிறப்பினைப் பெற்றிருக்கின்றன.[2]

இப் பாடல்களை வரலாற்று மூலமாகக் கொண்டால் ஏதோ ஒன்றிரண்டு வரலாற்றுக் குறிப்புகள் மட்டும் கிடைக்கின்றன என்றில்லாமல் கீழ்க்கண்ட துறைகளில் வரலாறுகளை எல்லாம் எழுதுவதற்கு உதவி புரிவனவாக அமைந்திருக்கின்றன. அவை :

1. Polynesians Explore of the Pacific—5.

2. It (Folk songs) must express as much as possible with easiest and must natural way a complete vehicle of feeling and music. So that it truly reflects the nature of the Country and the characteristics of its people—The message of music—198.

1. சமுதாய இயல் (sociology)
2. இலக்கியம்
3. மொழியியல் (Linguistics)
4. நுண்கலை (fine arts)
5. நாட்டு வரலாறு

இனி, நாட்டுப்புறப் பாடல்கள் இத்துறை அறிஞர்களுக்கு எவ்வகையில் வரலாறு எழுத உதவுகின்றன என நோக்குவோம்.

சமுதாய இயல் அறிஞர்களுக்கு

சமுதாய இயல் அறிஞர்கள் மனித வரலாற்றினை (Anthropology) உடற்கூறு வரலாருகவும் (Phycical Anthropology) பண்க்ாட்டு வரலாருகவும் (Cultural Anthropology) இரு பிரிவுகளாக ஆராய்கின்றனர்.

உடற்கூறு வரலாற்றில் மனித இனத்தின் தோற்றம், வளர்ச்சி, உறுப்புகளின் வளர்ச்சி, பிற இனத்தாருடன் மாறுபட்டிருக்கும் விதம் முதலியன ஆராயப்படுகின்றன. பண்பாட்டு வரலாற்றில் ஓர் இனத்தாருடைய பழக்க வழக்கங்கள், எண்ணங்கள், சமுதாய அமைப்பு முதலியன ஒரு காலத்திலிருந்து மற்றொரு காலத்திற்கு எப்படி வருகின்றன என்பதனை ஆராய்கின்றனர்.[1]

---

1. The Science of Anthropology is divided into two broad fields, Physical and cultural anthropology. Phycical anthropoligists study such matters as the nature of Racial differences the inheritance of bodily traits; the growth, development and decay of the human organism; the influences of the natural environment of man; Cultural anthropoligists study the ways man has devised to cope with natural setting and his social milieu and how bodies of customs are learned retained and handed down from one generation to the next.

—Cultural Anthropology-4.

அவ்வாறு ஆராயும் இவ்வறிஞர்கள் ஒரு குறிப்பிட்ட இனத்தின் வரலாற்றினை எழுத நினைக்கையில் நுனிப்புல் மேயும் பழக்கத்தைக் கொண்டிருப்பதில்லை. ஆராயப் புகுந்த இனத்தாரின் நாட்டுப்புறப் பாடல்களை மட்டு மன்றி, அவ்வினத்தாருடைய பழக்க வழக்கங்கள், நம்பிக் கைகள், எண்ணங்கள், கதைகள், புராணங்கள், பழமொழி கள், இசை, நாடகம், கலைகள், தெய்வங்கள் முதலிய வற்றை எல்லாம் நுணுகி ஆய்வர். இவை அனைத் தையும் நாட்டுப்புறக் கலைகள் (Folk lore) என்று அழைப்பர். உலக முழுதும் உள்ள இன வரலாறு இவ்வறிஞர்களால் இன்று இவற்றின் உதவியினுல் ஆராயப்பட்டு வருகின்றன. நாட்டுப்புறக் கலைகள் மூலம் இனவரலாறு தெளிவாக அறிய முடிகிறது என்ற நம்பிக்கையை இவ்வறிஞர்கள் கொண்டுள்ளனர்.[1]

சமுதாய இயல் அறிஞர்களுக்கு மேலே கண்டவை மனித வரலாற்றை அறியப் பயன்பட்டாலும் நாட்டுப்புறப் பாடல்கள் மற்றவற்றைவிட நிறைய உதவுவனவாக இருக்கின்றன என்றே கூறவேண்டும். காரணம் நாட்டுப்புறப் பாடல்களை ஆராய்கின்ற பொழுது நாட்டுப் புறப் பாடல்களில் மக்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக் கைகள், எண்ணங்கள், பழமொழிக்கதைகள், புராணங்கள் ஆகிய பலவும் இதில் இடம் பெற்று வருகின்றன. இவற்றை உள்ளடக்கியனவாகவே நாட்டுப்புறப் பாடல்கள் இருக்கும்.

---

1. Folk lore is the branch of the study of a man (Anthropology) which deal with local customs tales and traditions for these things can be scientifically studied just like anything else.

—Oxford Junior Encyclopaedia Vol. I 179.

சமூக இயலார் காணவிழையும் மேலே கண்ட பண்பாட்டு வரலாற்றுக்கு நாட்டுப்புறப் பாடல்கள் பெரும் பகுதி உதவி புரிகின்றன. பண்பாட்டு வரலாற்றில் அவ்வறிஞர்கள் முக்கியமாகக் கருதும் ஓர் இனத்தாரின் பழக்க வழக்கங்கள், சடங்கு, நம்பிக்கை, உறவுமுறை முதலியவை நாட்டுப்புறப் பாடல்களினுல் அறியலாம்.

தாலாட்டுப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் ஆகியவற்றில் பாடுபவர்களின் அடிமனத்தை அறியலாம். திருமணக் காலங்களில் பாடப்படும் பாடல்களில் திருமணச் சடங்கு முறைகளைத் தெரிந்து கொள்ளலாம். குடும்பப் பாடல்களில் மருமகள் மாமியார் இவர்களுக்கு உள்ள உறவுமுறை தெரிந்து கொள்ளமுடியும். தெய்வப் பாடல்களில் மதம், மாந்திரிகம் முதலியவை வரக்காணலாம். சடங்குப் பாடல்களில் மக்களின் பழக்கமுறை அறிந்து கொள்ளமுடியும். இன்னும் இப்படி, அறிஞர்களுக்கு ஆராய்ச்சிச் சுரங்கமாகக் காணப்படும் பெற்றியினை உடையதாக இருப்பினும் இத் தலைப்பினை ஒட்டி நாட்டுப் புறப் பாடல்களின் மூலம் அறியலாகும் சில பழக்க வழக்கங்கள், நம்பிக்கை, உறவுமுறை போன்றவற்றை மட்டும் எடுத்துக் காட்டுகளாகச் சில காணலாம்.

OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY
21 JAN 1975

பழக்க வழக்கங்கள் : மக்கள் தாங்கள் பரம்பரையாகப் பாடிவரும் பாடல்களில் தொன்று தொட்டு இருந்து வரும் சில பழக்கங்களைப் பாட்டு வடிவில் பாடிவருவார்கள். அத்தகைய பாடல்கள் பழைமைக் கொள்கைகளை அப்படியே படம்பிடித்துக் காட்டும் கருவியாக விளங்குகின்றன.

ஒரு திருமணம் நடைபெறும் முறை: உதாரணமாக ஒரு காதலனும் காதலியும் தாங்கள் இருவரும் திருமணம் செய்து கொள்ளும் பொழுது அத் திருமணம் எப்படி நடக்கும் என்பதனையும் திருமணத்தின் பொழுது நடை பெறும் பல்வேறு நிகழ்ச்சிகளையும் அப்படியே பாட்டு வடிவில் பாடி மகிழ்ச்சிக் கூத்தாடுகின்றனர்.

அவர்கள் பாடி மகிழும் திருமணப் பாடலால் நாம் அறிந்து கொள்ளக் கூடிய திருமண முறைகளாவன: உறவினர்களுடன் ஊர்வலம் செல்லுதல், ஆட்டுக்கிடாய் அடித்துப் பலருக்கு விருந்து கொடுத்தல், வாழையிலையில் சோறுபோடுதல், மாமன் மச்சான் முதலியவர்களுக்கு மாலைபோட்டு மரியாதை செய்தல், அண்ணன், அக்காள், தம்பி, தங்கை இவர்களுக்குப் புத்தாடைகள் வாங்குதல், வரிசைகள் கொண்டு வந்தவர்களுக்குப் பதில் வரிசை கொடுத்தல், முகூர்த்தக்கால் ஊன்றுதல், ஊராரை வெற்றிலை பாக்கு வைத்து அழைத்தல், நல்லநாள் நட்சத்திரம் குறித்தல், நாதஸ்வரம் அழைத்தல், புரோகிதர் மந்திரம் உச்சரித்தல், மணமேடையில் மண மக்கள் இருத்தல், தாம்பாளத் தட்டில் மல்லிகைப்பூ, மருக் கொழுந்து, நெல், அரிசி, மஞ்சள், தாலி, தேங்காய், பழம் தாம்பூலம் ஆகியவை வைத்தல், திருமணத்திற்கு வருப வர்களுக்குச் சந்தனம், குங்குமம் கொடுத்தல், மணமக்கள் சப்பனக்கால் போட்டு உட்காருதல், திரை கட்டுதல், சாத்திரப்படி தாலி கட்டுதல், மங்கல ஒலிகள் முழங்குதல் மணமக்கள் பெரியோர்களை வணங்குதல், மணமக்கள் மீது சிறுவர்கள் பூக்களை வீசுதல், திருமணப் பாடல்கள் பாடுதல், அத்தை ஆரத்தி எடுத்தல், மணப்பெண்ணின் அண்ணன், தமக்கை, தங்கை, தம்பி ஆகியோர் மாப்பிள்

ளையை நையாண்டி செய்தல், மாப்பிள்ளையின் மைத்துனர் மாப்பிள்ளையின் மீது மஞ்சள் ஊற்றுதல் ஆகிய இவ்வளவு திருமண நிகழ்ச்சிகளையும் அறிய முடிகிறது. பல திருமணங்களைக் கண்ட ஆணும் பெண்ணும் தங்கள் திருமணத்திலும் அவை நடைபெறும் என்று பாடுகின்றனர். சில கவிஞர்கள் படைக்கும் கற்பனைக் கவிதைகள் வரலாற்றுக்குக் கைகொடுத்து உதவாததை நாட்டுப்புறப் பாடல்கள் செய்கின்றன.

மாப்பிள்ளைக்கு மைத்துனன் தயவு வேண்டும் என்ற உறவு முறைகளும் பாட்டில் வருகின்றது.[1] மேற் குறிப்பிட்ட செய்திகளுள் சில நாட்டுப்புறப் பாடல்களில் ஒருசில நிகழ்ச்சிகள் மட்டும் வரப்பாடுவதும் உண்டு.

வரிசை : திருமணங்களில் பெண்களுக்குச் சீர் வரிசை கொடுக்கும் பழக்கம் தாலி கட்டுவதைப் போலச் சிறப்புடைய ஒரு நிகழ்ச்சியாகும். இதனைச் சீதனம் (ஸ்ரீதனம்) என்று அழைப்பர். திருமணம் ஒன்றிற்கு ஒருவன் கொண்டு வந்த சீர்வரிசையை ஒரு பாடல் அழகுறக் காட்டுகிறது. சீர்வரிசை கொண்டு வந்தவன் ஏழையாதலால் பொருள்களும் எளிதாக இருக்கின்றன.

''என்னென்ன வித்துவகை கொண்டு வந்தான்—பள்ளனவன்
முத்துச்சம்பா, மிளகுச்சம்பா, அன்னச்சம்பா, அழகுச்சம்பா
ஆயிரம் தானியங்கள் கொண்டுவந்தான்—பள்ளனவன்
வெள்ளைக் குதிரையுடன் விருதுகொண்டு வந்தானவன்
வெண்சாமரை யதுவும் கொண்டுவந்தான் பள்ளனவன்
செல்லரித்தான் குடிக்கத் தென்னந்தோப்புச் சீதனம்

1. மலையருவி. பக். 92-97.

நல்ல நல்ல பழம்பறிக்க மாந்தோப்புச் சீதனம்
இத்தனையும் கொண்டுவந்தான் தேவேந்திர—பள்ளனவன்
கோவிலுக்கு ஏற்றநல்ல கொய்யாக்கனி கொண்டு வந்தான்
சன்னதிக்கு ஏற்றநல்ல தார்வாழை கொண்டு வந்தான்
மாப்பிள்ளைக்கு ஏற்றநல்ல மணவறையும் கொண்டு வந்தான்
இத்தனையும் கொண்டு வந்தான் தேவேந்திர பள்ளனவன்''

அரசியலாரின் வரதட்சிணை தடைச்சட்ட மசோதா வரிசைப் பொருள்களுக்கு மட்டுமின்றி இத்தகைய பாடல்களுக்கும் என்று கூறலாம்.

சாவுச் சடங்கு : இறந்த பெற்றோர்களுக்கு மகன் சடங்கு செய்து கொள்ளி வைத்து, குடம் உடைத்து, தீக்கடன், நீர்க்கடன் செய்து எள்ளுத் தண்ணீர் வார்ப்பது வழக்கம். ஒருதாய் குழந்தை இல்லை என்று வருத்தப் பட்டுப் பாடும் ஒரு பாடலில் இவ் வழக்கங்களைச் சொல்லு கின்றாள்.

"கொள்ளி வைக்க மைந்தனில்லை; குடமுடைக்க மைந்தனில்லை;
தீக்கடனும் நீர்க்கடனும் செய்துவரப் பாலனில்லை
எள்ளு நல்லோ தண்ணீரும் இறைத்துவரப் பாலனில்லை.''[1]

நம்பிக்கை : மேற்குறிப்பிட்ட சில பழக்க வழக்கங்கள் நாட்டுப்புறப் பாடல்கள் மூலம் தெரிவது போல, பாடும் மக்கள் தம் வாழ்க்கையில் பின்பற்றி வரும் சில நம்பிக்கைகளையும் பாடல்கள் காட்டும். நிமித்தம் அல்லது சகுனம் என்பதெல்லாம் இந்த நம்பிக்கையின் அடிப் படையில் பின்பற்றப்படும் பழக்கங்களாகும்.

1. *தமிழ் நாட்டுப் பாமரர் பாடல் - பக். 22.*

இராசிப் பொருத்தம்: எல்லாக் காரியங்களுக்கும் 'ராசி' பார்த்தல் தமிழ் நாட்டில் அதிகம் அல்லவா? கணவன் இறந்து விட மனைவி வைத்த ஒப்பாரியில் ராசி நம்பிக்கையைப் பாடுகிறாள். எதற்கெடுத்தாலும் கைராசி, முகராசி பார்க்கும் ஒருத்தி கைராசியில் நம்பிக்கை கொண்டு தாலிபண்ணிய ஆசாரி, மாலை கொண்டு வந்த வயிராவி, திருமணச் சேலை நெய்த சேணியன் இவர்கள் கைராசியில்லாதவர்கள் என்று நினைத்து ஒப்பாரி வைக்கிறாள்.

"சிதம்பரத்துத் தட்டான் சீர்காழி ஆசாரி
பட்டறையைக் கிட்டவச்சு பண்ணும் சிறுதாலி
தாலி பொருத்தமில்லே தட்டான் கைராசியில்லே
மாலை பொருத்தமில்லே வயிராவி கைராசியில்லே
சேலை பொருத்தமில்லே சேணியன் கைராசியில்லே."[1]

கண்ணேறு கழிப்பு: குழந்தைக்குக் "கண்ணேறு கழிப்பு" அடிக்கடி செய்வதுண்டு. குழந்தைக்குப் பிறர் கண்ணேறு பட்டதனைக் கழிக்கும் போது தாய் அல்லது மூதாட்டி குழந்தையை வைத்துச் சுண்ணும்பும் மஞ்சளும் கொண்டு சுற்றியும் அல்லது வேப்பிலையும் மஞ்சளும் வைத்துச் சுற்றியும் வீதியில் எறிவாள். இப்படி எறிவதால் பிறரது கண்ணேறு கழிந்து விடுவதாகக் கருதுகின்றனர். மக்களிடம் குடி கொண்டுள்ள இந்த நம்பிக்கையையும் ஒரு பாடல் தெரிவிக்கின்றது.

"கண்ணுன கண்ணுர்க்கு கண்நோக்கும் வாராமல்
சுண்ணும்பும் மஞ்சளும் சுற்றிஎறி கண்ணுர்க்கு
வேப்பிலையும் மஞ்சளுமாய் வீசிஎறி கண்ணுர்க்கு"[2]

என்று வருவதால் உணரலாம்.

---

1. செட்டிநாட்டுத் தாலாட்டு பக். 24.
2. தமிழ் நாட்டுப் பாமரர் பாடல் பக். 21.

உறவு முறை: காதலன், காதலி, கணவன், மனைவி, மாமன், அத்தை, மகள், மருமகள், மாமியார், அத்தான், மைத்துனன், மைத்துனி இவர்களுக்குள்ள உறவு முறைகளைப் பல பாடல்கள் காட்டுகின்றன. இவ்வுறவு முறைகள் எங்கும் ஒரே மாதிரியாக இருப்பது கிடையாது. உதாரணமாகச் செட்டிமார் நாட்டில் மாமியாரும், மாப்பிள்ளையும் உறவினராக இருந்தால் கூடப் பேசுவதில்லை. அதுபோல மாமனாரும் மருமகளும் பேசுவது கிடையாது. பிராமணர்களிடம் இந்தப் பழக்கம் இருப்பதில்லை. இத்தகைய உறவு முறைப் பழக்கங்களை அறிவது ஆய்வுக்கும் அறிவுக்கும் இன்பத்தைத் தருவதாக அமைந்திருக்கும்.

அத்தான் மைத்துனி உறவுமுறை: உதாரணமாக மைத்துனன் அல்லது மைத்துனி அத்தானைக் கேலி செய்வது உண்டு. இக் கேலி ஓர் எல்லைக்கோட்டில் நிற்பதும் இல்லை. அத்தானுக்கும் மைத்துனிக்கும் உள்ள உறவு முறையைக் கீழ்க்கண்ட பாடல் காட்டுகிறது.

"சொகுசுக் கார அத்தானுக்குச்
சுரை படர்ந்ததைப் பாருங்கடி
மோசக்கார அத்தானுக்கு
முறுக்கு மீசையைப் பாருங்கடி
கயிறு திரிக்கலாம் கம்பளம் செய்யலாம்
திருவாரூர்த் தேருக்கு உலுக்குமரம்
போடலாம்."[1]

மருமகள் மாமியார் உறவு முறை: அத்தான் மைத்துனி நையாண்டி உறவுமுறை மாமியார் மருமகளிடம் இருப்பது இல்லை. எலியும் பூனையுமாக வர்ணிக்

1. காட்டு மல்லிகை பக். 70.

கப்படும் இவ் விருவரைப் பற்றி எழுந்தது தானே 'மாமியார் உடைத்தால் மண்சட்டி, மருமகள் உடைத்தால் பொன்சட்டி' என்ற பழமொழி? மருமகளுக்கும் மாமியாருக்கும் உள்ள உறவுமுறை கீழ்க்கண்டவாறு பாடப்படுகிறது.

மருமகள் : "அடக்கு சும்மா உன்னை
அத்தை யின்னு பார்த்தேனம்மா
அடக்கு சும்மா வாயை
அடக்கு சும்மா கையை
உனக்கிருக்கு துடைப்பக் கட்டை
எனக்கிருக்கு பழைய முறம்
உனக்கிருக்கு திருட்டுக் கை
எனக்கிருக்கு முரட்டுக் கை"

மாமியார் : "சோருக்கத் தெரியாத
சோம்பேறிப் பெண்ணுக்கு
வீருப்பு ஏதுக்கடி—கள்ளி !
வீருப்பு ஏதுக்கடி.
தாவாரம் பெருக்கத்
தெரியாத பெண்ணுக்குப்
பூமாலை ஏதுக்கடி—கள்ளி
பூமாலை ஏதுக்கடி"[1]

இன்றுகூட மாமியாரும் மருமகளும் இவ்வண்ணம் சில வீடுகளில் உரையாடுவதனைக் காது புளிக்கக் கேட்க முடிகிறது.

இப்படியெல்லாம் எந்த நாட்டுப்புறப் பாடல்களை எடுத்துக் கொண்டு ஆராய்ந்தாலும் அப் பாடல்கள் ஏதாவது ஒருவகையில் சமூக இயலார் கொண்டுள்ள

1. மலையருவி பக். 212.

கருத்திற்கேற்பக் கைகொடுத்து உதவுவனவாகவே இருக்கும். மேலும் பாடல்களில் பாடிவரும் மக்கள் உண்டுவரும் உணவுவகைகள், உடுத்தும் ஆடை வகைகள், அணியும் அணிவகைகள், பயன்படுத்தும் பொருள் வகைகள் முதலியன வரக் காணலாம்.

சமூக இயலார் காணும் கண்ணோட்டத்தில் திரு. அன்னகாமு அவர்கள் "மேல்மலை மக்கள்" என்ற நூலை எழுதியுள்ளார். அந் நூலில் கீழ்ப் பழனி, மேல்பழனி ஆகிய இடங்களில் வசிக்கும் ஆதிவாசிகளின் வாழ்க்கை வரலாறு அம் மக்கள் பாடிவரும் பாடல்களின் துணை கொண்டு ஆராயப்பட்டுள்ளன. திரு. பிலே இருதய நாத் அவர்களும் இம்முறையில் கண்ணோட்டம் செலுத்தி வருகின்றார். இவர்களின் அடிச்சுவட்டை ஒட்டித் தமிழ் நாட்டில் வாழும் பல இனத்தாரின் வரலாறுகள் வெளிவர வேண்டும். அப்படி வெளிவர அவ்வினத்தார்கள் பாடி வரும் பாடல்கள் நற்றுணை புரியும்.

இனி, இலக்கிய ஆராய்ச்சியாளர்களுக்கும் நாட்டுப் புறப் பாடல்கள் எவ்வளவு பெரிய விருந்தாக அமைந் திருக்கின்றன என்பதைக் காணச் செல்வோம்.

———

எ. தமிழ் இலக்கியங்களில் நாட்டுப்புறப் பாடல்கள்

நாட்டுப்புறப் பாடல்கள் ஒரு மொழியானது வரி வடிவம், இலக்கியம், இலக்கணம் இவற்றைப் பெறுவதற்கு முன்பு அம் மக்களிடம் வாய்மொழியாக வழங்கி வரும் நெடிய வரலாற்றினை உடையனவாகும். வாய்மொழி இலக்கியத்திற்கும், எழுத்து இலக்கியத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. சிலர் நாட்டுப்புறப் பாடல்களைத் தாயென்றும் எழுத்திலக்கியத்தைச் சேயென்றும் வருணிப்பார்கள். நாட்டுப்புறப் பாடலுக்கும் இலக்கியத்திற்கும் உள்ள தொடர்பினை இக் காலத்தில் எல்லா நாடுகளிலும் ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து வருகின்றார்கள். எனவே, இத்தலைப்பை ஒட்டித் தமிழ் இலக்கியங்களில் நாட்டுப்புறப் பாடல்களின் நிலையை அறியும் முன்பு, ஆங்கில இலக்கியத்தோடு நாட்டுப்புறப் பாடல்களுக்குரிய தொடர்பினைச் சிறிது அறிந்து மேலே செல்லுவோம்.

ஜெர்மன் நாவலாசிரியர் தாமஸ்மான் என்பவர் நாட்டுப்புறப் பாடலுக்கும் இலக்கியத்திற்கும் உள்ள தொடர்பினைக் கூறும் பொழுது நாட்டுப்புறப் பாடல் என்ற மண்ணிலிருந்து தோன்றிய செடி 'இலக்கியம்'[1] என்று கருதுகிறார்.

---

1. There are so far as I can see two kinds of poetry, one springs from Folk simplicity, the other from the literary gift in essence. The second is undoubtedly the higher form. But in my view it cannot flourish cut off from the other needing it as a plant needs soil.

Literary history of the United States - 727

மேலைநாட்டு இலக்கியத் திறனாய்வாளர்களின் கண்ணோட்டத்தில் நாட்டுப்புறப் பாடல்கள் உயர்ந்த மதிப்பீட்டை ஆரம்பகாலத்தில் பெறவில்லை. நாட்டுபுறப் இலக்கிய வகையைச் சேர்ந்த தெருக்கதைப் பாடல்களைக் (Street ballad) கீழ்த்தரமான செய்யுள் (doggerel) என்று கூறி வந்தனர். ஆனால், காலப்போக்கில் இலக்கியத்தைப் போலப் பாமரர் இலக்கியமும் கருதத்தக்கது என்றும் நானூறு ஆண்டுகளாக வாழும் ஆங்கிலக் கவிதைகளுக்கு அவையே உயிராகும் என்றும் கூறலானார்கள். ஆங்கிலப் பெரும் புலவர்களான Shakespeare, Marvell, Rochester Swift, Cowper, Wordsworth, Byron, Shelley, Kipling, Yeats, Auden முதலியவர்கள் தங்கள் இலக்கியங்களில் நாட்டுப்புறப் பாடல்களை எடுத்துக் கையாண்டிருக்கின் றனர் என்றும் அறிந்தார்கள்.[1]

பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கிலப் புலவர்கள் நாட்டுப்புறப் பாடல்களுக்கு இலக்கிய மெருகு கொடுத்து வெளியிட்டிருக்கின்றனர். இதனால் நாட்டுப்புறப்

---

1. It is not commonly known that shakespeare quotes dozens of poems of this kind in his plays and must have had a vast knowledge of the street poetry of his day, and that such diverse poets as Marvell Rorchestar, Swift, Gray, Cowper, Wordsworth, Byron, Shelley, Kipling, Yeats and Audon have all been profoundly influenced by the street ballad tradition. Indeed it means that the living literature of the common people quite as much as the classics has been a main source of vitality in English poetry for four hundred years.—The Common Muse—By V. De. Sola paitons & A. E. Rodway.

பாடல்கள் புதிய வடிவம் பெற்றன. உண்மையான நாட்டுப்புறப் பாடல்களின் மூல வடிவம் காலப்போக்கில் மறைந்துபோய் இருக்கிறது.[1]

மேலை நாட்டில் இலக்கியங்களோடும் புலவர்களோடும் தொடர்பு கொண்ட நாட்டுப்புறப் பாடல்கள், தமிழ்ப் புலவர்களின் இலக்கியங்களில் எவ்வாறு கையாளப்பட்டிருக்கின்றன என்றும் தமிழிலக்கியங்களில் நாட்டுப்புறப் பாடல்கள் எத்தகைய இடம் பெற்றிருக்கின்றன என்றும் ஆராயும் ஆய்வு, சுவையான ஆய்வேயாகும். தொல்காப்பியர் காலம் முதல் இருபதாம் நூற்றுண்டுவரை தமிழ் இலக்கியங்களிலும், புலவர்களிடமும் நாட்டுப்புறப் பாடல்கள் பெற்ற மதிப்பீட்டை முறையாகக் காண்போம்.

தொல்காப்பியம் : மொழிக்கும், வாழ்க்கைக்கும், இலக்கியத்திற்கும் இலக்கணம் வகுத்த தொல்காப்பியத்திற்கு முற்பட்ட காலத்தில் இலக்கியங்கள் மட்டுமின்றி நாட்டுப்புறப் பாடல்களும் உண்டு என்பது அனைவரும் ஒப்பிய கருத்தாகும்.

தொல்காப்பியரால் நாட்டுப்புறப் பாடல்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன என்று கருதுபவர்களும் உண்டு. நாட்டுப்புறப்பாடல்கள் மட்டுமின்றிப் பாமர

1. A number of poets especially in eighteenth century reworked old Folk songs thus gave them a certain literary polish. In consequence the new form powerfully reinforced as it was by the printing press and besides no doubt of greater artistic value, little by little completely crowded out of the old Folk songs which thus disappeared.

—The Science of Folklore—154.

இலக்கியங்களாகக் கருதப்படும் 'விடுகதை' பழமொழி முதலியனவும் அந்நூலில் கூறப்பட்டிருக்கின்றன என்று மேற்கோள் காட்டி விளக்குவார்கள்.[1]

அப்படிக் கருதுபவர்கள் தொல்காப்பியச் செய்யுளியலில் உள்ள,

> "பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்
> பாட்டின் இயல பண்ணத்தி னியல்பே."[2]

என்ற நூற்பாவை நாட்டுப்புறப் பாடல்களுக்குரிய இலக்கணமாகக் கருதுகின்றனர். 'பண்ணத்தி' என்பது நாட்டுப்புறப் பாடல்களைக் குறிக்கின்றது என்கின்றனர். ஆனால், இந்த நூற்பா நாட்டுப்புறப் பாடல்களைச் சுட்டுகின்றதா என்பது ஆய்விற்குரிய ஒன்றாகும். இந் நூற்பாவிற்கு இளம்பூரணர் உரையைக் கொண்டால் அக் கருத்து நாட்டுப்புறப் பாடலுக்குப் பொருத்தமாக அமையாது. 'பண்ணத்தி' என்பதற்குச் 'சிற்றிசையும் பேரிசையும் முதலாக இசைத்தமிழில் ஓதப்படுவன" என்று உரை எழுதுகின்றார். மேலும் தொல்காப்பிய நூற்பா பண்ணத்திக்கு அடிவரையறை கூறும்போது,

> "அதுவே தானும் பிசியொடு மானும்"[3]

என்று கூறுகிறது. இந்த நூற்பாவிற்கு இளம்பூரணர் உரையெழுதும் போது பிசியென்பது இரண்டடியளவின் கண்ணே வருவதாகலின் இதுவும் இரண்டடியான் வருமென்று கொள்ளப்படும் என்று எழுதுவார். பண்ணத்திக்கு வகுக்கும் அடிவரையறை நாட்டுப்புறப் பாடல்களுக்கு இல்லை.

---

1. கி. வா. சகந்நாதன், மலையருவி, - 4-11.
2. தொல்காப்பியம், செய்யுளியல், - 149.
3. தொல்காப்பியம், செய்யுளியல், - 134.

மற்றோர் உரையாசிரியரான பேராசிரியர், இந் நூற்பாவிற்கு உரை யெழுதும் போது "மெய் வழக்கல்லாத புறவழக்கினைப் பண்ணத்தி என்ப. இஃது எழுதும் பயிற்சி இல்லாத புற உறுப்புப் பொருள்களைப் பண்ணத்தி என்ப என்பது. அவையாவன நாடகச் செய்யுளாகிய பாட்டும், மடையும், வஞ்சிப்பாட்டும், மோதிரப் பாட்டும், கடகண்டும் முதலாயின. அவற்றை மேலதே போலப் பாட்டென்றாராயினர், நோக்கு முதலாயின உறுப்பின் மையினென்பது. அவை வல்லார் வாய்க் கேட்டுணர்க" என்று எழுதுகிறார். இவ்வுரையைக் கொண்டு மேற் கண்ட நூற்பா நாட்டுப்புறப் பாடல்களைச் சுட்டுகின்றது என்று கூறுவதனை விட, நாடகங்களில் பாடப்படும் இசைப் பாட்டுகளைக் குறிக்கின்றது என்பது பொருத்த மாக இருக்கும். உரையில் சொல்லப்பட்ட 'மடை' முதலாயின என்ன பாட்டுகள் என்று அறிய முடிய வில்லை. நூற்பாவிற்குத் தெளிவுகாட்ட வந்த உரையா சிரியரும் "வல்லார் வாய்க் கேட்டுணர்க" என்று தம் பொறுப்பிலிருந்து விடுபட்டுக் கொள்கிறார். உரையில் பேராசிரியரால் எடுத்துக்காட்டப்பட்ட பாட்டுகளும் நமக்குக் கிடைக்கவில்லை.

பேருரையாளர் நச்சினார்க்கினியரின் உரை "பாட்டி டைக் கலந்த" என்ற நூற்பாவிலிருந்து நான்கு நூற்பாக் களுக்குக் கிடைக்காதது இவ்வாய்விற்கு ஏற்பட்ட ஓர் இழப்பாகவே கொள்ள வேண்டும்.

தொல்காப்பியர் செய்யுளியலில் கூறிய நூற்பாக் களில் ஏதாவது ஒரு நூற்பா நாட்டுப்புறப் பாடல்களின் அமைப்பிற்குப் பொருந்துகிறதா என்று பார்ப்போமானல்

அவ்வியலில் கூறப்பட்டுள்ள எண்வகை வனப்பினுள் 'புலன்' என்னும் வனப்பு பொருந்துவதாகப் படுகிறது.

> "தெரிந்த மொழியாற் செவ்விதிற் கிளந்து
> தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்
> புலனென மொழிப புலனுணர்ந் தோரே"[1]

என்ற இந் நூற்பாவிற்கு இளம்பூரணர் உரையில் "வழக்குச் சொல்லினானே தொடுக்கப்பட்டு ஆராய வேண்டாமற் பொருள் தோன்றுவது புலனென்னுஞ் செய்யுளாம் என்றவாறு" என்று எழுதுவார். இவ்வுரை நாட்டுப்புறப் பாடலின் அமைப்பிற்குப் பொருந்துவதாக இருக்கிறது எனலாம். செய்யுளியலின் இறுதிப் பகுதியில் இந்நூற்பா அமைந்திருப்பதும் குறிப்பிடத் தக்கதாகும். மேலும் இந்நூற்பாவிற்குப் பேராசிரியர் கொண்டிருக்கும் பாட வேறுபாடு இக் கருத்திற்கு அரணாக அமைகிறது. 'தெரிந்த மொழியான்' என்ற தொடரைப் பேராசிரியர் 'சேரி மொழியான்' என்று பாடம் கொள்ளுவார். இந் நூற்பாவிற்கு உரை எழுதும்பொழுது "சேரிமொழி என்பது பாடிமாற்றங்கள். அவற்றானே செவ்விதாகக் கூறி ஆராய்ந்து காணாமைப் பொருள் தொடரென தொகுத்துச் சொல்வது புலனென்று சொல்வர், 'புலன் உணர்ந்தோர் என்றவாறு; அதை விளக்கத் தார் கூத்து முதலாகிய நாடகச் செய்யுள்கள் வெண்டுறைச் செய்யுள் போல்வன என்பது கண்டு கொள்க" என்று எழுதுகிறார். ஆதலின், பண்ணத்தி என்பது நாட்டுப்புறப் பாடல் களைச் சுட்டுகின்றது என்பதனை விடப் 'புலன்' என்பது பொருத்தமாக அமைகின்றது. எனவே, 'பாட்டிடைக் கலந்த' என்ற நூற்பாவினை விட, சேரி மொழியால்

1. தொல்காப்பியம், செய்யுளியல், -233

என்ற நூற்பா, நாட்டுப்புறப் பாடல்களின் அமைப்பைத் தொல்காப்பியத்தில் குறிப்பதாக இருக்கின்றது எனக் கொள்ளலாம். முதுபெரும் இலக்கண நூலான தொல் காப்பியத்தில் நாட்டுப்புறப் பாடல்கள் தொல்காப்பியரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன என்று இதன் மூலம் நாம் கருதலாம்.

சங்க இலக்கியங்கள் : வாழ்க்கையின் எல்லாக் கூறுகளையும் கண்ணாடியெனக் காட்டும் அகம், புறம் என்ற சமுதாயத்தின் இரு துறைகளும் அடங்கிய சங்க இலங்கியங்களை ஆராயும் பொழுது சங்கத் தமிழ் மக்கள், நாட்டுப்புறப் பாடல்களைப் பாடி மகிழ்ந்த செய்தி அறிய முடிகின்றது. சங்ககாலம், நாட்டுப்புறப் பாடல்களுக்குக் கை கொடுக்கக் கூடிய கிராமியம், தன்உழைப்பு, கவலை யின்மை முதலியவை நிறைந்த காலமாகும். எனவே, நாட்டுப்புறப் பாடல்கள் சாகாத்தன்மை பெற்றிருக்கச் சங்ககாலவாழ்க்கைநிலை நன்குஅமைந்தது. நாட்டுப்புறப் பாடல்களில் சில வகைகள் சங்கத் தமிழ் மக்களால் பாடப் பட்ட செய்திசங்கத் தமிழ்ப் பாக்களினால் அறியமுடிகிறது. சங்க இலக்கிய நூல்களான பதினெட்டு நூல்களினாலும் பண்டைத் தமிழ்மக்கள், புலவர்களால் இயற்றிய பாடல் களின்றிப் பரம்பரை பரம்பரையாகவோ அல்லது அவ்வக் காலங்களில் தாமாக இயற்கையாகவோ சில பாடல்களைப் பாடி வந்திருக்கின்றனர் என்று அறிய முடிகிறது. தமிழ்ச் சமுதாயத்தினர் தம் வாழிடத்தை ஐவகை நிலமாகப் பிரித்து முதற்பொருள், கருப்பொருள், உரிப் பொருள் என வகுத்து வாழ்வாங்கு வாழ்ந்தனர். இம் முப்பொருள்களின் கண்ணாடிகளாக விளங்கும் சங்கப் பாடல்களைப் போலச் சங்ககாலத்தில் பாடப்பட்ட ஒரு

நாட்டுப்புறப் பாடலாவது நமக்கு முழுவடிவில் கிடைத்திருக்கிறது என்று உறுதியாகக் கூறிவிட முடியாது. நாட்டுப்புறப் பாடல்கள் வளர்ச்சியையும், தேய்வினையும் மாறிமாறி அடையும் 'நிலத்துச் சந்திரன்' எனலாம். எனவே, இன்றுள்ள ஒரு பாடலை வைத்துக்கொண்டு இப் பாடலை "எங்கள் தமிழ்ச் சங்க மக்கள் பாடிவந்த பாடல்" என்று சொல்ல முடியாது. அப்படிச் சொன்னால் ஆசையால் அன்பால் கூறியதாகக் கொள்ள வேண்டும். ஆனால், சங்க இலக்கியங்களின் அடிப்படையில் தமிழ் மக்கள் பாடி, வந்த நாட்டுப்புறப் பாடல்களின் வகைகளைக் கூறலாம்.

தெய்வப் பாடல்கள் : தமிழர்கள், தெய்வ சிந்தனை நிரம்பப் பெற்றவர்கள். ஐவகை நிலத்திற்கும் உரிய தெய்வங்களைத் தனித்தனியாகப் பிரித்து வணங்கியிருக்கின்றனர் குறிஞ்சி நிலத்திற்கு முருகன், பாலை நிலத்திற்கு கன்னி (துர்க்கை), முல்லை நிலத்திற்கு நெடுமால், மருத நிலத்திற்கு இந்திரன், நெய்தல் நிலத்திற்கு வருணன் ஆகிய தெய்வங்கள் மக்களால் வணங்கப்பட்டிருக்கின்றன. இத் தெய்வங்களை மனத்திற்குள் நினைத்து வணங்குவதனைவிட வாய்விட்டுப் பாடி வணங்கும் பழக்கத்தினைத் தமிழ்ச் சமுதாயத்தினர் கொண்டதால் இத் தெய்வங்கள் மீது நிறையப் பாமாலைகள் சூட்டியிருக்கின்றனர். புலவர்களால் படைக்கப்பட்ட பாமாலைகளை மட்டுமின்றிப் பொதுமக்களும் பாடல்கள் மூலம் தெய்வங்களை வணங்கியிருக்கின்றனர். உடுக்கு அடித்துப் பாடும் பூசாரிப் பாடல்,[1] துர்க்கையைப் பற்றிப் பாடும் வரிப்பாடல், முல்லைநிலக் கடவுள் மாலினைப்

1. நற்றிணை, - 322.

பற்றிப் பாடும் குரவைப் பாடல்[1] முதலியன மக்களால் பாடப்பட்டிருக்கின்றன. வாழ்வின் அடிப்படையாக நீர் அமைவதால் நெய்தல் நிலத் தெய்வமான வருணனை நெய்தல் நிலத்தார் மட்டுமன்றி மற்ற நிலத்தாரும் வணங்கிப் பாடியிருப்பார்கள். இந்திரனுக்கு விழா எடுத்த நாடாதலால் மருத நிலக்கடவுள் இந்திரனைப் பற்றி எண்ணிறந்த பாடல்கள் பாடப்பட்டிருக்கக் கூடும். எனவே, நாட்டுப்புறப் பாடல்களில் தெய்வங்களை நினைத்துப் பாடப்பட்ட தெய்வப் பாடல்கள் சங்க நூல்களில் நிறைந்திருக்கின்றன என்று கூறலாம்.

தொழிற் பாடல்கள் : ஐவகை நிலத்திற்குரிய தெய்வங்களைப் பகுத்துக் கொண்டது போலத் தொழில்களையும் பகுத்திருக்கின்றனர். குறிஞ்சி நிலத்திற்குரிய தொழில்கள் வெறியாடல், மலைநெல் விதைத்தல், தினைகாத்தல், தேனழித்தெடுத்தல், கிழங்கு கிளந் தெடுத்தல் போன்றவையாகும். பாலை நிலத்திற்குரிய தொழில்கள் போர் செய்தல், பகலில் சூறையாடுதல் போன்றவையாகும். மருத நிலத்திற்குரிய தொழில்கள் விழாச்செய்தல், வயற்களை கட்டல், நெல்லரிதல், கடா விடுதல், குளங்குடைதல் போன்றவையாகும். நெய்தல் நிலத்திற்கு உரிய தொழில்கள் மீன் பிடித்தல், உப்புண் டாக்கல், விற்றல், மீனுணக்கல், மீனுண்ண வரும் பறவைகளை ஓட்டுதல் போன்றவையாகும். நாட்டுப்புறப் பாடல்களில் தொழிற்பாடல்கள்தாம் எண்ணிக்கையில் முதலிடம் வகிப்பனவாகும். தொழில் நிகழும் போது நோயும், மலைப்பும் ஏற்படாமல் இருக்க ஒரு கருவியாகப் பயன்படும் நாட்டுப்புறப் பாடல்கள், சங்ககால மக்களிடம்

---

1. *கலித்தொகை, - 103.*

எப்படி இல்லாமல்போகும்? வேளாண்மைப்பாடல் வகைகளில் நீர் இறைப்பார் பாட்டு, ஏற்றம் இறைப்பார் பாட்டு, பறவைகளை விரட்டும் பாட்டு முதலியவற்றை மதுரைக் காஞ்சியால் அறிய முடிகிறது[1]. "அகவினம் பாடுவோம் வா தோழி" என்று உலக்கைப் பாட்டான வள்ளைப் பாட்டைப் பாட அழைப்பதைக் கலித்தொகையிலும்[2] தினைப்புனம் காக்கும் மகளிர் தானியங்களைத் தின்னவரும் கிளிகளை விரட்டி எழுப்பப் பாடும் பாடல்களைக் குறிஞ்சிப் பாட்டு, மலைபடுகடாம் முதலிய நூல்களிலும் அறியலாம். கிளி விரட்டும் பொழுது பாடப் படும் பாடல், இக்காலத்தில் 'ஆலோலம்' என்று அழைக்கப் படுகிறது.

சடங்குப் பாடல் : ஒரு சில சடங்குப் பாடல்கள் கூடப் பாடப்பட்ட செய்தியினை அறிய முடிகிறது. பிராமண குலத்தில் பூணூல் நோன்பு அரைக்கல்யாணம் என்று கூறுவார்கள். அதுபோல நகரத்தார் குலத்தில் கன்னிப் பெண்களுக்குத் திருவாதிரை என்ற ஒரு சடங்கினைச் செய்வார்கள். திருவாதிரைச் சடங்கினைச் செய்யும் ஒரு பெண் அவ்வூரில் உள்ள இல்லங்களுக்குச் சென்று பாட்டுப்பாடி காய்கறிகள் சேர்த்து வருவது அச் சடங்கில் உள்ள ஒரு கட்டமாகும். அப்படிச் செல்லும் அப் பெண்,

'ஆடி ஆடி வர்ரேன் அவரக்காய் போடுங்கள்
சொல்லிச் சொல்லி வர்ரேன் சொரக்காய் போடுங்கள்
பாடிப்பாடி வர்ரேன் பயித்தங்காய் போடுங்கள்"

---

1. *மதுரைக் காஞ்சி, - 89-97.*
2. *குறிஞ்சிக்கலி, - 40.*

என்று பாடுவாள். இப்படிப் பிறர் மனையில் சிவராத்திரியிலும், ஸ்ரீ ஜெயந்தியிலும் பிராமண சமூகத்தார் பாடிப் பொருள் சேர்ப்பதுண்டு. சங்ககாலத்தில் இப்படிப் பாடப்பட்ட ஒரு செய்தியினைக் கலித்தொகை கீழ்க்காணு மாறு குறிக்கிறது.

''பொய்தல் மகளையாய்ப் பிறன்மனைப் பாடிநீ
எய்திய பலர்க்கீத்த பயம்.''[1]

ஒப்பாரிப் பாடல்: இறப்பிற்குப் பிறகு இறந்தவனின் வரலாறாக எழுப்பப்படும் ஒப்பாரிப் பாடல்களும் மகளிரால் பண்டு பாடப்பட்ட செய்தி புறநானூற்றுப் பாடலொன்றால் அறிய முடிகிறது. வெளிமான் என்னும் கொடைவள்ளல் இறந்துபோக அவனைக் காணச் சென்ற புலவர் பெருஞ்சித்திரனார், தம் பாடலில் கணவன் இறந்த பிறகு பெண்கள் பாடும் வழக்கத்தினைக் கீழ்க்கண்டவாறு பாடுகிறார்.

''தொடிகழி மகளிரின் தொல்கவின் வாடிப்
பாடுநர் கடும்பும் பையென் றனவே.''[2]

கொண்டாட்டப் பாடல்கள்: விழாக் காலங்களிலும் சடங்குக் காலங்களிலும் பாடப்படும் கொண்டாட்டப் பாடல்களாகக் கருதத்தக்க பல பாடல்வகைகள் பாடப்பட்ட செய்தியும் அறிய முடிகிறது. குரவை, வரிப் பாடல்கள் மட்டுமின்றி ஆணும் பெண்ணும் கலந்து ஆடும் துணங்கைக் கூத்தின் (இக்கால வழக்கு 'சிங்கி,

---

1. கலித்தொகை; 59: 16 - 17.
2. புறநானூறு, - 238.

அடித்தல்) போது பாட்டுப்பாடி மகிழும் செய்தியும்[1] ஏதாவது ஒரு நிகழ்ச்சியின்போது பாடும் ஊசல் பாட்டுப் பாடுவதும் [2]உண்டு என்பது தெரியவருகிறது.

குறத்திப் பாட்டு : குறவஞ்சி என்னும் சிற்றிலக்கியத்திற்கு வித்தாக அமைந்த குறத்திப் பாட்டு சங்கத் தலைவியின் செவிகளில் இனிமையாகப் பாய்ந்திருக்கிறது. குறுந்தொகையில் தலைவியின் தோழி மீண்டும் மீண்டும் அந்தக் குறத்திப் பாட்டைக் கேட்க வேண்டிக் குறத்தியைப் பாடுமாறு வேண்டுகிருள்,

"அகவன் மகளே! அகவன் மகளே!
மனவுக் கோப்பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே, அவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே."[3]

தலைவி பன்முறை கேட்க விரும்பிய இந்தக் குறத்தியின் பாட்டு நமக்குக் கிடைக்காமல் போய்விட்டதே!

காதற் பாட்டுகள்: சங்கஇலக்கியங்களின் மொத்தப் பாடல்கள் 2,381 எனக் கணக்கிடப்படுகிறது. அவற்றுள் 1,862 காதற் பாட்டுகள் என்று பிரித்துக் காட்டியிருக்கின்றனர். காதலர்கள் "கண்ணொடு கண்ணிணை" என்ற குறளுக்குத் தக்க எடுத்துக் காட்டாக இருந்தார்கள் என்பதனை விட அவர்களும் பல காதற் பாட்டுகளைப் பாடியிருப்பார்கள் என்றே கொள்ள வேண்டும். காதல் நிறை வேருத தலைவன் காதலில் வெற்றிபெறப் பின்

1. கலித்தொகை – 70: 13-4.
2. கலித்தொகை, - 131, 31.
3. குறுந்தொகை, - 23.

பற்றும் மடலேறுதலின்போது பாடல் பாடியிருக்கிருன் என்ற செய்தியினை அறிகிறோம்.[1] அது நாட்டுப்புறப் பாடல்களில் காதல் பாட்டுகளில் வரும் தலைவன் சோககீதம் எனலாம். தொழிலாளிகள் களைப்பைப் போக்கிக் கொள்ளப் பாடல் பாடுவதனைப் போல், குறமக்களுக்குப் புலி தாக்கியதால் ஏற்பட்ட காயத்தின் வலி தெரியாதிருக்கக் குறத்தியர்கள் அருகில் இருந்து இனிய பாடல்கள்பாடிப் பண்இசைத்தார்கள் என்ற செய்தியினை மலைபடுகடாம்[2] தெரிவிக்கிறது. தலைவனது ஒழுக்கக் கேட்டைப் பொய்கைக்குச் சென்ற பெண்கள் பாடிக் குரவை ஆடியிருக்கின்றனர் (கிண்டல் முறையில்) என்பதனை அகநானூற்றில்[3] அறிகிறோம்.

இப்படிச் சங்க இலக்கியங்களை நோக்கும் நமக்கு நாட்டுப்புறப் பாடல்கள் பண்டைத் தமிழ்மக்களுள் பொது மக்களால் பாடப்பட்டு வந்த உண்மை தெரிகிறது. நாட்டுப்புறப் பாடல்கள் பாடப்பட்ட செய்தியைச் சங்க இலக்கியங்கள் குறிக்கின்றன. பொது மக்களின் இந்தப் பாடல்களில் புலவர்களும் மனம் பறிகொடுக்க ஆரம்பித்தனர். நாட்டுப்புறப்பாடல்களுக்குமதிப்பளித்துத் தாங்கள் படைக்கும் இலக்கியத்திலும் அப் பாடல்களுக்கு நல்ல இடத்தைத் தர முற்படலாயினர். அப்படித் தம் படைப்பில் நாட்டுப்புறப் பாடல்களுக்குச் சிறப்பான இடத்தைக் கொடுத்த முதல்வராகக் கருதும்படி பெருமையை அடைந்தவர், காப்பியத் தந்தை இளங்கோ வடிகளே யாவர்.

---

1. கலித்தொகை, - 141: 5, 6.
2. மலைபடுகடாம், - 302 - 4.
3 அகநானூறு, - 336.

சிலப்பதிகாரம் : நாட்டுப்புறப் பாடல்கள் நல்ல செல்வாக்கைப் பெற்ற காலம் சிலப்பதிகார காலம் எனலாம். பாமரர் பாடல்களாக இருந்த பாடல்கள் இலக்கியங்களில் பேரிடம் பெற்ற காலம் இக் காலமே! பொதுமக்கள் பாடல்களாக வழங்கிவந்த பாடல்கள் அவர்கள் மொழியிலேயே அப்படியே இடம்பெறாமல், இளங்கோவடிகளால் இலக்கியவடிவும், மெருகும் கொடுக்கப்பட்டுக் காப்பியத்தில் சேர்க்கப்பெற்றன. சிலப்பதிகாரத்தில் காணப்படும் கானல்வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை அம்மானைவரி, வள்ளைப்பாட்டு ஆகியவை நாட்டுப்புறப்பாடல் தன்மையிலிருந்து இலக்கிய உருவம் பெற்றன என்று கருதுகின்றார்கள்.[1] நாட்டுப்புறப் பாடல்வகைகளில் ஒன்றான ஒப்பாரியை மதன் முதலாகத் துன்ப மாலையிலும், ஊர்சூழ் வரியிலும் கண்ணகி மூலம் இலக்கியத்தில் இடம்பெறச் செய்தவர் இளங்கோவடிகளேயாவர். இளங்கோவடிகளுக்கு இத்தகைய நாட்டுப்புறப் பாடல்கள் மீது கண்ணோட்டம் உண்டு என்பதனை அவர்தம் காப்பியத்தில் குறிப்பிடும் சில வேளாண்மைப் பாடல்கள் மூலம் உணரலாம்.

---

[1]. நாடோடிப் பாடல்களின் உருவத்தை இலக்கியம் படைத்த புலவர்களும் எடுத்தாண்டார்கள் என்பதற்கு இப்போது கிடைப்பனவற்றுள் பழைய எடுத்துக்காட்டு இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் பாடியுள்ள வரிப்பாடல்கள்.

—கி. வா. சகந்நாதன், மலையருவி. பக். 12.

வரிப்பாடல்கள் நாடோடிப்பாடல் போன்றவை. சமுதாயப் பாடல்களாக அவை அரசர்களையும் நாட்டையும் வாழ்த்துவது உண்டு. —தெ. பொ. மீ.—கானல்வரி, பக். 104.

சிலப்பதிகாரத்தில் உள்ள வரி, குரவை முதலிய பகுதிகள் நாடோடிப் பாட்டு இனத்தைச் சேர்ந்தவையே.

—காட்டுமல்லிகை, பக். 13.

''விளங்கு கதிர்த் தொடுத்த விரியல் சூட்டிப்
பாருடைப் பனர்போற் பழிச்சினர் கைதொழ
ஏரொடு நின்ருே ரேர்மங் கலமும்
அரிந்துகால் குளித்தோ ரரிகடா வுறுத்த
பெருஞ்செய்ந் நெல்லின் முகவைப் பாட்டும்.''[1]

என்ற இவ் வரிகளால் ஏரைப் பூட்டி நின்ருேர் பாடும் முகவைப் பாட்டும், நெல்லை முகந்து அளக்கும் பொழுது பாடும் முகவைப் பாட்டும் குறிப்பிடப்படுகின்றன. முகவைப் பாட்டை அரும்பத உரையாசிரியரும், அடியார்க்கு நல்லாரும் 'பொலிபாடுதல்' என்று கூறுகின்றனர். இன்றும் வயற்புறங்களில் நெல் அளக்கும் பொழுது பாடும் பாட்டை 'பொலிப்பாட்டு' என்று அழைக்கின்றனர்.

எனவே, நாட்டுப்புறப் பாடல்களைத் தம் நூலில் எடுத்துக் கையாண்ட முதல் தமிழ்ப் புலவராக இளங்கோ வடிகள் விளங்குகிருர் எனலாம்.

திருவாசகம் : மாணிக்கவாசகர், திருவாசகத்தில் நாட்டுப்புறப் பாடல்களின் சில பிரிவுகளை எடுத்துக் கையாண்டிருக்கிருர். இருபதாம் நூற்ருண்டில் பாரதியார் புதுமைக் கருத்துக்களைப் புகுத்திக் கும்மிப் பாடல்கள் இயற்றியதைப் போன்று அன்று மாணிக்கவாசகர் தம் வாசகத்தில் இறைமை மணம் கமழச் சில பிரிவுகளை எடுத்து எழுதியுள்ளார். திருவாசகத்தில் 'திருப்பொற் சுண்ணம்' என்று இருபது அரும்பாடல்களை இயற்றியுள்ளார். சுண்ணும்பு, நெல் ஆகியவற்றை இடிக்கும் பொழுதும், குத்தும் பொழுதும் பாடல்கள் பாடப்படுவது

1. சிலப்பதிகாரம்—நாடுகாண் காதை, - 133 - 137.

போல இறைவனுக்கு மணம்மிக்க வாசனைப் பொடிகள் இடிக்கும்பொழுது பாடப்படுவதாகத் திருப்பொற்சுண்ணம் அமைந்திருக்கிறது. பாடி இடிக்கும் பாட்டின் பாடற் பொருளாக இறைவனின் அருமை பெருமைகளே நிறைந் திருக்கின்றன. உதாரணமாகக் கீழே தரப்பட்ட பாடலில் "உலக்கைகளில் பொன்மணி வடங்கட்டி உரல்களுக்குப் பட்டுச் சீலையைச் சுற்றி இறைவனின்மீது அன்புடைய அடியார்கள் என்றும் நின்று நிலவுக என்று வாழ்த்திக் காஞ்சி ஏகாம்பரநாதனது அழகிய கோயிலைப் பாடி இருவினையாய கட்டினை நீக்கிச் சுண்ணம் இடிப்போம்" என்று பாடுகின்றார்கள்.

அப் பாடல் வருமாறு :

''காசணி மின்கள் உலக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறை யுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்து நாமே.[1]''

அடுத்து மகளிர் பாட்டுப்பாடிக் கைகொட்டி ஆடும் ஓர் ஆட்டத்தினை [கும்மி) மகளிர் இறைவனைத் துதித்துத் 'தெள்ளேணம் கொட்டாமோ' என்று பாடுவதாகத் 'திருத் தெள்ளேணம்' என்று இருபது பாடல்கள் புனைந்துள்ளார்.

மேலும், திருவாசகத்தில் உள்ள திருப்பூவல்லி, திருப்பொன்னூசல் ஆகியவையும் நாட்டுப்புறப் பாடல் களில் காணக் கூடிய பிரிவுகள் எனலாம்.

---

1. திருவாசகம், திருப்பொற்சுண்ணம், . 4.

ஆழ்வார் பாடல்கள்: இளங்கோவடிகளுக்குப் பிறகு நாட்டுப்புறப் பாடற்பிரிவில் அனைவரின் உள்ளத்தையும் கவரும் தாலாட்டினைத் தமது பாடல்களில் கையாண்டவர் பெரியாழ்வாராவர். புலவர்கள் தெய்வங்களைக் குழந்தையாக்கி அவர்களைத் தூங்கவைத்துத் தாலாட்டுப் பாடல்கள் பாடுவதில் மிகுந்த ஆசை கொண்டிருந்திருக்கின்றனர். பெரியாழ்வார் தம்மை யசோதையாகக் கற்பனை செய்து கொண்டுகண்ணனைக் குழந்தையாக்கிப்பாடும் தாலாட்டுப் பாடல்களில் கண்ணனின் அவதாரச் சிறப்பு, மேனியழகு முதலியவற்றைப் பாடுகின்றார். கீழ்க்கண்டஅவர் பாடலில் கண்ணனுக்குத் திருமுழுக்காட்டுவதற்குப் பல பொருள்கள் வைக்கப்பட்டிருக்கின்றன என்றும் கண்ணனை அழாதே' என்றும் பாடுவதைக் காணலாம்.

''மெய் திமிரும் நானப்
பொடி யோடு மஞ்சளும்
செய்ய தடங் கண்ணுக்கு
அஞ்சனமும் சிந்துரமும்
வெய்ய கலைப் பாகி
கொண்ட வளாய் நின்ருள்
ஐயா! அழேல்! அழேல்'
தாலே லோ!
அரங்கத் தணை யானே
தாலே லோ!''

தாய் தாலாட்டில் 'அழாதே நீயுறங்கு' என்று பாடுவதைப் போல ஆழ்வார் 'அழேல்' 'அழேல்' என்று சொல்வது ஒத்து நோக்குதற்குரியது. தாய்மார்கள் 'ஆராரோ' என்று இசைப்பதைக் கவிஞர் 'தாலேலோ என்று இசைக்கின்ருர்.

தாய்மார்கள் இராம வரலாற்றைச் சுருங்கிய முறையில் தாலாட்டில் பாடுவதுபோலக் குலசேகர ஆழ்வார் இராமன் வரலாற்றைப் பத்துப் பாடல்களாக இயற்றியிருக்கிறார். பிள்ளைத் தமிழில் 'தாலப்பருவம்' என்பது ஒரு பிரிவாகவே அமைந்துவிட்டது.

கம்பராமாயணமும் கந்தபுராணமும்: ஒப்பாரிப் பாடல்கள் சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றிருப்பதை முன்பு கண்டோம் கம்பர், இராம காவியத்தில் இராவணன் இறந்தபின் மண்டோதரியின் புலம்பலிலும், கச்சியப்ப முனிவர், கந்தபுராணத்தில் மன்மதன் இறந்த பின் இரதியின் புலம்பலிலும் ஒப்பாரியினை அழகுறக் காட்டியுள்ளனர். தாய்மார்கள் வைத்த ஒப்பாரிக்கு இளங்கோவடிகளுக்குப் பின் கம்பரும் கச்சியப்பரும் நல்ல வடிவம் கொடுத்தவர்கள் எனலாம்.

கம்பர் நாட்டுப் படலத்தில் தாலாட்டினைக் குறிப்பிட்டுள்ளார் என்பதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

சிற்றிலக்கியங்கள் (பிரபந்தங்கள்): பிற்காலத்தில் தோன்றிய சிற்றிலக்கியங்களாகக் கருதத்தக்க சில பிரபந்தங்கள் நாட்டுப்புறப்பாடற் பிரிவிலிருந்து தோன்றியவையாகக் கருதுவார் உண்டு. ஐவகை நிலங்களில் இரு நிலங்களான குறிஞ்சி நிலத்திலும், மருத நிலத்திலும் வழங்கிவந்த நாட்டுப்புறப் பாடல்களில் இருந்து குறவஞ்சி, பள்ளு ஆகிய நூல்கள் தோன்றின என்ற கருத்துப் பலருக்கு உடன்பாடாகவே உள்ளது.[1]

---

1. குறிஞ்சி நிலத்தைப் பற்றிக் குறவஞ்சியும், மருத நிலத்தைப் பற்றிப் பள்ளும் தோன்றின. ஏனைய மூன்று நிலத்திலும் இவ்வாறு நூல்கள் தோன்றவில்லை.

—முக்கூடற்பள்ளு, முன்னுரை, பக். 7.

இவ்விரண்டுமின்றி அம்மானை, தூது, மாலை, காதல், நொண்டி நாடகம் ஆகியவை நாட்டுப்புறப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை என்று கருதுவாரும் உண்டு.[1] இக் கருத்து ஏற்றுக் கொள்ளத் தக்கதேயாகும். எப்படிப் புலவர்கள் மன்னர்களைப் பாடி வந்தபொழுது இளங்கோவடிகள் குடிமக்களை மையமாக வைத்துக் காப்பியம் இயற்றினரோ அதைப்போல் தெய்வங்களைப் பாடுவதில் வளர்ந்த பிரபந்த காலத்தில் பொதுமக்களின் வாழ்க்கையை மையமாக வைத்துச் சில புலவர்கள் இலக்கியங்களைத் தோற்றுவித்திருக்கின்றனர். வேளாண்மைப் பாடல்கள், பாடுபவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு 'பள்ளு' பிரபந்தமாகி இலக்கியத்தரம் பெற்றது. காலப் போக்கில் பள்ளுப் பிரபந்தம், பலரின் ஈடுபாட்டுக்கு இடமாகி, பள்ளு நூல்கள் பல வெளியாகி, 'படித்தால் பள்ளைப்படி', 'நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது' என்ற சிறப்புரைகளைப் பெற்றது. பாரதியார்,

"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட் டோமென்று"

என்று பள்ளர்களைத் தாழ்வாகக் கருதக் கூடாது என்றும் சுதந்திரம் வந்ததென்றும் பாடியுள்ளார். பன்னிரு

1. நாடோடிப் பாடல்களை அடியொற்றிப் பாடிய பல பாடல்கள் நாளடைவில் தனிப்பிரபந்தமாக வழங்கலாயின. குறத்திப் பாட்டிலிருந்து குறம் எழுந்தது. பின்பு குறவஞ்சி எழுந்தது. பள்ளர்கள் பாடும் குரவைப் பாட்டு முதலியவற்றிலிருந்து பள்ளேசலும் தோன்றின. — மலையருவி, பக். 21.

இலக்கிய வகைகளான அம்மானை, தூது, மாலை, நொண்டி நாடகம், பள்ளு, குறவஞ்சி, முதலியவையும் நாடோடிப் பாடல்களையே ஆதாரமாகக் கொண்டு திருத்தி அமைக்கப்பட்டவையே. —காட்டுமல்லிகை, பக். 13.

பாட்டியலில் சொல்லப்பட்ட உழத்திப் பாட்டிலக்கணத்தைப் பின் பற்றியே பள்ளுப் பாடல் எழுந்தது என்பர்.

நாட்டுப்புறப் பாடல்கள் வளர்ந்து இலக்கியமாகி இலக்கண வடிவமும் பெற்றன என்பதனையே உழத்திப் பாட்டிலக்கணம், குறத்திப் பாட்டிலக்கணம், ஊசல் இலக்கணம் ஆகியவை காட்டுகின்றன.

வேளாண்மைப் பாடல்களைக் காணத்தக்க அளவிற்கு 'குறத்திப்பாட்டு' நாட்டுப்புறப் பாடல்களில் அதிகமாகக் காணமுடியாதவையாக இன்று இருப்பினும் சில நூற்றாண்டுகளுக்கு முன் குறத்திகளின் வாழ்க்கை, பாட்டு இவற்றில் ஈடுபாடு கொண்ட சில புலவர்கள் அவர்களையும் தங்களின் இலக்கியத் தலைமைப் பாத்திரங்களாக்கி குறவஞ்சி நூல்களைச் செய்திருக்கின்றனர்.

சித்தர் பாடல்கள் : சித்தர் பாடல்களில் குறிப்பாக மதுரை வாலை சாமியாரின் ஞானக்கும்மிப் பாடல், கும்மிப் பாடல் அமைப்பினையும் சேஷயோகியாரின் ஞான ஏற்றப் பாடல் ஏற்றப்பாட்டின் அமைப்பினையும் கொண்டதாக விளங்குகின்றன. இவர்கள் நாட்டுப்புறப் பாடலின் வடிவத்தை அப்படியே தம் கருத்தில் பயன்படுத்திக் கொண்டவர்களாவர். நுண்பொருள்களை விளக்கும் எளிய சாதனமாகவும் அமைந்த நாட்டுப்புறப் பாடல்களின் அமைப்பு, சித்தர்களையும் மயக்கிவிட்டது என்பதற்கு இஃது ஒரு சான்றாகும்.

அண்மைப் புலவர் பாடல்கள் : நாட்டுப்புறப் பாடல்கள் நல்ல செல்வாக்கைப் பெற்று வளர்ந்தும், மெருகேற்றப் பட்டும், பாதுகாக்கப்பட்டும் வருவது

அண்மைக் காலத்திலிருந்துதான்; அண்மைக் காலப் புலவர்களுக்குத் 'தாலாட்டுப் பாடல்கள்' பெரும் ஈடு பாட்டை ஏற்படுத்தியதால் எண்ணிறந்த தாலாட்டுப் பாடல் நூல்கள் தோன்றியுள்ளன. உதாரணமாக, சீர்காழி சிற்றம்பல நாடிகள் தாலாட்டு, தத்துவராயர் தாலாட்டு, கீதாசாரத் தாலாட்டு, ஞானசம்பந்த தேசிகர் தாலாட்டு, நம்மாழ்வார் தாலாட்டு, திருமகள் நாச்சியார் தாலாட்டு, சம்பந்தர் தாலாட்டு, திருமலை முருகன் தாலாட்டு, நால்வர் தாலாட்டு, நீதிநெறித் தாலாட்டு, நன்னெறித் தாலாட்டு, சுந்தரர் தாலாட்டு, ஸ்ரீ ராமர் தாலாட்டு, சிதம்பரத் தாலாட்டு, குமரவேள் தாலாட்டு, சிறுத்தொண்டர் தாலாட்டு, ஆண்பிள்ளை தாலாட்டு, பெண்பிள்ளை தாலாட்டு, நூதனப் பிள்ளைத் தாலாட்டு முதலிய சிறு சிறு தாலாட்டு நூல்களைக் குறிப்பிடலாம். இத் தாலாட்டுப் பாடல்கள், தாய்மார்களால் பாடப்பட்டும் வருகின்றன.

கும்மிப் பாடல்கள், பெரும் புலவர்களை ஈர்க்கும் பெற்றியனவாக இருந்திருக்கின்றன என்பதனைக் கோபாலகிருஷ்ண பாரதியாரின் 'சிதம்பரக் கும்மி' இராமலிங்க சுவாமிகள் பாடிய 'கும்மிப் பாடல்கள்' பாரதியாரின் 'கும்மிப் பாடல்கள்' ஆகியவற்றால் அறியலாம். நாலுமந்திரிக் கும்மி, மானிடக் கும்மி முதலிய பாடல்கள், கும்மிப் பாடலின் அமைப்பை ஒட்டி எழுந்த பாடல்களாகும்.

பாரதியார் : புலவர்களில் கம்பர், வள்ளுவர், இளங்கோ ஆகியவர்களிடமும், உலக மொழிகளில் தமிழ் மொழியிடமும் பாரதியார் தம் நெஞ்சத்தைப் பறிகொடுத்

தத்தைப் போலவே நாட்டுப்புறப் பாடல்களிலும் நெஞ்சத்தைப் பறிகொடுத்தவர்; அந்த அனுபவத்தைப் பாட்டுவடிவிலும் பாடியவர் கவிஞர் தமது நிலைத்த பாடலான 'குயிற் பாட்டில்' குயிலின் காதற் கதையினைக் கூறும் பொழுது பலவகையான நாட்டுப்புறப் பாடல்களைக் காது குளிரக் கேட்டுக் காதல் கொண்டதைக் கீழ்க்கண்டவாறு பாடி மகிழ்கின்றார்.

''ஏற்றநீர்ப் பாட்டின் இசையினிலும், நெல்லிடிக்குங்
கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ண மிடிப்பார்தஞ் சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டியிசைத் திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்
நெஞ்சைப் பறிகொடுத்தேன்.'

கவிஞர் ஏற்றப்பாட்டு, நெல்குத்துவோர் பாட்டு, சுண்ணும்பு இடிப்போர் பாட்டு, பண்ணைப் பாட்டு, கும்மிப் பாட்டு போன்ற நாட்டுப்புறப் பாடல்களில் நெஞ்சைப் பறிகொடுத்ததாகக் குறிப்பிடுகிறார்.

உலகில் புகழ்பெற்ற புலவர்கள், நாட்டுப்புறப் பாடல்களை முகம் சுளிக்காது ஏற்றுக்கொண்டு பாரதியாரைப் போன்று ஈடுபாடும் காதலும் கொண்டிருக்கிறார்கள். ஆங்கிலக் கவிஞர் வோர்ட்ஸ்வொர்த் அறுவடைப் பாட்டில் மனம் பறிகொடுத்தார். கைசிவக்கக் கவிதையாத்த கம்பர் ஓர் ஏற்றப்பாட்டைத் தெரிந்து கொள்ள இரு நாள்கள் காலை நேரத்தில் எழுந்து வந்ததாக வழங்கிவரும் ஒரு செவிவழிக்கதை கவிச் சக்கரவர்த்தி கம்பருக்கு நாட்டுப்புறப் பாடலில் உள்ள ஈடுபாட்டைத் தெரிவிக்கிறது.

பாரதியார் நாட்டுப்புறப் பாடல்களைக் கேட்டது மன்றி, அந்நடையும் அமைப்பும் தம் கவிதைகளில் வருமாறும் பாடிக் காட்டியிருக்கிறார்.

நாட்டுப்புறப் பாடல் நடை: குயில் பாட்டில் நாட்டுப்புறப் பாடல்களைப் பாடக்கேட்டு மனத்தைப் பறிகொடுத்ததாகக் குறிப்பிடும் கவிஞர், தமது அழகிய படைப்பான பாஞ்சாலி சபதத்தில் நாட்டுப்புறப் பாடலின் நடையைப் (Style) பின்பற்றிப் பாடியிருக்கிறார். இவ் வுண்மையைப் பாஞ்சாலி சபதத்திற்குப் பாரதியார் எழுதிய பொருள் விளக்கக் குறிப்பில் கீழ்க்கண்டவாறு எழுதுகின்றார்.

"தெருவில் ஊசிகளும் பாசிமணிகளும் விற்பதோடு பிச்சையெடுக்கவும் செய்கிற பெண்கள், 'மாயக்காரனம்மா கிருஷ்ணன்–மகுடிக் காரனம்மா' என்று பாடும் நடை, சூதாட்ட வருணனைக்கும் அதில் ஏற்படும் பரபரத்த வார்த்தைகளையும் செய்கைகளையும் விளக்குவதற்கும் மிகவும் பொருந்தியதென்பது எளிதிலே காணப்படும்."

இப்படிக் கவிஞர் திறந்த மனத்தோடு ஒத்துக் கொண்டு எழுதும் பகுதி, பாஞ்சாலி சபதத்தில் சூதாட்டம் நடைபெறும் பொழுது கீழ்க்கண்டவாறு கையாளப் படுகிறது.

"மாயச் சூதினுக்கே—ஐயன்
மனமிணங்கி விட்டான்
தாயமுருட்ட லானுர்—அங்கே
சகுனி ஆர்ப்பரித்தான்

நேயமுற்ற விதுரன்—போலே
　　நெறியுள்ளோர்க ளெல்லாம்
வாயை மூடிவிட்டார்—தங்கள்
　　மதிம யங்கிவிட்டார்
மாடிழந்து விட்டான்—தருமன்
　　மந்தை மந்தையாக
ஆடிழந்து விட்டான்—தருமன்
　　ஆளிழந்து விட்டான்
பீடிழந்த சகுனி—அங்கு
　　பின்னுஞ் சொல்லுகின்றான்
நாடிழக்க வில்லை—தருமா
　　நாட்டை வைத்திடென்றான்."

கவிஞர் தெருவில் பாசிமணி விற்ற பெண்கள் பாடிய பாட்டைக் கேட்ட அப் பாட்டு நடையில் பதின்மூன்று பாடல்கள் புனைந்துள்ளார். அப் பாடல்களைப் படிக்கும் பொழுது சூதாட்ட விளையாட்டில் பகடை உருட்டும் பொழுது உள்ள பரபரப்பும் பகடை உருண்டோடுவதைப் போன்ற பாவோட்டமும் நிறைந்திருப்பதை அறிய முடிகிறது.

பாரதியார் நாட்டுப்புறப் பாடலின் நடையினைப் பாடலில் கையாண்டிருப்பதைப் போலவே தமிழகப் புலவர்களான சித்தர்கள், கோபாலகிருஷ்ண பாரதியார், இராமலிங்க சுவாமிகள், பாரதிதாசன் முதலியோர் மட்டுமன்றி மேலைநாட்டுப் புலவர்களும் தம் கவிதைகளில் நாட்டுப்புறப் பாடல்களின் நடை, சந்தம் முதலியவற்றைக் கையாண்டிருக்கின்றார்கள். பரம்பரையாக வழங்கி வரும் நாட்டுப்புறப் பாடல்களுக்கு இன்று சிலர் மூக்கும் முழியும் வைத்துத் தம் பெயரில் வெளியிட்டுக் கொள்வதைப்

போலவே, பதினெட்டாம் நூற்றுண்டில் மேலை நாட்டிலும் நாட்டுப்புற இலக்கியங்களுக்கு மெருகு கொடுத்து வெளியிட்டிருக்கின்றுர்கள்.

கும்மிப் பாடல் : குயிற் பாட்டில் கும்மிப் பாடலில் நெஞ்சைப் பறிகொடுத்ததாகப் பாடிய பாரதியார் கும்மிப் பாடல் அமைப்பில் கும்மிப் பாட்டும் பாடியுள்ளார். கும்மிப் பாடலை மதுரை வாலையசாமிச்சித்தர், கோபால கிருஷ்ண பாரதியார், இராமலிங்க சுவாமிகள் ஆகியோர் தங்கள் கருத்துக்கேற்பப் பயன்படுத்தியிருப்பது போலவே பாரதியாரும் அடிமைப்பட்டுக் கிடக்கும் பெண்கள் நிலை கண்டு விடுதலை அடைய வேண்டும் என்று புதிய கோணத்தில் கும்மிப்பாட்டு எழுதியுள்ளார். உலகில் தாய்ச் சமுதாயம் படித்துப் பாடிக் கும்மியடித்து மகிழக கவிஞரின் பெண்கள் விடுதலைக் கும்மி அனைத்து மொழி களிலும் மொழி பெயர்க்க வேண்டிய புரட்சிகரமான கருத்துப் பாடலாகும்.

கோணங்கிப் பாடல் ; தெருவில் பாசி விற்று நடந்த பெண்கள் பாடிய பாட்டு பாஞ்சாலி சபதத்தில் நடையாக அமைந்தது போலவே தெருவில் குடுகுடுப் பைக்காரன் பாடிச்சென்ற பாட்டு பாரதியாருக்குப் புதுச் சமுதாயம் மலரவேண்டும் என்ற வேட்கையால் புதிய கோணங்கிப் பாட்டாக உருவெடுத்திருக்கிறது; குடுகுடுப் பைக்காரன் ‘நல்ல காலம் பொறக்குது’ என்று பாடு வதனைக் கவிஞர் ‘நல்ல காலம் வருகுது’ என்று பாடு கிருர். கவிஞர் விரும்பிய நல்ல சமுதாய மாற்றத்தினை எடுத்துச் சொல்லக் குடுகுடுப்பைக்காரன் பாட்டு மிகப் பொருத்தமாக அமைந்து விட்டது.

தெய்வப் பாடல்கள் : கவிஞரின் 'முத்துமாரிப் பாட்டு' நாட்டுப்புறப் பாடல்களில் உள்ள மாரியம்மன் பாட்டையும், 'காளிப்பாட்டு' பூசாரிகள் பாடும் பாட்டையும் நினைவூட்டுகின்றன.

தெம்மாங்கு : தேன் பாங்கு என்று பிரித்துப் பொருள் காண்க. மகிழும் வண்டிக்காரர்கள் பாடும் தெம்மாங்குப் பாட்டுப் போல, பாரதியார் வண்டிக்காரன் பாடுவதாக ஒரு பாடல் இயற்றியுள்ளார். வரகவி பாடும் வண்டிக்காரன் பாட்டு :

''காட்டு வழிதனிலே—அண்ணே!
கள்ளர் பயமிருந்தால்?—எங்கள்
வீட்டுக் குலதெய்வம்—தம்பி
வீரம்மை காக்குமடா!
நிறுத்து வண்டி யென்றே—கள்வர்
நெருங்கிக் கேட்கையிலே—எங்கள்
கருத்த மாரியின் பேர்—சொன்னல்
காலனும் அஞ்சுமடா!''

தேசியக் கவிஞரின் பாடல் தொகுதியில் இப் பாடல் இல்லாது, தனியாகப் பாரதியாரின் பெயர் இல்லாது இருந்திருக்குமானல் நாட்டுப்புறப் பாடல்களைத் தொகுப்பவர் இப் பாடல்களையும் நாட்டுப்புறப்பாடல் தொகுதியில் சேர்த்திருந்தால் அச்செய்கை வியப்படைவதற்கில்லை. புலவர் சிலர் மக்கள் நடையில் எழுதிய பாடல்கள், தவறிப்போய்ப் பாமரர் பாடல்களாகச் சேர்க்கப்பட்ட வரலாறும் தமிழகத்தில் உண்டு.

வடிவங்கள் : நாட்டுப்புறப் பாடல்களின் இலக்கணம் எனச் சொல்லத்தக்க எளிமை, திருப்பிச்

சொல்லுதல், பேச்சு மொழிகள், சந்தம், மெட்டு முதலியவை பாரதியார் பாடல்களில் உண்டு.

பாரதியார் பாஞ்சாலி சபதத்திற்கு எழுதிய முகவுரையில் 'எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனுகின்ருன்' என்று குறிப்பிடுகின்ருர். மக்கள் உள்ளங்களில் சங்க இலக்கியப் பாக்கள் பெருத இடத்தைப் பாரதியார் பாடல்கள் பெற்றமைக்கு வெளிப்படையான காரணம் இதுதான். பாரதியாரின் இவ் வெற்றிக்கு நாட்டுப்புறப் பாடல்கள் கைகொடுத்து உதவியிருக்கின்றன.

கவிஞர்களில் மிக உணர்ச்சி வசப்பட்டவர் பாரதியார். உணர்ச்சிகளின் வடிவம் நாட்டுப்புறப் பாடல்கள். உணர்ச்சியை உணர்ச்சி உணரும் அதனுல்தான் பாட்டுக்கொரு புலவரின் பாடலில் பாமரன் பாடலைக் காணமுடிகிறது.

பாரதிதாசன் : பாரதிதாசன் பாடியுள்ள தாலாட்டு, ஏற்றப்பாட்டு ஆகியவை நாட்டுப்புறப் பாடலின் அமைப்புக் கொண்டனவாகும். இன்றைக்கு அ. மருதகாசி, கவிஞர் கண்ணதாசன், கொத்தமங்கலம் சுப்பு முதலியவர்கள் நாட்டுப்புறப் பாடல்களின் வடிவத்தில் கவிதைகள் புனைந்து வருகின்றனர். இவ்வாறெல்லாம் இலக்கியங்கள் தோன்றுதற்கு முன் தோன்றிய நாட்டுப்புறப் பாடல்கள், இலக்கியங்கள் நன்கு உருவான காலத்திலும் உருவாகிவரும் காலத்திலும் காலத்திற்குக் காலம் கவிஞர்களால் சீராட்டப்பட்டும் தாலாட்டப்பட்டும் வந்திருக்கின்றன.

சமுதாயத்தில் வழக்கிலிருந்த நாட்டுப்புறப் பாடல்கள் புலவர்களின் எண்ணங்களுக்குத் தக, மாறு பாட்டினை அடைந்திருக்கின்றன என்பதனையே மேலே கண்டவை நமக்கு வலியுறுத்துகின்றன.

தமிழ் இலக்கிய வரலாற்றில் கவிஞர்களின் இலக்கியப் பயிருக்கு நாட்டுப்புறப் பாடல்கள், ஆற்றுநீராக இல்லாவிட்டாலும் ஊற்று நீராக இருந்திருக்கின்றன.

அ. பாநலம்

வருணனை

புலமையின் பல்வேறு விளையாட்டுகளில் ஒருவகை விளையாட்டே வருணனை. பெண்ணைக் கண்டதும் கவிஞனிடம் துள்ளிக் குதித்துவரும் சொல் வளத்தை வருணனையாக இலக்கியங்களில் காண முடிகிறது. ஒரு புடை ஒப்பாக வரும் உவமையைப் போலல்லாமலும் ஓரளவு உள்ளதை உள்ளபடி சொல்லுவது வருணனையாக அமைந்திருக்கிறது. உவமை, கற்பனை இவ்விரண்டிற்கும் இல்லாதஒருதனி ஆற்றல் வருணனைக்கு உண்டு. வருணனை பாக்களின் நீளத்தை வளர்க்கும் பெற்றியது. நெடிய தமிழிலக்கியங்களில் இடையிடையே அமைந்து கிடக்கும் வருணனை இவ் வுண்மையை வலியுறுத்தும்.

இலக்கியங்களில் உள்ள பாதாதிகேச வருணனை கேசாதிபாத வருணனைகளைப் போல நாட்டுப்புறப் பாடல்களில் இல்லாவிட்டாலும் வருணனை உண்டு என்பதற்குப் பல பாடல்கள் சான்றாக இருக்கின்றன. வருணனை தோன்றுவதற்கு மனிதர், இயற்கை, இடம், குறிப்பிட்ட நிகழ்ச்சி, தெய்வம் முதலியவை அடிப்படைக் கருப்பொருள்களாக அமையும். இவற்றின் அடிப்படையில் தோன்றும் வருணனை நாட்டுப்புறப் பாடல்களில் உண்டு.

மனிதர்களை வருணித்தல்: தாய்மை இசைக்கும் தாலாட்டுப் பாடல்களிலும் காதலர்கள் பாடிடும் காதல் பாட்டுகளிலும் மனிதர்களை வருணித்தல் நிறைந்து காணப்படும். காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு என்பார்கள். தாய்க்குத் தன் குழந்தை குறையுடைய தாக இருந்தாலும் மாற்றுக் குறையாத தங்கம் தான். தாய்மையின் இயற்கையான அன்பு ஊற்று இப்படி இருக்கும் பொழுது தாலாட்டில் வருணனை எப்படி வற்றிப் போகும்!

ஆடிப் பெருக்கு போல, சில நேரங்களில் அலை மோதுவதுண்டு.

தாய் பாடுகிறாள்:

"தேனோ திரவியமோ
தெவிட்டாத தெள்ளமுதோ
கோடைப் பலாச்சுளையோ
கொஞ்சவந்த ரஞ்சிதமோ!
வானத்து மீனோ!
மேகத்து மின்னலோ? நீ
தாகத்தைத் தீர்க்கவந்த
தங்க இளநீரோ!"

கொழுநனைப் பாடவில்லை, குழந்தையைத்தான் இப்படி வருணிக்கின்றாள். தாய்க்குக் குழந்தை பூக்களா கவும், கனிகளாகவும், அரிய பொருள்களாகவும், விலை மதிக்க முடியாத செல்வங்களாகவும் தோன்றுவதால் அவற்றோடு எல்லாம் மழலையை ஒப்பிட்டுப் பார்த்து மகிழ்கிறாள். பெற்றவளுக்குத் தானே பிள்ளையின் அருமை தெரியும்?

காதலர்களிடம் இந்த வருணனைப் புகழ்ச்சி உண்டு. இன்றைக்கு மேடையில் சில நேரங்களில் சடங்காகிப் போய்விட்ட இந்த வருணனை காதலர்களிடம் நீடித் தாலும் கூடச் சலிப்பதில்லை. சிலப்பதிகாரத்தில் 'மாசறு பொன்னே' என்று கண்ணகியைக்,கோவலன் வருணிக்கும் பகுதியும் "பொன்னே மணியே புனைபூங் கோதாய்" என்ற பகுதியும் அன்பில் பிறக்கும் வளமையான வருணனைக்கு எடுத்துக் காட்டாக அமைகின்றன. ஆண் பெண்ணையே வருணித்து அதைக் கேட்டும், படித்தும், புளித்துப் போய்விட்ட நமக்கு நாட்டுப்புறப் பாடல் ஒன்றில் ஆணைப் பெண் வருணிக்கும் கள்ளம் கபடமற்ற எளிய கற்பனையைக் காணலாம். ஒரு காதலி தன் வருணனையால் காதலனைப் படம் பிடித்துக் காட்டு கிருள் :

"மச்சானே ! மாம்பழமே
மாமிபெத்த பாலகனே !
ஏலம்கிராம்பே உன்னை
என்னசொல்லிக் கூப்பிடட்டும்?
வட்ட வடிவழகா ! மாமா
வட்டமிட்ட பொட்டழகா
சாய்ந்த நடையழகா ! மாமா
சந்தனப் பொட்டழகா"

காதலன் எழிலுக்கும் பாட்டின் அழகுக்கும் என்ன குறைவு.

இயற்கை வருணனை : பொருள்வயிற் பிரிந்து சென்ற தலைவன் செல்லும் காட்டின் வெம்மையையும், அங்கு வாழும் கொடிய மிருகங்களையும் தலைவி நினைத்துக்

கலங்குவதைச் சங்கப் பாடல்கள் நன்கு காட்டுகின்றன. நாட்டுப்புறப் பாடல் ஒன்று காடு ஒன்றினை வருணிக்கிறது. அடர்ந்த காடு என்பதனை வற்புறுத்திவரும் அந்த ஏற்றப் பாட்டில் கொடிய மிருகங்கள் உண்டு என்பதனை எளிமையாகப் பாடிச் செல்கிறது.

"கரடி அடர்ந்த வனம்
காட்டானை தூங்கும் வனம்
சிறுத்தை அடர்ந்த வனம்
சிறுபுலிகள் தூங்கும் வனம்"

கரடி, காட்டானை, சிறுத்தை, புலிகள் முதலிய கொடிய மிருகங்கள் வாழும் வனமாக இருந்தாலும் இவ்வருணனைகள் அச்சுறுத்தும் வருணனைகளாகவும், நாம் அஞ்சாமல் படிக்கும் வருணனைகளாகவும் இருக்கின்றன.

இடத்தை வருணித்தல்: பட்டணத்துக்குப் போய் வந்த பட்டிக்காட்டான் தன் கிராமத்தில் பட்டணத்தைப் பற்றி விடும் சரடு கூட ஒருவகையில் வருணனை தான், பார்த்த இடத்தின் அருமை பெருமையினைச் சிறப்பாகச் சொல்ல ஓடிவரும் வருணனை புகழ்பெற்ற கோடைக் கானலின் குளுகுளு காட்சியை ஆங்கிலேயர் அல்லது பத்திரிகைக்காரர் போல் வருணிக்கா விட்டாலும், வருணிக்காமலில்லை.

"துந்திநிழல் கட்டுறதும்
தூவானம் தூவுறதும்
நாதசுரம் ஊதுரதும்
நம்மகொடைக் கானலிலே"

கோடைக் கானலைப் போன்று மதுரை, கோகிலாபுரம், சுருளிமலை முதலிய இடங்களை வருணித்துப் பாடி

வரும் பாடல்களை நாட்டுப்புறப் பாடல் தொகுப்பாளர் தொகுத்துள்ளனர்.

நிகழ்ச்சி வருணனை : ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியை வருணிப்பதாக அமைந்த நிகழ்ச்சி வருணனைக்குத் திரு கி. வா. சகந்நாதனின் மலையருவித் தொகுப்பில் உள்ள தாது வருடப் பஞ்சத்தை (1876) வருணித்துப் பாடும் பாடலையும் வெள்ளையர்கள் இந்நாட்டை ஆண்டதால் ஏற்பட்ட நன்மைகளை வருணித்துப் பாடும் "வெள்ளைக்காரன் பாட்டையும்" சான்றாகக் கூறலாம்.

இப்படி மனிதர், இயற்கை, இடம், நிகழ்ச்சி முதலியவற்றை விரித்துரைக்கும் வருணனை நாட்டுப்புறப் பாடல்களில் காவிரியைப் போல் காணப்படாவிட்டாலும் வைகையைப் போன்றுவது காணப்படுகிறது.

உவமை

கவிஞனிடம் காணப்படும் கற்பனை நாட்டுப்புறப் பாடல்களிலும் இருப்பதைப் போல, உவமையும் காணப்படுகிறது. புலவர்கள் புனையும் செய்யுளுக்குச் சொல்லப்பட்ட உவமைகளும் தண்டியலங்காரமும், கற்றோர் இயற்றும் செய்யுட்கே பொருந்தும் என்று கூறிவிட முடியாமல் காற்றிலே உலவிவரும் கவிதைகளுக்கும் ஏற்புடையனவாக இருக்கின்றன. உவமை, புலவரிடம் கடும் உழைப்பையும், சிந்தனையையும் வாங்கும் ஒருவகைக் கடுமையான அறிவாகும். தெளிவினை ஏற்படுத்தும் குண முடையதாகும். ஒரு பொருளினை அறியப் பயன்படும் "ஆடி" ஆகும். ஆதலால்தான் பலர் இவ்வறிவினை ஒதுக்கிப் பாட்டுப் பாடுவதையே தம் மரபாகக் கொள்கின்றனர். பாட்டு இயற்ற ஆசைப்படுபவர்கள்

பராமுகமாகச் சொல்லும் உவமையைத் தாய்மார்கள், சில நேரங்களில் சரளமாகப் பேச்சு வாக்கில் சொல்வதுண்டு. இட்டிலியை மகனுக்கு எடுத்து வைக்கும்தாய் ‘ பூப்போல இருக்கிறது இன்னும் இரண்டு சாப்பிடு'' என்றும், தந்தை குழந்தையை அடித்துவிட அதனைக் கண்ட பொழுது “கொழுக்கட்டை போல் வீங்கி விட்டதே'' என்றும் கூறுவாள்.

இதைப்போல வாழ்வில் வாய்ப்பு ஏற்படும் பொழுது நாமும் ஒரு பொருளை உவமை சொல்லி விளக்க முயல்வதுண்டு. குறிப்பிட்ட ஒன்றினை வெகு தூரத்திற்குச் சென்று கண்டு வந்த நாம், அதனைக் காணாதவர்களுக்கு விளக்கப் பலவகையிலும் முயலுகின்றோம். எவ்வழியிலும் விளக்க முடியாதபோது பார்த்த ஒன்றினை அதனோடு ஒப்பிட்டுக் காட்டி அவனுக்குப் புரிய வைக்கிறோம். இவற்றை நோக்கும் பொழுது உவமை புல்வர்களுக்கு மட்டும் அன்று; அது பொதுவானது என்று உணர முடிகிறது. இவ் வுண்மையை நாட்டுப்புறப் பாடல்களில் காணப்படும் உவமைகள் வலியுறுத்துகின்றன.

அதிகமில்லை : நாட்டுப்புறப் பாடல்களில் உவமைகளின் எண்ணிக்கை அதிகம் என்று கூறிவிடமுடியாது. பிஞ்சு நெஞ்சத்தைப் பெற்றெடுத்த தாய்மை இசைக்கும் தாலாட்டிலும் அதே பெண்மையின் உரிமை ஒன்று இறப்பினைத் தழுவிய பொழுது எழுப்பும் ஒப்பாரியிலும், இரு பேராண்மைகள் காதலுணர்வினால் எழுப்பும் காதல் பாட்டுகளிலும் உவமைகள் நிறைய வருவதுண்டு. நாட்டுக் கதைப் பாடல்களில் பல பொதுவகை உவமைகள்

வரும். நாட்டுப்புறப் பாடல்களில் வரும் உவமைகள் உள்ளத்திற்கு இன்பத்தைத் தந்து கொள்ளை கொள்ளு வனவாகவும், இலக்கிய உவமைகளின் சுவையைக் கண்டே பழக்கப்பட்டுப் போன நமக்கு ஒரு புதுச்சுவை போலவும் அமைந்திருக்கின்றன. அச்சுவைக்கு எடுத்துக் காட்டாகக் கீழே வறுமை, பெண்களின் கூந்தல், தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலை, பாம்பு, வாழ்த்து, வாழாத பெண் ஆகியவற்றிற்குச் சொல்லியிருக்கும் உவமைகளைக் கொண்டு அறியலாம்.

வளமைக்கும் சோழ நாட்டுக்கும் தொடர்புண்டே தவிர, வறுமைக்கும் அந்நாட்டுக்கும் தொடர்பில்லை. சோறுடைத்து என்றால் சோழநாடு தான் நினைவுக்கு வரும். அத்தகைய சோழநாட்டில் மழையில்லாமல் மக்கள் எல்லோரும் வறுமையில் வாடிக் காய்ந்து போகும் நிலை ஏற்படலாயிற்று. அவ்வாறு மக்கள் காய்ந்து போனதைக் கீழ்க்காணும் பாடல் குறிப்பிடுகின்றது.

"சருகு போல் உலர்ந்தனரே
தனிச் சோழன் பட்டணத்தில்"

மரத்திலிருந்து உதிரும் சருகு, மக்களின் வறுமையை விளக்க வந்திருப்பது பொருத்தமாக இருக்கிறது.

பெண்களின் கூந்தல்: பெண்களின் கூந்தல் நீளத்தைப் போலச் சில தமிழ்ப் பாடல்களில் அவற்றின் அடிகள் நிரம்பிக் கொண்டிருப்பதுண்டு. கூந்தலின் நீளத்தையும் அதன் ஐவகை அமைப்பையும் (ஐம்பால்) வருணித்தார்களே தவிர அக் கூந்தலுக்குப் புதிய புதிய உவமைகளைச் சொல்ல நினைத்தார்களில்லை. ஒரு

நாட்டுப்புறப் பாடல் ஒரு பெண்ணின் கூந்தலையும் அவள் அதனை அள்ளித் தூக்கி முடிந்திருக்கும் பாங்கினையும் அழகாக எடுத்துக்காட்டுகிறது.

"ஆலம் விழுது போல
அந்தப் புள்ளை தலைமயிரு
தூக்கி முடிஞ் சிட்டாளாம்
தூக்கணத் தாங் கூடுபோல"

பெண்ணின் கூந்தல் நீளத்திற்கு ஆலம் விழுதும், தூக்கி முடிந்த பிறகு தூக்கணத்தாங் குருவிக்கூடும் உவமையாகச் சொல்லப்பட்டிருப்பது நெஞ்சத்தைக் கவர்வதாக இருக்கிறது. பெண்களின் கூந்தல் இப்படி நீளமாக இருந்ததால் தானே நன்னன் என்ற மன்னன் பகைப் புலத்துப் பெண்களின் கூந்தலைக் கயிறாகத் திரித்துத் தேரினை இழுக்கச் செய்திருக்கிறான்.

தலைவனைப் பிரிந்த தலைவி : தலைவன் தலைவியிடம் சொல்லிப் போனபடி வராததால் தலைவிபாடும் பாட்டுகள் தமிழ் மொழிக்கு நிறையக் கிடைத்தன. தமிழ் இலக்கியத்தில் தடுக்கிவிழும் இடமெல்லாம் காணும் இந்தக் காட்சியினை நாட்டுப்புறப் பாடலும் காண்கிறோம். தலைவனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மருதநிலப் பெண் கீழ்க்காணுமாறு தன் உள்ளத்து உணர்ச்சிகளைக் கொட்டுகிறாள்.

"ஒருபோக வேளாண்மைக்கு
உயர்வானைப் பார்ப்பதுபோல்
இருகண்ணும் சேரா—எந்தன்
இராசாவைப் பார்த்திருந்தேன்"

தலைவன் வானமாகவும் தலைவி நிலமாகவும் ஒப்பிடப் படும் இப் பாடலில் தலைவி குறிப்பிடும் "ஒரு போகம்" அவளது ஏக்க உணர்வினை எவ்வளவு ஆழமாகத் தெரிவிக்கிறது.

புதுவாழ்வு தொடங்கியிருக்கும் மக்களை ஏதாவது ஒன்றினை எடுத்துக்காட்டி வாழ்த்தினால்தான் மனம் நிறைவடையும். ஆகையால்தான் இன்று கூட "பூவும் நாரும் போல" "மணமும் மலரும் போல" "நகமும் சதையும் போல" என்றெல்லாம் கூறி வாழ்த்தி நிறை வடைகின்றோம். ஒரு திருமண வாழ்த்துப் பாடலில் நிறைய உவமைகள் வாழ்த்தாக அடுக்கப்பட்டு வருகின்றன. வாழ்க்கை தழைத்து நிலையுடையதாகப் பெருக வேண்டும் என்பது,

"ஆல் போல் தழைத்து
அறுகு போல் வேரோடி
மூங்கில் போல் சுற்றம்
முசியாமல் வாழ்ந்திடுவீர்"

என்று கூறி வாழ்த்தப்படுகிறது. மரம், செடி, கொடிகளை எடுத்துக்காட்டினாலும் உவமைகள் பொருத்தமாகவும் பொருளுடையனவாகவும் இருக்கின்றன.

உவமைகள் மனிதரைப் பற்றிப் பேசும்பொழுது மட்டும்வரும் என்பதில்லை. இரு திணைக்கும் பொதுவான தாகவே இருக்கும். இறைமையையும் பெண்மையையும் அடி முதல் முடிவரை வருணித்து உவமை சொல்லப் படுவதுபோல பாடலொன்றில் பாம்பு வருணிக்கப்பட்டு உவமைகள் தொடர்ந்து அடுத்தடுத்து வருகின்றன.

"மணிப் பிரம்பு போலே
வால் அழகு நாகரே
சிறு சுளகு போலே
படமெடுக்கும் நாகரே
குண்டு முத்துப் போலே
கண்ணழகு நாகரே
பச்சரிசி போலே
பல்லழகு நாகரே."

வாழாத பெண் : ஒரு பாடல் கணவனை இழந்து வாழாத விதவைப் பெண்களை உள்ளத்தைத் தொடும் உவமையால் சுட்டிக் காட்டுகிறது. இப் பாடலில் வாழாத பெண்களுக்கு வாழைப் பூ உவமையாகச் சொல்லப்படுகிறது.

"வாழைப்பூ ! வாழைப்பூ !
வாழாத பெண்கள் !"

வாழைப்பூ, மணம், அழகு, உருவம் அற்றமையால் அதனைத் தலையில் சூட்டிக்கொள்ள முடியாது. ஆனால், பூ என்ற பெயர் உண்டு. அதைப் போல வாழ்வில் மணம், அழகு, தோற்றம் அற்றுச் சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டு ஆனால், பெண் என்ற பெயரை வாழாத பெண் பெற்றவளாய் இருக்கிறாள். ஆகையால், வாழாத பெண்ணை வாழைப்பூவோடு ஒப்பிட்டுப் பாடுகிறது. பாரதிதாசன் வாழாத பெண்ணை வேர்ப்பலாவாகக் கண்டு பாடியது போல நாட்டுப்புறப் பாடல் வாழைப்பூவாகக் காண்கிறது.

இருபதாம் நூற்றாண்டில் சில கவிஞர்கள் பாட மறந்தொழியும் உவமை அழகு, இலக்கியங்களுக்கு மட்டும்

உரிய அழகு என்றில்லாமல் நாட்டுப்புறப் பாடல் களுக்கும் உரியது என்பதனைப் பாடல்களின் இடை யிடையே பளிச்சிட்டு நம்மை ஈர்க்கும் உவமைகள் கூறுகின்றன.

கற்பனை

இவ் வுலகத்தின் தோற்றத்திற்குக் காரணம் கூற நினைப்பவர்கள் அஃது இறைவனின் கற்பனை என்கின் றனர். இறைவனால் படைக்கப்பட்ட அனைவருக்கும் கற்பனை பொதுவானது. குழந்தை உயரமான கல்லின் மீது அமர்ந்து குதிரையின் மீதோ, விமானத்தின் மீதோ போவதாகக் கற்பனை செய்கிறது. கல்வி கற்கும் காளையர் படிப்பதற்கு முன்பாகவே மனம்போனபடி கற்பனைக் கனவு காண்கின்றனர். காதலர் கற்பனைக் கோட்டை களை வியக்கும் அளவிற்குக் கட்டுகின்றனர். பெற்றோர் பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றி வகை வகையாகக் கற்பனை செய்கின்றனர். வணிகர்கள் கற்பனையால்தான் தம் வாணிகத்திலேயே நம்பிக்கைகொண்டிருக்கின்றார்கள். இரந்துண்ணும் பிச்சைக்காரன் கூட ஒரு பிடி அரிசி கிடைக்காவிட்டாலும் வண்ண வண்ணக் கற்பனைகள் செய்வதில் தவறுவதில்லை. இப்படி அனைவருக்கும் கற்பனை பொதுமையாக இருக்கின்றது.

நம் தமிழ் இலக்கியங்களில் கற்பனை நிறைய உண்டு. இலட்சிய வாழ்வு வாழ்ந்த சங்கத் தமிழர் வாழ்க்கை யினைப் பழந்தமிழ்ப் புலவர்கள் தம் கற்பனைக் கண்களுடன் கவினுறு கவிதைகளாக வடித்ததனால் சங்க இலக் கியங்கள் இன்று இலக்கிய உலகில் ஒரு நல்ல இடத்தை

அடைந்திருக்கின்றன. காப்பிய ஆசிரியர்களில் கவியரசர் கம்பரின் கற்பனைகள் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றன. [3] சிற்றிலக்கியங்களில் கலிங்கத்துப் பரணி ஆசிரியர் செயங்கொண்டார் கற்பனை அரசராக விளங்குகின்றார்.

கற்றுணர்ந்த கவிஞர் பெருமக்களுக்குச் சிறப்பூட்டும் கற்பனை நாட்டுப்புறப் பாடல்களில் எந்நிலையில் உள்ளது என்பது உண்மையாக ஆவலைத் தூண்டும் ஆய்வே ஆகும். நாட்டுப்புறப் பாடல்கள் புலவர் பெருமக்களால் நன்கு பண்படுத்தி வடித்தெடுக்கப்படும் இலக்கியங்களைப் போன்றதல்ல. பாடியவர்கள் புலவர் அல்லர்; அவை யாப்பிலக்கண நூல்கற்று ஏட்டில் எழுதிவைக்கப்பட்ட கவிதைகளும் அல்ல. அவை காலம் சுட்டிக் காட்ட முடியாதபடி வாய்மொழி மூலம் பரம்பரை பரம்பரையாகப் பாடப்பட்டு வரும் பாடல்கள். இப்படிப்பட்ட இலக்கணத்தை உலக முழுதும் பொதுமையாகப் பெற்றுவிட்ட நாட்டுப்புறப் பாடல்களில் புலவர்களுக்குப் புகழினைத் தரும் கற்பனை நிறைய உண்டு.

குழந்தை முதல் பெரியவர் வரை பாடுகின்ற நாட்டுப்புறப் பாடல்களில் கற்பனை இல்லாது போக வழியில்லை.

இலக்கியக் கற்பனைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கத் தக்க உயர்ந்த கற்பனைகள் நாட்டுப்புறப் பாடல்களிலும் உண்டு. இனி ஒரு சில எடுத்துக்காட்டுகளாகக் காண்போம்.

எத்தகைய நாடு: சீத்தலைச் சாத்தனர் மணிமேகலைக் காப்பியத்தில் அடர்ந்த சோலை என்று கூற நினைக்கையில் "வெயில் நுழைபு அறியாக் குயில் நுழை பொதும்பர்" என்று பாடுகின்றார். பண்பட்ட பாவலனிடம் ஒளி நுழைய முடியாத சோலையாகக் காணப்படுவது போல் நாட்டுப்புறப் பாடல்களில் மிக்க அடர்த்தியான காட்டைக் குறிக்கக் கீழ்க்காணுமாறு பாடப்படுகிறது.

"ஈப் புகுந்தால்
இற கொடியும்
இண்டம் புனக்காடு
கொசுப் புகுந்தால்
இற கொடியும்
கொங்கர் இளங்காடு"

ஈக்களும் நுழைய முடியாத காடு, அவற்றைவிட உருவத்தில் மிகச் சிறிய கொசுக்களும் நுழைய முடியாத காடு என்று நாட்டுப்புறப் பாடலில் கற்பனை செய்யப் படுவது அழகாகவும், பொருத்தமாகவும், இன்பமாகவும் இருக்கிறது.

கவியரசர் தாகூரின் கவிதை வளத்திற்கும் காரணம் கூறும் பொழுது வறுமையை அறியாமல் செல்வச் செழிப்பிலே அவர் பிறந்து வாழ்ந்தமையால் தாகூரின் கவிதைகள் ஏழ்மையாகத் தோற்ற மளிக்கவில்லை என்பர். நாட்டுப்புறப் பாடல்களைப் பாடுபவர் அல்லது பாட எண்ணியவர்கள் தாகூரைப் போன்றவர்களல்லர். வீடுகளில் அரிசிமா அல்லது கல் மாவினல் பெண்களால் இடப்படும் கோலத்தினைப் பாமரன் பாடும்பொழுது

"முத்திடித்து மாக்கொழித்து—கண்ணே
முற்றமெல்லாம் கோலமிட்டு !"

என்று வளமான கற்பனையில் பாடுகிறான். அரிசிமாவும் கல்மாவும் நாட்டுப்புறப் பாடலில் முத்துமாவாகி முற்ற மெல்லாம் கோலமிட்டதாகவும் கற்பனை செய்யப்படுகிறது. இந்த நாட்டுப்புறப் பாடல் கற்பனைக் காட்சியைப் போன்று அகநானூற்றில் அரசப் புலவர் நெடுஞ் சேரலாதர் புன்னைப் பூக்கள் அரும்பி இருப்பதனை முத்துக் களோடு ஒத்துக் காண்கிறார். "மண்ணா முத்தம் அரும்பிய புன்னை" என்பது அந்தச் சங்க இலக்கியப் புலவர் செய்த கற்பனையாக அமைந்திருக்கிறது.

நாட்டுப்புறப் பாடல்களில் அரிசிமாவினை முத்து மாவாகக் காணும் உயர்ந்த கற்பனையைப் போல மட்டும் அமைக்காமல் அவர்களுடன், தொடர்புடைய சாதா ரணப் பொருள்களையும் தம் கற்பனை ஆற்றலில் கொண்டு வந்து பாடி மகிழ்வர். ஒரு நாட்டுப்புறப் பாடலில் வானத்தில் விண்மீன்களிடையே ஒளி விடும் நிலவினைக் குறிப்பிடும் பொழுது,

"சோளப் பொறி நடுவே
சுட்டு வைத்த தோசை போல
சோதி நிலா எரிக்கும்"

என்று பாடப்படுகிறது. இங்கே நாட்டுப்புறக் கவிஞன் விண்மீன்களை அவன் வீட்டுப் பலகாரமான சோளப் பொறியாகக் கண்டதோடு மட்டும் அல்லாமல் காதலன் காதலியின் முகத்தினை நிலவோடு ஒப்பிட்டுப் பார்ப்பதனை தன்னுடைய கற்பனையில் தோசையாகக் கண்டு சுவைத்து மகிழ்கிறான்.

கற்பனை மூன்று விதம் : திறனாய்வாளர்கள் கவிஞர்களின் கற்பனை மூன்று விதமெனக் கருதுகின்றார்கள். அவை படைப்புக் கற்பனை, இயைபுக் கற்பனை, கருத்துவளக் கற்பனை என மூன்றாம்.

இம் மூன்று விதமான கற்பனைகளும் நாட்டுப்புறப் பாடல்களில் உண்டு. இம் மூன்று விதக் கற்பனைகளையும் தாண்டி நான்காவதாக உயர்வு நவிற்சிக் கற்பனை என்ற ஒன்றை ஆய்வாளர்கள் வகுத்திருக்கின்றனர். இஃது உண்மை என்றும் உள்ளீடு இல்லாமல் கற்பனைக்கு முரணாகாமல் கற்பனையில் சிறிது வேறுபட்டு மிகையாக இருக்கும். கட்டுப்பாடற்று அறிவியலுக்கும் சிறிதுகூட வேலை இல்லாது நினைத்தபடியும் விரும்பியபடியும் பாடப்படும் இந்தக் கற்பனை நாட்டுப்புறப் பாடல்களில் கொஞ்சம் அதிகம் உண்டு. எடுத்துக்காட்டாக ஒன்று: குழந்தை அழுவதைத் தவிர்க்க முடியாது. அழுகை குழந்தையின் முதல் மொழி. குழந்தை அழுகின்றது; பெரியவர்கள் அழும்போது விழிகளில் வழியும் கண்ணீர்ப் பெருக்கைப் போலக் குழந்தைக்கு வராது. பனித்திரை படர்ந்தது போல் குழந்தை அழும் பொழுது கண்ணீர் குழந்தைகளின் விழித்திரைகளை மறைக்கும். குழந்தையின் கண்களில் படர்ந்துள்ள கண்ணீரைக் கண்ட தாயொருத்தி தாலாட்டில் கண்ணீர்ப் பெருக்கைக் கற்பனை செய்கிறாள். தாய் தாலாட்டில் பாடும் பொழுது,

"ஆரடித்த கண்ணீர்
ஆறாய்ப் பெருகியது
அங்கெடுத்த கண்ணீர்
ஆளைக் குளம் பெருகி

தாயார் மடிநிறைந்து
  தகப்பனார் தோள் நிறைந்து
மாமி மடிநிறைந்து
  மாமனார் தோள் நிறைந்து
சித்திரை மாதம் சிறந்த
  வெள்ளம் வந்தது போல்
வைகாசி மாதம் வசந்த
  வெள்ளம் வந்தது போல்
ஆறு பெருகி
  ஆனை குளிப்பாட்டிக்
குட்டம் பெருகி
  குதிரை குளிப்பாட்டி
குளமாகத் தேங்கி
  குதிரை குளித்தேறி
முந்நூறு பார்ப்பாரும்
  முழுகிக் கரை சேர்ந்து
ஐந்நூறு பார்ப்பாரும்
  அமுதுண்டு கைகழுவி
குட்டை நிறைந்தது
  குழந்தை குஞ்சு குளித்தேறி
வாய்க்காலாய் ஓடி
  வழிப்போக்கர் சந்தி செய்து
இஞ்சிக்குப் பாய்ந்து
  இருவாட்சி வேரோடி
மஞ்சளுக்குப் பாய்ந்து
  மருதாணி வேரோடி
தாழைக்கும் பாய்கையிலே
  தழும்பினதாம் கண்ணீர்!
வாழைக்குப் பாய்கையிலே
  வற்றினதாம் கண்ணீர்!"

என்று பாடுகிறாள். இத் தாலாட்டில் தாயிடம் காணப் படும் கற்பனை வளம் நமக்குக் கம்பரை நினைவூட்டு

கின்றது. காவிரிப் பெருக்குப் போலத் தாயின் கற்பனை பெருக்கெடுத்து ஓடுகிறது.

பாரதியார்,

"உன் கண்ணில்
நீர் வழிந்தால் கண்ணம்மா
என் நெஞ்சில்
உதிரம் கொட்டுதடி"

என்றார்.

தாயின் தாலாட்டில் குழந்தையின் கண்களில் வழியும் நீரால் ஊரே மூழ்குகின்றது.

புறநானூற்றில் மண்ணால் அமைக்கும் மதகுகள் மீன்களால் அடைத்ததாகக் கருங்குழலாதனார் என்ற புலவர் கரிகால் பெருவளத்தானைப் பாடும் பொழுது கற்பனை செய்கிறார்.

"தண்புனல் பரந்த
பூசன் மண்மறுத்து
மீனிற் செறுக்கும் யாணர்"

என்பன அவ்வரிகள். நாட்டுப்புறப் பாடல் சோழ நாட்டை வருணிக்கும் பொழுது கீழ்க்காணுமாறு வருணிக்கின்றது.

"சோறு கொண்டு
மதவடைக்கும் சொர்ணகிரி நாடு
கஞ்சி கொண்டு
மதவடைக்கும் காவிரிப்பூம் பட்டினம்"

இப்படியாக நெஞ்சை அள்ளும் கற்பனைகள் நாட்டுப்புறப் பாடல்களுக்குச் சிறப்பினைத் தருகின்றன.

கற்பனை, இயற்கையாக எல்லாருக்கும் குழந்தைப் பருவத்திலிருந்து கூடவே வளர்ந்து விடும் அழகுகளில் ஒன்றாகும். அதனால்தான் கவிஞர்களால் இலக்கண வேலிக்கு உட்பட்டுப் படைக்கப்படும் இலக்கியங்களில் மட்டுமன்றி நாட்டுப்புறப் பாடல்களிலும் கற்பனை வளத்தைக் காணமுடிகிறது.

நகைச்சுவை

சுவைகளில் நகை இன்பத்தைத் தருவதாகும். ஏனைய சுவைகளைப் போலத் தெவிட்டும் தன்மை நகைச் சுவைக்கு இல்லை. விலங்கிடமிருந்து வேறுபடுத்திக் காட்டக் கூடிய இந்த நகை தமிழிலக்கியங்களில் தொன்மைக் காலந்தொட்டு இன்றுவரை பள்ளமாகவே இருந்து வந்திருக்கிறது. இப் பள்ளம் ஏற்படாமல் இருக்கத் தொல்காப்பியர் செயற்றியனார் முதலிய இலக்கணப் பெரியார்கள், தம் நூற்பாக்களில் வழி வகுத்திருந்தாலும் தனிப்பட்டு நகை இலக்கியங்கள் தோன்றாது போயின. அகப் பாடல்கள் (சிறப்பாகக் குறிஞ்சிக்கலி) காப்பியங்கள் பிற்காலப் பிரபந்தங்கள் இவற்றில் நகைச்சுவை சில இடங்களில் வந்துள்ளன. ஆனால், கவிஞர் பாரதி தாசன் இயற்கையைப் பாடியது போலவே தம் பாடல் களில் வளமான நகைச்சுவையையும் கையாண்டு புலவர் உலகில் புரட்சிக் கவிஞராகத் திகழ்ந்தார். இக்காலப் பத்திரிகைகள் நகைச்சுவை வேடிக்கை, தமாஷ் என்பவற்றைச் சிறுசிறு துணுக்குகளாகத் தனியே அமைத்து உண்டாக்க வேண்டிய ஒரு சுவை என்று பிரிவினை செய்து கொண்டிருக்கின்றன. பெருங் கதாசிரியர்கள் நெடுங்கதைகளான தம் படைப்புகளின் சிறப்புத்

தோன்றுவதற் காகவே வேலைக்காரன் வேலைக்காரி ஆகிய பாத்திரங்களை வலியப் புகுத்தி நகைச் சுவையினை உண்டாக்கி வருகிறார்கள். ஆனால், மேலை நாட்டினர் சிரிக்க வேண்டும் என்பதற்காகவே பல திரைப்படங்களை எடுக்கிறார்கள். இம் முயற்சி நம் நாட்டிலும் கன்னி முயற்சியாக உள்ளது. இந்த இன்பச் சுவையைக் கதைகளில் மட்டுமன்றிக் கட்டுரை களிலும் கூட உண்டாக்கும் கைவண்ணம் படைத்த கட்டுரையாசிரியர்கள் உண்டு. கல்கியின் எழுத்துக்களில் பரவலாக இருந்தாலும் குறிப்பாக "ஏட்டிக்குப் போட்டி" என்ற படைப்பில் நிறைந்துள்ளது.

அறிஞர் ஆல்டஸ் ஹக்ஸரி வாழ்க்கையைப் பற்றிக் கூறும் பொழுது வேடிக்கையும், விளையாட்டும் நகைச் சுவையும் வாழ்வின் உயிர் நாடிகள் என்கிறார். இந்த நாடிகள் நன்கு ஓடுமிடம் நாட்டுப்புறப் பாடல்களாகும். தமிழிலக்கியங்களைப் படிக்கும்பொழுது பெற முடியாத நகைச்சுவை நாட்டுப்புறப் பாடல்களில் நிறைய உண்டு.

பக்திப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் தவிர, நாட்டுப்புறப் பாடல்களில் நகைச்சுவை பரந்து விரிந்து அமைந்திருக்கிறது. அதனால் நாட்டுப்புறப் பாடல்களைப் படிப்போர் முகம் மலர்ச்சியடைகிறது. வாய்விட்டுச் சிரிக் கின்றார்கள். அவற்றைக் கேட்போர் கைகொட்டி மகிழ்கிறார்கள்.

நாட்டுப்புறப் பாடல்களில் நையாண்டி, நகைச் சுவை அதிகம். மணமகன், மணமகள், வயோதிகர் முதலியவர்களை கேலி செய்வதற்காகவே பாடப்படும்

பாடல்களில் நகைச்சுவை, நையாண்டி உண்டு. சிரிக்க வேண்டும் என்ற குறிக்கோளுக்காகவே வேறு சில பாடல்களில் இல்லாதவற்றையும், நடக்காதவற்றையும் சொல்லி நகைச்சுவை உண்டாக்குவார்கள். தர்க்கப் பாடல்கள் பாடுபவர்களிடம் நகைச்சுவை மாறி மாறிக் களிநடனம் புரிவாள். மனிதர்களிடம் அமைந்துள்ள குறைபாடுகளைக் கூறும்போது கோபத்தை மட்டுமன்றி நகையையும் உண்டாக்கலாம், எனச் சில நாட்டுப்புறப் பாடல்கள் காட்டுகின்றன. முற்றிலும் அறவே எதிர்பார்க்காத ஒன்றினைப் பிறர்கூறக்கேட்கும் மனிதனை வியப்பில் மட்டுமன்றிச சில பாடல்கள் சிரிக்கவும் வைக்கின்றன. சில பாடல்கள் “சிரிப்பு” உண்டாக்கவே பாடப் பட்டிருக்கின்றன. இப்படிப் பலவாறாக அமைந்து கிடக்கும் நகைச்சுவை தரும் நாட்டுப்புறப் பாடல்களில் சிலவற்றைச் சுவைக்காகக் காண்போம்.

நையாண்டி : திருமணம் “ஆயிரங் காலத்துப் பயிர்.” மணமகன் அல்லது மணமகள் தேர்ந்தெடுக்கப் படும் பொழுது ஓடுகின்ற இரயிலில் வாங்குகின்ற பொருள்கள் போல் தேர்ந்தெடுக்கப் படுவதில்லை. அறிவு, அழகு, குணம், பணம், மனம், வயது ஆகியன அறிந்து தான் தேர்ந்தெடுப்பார்கள். அப்படி அறிந்து தேர்ந்தெடுக்கப்பட்டுத் திருமணம் நடந்த நாளன்று மாப்பிள்ளையை மைத்துனியும் மணப் பெண்ணை மாப்பிள்ளை வீட்டாரும் ஏசல் செய்து ‘ஏசல்பாட்டுகள்’ பாடுவர். ஏசல்பாட்டு என்று இவை அழைக்கப்பட்ட போதிலும் பாடப்படும் நோக்கம் திருமணத்திற்கு வந்த இருவீட்டாரும் சாப்பிட்ட திருமண விருந்து செரிக்க வாய்

விட்டுச் சிரிக்க வேண்டும் என்பதற்காகப் பாடப்படும் சிரிப்புப் பாடல்களாகும்.

மாப்பிள்ளை நாகரிகமிக்க நல்ல அழகான தோற்ற முள்ளவன் பெண்ணுக்குத்தானே அந்தத் தோற்றமும் அழகும். அவற்ருல் மைத்துனிக்கு என்ன வந்தது? கீழ்க்காணும் பாட்டுத்தான் வந்தது.

"அரிசி கரித்தால் போல
ஐந்தாறு பல்லுகளாம்
அறுகு முளைத்தால் போல
ஐந்தாறு மீசைகளாம்
கீரை கடைந்தால் போல
கீழுதடும் மேலுதடும்
பருப்புக் கடைந்தால் போல
பல்லடுக்கு ஊத்தைகளாம்"

அக்காளின் கணவஞக இருந்தாலும் இப்படி மைத்துனியால் பாடப்படும் பொழுது திருமண வீட்டில் சுற்றியுள்ள பெண்கள், ஆண்கள் நடுவே மணமகன் நல்ல நகைச்சுவை நடிகஞகி விடுகிருன்.

மாப்பிள்ளை படித்தவஞகவும் திறமையுள்ளவஞகவும் இருக்கலாம். மணவீட்டில் மைத்துனியின் ஏசல் பாட்டில் அவன் ஒரு மண்டுதான்; மக்குதான்; மைத்துனி பாடுகிருள்:

"தேவாரம் சொல்லென்ருல்
தாவாரம் போவார்
தேவடியாள் வீடென்ருல்
காவலாய் இருப்பார்

ஆனைமேல் ஏறென்றால்
பானைமேல் ஏறுவார்
ஆத்துக்குப் போவென்றால்
ஊத்துக்குப் போவார்
மாடிமேல் ஏறென்றால்
தாடிமேல் ஏறுவார்
மச்சுக்குள் நுழையென்றால்
குச்சுக்குள் நுழைவார்"

பாட்டைக் கேட்டதும் மாப்பிள்ளையும் சிரிக்கிறான். மணப்பெண்ணைப் பார்த்து அன்று. பாட்டில் படம் பிடித்துக் காட்டப்படும் தன்னை நினைத்து.

அத்தானுக்கு நன்கு சமைத்துப் போட வேண்டும் என்பதனை அருகிலுள்ள அக்காளுக்கு மைத்துனி கூறுகிறாள். அத்தான் சரியான சாப்பாட்டு ராமன் என்றும் கீழ்க்காணுமாறு உணர்த்துகிறாள்.

"போசனக்காரர் புகழ் கெட்டிக்காரர்
ஒரு பருக்கை குறைந்தாலும்
எழுந்திருக்க மாட்டார்"

என்று பாடுகிறாள். பிற்காலப் பள்ளுப் பிரபந்தத்தில் பள்ளன் ஆண்டையை நோக்கிப் பாடுவது இத்தகைய நையாண்டிப் பாடல்களே எனலாம்.

மாப்பிள்ளையைக் கேலி செய்வதை மட்டும் மாப்பிள்ளை வீட்டார் கேட்டுக் கொண்டிருப்பார்களா? காக்கைக்குத் தன் குஞ்சு பொன்குஞ்சு தானே? மைத்துனி பாடிய மாப்பிள்ளை ஏசலுக்கு எதிராக மணப்பெண் ஏசலை மாப்பிள்ளை வீட்டார் உடனே பாடத் தொடங்குவர். திருமண வீட்டில் இந்த ஏசல் பாட்டால்

நகையாறு பெருக்கெடுத்தோடுவதுண்டு. விளையாட்டு வினையானது என்பது போல, காலப்போக்கில் இந்த ஏசல் பாட்டுகள் பாடிக்கொண்டிருக்கும் பொழுது இரு குடும்பத்தாரிடையும், சச்சரவுகளையும், வாய்ச் சண்டைகளையும் மூட்டி விட்டன. அதனால் ஏசல் பாட்டுகளினால் கைச்சண்டை தோன்றுவதற்கு முன் இரு வீட்டாரும் பாடுவதற்கு வாய்ப்பூட்டுப் போட்டுவிட்டனர். ஏசல் பாட்டு ஏவுகணையாகப் போகி நின்றுவிடத் திருமண வீட்டில் இப்பொழுது திரைப்பாடல்கள் பேரிடம் பெற்று விட்டன. திருமண வீட்டிற்குச் சென்றவர்களும் அன்றைய ஒரு நாள் கூத்து நடிகர்களான மாப்பிள்ளையும் மணமகளும் "உலகே மாயம்" என்ற பாட்டையும் "காதலிலே தோல்வியுற்றாள் கன்னி ஒருத்தி' என்ற பாடலையும் கேட்டுச் சுவைத்துக் கொண்டிருக்கின்றனர்.

. கோமாளி கதை : ஆற்றல், பணம், ஆர்வம், சக்தி இருக்கின்ற பொழுதே சில செயல்கள் நிகழ்வதில்லை. அவை இல்லாத போது பெரும் வியக்கத்தக்க செயல்கள் நிகழ்ந்து விட்டால் மந்திர வித்தையாக இருக்குமே தவிர மனிதச் செய்கைகளாக இருக்கமுடியாது. நகைக்க வைக்க வேண்டும் என்பதற்காகவே நடக்க முடியாதவற்றையும் அப்படி நடந்திருப்பின் நகைக்கும்படியான செய்கைகளையும் அடுக்கிச் சங்கிலி போல் கூறுவதுண்டு. கோமாளியின் கூத்தைக் கண்டு குலுங்கச் சிரிக்கும் நாம் கீழ்க்கண்ட கோமாளிப் பாட்டைக் கேட்டு மட்டும் கோபமா பட முடியும் !

''முள்ளு முனையிலே மூன்று
குளம் வெட்டினேன்
ரெண்டு குளம் பாழு
ஒண்ணு தண்ணியே இல்லே

தண்ணியில்லாக் குளத்துக்கு
மண்ணு வெட்ட மூணுபேரு
ரெண்டு பேரு நொண்டி
ஒருத்தன் கையே இல்லே
கையில்லாத குசவன்
செய்தது மூணுபானே
ரெண்டு பானே பச்சை
ஒண்ணு வேகவே யில்லே
வேகாத பானேக்குப்
போட்டரிசி மூணரிசி
ரெண்டரிசி நறுக்கு
ஒண்ணு வேகவே யில்லே
வேகாத சோற்றுக்கு
விருந்துண்ண மூணுபேரு
ரெண்டுபேரு பட்னி
ஒருத்தன் உண்ணவே யில்லே
உண்ணாத கொத்தன்
கட்டினது மூணுகோயில்
ரெண்டு கோயில் பாழு
ஒண்ணு சாமியே யில்லே
சாமியில்லாக் கோயிலுக்கு
ஆடவந்தார் மூணுபேரு
ரெண்டுபேரு மொட்டை
ஒருத்தி மயிரே யில்லே ''

சபையில் சிரிப்பதற் கென்றே பாடப்படும் இந்தக் கோமாளி நகைச்சுவைப் பாடல் எதிர்பார்த்தபடி குலுங்கச் சிரிக்க வைக்கிறது.

அறியாமை கூறல் : சபையினரின் சிரிப்பைக் கண்டவுடன் கோமாளி சும்மா இருப்பானா? பபூனக வருபவன் தன் "கோணல் மாணலான" ஒப்பனேயால்

மட்டும் மக்களைச் சிரிக்க வைப்பதனை நோக்கமாகக் கொள்ளமாட்டான். ஒப்பனைத் தோற்றச் சிரிப்பும் ஒரு சில விநாடிகளுக்குத் தானே இருக்கும்?

சூத்திரதாரன் போல மேடையிலே வந்து செல்லும் கோமாளி அறிஞர்களான கார்லைல், சோசப் ஹியூம், அடிசன் ஹக்ஸ்லி முதலியவர்கள் சிரிப்பின் அருமை பெருமைகளைப் பற்றிக் கூறியவற்றைப் படித்ததில்லை. ஆனால், அவனுக்கு ஒரு கடமையுண்டு. அது கூடியுள்ள வர்களை விலா எலும்பு நோவச் சிரிக்கச் செய்வதுதான். இதை அவன் நடக்காதவற்றைக் கூறி நகைக்க வைத்தது போலத் தனது அறியாமையை ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்தி அனைவரையும் சிரிப்பில் ஆழ்த்துகிறான்.

" திருப்பதிக்குப் போய்
வந்தேன் நாராயணா—நான்
திருமொட்டை அடித்து
வந்தேன் நாராயணா
அங்கே ஒரு சோளக் கொல்லை
நாராயணா—நான்
அதிலே ஒரு கதிர்
ஒடிச்சேன் நாராயணா
கொல்லைக்காரன் கண்டுக்
கிட்டான் நாராயணா—என்னைக்
கோலைக் கொண்டு அடிச்சுப்
போட்டான் நாராயணா.

இது தொல்காப்பியர் கூறும் பேதைமையின் அடிப் படையில் தோன்றும் நகையாகும். தன்னுடைய அறியாமையைப் பிறர் எடுத்துக் கூறாமல் தானே எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ள இந்தப் பாட்டைக்

கேட்கும் நாமும் சிரிக்கிறோம்! காரணம்? நம்முடைய அறியாமையை நாம் எங்கே வெளியே சொல்லுகிறோம்! பிறருடைய அறியாமையைக் கேட்பதில் தானே நமக்கு அக்கறை?

கோழைத் தனம் கூறல்: வீரம் அற்றவனை ''வெண்ணெய் வெட்டிச் சிப்பாய்'' ''செத்த பாம்பை அடிப்பவன்'' என்கிறோம். கோழைத் தனத்தை எடுத்துக் கூறும் பொழுது பேதைமையால் பிறக்கும் நகை, கைகொட்டிச் சிரிக்க வைக்கிறது.

'' எட்டு நாளைக்கு முன்
செத்த பாம்பை—சந்த மாமா நான்
எட்ட நின்று குத்திப்
போடுவேன் சந்தமாமா !''

பாம்பென்றால் படையும் நடுங்கும் என்பது பழமொழி. இங்கே செத்த பாம்பு சிரிக்க வைக்கிறது. சிரித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்பதற்காகவே பாட்டுப் படைக்கப்பட்டிருக்கிறது.

'' வத்திக் கிடக்கிற ஏரியைக்
கண்டால்—சந்த மாமா நான்
வளைஞ்சு வளைஞ்சு
நீச்சடிப்பேன்—சந்த மாமா ''

நீச்சல் வீரர் மிகர் சென்னின் வீரத்தைக் கேள்விப் பட்ட நமக்கு இந்தத் தரை நீச்சல் வீரனின் திறமையைக் கேட்ட பின்பும் சிரிப்பு வராவிட்டால் சிரிக்கத் தெரியாததுதான் நம் குற்றம்.

நீதிகள்

நீதியின் தோற்றங்கள் : நீதி என்பது இரண்டு கட்டங்களில் தோன்றுவதாகும். முதலாவது நாடு முறை கேடடைந்து அநீதியுள்ள அனைத்தும் நிகழும் போழ்து சான்றோர்கள் தோன்றி மீண்டும் நாட்டை நன்னிலைப் படுத்த நீதிகளைக் கூறுவர், எழுதுவர். இரண்டாவது நல்ல சமுதாயம் செம்மையாக அமைந்து விட்ட பொழுது அச் சமுதாயம் பிறழ்ந்து விடாமல் இருக்கவேண்டும் என்பதற்காகச் சான்றோர்கள் மக்கள் என்றும் அப்படியே இருக்க வேண்டும் என்பதற்காக நீதிகளைச் சட்டம் போன்று இயற்றி வைப்பர். இவ் விரண்டு நிலைகளும் தமிழகத்தில் இருந்தன. இவ்விரு வகை நிலைகளையும் களப்பிரர் காலத்தில் தோன்றிய நீதி நூல்களும் உயர்ந்த சமுதாயத்தில் தோன்றிய, எழுதப்பட்ட திருக்குறளும் காட்டும். இவற்றைப் போல நீதியின் அடிப்படையில் தோன்றியன நாட்டுப்புறப் பாடல்கள் என்று கூற முடியாவிட்டாலும் ஒரு சில பாடல்கள் நீதியின் அடிப்படையில் தோன்றியனபோல் காணப்படுகின்றன. மிகுதியாக அறவுரை கூற வேண்டாத அற உலகமாக நாட்டுப்புற உலகம் இருப்பதால்தான் நீதி பற்றி அப் பாடல்களில் நமக்குத் தெரிவன குறைவாக உள்ளன எனலாம்.

பெண்ணின் பெருமை : நம் பாரத நாடு பெருமை அடைந்ததற்கு நம் நாட்டு மகளிரும் ஒரு சிறந்த காரணம் என்பது பலரும் அறிந்த செய்தியாகும். உலக அரங்கு களில் சில நாடுகளின் மதிப்பு சில வேளைகளில் குறை வதற்குப் பெண்கள் காரணமாவதுண்டு என்பது பலர் அறிந்ததே.

பெண்ணிற்கு அறிவுரை : பெண்ணைக் காப்பாற்றுவதில் எந்நாடும் பின்வாங்கியதில்லை. நன்முறையில் வாழ்க்கை நடத்தும் பெண்ணையும் வேலிக்குள் கூண்டுக் கிளியாக வைத்துப் பார்ப்பதில்தான் அழகு இருப்பதாக உலகம் எண்ணுகிறது. அப்படிப்பட்ட கூண்டுக் கிளிகட்கு அறிவுரை சொல்லுவதாக "சுண்டெலிப் பெண்ணே" என்று பெண்ணை விளித்துப் பாடும் பாடலொன்று பெண்கட்கு வேண்டிய அறிவுரைகளைக் கூறுவதாக அமைந்திருக்கின்றது. அவ்வறிவுரைப் பாடல் நூற்றிருபத்தாறு வரிகளை உடையதாக உள்ளது. பெண்களுக்கு வேண்டிய நீதிகளைப் புகட்டுவதாகக் காணப்படும் அப் பெரும் பாடலில் சில பகுதிகள் மட்டும் கீழே தரப்படுகின்றன :

"காவாலிப் பயலைக் கண்டால்—சுண்டெலிப் பெண்ணே
காலாட்டிக் கிட்டு நிற்காதடி— ,,
நெற்றியிலே பொட்டு வச்சு— ,,
நெருங்கி நிண்ணு பேசாதடி— ,,
வெற்றிலைப் பாக்குப் போட்டு கிட்டு— ,,
வெறும் பயலைப் பார்க்காதேடி— ,,
உன் நடையும் கைவீச்சும்— ,,
உசத்தியிண்ணு நினைக்காதேடி— ,,
கல்லுன்னலும் கணவனடி— ,,
புல்லுன்னலும் புருஷனடி— ,,
செல்லாத காசைக் கூடச்— ,,
செல்வமா நினைச்சுவை— ,,
மாமன் மாமியாள் ரெண்டு பேரையும்— ,,
மேன்மையா நடத்துவாயடி— ,,
தர்மம் தலைகாக் குண்டி— ,,
தயவைக் கை விடாதேடி—சுண்டெலிப் பெண்ணே !

இவ்வாறு பெரும் நீதிகளை, வாழ்க்கை நடப்புகளைப் பெண் நடக்க வேண்டிய முறைகளைச் சொல்லிக்கொண்டு போவதாகப் பாடல் இருக்கின்றது. இவ்வகையில் அமைந்த பாடல்கள் குறைவு என்றுதான் கூறவேண்டும். இப் பாடல் முழுவதும் "அறிவுரை நாட்டுப்புறப் பாடலாகவே" இருக்கின்றது. இதைப் போன்று "பெண் புத்தி மாலை" என்ற பாடலொன்று சிறுநூல் வடிவில் பெண்ணுக்கு நீதி புகட்டுவதாகவே இருக்கின்றது.

நம் இலக்கியங்களில் இடையிடையே நீதி வருவது போலப் பாடல்களிலும், கதைப் பாடல்களிலும், காதல் பாட்டுகளிலும் இடை இடையே நீதிகள் வருவதுண்டு. பெண்மை என்றும் கெட்டுவிடக் கூடாது என்று கருதும் ஒரு காதலன் தன் காதலியிடம் பேசிக் கொண்டிருக்கும் பொழுது அவள் தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்றினை அறிவுரையாக வழங்குகின்றான்.

> "பெண்கள் பூத்தேடி வைக்கவேண்டும் வைத்தால்
> பிறர் அறியாமல் இருக்க வேணும்
> கொண்டை மேலே பூத்தோண வைத்தால் வேசியென்று
> கூறுவாரே முத்து வீராயி
> தன்னடி பார்த்து நடப்பதே யெவர்க்கும்
> சற்குணமா மென்று சாற்றுவார்கள்
> அன்ன நடையோடு முன்னும் பின்னும் பார்ப்பது
> அழகல்லவே முத்து வீராயி"

இப்படிப் பாடல்களிலும் இடையிடையே அறிவுரைகளும் 'நீதிகளும்' வருவதுண்டு.

நாட்டுப்புறப் பாடல் என்ற கடலில் பன்முறை முழுகினால்தான் நீதி என்ற சில முத்துக்களைப் பெறலாம்.

௬. மூன்று ஐயங்கள்

நாட்டுப்புறப் பாடல்களை ஆராய்ந்து கொண்டிருந்த பொழுது அவ் ஆய்வினை ஒட்டி மூன்று ஐயங்கள் ஏற்பட்டன. முதல் ஐயம் ஆங்கிலத்தில் Folk Songs என்று அழைக்கப்படும் சொல்லுக்குப் பொருந்தும் ஒரு பொருத்தமான தமிழ்ப் பெயர் என்னவாக இருக்கலாம் என்பதாகும். இரண்டாவது ஐயம் நாட்டுப்புறப் பாடல்கள் இனியும் தோன்றுமா என்பதாகும். மூன்றாவது ஐயம் நாட்டுப்புறப் பாடலுக்கு இலக்கிய மதிப்புக் கொடுக்கலாமா? என்பதாகும். அனைவரும் விடை காண வேண்டிய இவ் ஐயங்களுக்கு கூறப்போகும் கருத்துக்களை முடிந்த விடையாகக் கொண்டு விடக் கூடாது. நாட்டுப்புறப் பாடல்களைப் பற்றிய நல்ல மூன்று அடிப்படை வினாக்களுக்கு என்னால் முடிந்த அளவிற்குப் பதில் கூற முயன்றுள்ளது, என்றே இத் துறையில் ஈடுபாடு கொண்டுள்ள அறிஞர்கள் நினைத்தல் வேண்டும். அந்த நம்பிக்கையில் இப்பொழுது முதல் வினாவிற்கு விடை காண்போம்.

Folk Songs என்பதற்குப் பொருத்தமான தமிழ்ப் பெயர் என்ன?

இவ் வினா தோன்றியமைக்கு அடிப்படையான காரணம் ஒரு கடிதம் என்றே கூற வேண்டும். இத் துறையில் ஆராய்ச்சியில் ஈடுபட்ட நான் சில ஆராய்ச்சி யாளர்களுக்கு ஏற்படும் செருக்கிற்கு ஆட்பட்டு விடாமல் இத் துறையில் ஆர்வமுள்ளவர்களுடன் கடிதத் தொடர்பும்

நேரிடைத் தொடர்பும் கொண்டேன். அம் முறையில் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் நாடோடிப் பாடல் என்று குறிப்பிட்டு எழுதியிருந்தேன். அக் கடிதம் எழுதிய இருதினங் களுக்குப் பிறகு அவர்களிடம் இருந்து ஒரு பெரிய கடிதம் எனக்கு வந்தது. அக்கடிதம் இங்கு இத்தலைப்பை ஒட்டி வெளியிடப்பட வேண்டியுள்ளதால் அப்படியே கீழே தந்திருக்கிறேன்.

திருச்சிராப்பள்ளி

அன்புள்ள ஐயா,

வணக்கம்.

சென்னைக்குச் சென்று இன்று வந்து தங்கள் கடிதம் கண்டு மகிழ்ந்தேன். தங்கள் கடிதத்தில் நாடோடி என்ற சொல்லைக் கண்டதும் திடுக்கிட் டேன். அன்பு கூர்ந்து தாங்கள் இனி அவ்வாறு குறிப்பிட வேண்டாம் என்றும் தாங்கள் ஆராய்வது ' நாட்டுப்புறப் பாடல்''களாகவே இருக்க வேண்டும் என்றும் வேண்டிக் கொள்ளுகின்றேன்.

தமிழகத்திலுள்ள பேரறிஞர்களை, உழவர்களை தாய்மார்களை "நாடோடிகள்" என்பதும், தமிழ கத்திற் பொருள் பொதிந்து சிறந்து விளங்குகின்ற அவர்களின் அருந்தமிழ்ப் பாடல்களை "நாடோடிப் பாடல்கள்" என்பதும் தமிழ்ப் பகைவர்களின் கருத்து. நாம் இதை ஏற்க வேண்டாம். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன்தோன்றித் தனக்

கென்று முப்புறமும் கடல் சூழ்ந்த பரந்த விரிந்த ஒரு நாட்டையே அமைத்த அவர்களைத் தமக்கென்று ஒரு நாடு இல்லாது அலைந்து திரிந்து வாழுகின்ற மக்கள் என்று குறிப்பிடுவது பெரிதும் வருந்தத் தக்கதாகும். ஆகவே, தாங்கள் பாடல்களை ஆராயு முன் பாடல்களின் தலைப்பை ஆராய்வது நலமாகும். தமிழகத்து உழவர்களும் அறிஞர்களும் தாய்மார்களும் "நாடோடிகள்" அல்லர். அவர்களின் பாடல்கள் "நாடோடிப் பாடல்கள்" அல்ல; நாட்டுப்புறப் பாடல்கள் என்பதே நல்லறிஞர்களின் கருத்தாகும்.

தாங்கள் நாட்டுப்புறப் பாடல்களைப் பற்றி ஆராய்வதாயின் எழுதுங்கள், என்னால் இயன்ற அளவு துணைபுரிவேன். தங்கள் அன்பிற்கும் தொண்டிற்கும் நன்றி !

தங்கள் அன்பிற்குரிய,

கி. ஆ. பெ. விசுவநாதம்

இக் கடிதத்தைக் கண்ட பிறகே கட்டாயம் ஒரு பொருத்தமான பெயர் எதுவாக இருக்கலாம் என்று சிந்தனை வேலை செய்யலாயிற்று. ஆங்கிலத்தில் "Folk Songs" என்றழைக்கப்படும் இப் பாடலைத் தமிழில் ஓர் ஒருமைப்பாடில்லாமல் பல்வேறு பெயர்களில் அறிஞர்கள் அழைத்து வருகின்றார்கள். இப் பாடலுக்குரிய பொருத்தமான பெயர் பற்றிய விவாதம் கூடச் சில கருத்தரங்குகளில் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. எனவே, அறிஞர்களும் காண விழைந்த ஒரு பொருளாகப் பாடல் தலைப்பு இருந்து வந்திருக்கிறது.

Folk Songs என்ற ஆங்கிலச் சொல்லில் உள்ள Songs என்பதற்குத் தமிழில் கவிதை, பாடல் என்ற மொழி பெயர்ப்பு பல மொழிகளில் ஒற்றுமையாகக் காணப்பட்டாலும் Folk என்பதற்கு மொழி பெயர்க்கப் பட்டிருப்பது ஒற்றுமையின்றி வேறுபட்டுள்ளனவாக இருக்கின்றன.

நாட்டுப்புறப் பாடல்களை வெளியிட்டவர்கள் வைத்த தலைப்புகள் மூலமாகவும் அல்லது அத் துறை அறிஞர்கள் எழுதிய கட்டுரைகள் மூலமாகவும் வாயிலாகவும் சில உண்மைகள் தெரிந்தன. சிலர் ஆங்கிலச் சொல்லான Folk Songs என்பதனை மொழி பெயர்க்க முற்பட்டிருக் கின்றனர். பலர் நாட்டுப்புறப் பாடலின் ஒரு பிரிவின் பெயரையோ அல்லது பாடல்களின் தன்மையையோ வைத்துப் பெயரிட்டிருக்கின்றனர். சிலர் தோன்றிய இடப்பெயரைக் கொண்டும் அல்லது பாடும் மக்களின் பெயரை வைத்தும் அமைத்திருக்கிறார்கள். சிலர் உருவகப் பெயர்களைக் கொடுத்திருக்கின்றனர். நானே ஒருமுறை இப் பாடல்களை 'காட்டுப்பூ' என்ற தலைப்பிலும் தாலாட்டுப் பாடல்களைத் 'தூங்கு', என்ற தலைப்பிலும் சொற்பொழிவு செய்திருக்கின்றேன்.

தமிழகத்தில் இப் பாடல்களுக்கு வழங்கி வரும் பெயர்கள் பின் வருமாறு: காற்றிலே மிதந்து வந்த கவிதை, காற்றில் வந்த கவிதை, நாடோடி இலக்கியம், நாட்டுப்புற இலக்கியம், நாட்டுப் பாடல், பாமரர் பாடல், பாமர இலக்கியம், வாய்மொழி இலக்கியம், ஏட்டில் எழுதாக் கவிதைகள், பொது ஜன இலக்கியம், கிராம இலக்கியம், ஊர்ப்பாடல், சமுதாயப்பாடல், எழுதாக் கிளவி, நாட்டார்

பாடல், நாட்டிலே உலவும் பாட்டு போன்றவையாகும். இன்னும் பல பெயர்கள் உண்டு.

ஒருசிலர் மேற்கண்ட பெயர்களில் சில கொடுக்கப் பட்டதற்கான காரணத்தையும் எழுதியுள்ளார்கள். "பொது மக்கள் தாம்—பெரும்பாலும் உழைக்கும் மக்கள் தாம் நாட்டுப்புறப் பாடல்களைப் பாடும் கவிஞர்களும் ஆவார்கள். ஆகவே, நாட்டுப்புறப் பாடல்களை 'பொது ஜன இலக்கியம்' என்று சொல்வது பொருந்தும். பொது ஜனக் கவிதை என்று சொன்னாலும் பொருந்தும்.[1]

தலைமுறை தலைமுறையாக ஒருவரிடமிருந்து மற்ற வருக்கு வாய்மொழியாகக் கேள்வி மூலமாகவே கிடைத்து வருகின்றன. ஆகவே, மற்றெல்லாப் பெயர்களையும் விட வாய்மொழிப் பாடல் என்ற பெயரே இவ்வகைப் பாடல்களுக்குப் பொருத்தமுடையது.[2]

"இயற்கைச் சூழ்நிலையில் கட்டுப்பாடின்றி மக்கள் உணர்ச்சி வசப்பட்ட மக்கள் பாடும் பாடல்கள் ஆதலின் இவற்றைக் காட்டு மலருக்கும் மலையருவிக்கும் ஒப்பிட லாம். மலையருவி என்ற பெயர் உருவக வகையில் இந்தத் தொகுதிக்குப் பொருத்தமாக இருக்கும் என்று எண்ணித்தான் அமைத்தேன்."[3]

திரு. நா. வானமாமலை அவர்கள் தொகுத்த தமிழ் நாட்டுப் பாமரர் பாடல் என்ற நூலில் இப்பாடல் பாமரர் பாடல், நாடோடிப் பாடல், நாட்டுப் பாடல், பொது ஜனக் கவிதை, பொது ஜன இலக்கியம் என்று எழுதப் பட்டுள்ளது.

---

1 தமிழ் நாட்டுப் பாமரர் பாடல் - 10
2. காற்றில் மிதந்த கவிதை - 1.
3. மலையருவி - 11

தமிழ்க் கலைக்களஞ்சியத்தில் நாடோடிப் பாடல், நாட்டுப்புறப் பாடல் என்ற இரு பெயர்களும் கலந்து வரக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. மேலே கண்ட பெயர் களில் நாட்டுப்புறப் பாடல், நாட்டார் பாடல் என்பன ஓரளவிற்கு ஒற்றுமை உடையன.

பாமரர் பாடல், பாமரர் இலக்கியம், பொதுஜன இலக்கியம், கிராமியப் பாடல், ஊர்ப் பாடல் என்பன ஒன்றிற்கொன்று நெருங்கிய தொடர்புள்ளவை.

எழுதாக் கிளவி, ஏட்டில் எழுதாக் கவிதை, வாய் மொழிப் பாடல், காற்றிலே மிதந்து வந்த கவிதை என்பன ஒரு தன்மையன.

மேலே கண்ட பெயர்களில் சிறப்பாக இன்று நாட்டுப்புறப் பாடல், நாடோடிப் பாடல் ஆகிய இரண்டு பெயர்களுமே மிகுதியாக வழக்கில் இருந்து வருகின்றன.

நாட்டுப் பாடல் என்பது இன்றைக்குப் பெரும் பாலும் நாட்டு வாழ்த்து அல்லது வணக்கப் பாடலையே (National Anthem) குறித்து நன்கு வழக்கிற்கு வந்துவிட்டது. பாடல்களின் பொதுக் குணத்திற்குப் பெயர் பொருந்துவதாக இல்லாவிட்டாலும் வானொலி நிலையத்தார் இப் பெயரைப் பரப்பி வருகின்றனர்.

இடம் விட்டு இடம் சென்று வழங்கி வருவதால் நாடோடிப் பாடல்கள் என்று அழைக்கலாமா என்றால் இலக்கியங்கள் கூட இடம் விட்டு இடம் சென்றுதானே வழங்குகின்றன. நாடோடி என்ற சொல் இப் பாடலுக்கு மாசு போன்ற தலைப்பாகவும் அமைந்திருக்கின்றது.

ஆங்கிலத்தில் இச் சொல் Songs of the Nomads என்ற பொருள் படவும் வாய்ப்பு உண்டு. வீணான விவாதங்களைக் கிளப்பி விடும் இத் தலைப்பை வழக்கிற்குக் கொண்டுவர வேண்டும் என்று விளக்கங்கள் கூறுவதை விட விட்டு விடுதலே நலமாகக் கொள்ளலாம்.

வாய்மொழிப் பாடல் எழுதாக் கிளவி என்று சொன்னாலும் 'வாய்மொழி' எழுதாக் கிளவி என்பவை மறையைக் (வேதம்) குறிக்கக் கூடிய சொற்களாகும். இவையும் ஏற்றுக் கொள்ளக் கூடியனவாக இல்லை. இரு பொருள் படக்கூடிய இச் சொற்களும் குழப்பத்தை விளைவிக்கும். வாய்மொழிப் பாடல், ஏட்டில் எழுதாக் கவிதைகள், எழுதாக் கிளவி என்ற பெயர்கள் இன்று இப் பாடல்கள் அழகிய முறைகளில் நூல் வடிவில் அச்சேறி வருவதால் பொருத்தம் இல்லாமல் போய் விடுகின்றன. இங்கு மேலே கண்ட பெயர்கள் வழங்கு கின்ற இடத்தையும் பாடுகின்றவர்களையும் வைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. சில பாடல்களின் பண்பிற் கேற்பப் பெயரிடப்பட்டிருக்கின்றன.

இடத்தையும், பாடி வருபவர்களையும் வைத்துப் பாடலுக்குப் பெயர் சூட்டாமல் பாட்டின் பண்பிற் கேற்பப் பெயர் கொடுப்பதே சாலப் பொருத்தம் எனலாம். இலக்கியங்களோடு வைத்து எண்ணத்தக்க கவிதைகளாக இல்லாமல் ஆனால், பாட்டு வடிவில் உள்ள - ஒரு சில குறைபாடுகளைக் கொண்ட இப்பாடலுக்கு, ஆராய்ச்சி யாளர்கள், அறிஞர்கள் விரைவில் ஒரு பெயரினை உண்டாக்க வேண்டும், கண்டு பிடிக்க வேண்டும். ஒரு மொழியின் வளர்ச்சியில் புதுச்சொல் ஆக்கம்

வரவேற்கத் தக்கதேயாகும். தனிப்பட்ட ஒருவர் தொடர்ந்து சிந்தித்து அல்லது அறிஞர்கள் பலர் ஓரிடத்தில் கூடிச் சிந்தித்தல் ஆகியவற்ருல் நாம் உயர்ந்த ஒரு சொல்லே விரைவில் பெறமுடியும்.

எடுத்துக்காட்டாக Folk-lore என்ற சொல்லே முதன் முதலில் 1846இல் வில்லியம் ஜான் தாமஸ் என்ற அறிஞர் உண்டாக்கினர். அவர் இச்சொல்லே உண்டாக்கும் முன் இப்படிப்பட்ட பாடல்களைக் குறிக்க 'Popular Antiquties' என்ற சொல் இருந்தது. ஆனல், அது ஒரு தரமான சொல்லாக இல்லாததால் Folk-lore என்ற சொல்லே அவர் ஏற்படுத்தினர். அச் சொல்லே உடனே குறிப்பாக ஐரோப்பிய நாடு முழுவதும் மற்ற மொழி களும் ஏற்றுக் கொண்டன. இதேபோன்று சில குறிப் பிட்ட மக்களின் பழக்க வழக்கங்களையும் எண்ணங்களையும் வெளிப்படுத்தும் முறைக்கு Folk Ways என்பதாகும். இச்சொல்லே முதன் முதலில் உண்டாக்கியவர் சமூக இயல் அறிஞர் வில்லியம் கிரகாம்சம்னர் என்பவராவார்.

ஆதலின் புதுப் பெயர்கள் தோன்றுவது வரலாற்றில் உண்டு என்பதனை நமக்கு இவை காட்டுகின்றன. தமிழ் ஆய்வாளர்கள் நல்ல ஒரு பொருத்தமான பெயரை இப்பாடலுக்குக் கொடுக்க மேற்கண்ட அறிஞர்களைப் போல எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படி இப் பாடலுக்கு ஒரு நல்ல பெயர் ஏற்படுகின்ற வரை அறிஞர் பலர் கூடி ஆய்ந்து ஏற்றுக் கொண்ட ஒரு பெயரை வழங்கலாம்.

சென்னையில் அறிஞர். திரு. கே. ஏ. நீலகண்ட சாத்திரியார் அவர்கள் தலைமையில் கூடிய கருத்தரங்கில்

இத்துறையிற் சிறந்த அறிஞர்கள் கூடி இப்பாடல்களைப் பற்றிய கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். அப்பொழுது அவ்வறிஞர்களிடையே இப்பாடலைப் பற்றிய பெயர்ப் பொருத்த விவாதம் தோன்றலாயிற்று. நாட்டுப்புறப் பாடல்கள், வாய்மொழிப் பாடல்கள் ஆகிய இப்பெயர்களில் நாட்டுப்புறப் பாடல் என்ற பெயர் மற்றப் பெயர்களைக் காட்டிலும் அவ்வறிஞர்கள் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

தமிழ்க் கலைக் களஞ்சியத்திலும் நாட்டுப்புறப் பாடல்கள் என்ற சொல் கையாளப்பட்டுள்ளது. Folk என்ற ஆங்கிலச் சொல்லுக்கு மனித இன வரலாற்று நூல் அகராதி (Dictionary of Anthropology) கூறும் பொருளும் ஆங்கிலச் சொல் அகராதி (Dictionary) கூறும் பொருளும் "நாட்டுப்புறம்" என்ற தமிழ்ச் சொல் தழுவி நிற்பதைப் போல ஏனைய சொற்கள் தழுவி நிற்கவில்லை.

எனவே, பாட்டின் பண்பிற்கேற்ப ஒரு பெயரை இப்பாடல்களுக்குக் கொடுத்து அமைக்கப்படுவதற்கு முன் பெரும்பான்மையாக வழங்கும் இடத்தைக் கொண்டு அழைக்கப்படும் "நாட்டுப்புறப் பாடல்கள்" (Songs of the Countryside) என்ற பெயரையே அமைத்துக் கொண்டது மிகப் பொருத்தமாய்ப் படுகிறது.

இனி, அடுத்து நாட்டுப்புறப் பாடல் இனியும் தோன்றுமா? என்ற வினாவினை அணுகுவோம் :

நாட்டுப்புறப் பாடல்கள் இனித் தோன்றுமா ?-இக் கேள்வி சிந்தனைக்குரிய நல்ல சிக்கலான கேள்வியாகும். பாடல்கள் மறைந்து வருகின்றன என்ற ஆழ்ந்த

கவலையும் பாச உணர்ச்சியும் இத்துறை ஆய்வாளர்களைப் பற்றிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இவ் வினு வினை எழுப்பி விடை காண்பது இத்துறைக்கு நன்மையானதாகவே முடியும்.

பொதுவாக எதையும் தோன்ருது அல்லது நடக்காது என்று முடிவு கட்டி விடுவது அறிவின் முதிர்ச்சியில் கூறியதாகக் கொள்ள முடியாது. அவசரப்பட்டுக் கூறியதாகவே கொள்ள வேண்டும். நாமாகச் செயற்கையாக ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய தடைகளினுல் தோன்றக் கூடியவை வேண்டுமானுல் தோன்ருது இருக்கலாம். செல்வத்துள் தலைசிறந்த செல்வம் மக்கட் செல்வம் என்று சான்ருேர்கூறிய செல்வத்தைச் செயற்கைத் தடைகளினுல் வேண்டாம் என்ருல் தோன்ருது இருக்கும். இப்படித் தோற்றத்திற்குத் தடை பிறந்தால் உற்பத்தியாவதற்குரிய கூறுகளை உடைய ஒன்று தோன்ருது போய் விடுவதும் உண்டு. இந் நியதியினை ஒட்டி நாட்டுப்புறப் பாடல்கள் தோன்ற விடாது அமைந்துள்ள தடைகளை இனி நோக்குவோம்.

மறைவதற்கு உரிய காரணங்கள் : முதலில் நாட்டுப்புறப் பாடல்கள் மறைவதற்கு உரிய காரணங்களை ஆராயும் பொழுது இப்பாடல்களை அழிப்பதில் இராட்சச பலம் பெற்றிருப்பது திரைப்படப் பாடல்களே என்று கூற வேண்டும். மக்களுக்குப் போதையை உண்டாக்கி விட்ட திரைப் படப் பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்களை மட்டுமின்றித் தமிழ்இலக்கியங்களைக் கூடச் செல்லாதவைகளாகவும் ஊனம இலக்கியங்களாகவும் ஆக்கி விட்டன, பரப்ப வேண்டும் என்று பாடுபட்டு வரக்கூடிய தமிழ்

இலக்கியங்களுக்கே இத்தகைய சரிவு என்றால், காற்றோடு காற்றாகப் பரவிக் கொண்டிருக்கின்ற நாட்டுப்புறப் பாடல்கள் மறைந்து போவதில் வியப்பில்லை. தெம் மாங்குப்பாட்டை மறந்த வண்டிக்காரனும்வேடிக்கையாகப் பாட்டுப்பாடிப் பொழுதுபோக்கும் குழந்தைகளும், திரைப் படப் பாடல்களைப் பாடிக்கொண்டிருப்பது நம் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. ஒரு சில கல்லூரிகளில் பாடங்களுக்கு இடையே திரைப்படப் பாடல்களை ஆசிரியர் சொல்வதும் நம் காதுகளில் விழாமலில்லை.

பொதுமக்கள் இலக்கியமான நாட்டுப்புறப் பாடல்களை ஒரு குறிப்பிட்ட சாரார்களுக்கே உரிய இலக்கியமென்று சிலர் தீண்டுவதில்லை. மக்களில் தீண்டாதவர்கள் இருப்பது போல் இவ் விலக்கியமும் தீண்டாத இலக்கியமாகக் கருதப்படுகிறது. சிலர் போலி நாகரிகங்களுக்கு அடிமையாகி நாட்டுப்புறப் பாடல்களைப் பாட வெட்கப்படுகின்றனர். படித்தவர்கள் இப் பாடலைப் படிக்காமலேயே வெறுப்புணர்ச்சி கொண்டு ஒதுக்கி விடுகின்றனர். இத்தகைய காரணங்களால் பொது மக்கள் இலக்கியமான இப்பாடல்கள் புறம்போக்கு இலக்கியமாகி விட்டது. மேலே குறிப்பிட்ட போற்றுமை இருந்து வரும் பாடல்களுக்கே அழிவினைத் தேடித் தருவனவாக இருக்கின்றன.

பழங்கால மக்களைப் போலப் பாடல்களைப் பாடி மனத்தில் நிறுத்தி வைக்கும் பழக்கத்தை (Memory) மக்கள் கைவிட்டு விடுவது பாடல்களின் மறைவிற்கு ஒரு காரணமாக இருந்து வருகின்றது. இப் பழக்கத்தால் பாடல்கள் கிடைத்தாலும் சிதைந்த வடிவில் கிடைக்

கின்றன. நாட்டுப்புறப் பாடல்கள் எதற்காகப் பாடப்பட்டு வந்தனவோ, அவ்விடங்களில் பாடல்கள் பாடப்படுதல் தேவையின்றி ஏதாவது "பிறதுணைகள்" பாடல்களின் இடத்தை நிரப்பி விடுவதால் பாடல்கள் மறைவதும் தோன்ருத நிலையையும் அடைகின்றன.

நெஞ்சை நெகிழவைக்கும் ஒப்பாரிப் பாடல்களுக்குப் பதிலாகத் தேவாரம், திருவாசகம் பாடப்படுகின்றன. தேனினும் இனிய தாலாட்டுப் பாடல்களைப் பாரதி கண்ட புதுமைப் பெண் பாடமுடியாமலோ அல்லது நாணியோ பத்துப் பாடல்களைப் பாடித் துயில வைக்க வேண்டிய குழந்தையைப் பத்துப் பைசா இரப்பரினுலேயே (Nipple) தூங்க வைத்து நிம்மதியை அடைகின்ருள். தொழிலாளர்கள் தங்கள் வேலைக் கடுமையை—பளுவை மறக்க எழுப்பிய பாடல்கள் "பொறித்துணை வந்தவுடன் விடுதலை பெற்று விட்டன!

பழைய பொழுது போக்குக்குரிய பாடல்கள் மறையப் புதுவிதமான பொழுதுபோக்குகள் நாகரிக உலகத்திற்கு ஏற்ப வந்து கொண்டிருப்பதால் கொண்டாட்டப் பாடல்களும், சடங்கு முறைகளும் குறைந்து விட்டதால் சடங்குப் பாடல்களும் மறைந்து கொண்டிருக்கின்றன. பேச்சால்தான் காதல் வளருமே தவிரத் திரைப்படப் பாடல்களில் காட்டப்படும் காதலர்களைப் போல மரமேறி. மலையேறி, கிடுகிடு பள்ளங்களில் கண்ணும்பூச்சி விளையாடிக் கொண்டு பாடுவதால் காதல் வளராது. அப்படி வளர்ந்தாலும் சோர்ந்து போகும். காதலுணர்வு இன்று பொதுவாக எல்லோருக்கும் அரும்பச்சூழல் இல்லாததால் காதல் பாட்டுக்களும் மெல்லச் செத்துக் கொண்டிருக்

கின்றன. தெய்வ நம்பிக்கைப் பாடல்களும் இன்பமான காலங்களில் இறைவனை மறந்து விடுவது போலப் பரபரப்பான உலகப் போக்கினால் மறக்கப்பட்டு அருகிப் போய்விட்டன.

இன்றைக்குள்ள மக்களை மூன்று பிரிவினராகக் கொண்டால் வயது நிறைந்தவர்களுக்குத் தெரிந்திருக்கும் பாடல்கள் நடுவயதினருக்குத் தெரியாது. ஆனால், நாட்டுப்புறப் பாடல்கள் என்றால் என்னவென்று ஓரளவு தெரிந்து வைத்துக் கொண்டிருக்கின்றனர். வளரும் புதிய தலைமுறைகளுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் நாட்டுப்புறப் பாடல்கள் சிக்கித் தவிக்கின்றன.

உருவாகும் புதிய உலகம்: பழைய உலகம் மறையப் புதிய உலகம் இன்று உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதனை நாம் மறந்து விடுவதற்கு இல்லை. பழையன கழிதலும் புதியன தோன்றுதலும் உலகின் வளர்ச்சியில் தவிர்க்க முடியாதாகையால் நாட்டுப்புறப் பாடல்களின் மறைவினைச் சாவித்திரி போல் மீட்டு வர முடியாத நிலைமை நமக்கு ஏற்பட்டிருக்கின்றது.

திரு. அமர்நாத் சீகால் என்ற கலை ஆலோசகர் (சமூக நல உறவு அமைச்சகம். நடுவரசு) 'இந்தியக் கிராமங்களில் கலைகள்' என்ற பேச்சில் நாட்டுப்புறப் பாடல்களின் மறைவினை மட்டுமின்றி நாட்டுப்புறப் பிற கலைகளாகிய கூத்து, விளையாட்டுகள் போன்றவையும் மறைவதனைப் பின்கண்டவாறு குறிப்பிடுகின்றார்.

"கிராமத்து மக்கள் தம் ஊர்களுக்கு அருகில் உள்ள நகரங்களில் நடக்கும் திரைப்படங்களைக்காண ஆரம்பித்த தாலும் அவை சுலபமான பொழுது போக்காக அவர்களுக்கு இருந்தமையாலும் அம் மக்கள் தங்களுக்கு உரித்தான நாட்டுப்புறப்பாடல்கள், நாடகங்கள், விளையாட்டுகள் மற்றும் நாட்டுப்புறத்திற்குரிய நடை முறைகள் இவற்றில் ஈடுபாடு இல்லாது போய்விட்டார்கள்." திரு. அமர்நாத் சீகால் திரைப்படத்தை இங்கே முதற் காரணமாகக் குறிப்பிட்டாலும் அதே பேச்சில் நாட்டுப்புறப் பாடல்கள் தோன்றும் வளமான இடம் என்று பெரும்பாலும் கருதத் தகுந்த சிற்றூர்களில் அரசினர் மேற்கொண்டுள்ள புதிய சீர்திருத்தங்களையும் குறிப்பிட்டிருக்கிறார். அவை :

அ. ஆண்களுக்கும் பெண்களுக்கும் இலக்கிய வகுப்புக்கள் நடத்தல்;

ஆ. படிப்பு அறைகளும், சமூக நல உறவு நிலையமும் ஏற்படுத்துதல்;

இ. பொழுது போக்கு நிகழ்ச்சிகளைத் தொடங்குதல்

ஈ. குழந்தைகள் சங்கம் உண்டாக்குதல்;

உ. பின்னல் வேலை போன்ற தொழில் நிலையம் ஏற்படுத்துதல் என்பவையாகும்.

இந்தச் சீர்திருத்தங்கள் நாட்டுப்புறப் பாடல்கள் தோன்றுவதற்கான ஊக்கத்தை அளிக்கவில்லை. இத்தகைய திட்டங்களால் நாட்டுப்புறப் பாடல்களின் மீது பாசம் கொண்டு இந்த மாற்றங்களை வரவேற்காமல் இருக்கக் கூடாது.

வாழ்க்கைப் போராட்டம் : நகரத்தில் வாழக் கூடிய கவிஞர்கள் கவிதைகள் எழுதுவதற்காக உள்ளத்தைக் கொள்ளை கொண்டு உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பும் மலைவாழிடங்களுக்கும் கிராமங்களுக்கும் செல்லு கின்றார்கள் என்று கூறக்கேட்கிறோம். இப்படிக் காரிகை கற்ற கவிஞர்களுக்கே சூழ்நிலை வேண்டுமென்றால் தானாக மலரும் காட்டுப் பூக்களான நாட்டுப்புறப் பாடல்கள் தோன்றச் சூழ்நிலைகள் வேண்டாமா? பாட்டுப் பிறக்கக் கூடிய சூழ்நிலையிலா இன்று மனிதன் வாழ்கிறான்? பசி, கடன், நோய் வாழ்க்கைச் சிக்கல்கள் இப்படிப்பட்ட அவனையே தின்று கொண்டிருக்கக் கூடிய என்புருக்கு நோய்களுடன் போராடவே நேரம் சரியாக இருக்கிறது. அவனது எண்ணம், எழுத்து, பேச்சு எல்லாம் வலிவற்று மெலிந்த நிலையில் மேற்கண்டவற்றை வெளிப்படுத்தும் பொழுது, பாட்டுப் பிறந்திடும் என்று எதிர்பார்த்தால் எதிர்பார்ப்பவனின் நேரம் விழலுக்கு இறைத்த நீராகி விடும்.

உரைநடைக் காலம் : நாம் வாழும் நூற்றாண்டு உரை நடை நூற்றாண்டு ஆகும். மொழி வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள இம்மாற்றம் நாட்டுப்புறப் பாடல்கள் தோன்றும் என்பவர்களுக்கு ஏமாற்றமாக அமையும்.

தோன்றும் பாடல்கள் : ஒருவரை ஒருவர் கேலி செய்து வாலிபர்கள் கிண்டல் செய்தும் சிரிப்பு ஊட்ட வேண்டும் என்று வேடிக்கையாகவும் இத்தகைய வழிகளில் ஒருசில பாடல்கள் தோன்றலாம். ஆனால், இத் தோற்றம் நீர்க்குமிழியாய்ப் போய் விடுவதும் உண்டு.

"மேலை நாட்டினர் ஏற்றுக் கொள்ளும் இருவகை நாட்டுப்புறப் பாடல்கள்": மேலைநாட்டினர் இரண்டு வகை நாட்டுப்புறப் பாடல்களை ஏற்றுக்கொள்கின்றனர். முதல்வகை : பாடியவர்கள் யார் என்று பெயர் தெரியாமல் பரம்பரையாகப் பாடப்பட்டு வரும் பாடல்களாகும். இரண்டாவது : புலவர்கள் அல்லாத சிலர் யாப்பிலக்கண மின்றி இயற்கையாகப் பாடும் ஆற்றலினால் நாட்டுப்புறப் பாடல்களைப் போலப் பாடும் பாடல்கள்; இவற்றையும் நாட்டுப்புறப் பாடல்களாகக் கொள்கின்றனர்.

தமிழகத்தில் முதல்வகையை ஏற்றுக்கொண்டுள்ள நாம் இரண்டாம் வகையை இன்னும் ஏற்றுக் கொள்ள வில்லை. ஆனால், நல்ல கவிவளம் கொண்டு யாப்பிலக் கணம் தெரிந்தவர் நாட்டுப்புறப் பாடல்களைப் போலப் பாடல்கள் கட்டிவருகின்றனர். இவ்வகையினருக்கு ஆதரவும் அதே நேரத்தில் எதிர்ப்பும் இருந்து வருகின்றன. திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் இவ் வகையினரின் பாடல் முயற்சியைக் குழந்தை பேசும் மழலைச் சொல்லை ஒருவன் பேச முயல்வது போல இருக்கிறது என்று கண்டிக்கிறார்.

மேலை நாட்டினர் ஏற்றுக் கொள்ளும் இரண்டாம் வகையினர் நம் நாடுகளிலும் உண்டு. ஊர்களில் நடக்கும் விழாக்காலங்களிலும் சில குறிப்பிட்ட நிகழ்ச்சி களிலும் நாள்களிலும் யாப்பிலக்கணம் கற்காத சிலர் இயற்கையாகப் பாடும் ஆற்றலினால் பாடுவதைக் காண்கிறோம்—கேட்கிறோம். இவ்வகையினரை நாம் ஏற்றுக் கொண்டால்-வரவேற்றால் நாட்டுப்புறப் பாடல்கள் மீதுள்ள ஈடுபாட்டால் "ஐயையோ நாட்டுப்புறப் பாடல்

களே இனித் தோன்றுதோ" என்று வருந்துகின்றவனின துயரினைப் போக்கும் பாடல்களாக இவை இருக்கக் கூடும். இனி நாட்டுப்புறப் பாடல்களுக்கு இலக்கிய மதிப்புக் கொடுக்கலாமா என்ற ஆய்வினை அணுகுவோம்.

இலக்கிய மதிப்புக் கொடுக்கலாமா? : ஒருவனை அரசனாகவும் ஆண்டியாகவும் ஆக்கமுடியும். அப்படி ஆக்கிவிட்ட பிறகு தொடர்ந்து அந்த நிலைமை நீடிக்க வேண்டாமா? நாட்டுப்புறப் பாடல்களின் மீது பற்று மிக்க சிலர் நாட்டுப்புறப் பாடல்களும் இலக்கியமே என்கின்றனர். இலக்கிய இலக்கணப் புலமை மட்டும் உள்ள சிலர் இப் பாடல்களைப் "பிச்சைக்காரன் பாட்டு' என்கின்றனர். இக்கருத்தினைக் காய்தல், உவத்தல் இன்றி நடுநிலையில் இருந்து விடை காண்பதே வளர்ந்து வரும் இத்துறைக்குரிய மதிப்பினைத் தேடித்தருவதாகும்.

இலக்கியம் என்பார்கள் கூற்று : புலவர்களால் படைக்கப்படுவன மட்டும் இலக்கியம் அல்ல என்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்டு இலக்கியம் என்பாரின் வாதம் அமைந்திருக்கிறது. "சிறு துரும்பும் பல்குத்த உதவும்" என்பது போல ஒரு மொழிக்குக் கிடைப்பனவற்றையெல்லாம் செல்வமாக வைத்துக் கொண்டால்தான் மொழி ஊட்டமாக வளரும் என்று இவர்கள் கருதுகின்றார்கள். இலக்கியம் படைத்த அறிஞர்கள் தம் படைப்புகளில் நாட்டுப்புறப் பாடல்களை மெருகிட்டுக் கையாண்டிருக்கிறார்கள். அல்லது அப் பாடலின் கூறுகளை (Elements) எடுத்துத் தம் பாடல்களுக்கு அழகூட்டி இருக்கின்றனர். ஆதலால் இவை தீண்டத்தகாத கவிதைகள் அல்ல என்றும் வாதிடு

கின்றனர். மேலும் சில இலக்கியப் பாக்களோடு ஒப்பிட்டுக் காணத்தக்கன நாட்டுப்புறப் பாடல்கள் என்றும் கூறுகின்றனர். திரைப்படப் பாடல்களைவிட நாட்டுப்புறப் பாடல்கள் எவ்வளவோ மடங்கு மேலான நிலையில் இருப்பதால் ஏன் இவற்றையும் இலக்கியமாக அங்கீகரித்துக் கொள்ளக் கூடாது என்கின்றனர். இத்துடன் மட்டும் நில்லாது இலக்கியங்களில் சிறப்பாகக் கருதப்படும் உவமை, கற்பனை, வருணனை, நீதி, நகைச்சுவை முதலியவை நாட்டுப்புறப் பாடல்களில் இல்லாமலா இருக்கின்றன என்று எடுத்துக் காட்டுகளைக் கொட்டுகின்றனர்.

இலக்கியங்களில் நடம்புரியும் ஒலிநயம் எதுகை மோனை இல்லாத நாட்டுப்புறப் பாடல் உண்டா? என்ற வினுவினை எல்லாவற்றையும் விட அழுத்தமாகக் கேட்கின்றனர். பாடல்கள் எழுதுவதற்கு இலக்கணங்களில் கூறப்பட்ட துறைகள் நாடோடிப் பாடல்களில் உண்டு என்றும் எடுத்துக் காட்டுகின்றனர். நாட்டுப்புறப் பாடல்களில் இடம் பெற்றுள்ள கொச்சைச் சொற்கள் இதோ இலக்கியத்தில் எத்தனை இருக்கின்றன பாருங்கள் என்று பட்டியல் தருகின்றனர். இலக்கண வேலிக்குள் நாட்டுப்புறப் பாடல்களை அடக்க முடியவில்லை என்று ஒதுக்க வேண்டாம்! இதோ சில புலவர்களின் பாடல்களைப் படியுங்கள், இலக்கணம் இடிபடுகின்றதே என்று அடித்துப் பேசுகின்றனர். இலக்கியங்களை வைத்துக் கொண்டு ஆழவுரை, அகலவுரை, நயவுரை என்று காலட்சேபம் செய்யாமல் மூச்சுவாங்கப் பலாப்பழம் உரித்துத்தின்பதுபோலப் பாடல்களில் உள்ள பொருள்கள் மயக்கமின்றி எவ்வளவு எளிமையாகச் செரிக்கின்றன

என்றும் கூறுகின்றனர். எதனையும் மிகைப்படுத்தாமல் உள்ளதை உள்ளபடி காட்டக்கூடிய உண்மையான "கண்ணாடி இலக்கியம்" நாட்டுப்புறப் பாடல்கள் என்று பாடல்களில் இருந்து வாழ்க்கையின் எல்லாக் கோணங்களையும் காட்டுகின்றனர். இப்படிப் பல கருத்துகள் அடுக்கி வைத்து நாடோடிப் பாடல்கள் எழுதிவைக்காமலே இறப்பினைத் தழுவாமல் வாழ்வதால் நாட்டுப்புறப் பாடல்களையும் இலக்கியமாக்கிக் கொள்ள வேண்டும் என்று முடிந்த முடிவாகவும் வாதிட்டு வருகின்றனர்.

இலக்கியம் இல்லை என்பார் கூற்று: இலக்கியம் படைக்கப்படும் குறிக்கோள்களோடு நாட்டுப்புறப் பாடல்கள் தோன்றவில்லை. இவை இலக்கியம் இல்லை என்று கருதுகின்றனர். இலக்கியம் என்றால் ஓர் ஒழுங்கும் கட்டுப்பாடும் உடையதாக இருக்க வேண்டும். நாட்டுப்புறப் பாடல்கள் அவ்வகை ஒழுங்குகளைப் பெற வில்லை என்கின்றனர். ஒரு சில பாக்கள் உயர்வாக அமைந்திருந்தால் ஒருமரம் தோப்பாகாதது போல எல்லாம் இலக்கியமாகி விடா என்று ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். மக்களின் அன்றாட உரையாடல்களில் எதுகை, மோனை, உவமை போன்ற இலக்கியச் சிறப்பு களுண்டு. அதனால் பேச்சுத் தமிழையும் இலக்கிய மாகக் கொண்டுவிடலாமா என்றும் வினாத் தொடுக் கின்றனர். கண்ணாடி இலக்கியம் என்பதனை ஏற்றுக் கொள்ளாத இவர்கள் இவற்றைப் பச்சையான பாடல்கள் என்று நையாண்டியும் செய்கின்றனர். இப்படிப்பட்ட வாதங்கள், இல்லை என்பார் கூற்றில் அமைந்திருக்கக் காணலாம்.

சில உண்மைகள் : இப்படிப்பட்ட இரு சாராரின் கருத்துகளையும் நோக்குகின்ற பொழுது மதில் மேல் பூனை ஏதாவது ஒரு பக்கம் பாய்ந்து விடுவது போலப் பாயத்தான் தோன்றும். தேர்தலில் போட்டியிடும் தகுதியற்ற வேட்பாளருக்கு நம்முடைய வாக்குரிமைச் சீட்டைப் போடாமல் இருந்தாலும் ஜனநாயகத்தை நாம் காப்பாற்றியவர்களே ஆவோம். எனவே, யாருக்காவது ஓட்டுப் போட வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இருந்தாலும் இவ்விரு சாராரின் வாதங்களில் சிலவற்றை ஒதுக்கித் தள்ளி விடுவதற்கில்லை. வினாவிற்கு விடை காண்பதற்கு முன் அக் கருத்துகளையும் காணலாம்.

இலக்கியப் பாக்களோடு சேர்ந்து விட்டால் வேறு பாடு காணமுடியாத பாடல்களும் நாட்டுப்புறப் பாடல் களுள் உண்டு. எடுத்துக்காட்டாக இரண்டு,

"பூக்காத நந்தவனம்—என் கண்ணே நீ
போய்ப் புகுந்தால் பூத்து விடும்!
காய்க்காத நந்தவனம்—என் கண்ணே நீ
கால் மிதித்தால் காய்த்து விடும்!

x x x x x

மலையேறி மயிலாட—என் கண்ணே
மடியேறி நீயாட
மரமேறி குயில்கூவ—என் கண்ணே
மனமேறி நீ பாட !"

தாலாட்டும் ஒப்பாரியும் நாட்டுப்புறப் பாடல்களில் மணமுள்ள நல்ல இலக்கிய மலர்களாகும்.

இலக்கணங்களில் பாடல்கள் புனைவதற்குக் கூறப் பட்ட துறைகள் நாட்டுப்புறப் பாடல்களில் அற்றுப் போய் விடவில்லை. உதாரணமாகக் களவு, கற்பு இரு துறைப் பாடல்களும் நிறைய உண்டு. எடுத்துக் காட்டாகக் களவு வாழ்வில் தலைவனோடு தலைவி சென்று விடுவதனை 'உடன் போக்கு' என்ற துறையாகக் கொள்வர். இத்துறை நிகழ்ந்த பொழுது தலைவியைச் செவிலி தேடிச் செல்வாள். அப்பொழுது வழியில் எதிர்ப்பட்டாரையும்பார்த்துத், 'தலைவியைக் கண்டீர்களா?' என்று கேட்பாள். பாலைக்கலியில் செவிலி கேட்பதாக அமைந்த ஒரு காட்சி,

"அந்தணீர்,
வெங்கிடைச் செலல்மாலை ஒழுக்கத்தீர்—
இவ்விடை
என்மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனும்
தம்முளே புணர்ந்த தாம்அறி புணர்ச்சியர்
அன்னார் இருவரைக் காணீரோ பெரும!"

சங்க இலக்கியத்தில் செவிலி தேடியதைப் போல நாட்டுப்புறப் பாடலொன்றிலும் தலைவியைத் தேடிச் செல்லும் செவிலி வழிப்போக்கரைப் பார்த்துக் கேட்கிறாள்:

"சிட்டுப்போல் நடையழகு
சிறுகுருவித் தலையழகு
பட்டுப்போல் மேனியாளைப்
பாதையிலே பார்த்தீங்களா ?

x x x x x

பட்டம்போல் நெற்றி
பவளம்போல் வாயழகு
முத்துப்போல் பல்லழகு
முன்போகக் கண்டீரோ !"

இப்படிப் பல இலக்கியத் துறைகள் நாட்டுப்புறப் பாடல்களில் உண்டு.

கவியினுல் இலக்கியம் படைக்கப் படுவதுபோல நாட்டுப்புறப் பாடல்கள் படைக்கப்படவில்லைதான். கவலையை மறக்க, உணர்ச்சியை வெளிப்படுத்த பொழுது போக்க இப்படிப் பல காரணங்களுக்காக ஒரு "கருவி இலக்கியமாக'' (நாட்டுப்புறப் பாடல்கள்) பயன் பட்டு வருகின்றன. புலவர்கள் ஒதுக்கிச் செல்லும் அல்லது கூச்சப்படும் இடங்களை நாட்டுப்புறப் பாக்கள் அப்படியே படம்பிடித்துக் காட்டுகின்றன. எனவே, இத்தகைய கருத்துகளையும் சிந்தையில் நிறுத்தி இனி மேற்கண்ட வினுவிற்கு விடை காண வேண்டும்.

இலக்கியப் பண்பாடு உடையன: நத்தை மணற் பரப்பில் நடக்க, சில நேரங்களில் எழுத்தாகி விடுவதைப் போலக் கவிதை உலகில்மனம் போன போக்கில் எழுதித் தள்ளியதெல்லாம் புதுமைக் கவிதை என்றும், புரட்சிக் கவிதை என்றும் கூறிவரும் இந்நூற்ருண்டில் நாட்டுப் புறப் பாடல்களுக்கு இலக்கண வரம்பு இல்லையே என்று ஓலமிட வேண்டியதில்லை. புலவர்கள் எடுத்துக் கையாண்டு இருப்பதாலும் இலக்கணத்தில் கூறப்பட்ட சில துறைகள் அமைந்துள்ளதாலும் இலக்கியம் என்பதனை விட இலக்கியப் பண்புகள் நிறைந்த பாடல்கள் (Literery Characters) என்று கூறுவது சாலப் பொருத்தமுடையதாகும்.

வரலாற்றுத் துணைக் கருவி: ஒரு சிலர் கண்ணாடி இலக்கியம் என்றும், சிலர் பச்சையான இலக்கியம் என்றும் சொல்லும் கூற்றில் பசை இருக்கின்றது. மொழிக்குப் பெரும் வளமாக ஊட்டமாக நாட்டுப்புறப் பாடல்களைக் கொள்வதனை விட வரலாற்றுக்கு ஒரு பெரும் துணைக்கருவியாகக் (Historical -Source) கொள்வதுதான் அப் பாடல்களுக்குக் கிடைத்த உண்மையான மதிப்பீடாக அமையும். இதுதான் நாட்டுப்புறப் பாடல்களுக்குரிய உண்மையான நிலையாகும்.

ஒரு வரலாறு எழுதுவதற்கு இலக்கியங்கள் கை கொடுத்து உதவ முடியாத இடங்களிலெல்லாம் நாட்டுப் புறப்பாடல்கள் தாராளமாகக் கைகொடுத்து உதவு கின்றன. ஆதலின் நாட்டுப்புறப் பாடல்கள் இலக் கியம் என்றும் இல்லை என்றும் வாதமிட்டு ஆரம்பத்தில் அரசனாக்கவோ, ஆண்டியாக்கவோ ஆக்கும் முயற்சியில் ஈடுபட்டு நேரத்தை வீணாக்கிக் கொண்டிருப்பதனைவிட நாட்டுப்புறப் பாடல்கள் எவ்வண்ணம் ஒரு வரலாற்றுத் துணைக்கருவியாக (Folk Songs as an aid to History) அமைந்திருக்கின்றன என்பதில் கருத்தினைச் செலுத்து வோம். அங்ஙனம் செய்தால்கருவி இலக்கியமாகப் பிறந்த நாட்டுப்புறப் பாடல்கள் காலப்போக்கில் வரலாற்றில் இலக்கியங்களுக்கு முந்திய இடத்தைப் பிடித்துக் கொண் டாலும் வியப்படைவதற்கில்லை.

முடிவுரை

முன் பகுதியில் நாம் கண்ட ஆய்வுகளையும் கருத்துகளையும் தொகுத்துப் பார்ப்பது இவ்வாய்வுக்கு மேலும் பயன் விளைவிக்கும். தமிழகத்தில் சிதறிக் கிடந்த பாடல்களைத் தொகுத்துத் தந்த அறிஞர்களின் நூல்களின் உதவியாலும் வழங்கிவரும் பாடல்களாலும் அணுகிய ஆய்வின் முடிவுகள் பின் வரும் வகையில் உள்ளன.

உலகத்தில் உள்ள பல்வேறு அறிஞர்கள் நாட்டுப்புறப் பாடலுக்குக் கொடுத்த பல் வகையான விளக்கங்களும், அவற்றையெல்லாம் ஒருங்கெடுத்து ஓரிடத்தில் பார்த்து, பின் நாட்டுப்புறப் பாடலுக்குக் கொடுத்த விளக்கமும் முதற்பகுதியில் சொல்லப்பட்டன.

இரண்டாவதாக எண்ணிறந்த நாட்டுப்புறப் பாடல்களை ஓர் ஒழுங்கிற்கு உட்படுத்திக் குழந்தைப் பாடல்கள், தொழிற் பாடல்கள் முதலிய அறுவகையாகப் பிரித்து, பின் அவ்வறுவகைப் பாடற் பிரிவுகளும் தனித்தனியே தக்க சான்றுகளுடன் ஆராயப்பட்டன.

குழந்தைப் பாடல்கள் மூன்றுவகைத் தன்மை உடையனவாக இருக்கின்றன என்றும், தாய் சத்துள்ள பாலைக் குழந்தைக்கு ஊட்டுவது போல நல்ல கருத்துள்ள பாடல்கள் குறிக்கோளுடன் குழந்தைக்குச் சொல்லித் தரப்படுகின்றன என்றும் கூறப்பட்டது.

தாய்மை என்ற அன்பு ஊற்றிலிருந்து வெள்ளமெனப் பெருக்கெடுக்கும் தாலாட்டுப் பாடல்களின் உயர்வுகள் அப்பகுதியில் விளக்கப்பட்டன.

'தொழிற் பாடல்'களில் தொழிலாளர்களின் தெய்வ பக்தியும், தொழிலுக்குத் தகப் பாடல்கள் அமைந்து கிடப்பதும் காட்டப்பட்டன.

'பக்திப் பாடல்'களில் மேல்நாட்டு ஆராய்ச்சி யாளர்கள் 'பக்தி' எவ்வாறு தோன்றி இருக்கலாம் என்று கூறும் கருத்திற்கேற்ப அமைந்துள்ள சிறு தெய்வ, பெருந் தெய்வ வணக்க நாட்டுப்புறப் பாடல்கள் காட்டப்பட்டன. மேலும் ஆராய்ச்சியாளர்கள் கூறும் பல்வகை வணக்கங்களுக்குரிய பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்களில் கிடைக்கின்றன என்றும் கூறப்பட்டது. பக்திப் பாடல்களின் எண்ணிக்கை குறைந்த அளவே தொகுக்கப்பட்டிருக்கின்றன என்றும் கூறப்பட்டது.

அடுத்துக் 'கொண்டாட்டப் பாடல்'களில் மக்கள் கோயில் தொடர்புடைய நிகழ்ச்சிகளிலும் குடும்பத் தொடர்புடைய நிகழ்ச்சிகளிலும் தெய்வம், விழா, சடங்கு ஆகிய இவற்றின் தொடர்பாகவும் பாடும் பாடல்கள் ஆராயப்பட்டு இந் நிகழ்ச்சிகளில் பாட்டுமன்றி இசையும் கூத்தும் சேர்ந்து நிகழ்கின்றன என்றும் கூறப் பட்டது.

உணர்ச்சிப் பாடல்' தலைப்பில் என்றும் நிலைபெற் றிருக்கும் காதலையும் இரங்கலையும் சிறப்பாக எடுத்துக் கொண்டு காதல் நாட்டுப்புறப் பாடல்களோடு இலக்கியப் பாடல்களும் துறைகளும் ஒப்பாகக் காட்டப்பட்டன.

காதற் பாட்டுகளைக் காதலர்கள் தாம் பாடுகிறார்கள் என்பதில்லை. தெம்மாங்கு பாடுபவர்கள், மாடு மேய்க்கும் சிறுவர்கள் முதலியோர் இன்பமாகப் பாடுவதும் உண்டு என்ற கருத்தும் கூறப்பட்டது. ஒப்பாரிப் பாடல்களில் இறந்தவனின் வரலாறும் இயல்பும் நன்கு அறிய முடிகின்றது என்றும் இறந்தவர்களுக்காகப் பாடப்படும் அப் பாடல்களில் பிற நாட்டுப்புறப் பாடல்களில் இல்லாத உயர்ந்த சுவைகள் இருக்கின்றன என்றும் கூறப்பட்டன.

'பன்மலர்ப் பாடல்'களில் பிச்சைக்காரன் பாட்டும், சித்தர் பாடல்கள் போன்ற வேதாந்தங்களை எளிய முறையில் சொல்லும் பாடல்களும், அண்மைக் காலத்தில் தோன்றிய பாடல்களும் எடுத்து விளக்கப்பட்டன.

அடுத்து நாட்டுப்புறப் பாடல்களைப் பாடியவர்கள் யாரென்பது தெரியாததால் 'பாடுபவர்கள் யார்?' என்ற வினாவை எழுப்பி நாட்டுப்புறப் பாடல்கள் பாடுவதையே தொழிலாகக் கொண்டவர்கள் ஒருவகை என்றும், சந்தர்ப்பம் வருகின்ற பொழுது மட்டும் பாடுகின்றவர்கள் மற்றொரு வகை என்றும் கூறி ஆண்கள் பாடிவரும் பாடல்களும் பெண்கள் பாடிவரும் பாடல்களும், இருசாராரும் பாடிவரும் பாடல்களும் எடுத்துக் காட்டப்பட்டன.

அடுத்து நாட்டுப்புறப் பாடல் பாடப்படும் நேரம் பாடலுக்குத் தகக் குறிப்பிட்டுச் சில பாடல்களுக்கு நேரம் குறிப்பிட முடியாது என்றும் கூறப்பட்டது.

பின், நாட்டுப்புறப் பாடல் பாடப்படும் இடம் சொல்ல நினைக்கையில் நிலத்தில் மட்டுமன்றி நீரிலும் பாடப் படுவன என்று அப் பகுதியில் கூறப்பட்டது.

'நாட்டுப்புறப் பாடல்களின் வடிவம்' என்ற தலைப்பில் இலக்கியங்களுக்கு வடிவம் அமைந்திருப்பது போல நாட்டுப்புறப் பாடல்களுக்கு எதுகை, மோனை, அடிவரை யறை, அடி இயைபு, சொல்லடுக்கு, திருப்பிச் சொல்லுதல், விரித்துச் சொல்லுதல், சொல் வடிவம், பாட வேறு பாடுகள் முதலியன உண்டு என்று தகுந்த எடுத்துக் காட்டுகளோடு கூறப்பட்டன.

"நாட்டுப்புறப் பாடல் ஒரு வரலாற்றுத் துணைக் கருவி" என்ற தலைப்பில் நாட்டுப்புறப் பாடல்களையும் பிற வரலாற்று மூலங்களோடு சேர்க்க வேண்டும் என்றும் மொழியியல், சமூக இயல், நுண்கலை, நாட்டு வரலாறு ஆகியவை எழுத நினைக்கும் பொழுது நாட்டுப்புறப் பாடல்களை ஒதுக்கிவிட்டு ஆராய்ச்சி செய்யின் அவ் ஆராய்ச்சி முழு ஆராய்ச்சி ஆகாது என்றும் எடுத்துக் காட்டுகளுடன் விளக்கப்பட்டன.

'தமிழ் இலக்கியங்களில் நாட்டுப்புறப் பாடல்கள்' என்ற தலைப்பில் தொல்காப்பியம், சங்க நூல்கள், சிலப்பதிகாரம், திருவாசகம், ஆழ்வார் பாடல்கள், கம்பராமாயணம், கந்தபுராணம், பிரபந்தங்கள், இற்றை நூற்றுண்டு இலக்கியங்கள் ஆகியவற்றில் நாட்டுப் புறப் பாடல்கள் பெற்ற இடத்தையும், அக்காலங்களில் புலவர்கள் அவற்றின் மீது எவ்வகையில் கண்ணோட்டம் செலுத்தியிருக்கின்றனர் என்றும் கூறப்பட்டன.

'பா நலம்' என்ற பகுதியில் நாட்டுப்புறப் பாடல்களில் காணப்படும் உவமை, வருணனை, கற்பனை, நகைச்சுவை, நீதி ஆகியவற்றின் சிறப்புகள் எடுத்துக்காட்டு களுடன் கூறப்பட்டன.

நாட்டுப்புறப் பாடல்கள் ஆராய்ந்ததின் தொடர் பாகத் தோன்றிய மூவகை ஐயங்களுக்கு இறுதியில் விடை சொல்லப்பட்டன.

நாட்டுப்புறப் பாடல்களை அழைக்கும் பல்வேறு பெயர்களைப் பற்றிய விளக்கங்களும், பின் ஒரு பொருத் தமான பெயரும், இனி நாட்டுப்புறப் பாடல் தோன்றுமா என்றும், நாட்டுப்புறப் பாடல்களுக்கு இலக்கிய மதிப்புக் கொடுக்கலாமா என்றும் இவ்வாறு தோன்றும் வினக் களுக்கு விளக்கம் தரப்பட்டன.

இவ் ஆராய்ச்சியில் நாட்டுப்புறப் பாடல் பிரிவுகளை அறுவகையாகப் பிரித்து ஆராய்ந்திருப்பதும், நாட்டுப் புறப் பாடல்களுச்கு உரிய வடிவம் ஒருவாறு இவ்வாறு இருக்கலாம் என்று எண்ணிறந்த நாட்டுப்புறப் பாடல்களை வைத்துக் காட்டிய பகுதி குறிப்பிடத்தக்கதாம். நாட்டுப்புறப் பாடல் என்ன சிறப்புடையது? என்ற வினு தொடுத்தவர்களுக்கு நாட்டுப்புறப் பாடல் ஒரு வரலாற்றுத் துணைக்கருவி என்ற பகுதி பெரும் ஈடு பாட்டையும், மதிப்பையும், நாட்டுப்புறப் பாடல் மீது ஏற்படுத்தும் சிறப்பினை உடையது எனலாம்.

நாட்டுப்புறப் பாடல் அமைப்பில் கற்றவர்கள் இலக்கியம் படைக்கும் பொழுது அஃது அடையும் பெருமை உயர்வானதாக இருக்கிறது என்பதற்குப் பல்வேறு

காலங்களில் தமிழ் இலக்கியங்களில் நாட்டுப்புறப் பாடல்கள் பெற்ற இடத்தைக் காட்டும் பகுதி நாட்டுப் புறப்பாடல் ஒதுக்கிவிடக் கூடாதது என்பதனை மேலும் வற்புறுத்துவதாக அமைந்திருக்கின்றது.

இவ்வாறெல்லாம் பல நிலைகளிலிருந்து நாட்டுப் புறப் பாடலை நோக்கி மேற்கண்ட வகைகளையும் சிறப்பு களையும் ஆராயும் பொழுது நாட்டுப்புறப் பாடல்களைப் பொறுத்தவரையில் செய்ய வேண்டிய சில கடமைகள் உண்டு என்று கூறலாம். அவை நாட்டுப்புறப் பாடல்களுக்கு மேலும் பாதுகாப்பினையும், வாழ்வினையும், மதிப்பினையும் தருவதாகையால் அவை கீழே தரப் பட்டுள்ளன :

செய்ய வேண்டியவை

1. நாட்டுப்புறப் பாடல்கள் தோன்றுவதற்குரிய கூறுகள் மறைந்து வருவதால் வழங்கிவரும் நாட்டுப் புறப் பாடல்களைத் தொகுக்க ஆவன அரசியலாரும், தமிழறிஞர்களும் செய்தல் வேண்டும்.

2. தொகுக்கும் பாடல்கள் எவ்வண்ணம் பாடப் படுகின்றனவோ அவ்வண்ணமே வெளியிடப்பட வேண்டும்.

3 வெளியிட வாய்ப்பு வசதி இல்லாதவர்கள் வெளியிட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு அனுப்பியோ அல்லது ஒலிபரப்பி வரும் வானொலி நிலையங்களுக்கோ அனுப்ப வேண்டும்.

4. ஒலிபரப்பும் வானொலி நிலையத்தார், நிலைய இசையாளர்களைக் கொண்டு ஒலிபரப்பி, நிலைய இசைக்

கருவிகளைப் பயன்படுத்தாமல், பாடும் இடம் சென்று பாடல்களைப் பாடுபவர் பாடும் வண்ணமே அவர்களின் இசைக் கருவிகளைப் பதிவு செய்து ஒலிபரப்ப வேண்டும்.

5. கல்வி நிலையங்களில் பட்டப் படிப்புகளில் நாட்டுப்புறப் பாடலைப் பாடமாக வைத்தல் வேண்டும்.

6. மேலும் பாடல்களை வட்டாரத்திற்கு வட்டாரம் தொகுத்துத் தனித்தனியாக ஆராயவேண்டும்.

7. மேலை நாட்டில் இத் துறைக்கென்று வெளியீட்டிதழ்கள் நடக்கின்றன. நம்மால் அவ்வளவிற்கு முடியாவிட்டாலும் வெளியீட்டிதழ்கள் பாடல்களை வெளியிடுவதற்கோ அல்லது கட்டுரைகள் தீட்டுவதற்கோ குறிப்பிட்ட அளவு தனி இடம் ஒதுக்க வேண்டும்.

8. ஆராய்ச்சி நிலையங்கள், ஆராய்ச்சியாளர்கள் இலக்கியங்களை ஆராய்வதோடு மட்டுமல்லாது இப் பாமர இலக்கியங்களையும் ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

9. இசை அரங்குகளில் நாட்டுப்புறப் பாடல்களின் மெட்டுகளையும், இசைகளையும் இசைவாணர்கள் கையாள வேண்டும்.

10. நாட்டுப்புறப் பாடல் இசையிலிருந்து புது இசைகளை மேலும் உண்டாக்கலாமா என்று ஆராய வேண்டும்.

11. நாட்டுப்புறக் கதைப் பாடல்களில் வழங்கிவரும் கதைக் கருக்களைக் கவிஞர்கள் கருவாகக் கொண்டு காப்பியமாக்கும் முயற்சியிலும் ஈடுபட வேண்டும்.

12. தெய்வப் பாடல்கள் மூலம் தெய்வங்களின் வரலாறுகளை எழுதவேண்டும்.

13. விளையாட்டுப் பாடல்களோடு அவ் விளையாடல்களின் அமைப்பையும் எழுத வேண்டும்.

14. அடிக்கடி கருத்தரங்குகள் நிகழ்த்துதல் வேண்டும்.

இவற்றை எல்லாம் மனத்தில் கொண்டு நாட்டுப்புறப்பாடல்களை வளர்க்க வேண்டும். ஆராய்கின்றவர்கள் பாடல்கள் வழங்கிவரும் இடத்திற்கு நேரிலேயே சென்று, தாங்களே முயன்று தொகுத்தால் இதன் அருமை மேலும் வெளிப்படும். இவ்வாராய்ச்சியின் பொருட்டு இத்துறை தொடர்பான பல அறிஞர்களுடன் தொடர்பு கொண்டு பல சிற்றூர்கட்குச் சென்று பாடல்கள்சேர்த்த பொழுது ஒரு சிற்றூரில் இறப்பின் எல்லையிலே உள்ள வயதான முதுமையுற்ற தாய் ஒருத்தி "என் கூந்தலை எண்ணினாலும் எண்ணலாம், எனக்குத் தெரிந்த பாடல்களின் வகைகளை எண்ண முடியாது" என்றாள். அவள் மறைந்திருப்பின் அந்த அம்மையோடு அவளுக்குத் தெரிந்த எண்ணற்ற பாடல்களும் மறைந்திருக்கும். இப்படி நடக்காமல் சேகரிக்க வேண்டும்.

தமிழில் வளர வேண்டிய ஒரு துறை நாட்டுப்புறப் பாடல்கள்; அறிஞர்களின் ஆராய்ச்சி முழுவதும் செறிவு நிறைந்த புலவர்களின் படைப்புகளிலேயே இல்லாமல், இப்படிப்பட்ட துறைகளிலும் செல்லுதல் வேண்டும். ஒரு மொழிக்கு வளம் இத்தகைய ஆராய்ச்சிகளே; இலக்கியக் கடலில் இப்படிப்பட்ட ஆறுகள் வந்து கலப்பது கடலின் வளத்தையும் பெருமையையும் கூட்டுமே தவிரக் குறைத்து விடாது.

ஆய்வுக்குத் துணை செய்த நூல்கள்

அமுதாம்பிகை சிறுவர் வாசகம்
அரிச்சந்திரன் ஏற்றப் பாட்டு
ஆசிய சோதி—கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை
இராமநாதபுர மாவட்டம்—சோமலெ
இராமாயண ஏற்றப் பாட்டு
இலக்கியக் கலை—அ. ச. ஞானசம்பந்தம்
இலக்கியத் திறன்—டாக்டர் மு. வரதராசன்
இலக்கிய மணிமாலை—எஸ். வையாபுரிப்பிள்ளை
ஈழத்து நாடோடிப் பாடல்கள்—F. X. E. நடராசா
எரியாத கட்சி மன்மதலாவணி
ஏட்டில் எழுதாக் கவிதைகள்—செ. அன்னகாமு
கட்டபொம்மன் கதைப் பாடல்—நா. வானமாமலை
கம்பராமாயணம்
கருப்பாயி—பாட்டு
கலித்தொகை
கலைக் களஞ்சியம்—தொகுதி-6
கல்யாணப் பாட்டு
கவிதைக் களஞ்சியம்—ரா. பி. சேதுப்பிள்ளை
கன்னியாகுமரி மாவட்டம்—சோமலெ
காட்டு மல்லிகை—தி. ஜ. சுப்பிரமணியம்
காதல் வாழ்வு—தமிழண்ணல்
காலேஜ் ஓடம்
காற்றிலே மிதந்த கவிதை—மு. அருணாசலம்

காற்றில் வந்த கவிதை—பெ. தூரன்
கிராமக் கவிக்குயில் ஒப்பாரி—மு. இராமலிங்கம்
குமுதம்—வார இதழ்
குழந்தை இலக்கிய வரலாறு—வி. டி. கோபாலகிருஷ்ணன்
குழந்தை உலகம்--கி. வா. சகந்நாதன்
கோயமுத்தூர் மாவட்டம்—சோமலெ
சித்தர் பாடல்கள்
சிலப்பதிகாரம்
சிறுவர் செந்தமிழ் வாசகம்
செட்டிநாடும் தமிழும்—சோமலெ
செட்டிநாட்டுத் தாலாட்டு—சோமலெ
சேவல் பாட்டு
தமிழக வரலாறு—அ. மு. பரமசிவானந்தம்
தமிழ் நாடு—வார இதழ்
தமிழ் நாட்டுப் பாமரர் பாடல்—நா. வானமாமலை
தாலாட்டு— தமிழண்ணல்
தாலாட்டு இலக்கியம்—மு. அருணாசலம்
திருக்குறள்
திருவாசகம்
தொல்காப்பியம்
நலுங்குப் பாட்டு
நவராத்திரி ஓடம்
நற்றிணை
நாடோடி இலக்கியம்--கி. வா. சகந்நாதன்
நாடோடிப் பாடல்கள்—ஆர். அய்யாசாமி
பகதூர் வெள்ளை—ஜி. என். அண்ணாமலை
பரிபாடல்
பலசரக்கு ஏலப்பாட்டு

பாரதிதாசன் கவிதைகள்
பிறந்தது எப்படியோ—தெ. பொ. மீனாட்சிசுந்தரம்
புதுமைப்பித்தன் கட்டுரைகள்
புறநானூறு
பெண்புத்திமாலை
பெரியாழ்வார் பாடல்கள்
பெரும்பாணாற்றுப்படை
மச்சு வீடு—கி. வா. சகந்நாதன்
மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள்—எஸ். வித்யானந்தன்
மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு—டி. சதாசிவய்யர்
மதுரைக் கலம்பகம்
மதுரைக்காஞ்சி
மதுரைநாயக்கர் வரலாறு—அ. கி. பரந்தாமனார்
மலைஅருவி—கி. வா. சகந்நாதன்
மன்மத ரதிதகன இலாவணி ஒப்பாரி
மாரிய்ம்மன் தாலாட்டு
மானங்காத்த மருது பாண்டியர்—ந. சஞ்சீவி
முக்கூடற் பள்ளு
முன்பனிக்காலம்—டாக்டர். அ. சிதம்பரநாதன் செட்டியார்
மேல்மலை மக்கள்—நா. வானமாமலை
யான்பெற்ற இன்பம்—மு. அருணாசலம்
வடஆர்க்காடு மாவட்டம்—சோமலெ
வடஇலங்கையர் போற்றும் நாட்டார் பாடல்கள்
—மு. இராமலிங்க
வள்ளி சுப்பிரமணியர் வாக்குவாதம்
வள்ளி தெய்வானை ஏசல்
வாய்மொழி இலக்கியம்—அ. மு. பரமசிவானந்தம்
An Introduction to Social Anthropology
—D. N. Majumdar & T. N. Madan.

*

Arts in Rural India—Government Publication.
Bulletin of the Institute of the Traditional Cultures, Madras, Part II.
Chambers Encyclopaedia.
Ceylon Folk lore Music and Dance—Jayaratna.
Cultural Anthropology.
Dictionary of Anthropology.
Encyclopaedia—Britanica.
International Cyclopaedia of Music and Musicians.
Literary History of The United States.
Oxford Junior Encyclopaedia.
Polynesians Explore of the Pacific.
Principles of Literary Criticisms.
Revaival of Rural Arts.
Snow balls of Garhwal.
The Columbia Encyclopaedia.
The Common Muse—V. de. Sola pinto & A. E. Rodway.
The Concise Oxford Dictionary.
The Encyclopaedia Americansa.
The Folk songs of Southern India—Charles E. Gover.
The Games and songs of Americans children.
The Idiom of the people—Cecil J. Sharp.
The Message of Music—paul H. Apel.
The Science of Folk Lore—Alexander Haggerty-Krappe.
The Story of the Indian Music-O. Gosvami.
The Oxford Junior Encyclopaedia.
The Warlis—K. J. Save.
Traditional Cultures of South East Asia —Professor Dr. Mahammad Shahidullah.
University of Allahabad Studies.

திரு ஆறு அழகப்பன், எம்.ஏ.,எம்.லிட்.,

இராமநாதபுரத்தைச் சேர்ந்த ஆத்தங்குடியில் 10-8-1937 இல் பிறந்தவர். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் பயின்று எம். ஏ., பட்டமும், நாட்டுப்புறப் பாடல்களைத் திறனுய்வு செய்து எம். லிட். பட்டமும் பெற்ருர். தமிழ் நாடகங்கள் பற்றிய ஆய்வின் மூலம் டாக்டர் பட்டத்திற்கு ஆய்வு மேற்கொண்டுள்ளார். இவர் பல நாடக நூல்கள் எழுதியுள்ளார். அவைகள் இவருடைய எழுத் தாற்றலுக்குச் சான்ருகத் திகழ்கின்றன. தாய்மார்கள் பாடிவரும் தாலாட்டுப் பாடல்களைத் தொகுத்து வெளியிட்ட இவருடைய தமிழ்ப்பணி பெரிதும் பாராட்டுதற்குரியதாகும். நாடகத் தமிழ் வளர்ச்சி கருதி 'நாடகக் கலை' என்னும் ஒரு திங்கள் இதழை நடத்தி வருகிருர். இவருடைய கருத்தழகினைப் பாராட்டு முகத்தான், "ஒல்லியான குழலிலிருந்து இனிமையான நாதம் எழுவதுபோல் (ஒல்லியான) திரு. அழகப்பனிடமிருந்து வரும் கருத்துக்களும் இனிமையாக இருக்கின்றன" என்று அறிஞர் எம். பி. தாமோதரம் அவர்கள் குறிப்பிட்டிருப்பது ஈண்டு எடுத்துக் காட்டத் தக்கது.

அப்பர் அச்சகம், சென்னை-1.